திரு. வி. க. மணி மடல்

(தமிழ், ஆங்கிலம்)



விழா : 25-8-1943

"தமிழ் உலகம்"

2/45, முத்துமாரிச் செட்டித் தெரு, சென்னை

உரிமைப் பதிவு]

[விலை ரூ. 2

முகப்பு

உள்ளுதொறும் அள்ளுறும் - எண்ணுதொறும் இனிக்கும் நம் தலைவர் - தமிழ்ப் பெருஞ்செல்வர் - ஆசிரியர் **திரு. வி. க.** அவர்களின் **மணி விழா** நினைவாக **மடல்** ஒன்று வெளியிட மனங்கொண்டோம். ஏன்? நாடு விடுதலை பெறவும் நம் தாய் மொழி வளரவும், சமுதாயம் ஒற்றுமைப் படவும் ஓயாது உழைத்து வருபவர் நம் திரு. வி. க. கனவிலும் நனவிலும் அவர் மனத்தை இதுகாலை பற்றியுள்ள பெருங்கவலை ஒன்றே. அஃதென்ன? 'சாதியாலும் மதத்தாலும் நாட்டாலும் இன்ன பிறவற்றாலும் மக்கள் பிரிந்து பிரிந்து கெடுகின்றனரே; அழிகின்றனரே இவர் எப்போது ஒன்று படுவர்? எப்படி ஒன்று படுவர்?' என்பதேயாம். மற்று, அவர் கொண்டுள்ள குறிக்கோளும் ஒன்றே. அஃதென்ன? **தொண்டு, தொண்டு, தொண்டு** என்று சொல்லவும் வேண்டுமோ? அடிமைத்தளை பூட்டி அறியாமைப் படுகுழியில் தள்ளப்பட்ட பெண்ணுலகுக்கு - நரம்பு தளர எலும்பு ஒடிய குருதி வற்ற உழைத்து அலுத்து வாடும் தொழிலுலகுக்கு - எதிர்காலக் கதிர்களாம் இக்கால இளைஞருலகுக்கு - இவை போன்ற பல்வேறு உலகுக்குத் தொண்டு செய்வதையே - பாடுபடுவதையே இவர்தம் பிறவிப் பயனைக் கொண்டவர். இதனை இவர்தம் இனிய எழுத்தும் சொல்லும் செயலும் எடுத்தியம்புகின்றன. நாடு மொழி சாதி சமய நிற வேறுபாடு கடந்த பொதுமை அறம் வளர்க்கும் சமரச ஞானியாக இன்று நம் பெரியார் திகழ்கின்றார்.

இப் பெரியார்க்கு இந் நன்னாளில் ஒரு பெருமடல் சூட்டி மகிழும் பேறுபெற்றமைக்கு, உண்மையிலேயே நாம் உவகை அடைகின்றோம். நம் கெழுதகை நண்பர் திருவாளர் **டி. எம். பார்த்தசாரதி முதலியார்**, திரு. வி. க. அவர்களிடம் பேரன்பு கொண்டவர். தொழிலுலகுக்கு - தமிழ் உலகுக்குத் தொண்டு செய்வதையே தம் பெருங் கடனாகக் கொண்டவர். பெரியார் மணவழகர்க்கும் இவரிடம் மாறாத அன்பு உண்டு. எனவே, பார்த்தசாரதி முதலியாரின் பேரன்பே - பெருந்தொண்டே பல நெருக்கடிகளையும் மீறி, இத் திருமடலாக விரிந்தது. காலத்தாற் செய்த இந்நன்றியினை உளங்கொண்டு போற்றல் தமிழர்தம் பெருங் கடனாகும்.

இம் மணி மடலை இன்னும் விரிந்த அளவிலே வெளியிட எண்ணினோம்; தமிழ்நாட்டறிஞர் எல்லோருடைய கட்டுரையினையும் ஒருசேரத் தொகுத்தளிக்க விரும்பினோம். காலநிலை ஒருபுறமிருக்க, 'காகிதம் கிடைப்பதே குதிரைக் கொம்பு' என்ற புதுமொழி, நம்மை எண்ணியாங்குச் செய்ய விடவில்லை. இருப்பினும் சிறந்த

பல அறிஞர்களுடைய கட்டுரைகளைக் கொண்டு இம மணி மடல் புதுமணம் பரப்புகின்றது; நறுமணம் நல்குகின்றது. எமது வேண்டுதலுக் கிசைந்து தீந்தமிழிலும் ஆங்கிலத்திலும் அருங் கட்டுரைகள் உவந்தளித்த அறிஞர் அனைவருக்கும் எம் அன்பு கனிந்த நன்றி உரியன. மற்றும் இரவு பகல் என்று பாராது எடுத்த பணி முடிக்கும்வரை இடையறாது உழைத்த எம் அச்சகத்து அன்பர்கட்குப் பெரு நன்றி.

இனி, மணி மடல் பணி தொடங்கியதுமுதல், ஒப்பு நோக்குதல் முதலிய திருத்தங்கள் செய்து தந்து, மடல் கவின்பெற மலரப் பல்லாற்றானும் உதவிய நண்பரும், தமிழ் வித்துவான் சங்கச் செயலாளரும் ஆகிய திருவாளர் வித்துவான். **அன்பு கணபதி** அவர்களுக்கு நம் நன்றியும் வாழ்த்துக்களும் என்றும் உரியன.

'என் கடன் பணிசெய்து கிடப்பதே' என்ற அப்பரின் அமுத வாக்கு, நம் சுந்தரனாரிடம் இனிய மணத்தைப் பெற்றது; எம் சிந்தையையும் பற்றியது. அதுவே, இன்றைய எம் வாழ்வாக வாழ்வுக்கு வழி காட்டியாக இருக்கின்றது. **தமிழ், தமிழர், தமிழ்நாடு** தலைநிமிர உழைப்பதையே எம் தலையாய கடனாகக் கொண்டுள்ளோம். தமிழ் உலகினை, பழந்தமிழ்ப் பெரு உலகாகப் பார்க்க விரும்புகின்றோம்; ஆக்க விரும்புகின்றோம். அத்தகைய ஆசையினுள்ளிருந்து அரும்பியது இவ் அரு மடல். குற்றங் குறைகள் பொறுத்தருள்க.

மணி விழாக் கண்ட நம் சுந்தரனார் பல்லாண்டு வாழ - கட்டற்ற அவர் பொதுமை அறம் இப்பாரில் ஓங்கிப் பரவ-எம் உள்ளக் கோயில் கொண்ட வள்ளிமணாளன் இன்னருள் பாலிப்பானாக என வாழ்த்தி, இம் மணி மடலை நம் மணவழகனார்க்கு மனமகிழ்வொடு சூட்டுகின்றோம். **வாழ்க!**

சாமி. சண்முகானந்தர்,
ஆசிரியர், 'தமிழ் உலகம்'

மடலுள் :

பக்கம்

திரு. வி. க. இருமுப்பாணுண்டு வாழ்த்து
கவி. பாரதிதாசன், புதுவை

திரு. வி. க. வாழ்க்கை வரலாறு 1
திரு. டி. எம். பார்த்தசாரதி முதலியார்,
மெர்க்கண்டயல் அச்சகம், சென்னை

வழ வழப்பு 15
சாமி சண்முகானந்தர், ஆசிரியர், 'தமிழ் உலகம்' சென்னை

தமிழர் தலைவர் 25
திரு. பா. இராசேசுவரி அம்மையார், உரிமையாளர்,
'மாணவர் பதிப்பகம்' சென்னை

கம்பரின் ஒரு திவலை 30
பண்டிதை அசலாம்பிகை அம்மையார், காஞ்சி

ஆண்டாள் அருள் தமிழ் 33
பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மையார்,
தமிழாசிரியர், லேடி வில்லிங்டன் மகளிர் கல்லூரி, சென்னை

பரணிப் போர் 54
ரா. பி. சேதுப்பிள்ளை, B.A., B.L.
தலைமைத் தமிழ் விரிவுரையாளர், சென்னைப் பல்கலைக் கழகம்

வால்டேர் 57
ஈ. த. பத்மாவதி அம்மையார், M A., L.T.
கணிதஆசிரியர், லேடி வில்லிங்டன் மகளிர் கல்லூரி, சென்னை

கிறிஸ்துவும் புது உலகமும் 65
செவசெண்ட் ஆ. அருள்தங்கையா, சென்னை

திருவள்ளுவரும் பொதுமையும் 71
மு. வரதராசனர், B. O. L.
தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை

தேவாரத் திருப்பதியம் 79
தி. கி. நாராயணசாமி, கிழக்கு மருதூர், திருநாவலூர்

திரு. வி. க. நூல் 86
வித்வான் அன்பு கணபதி,
தமிழாசிரியர், பச்சையப்பன் உயர்பள்ளி, சென்னை

பொதுமை வாழ்த்து 96
'பொதுமை வேட்டல்'

குறிஞ்சிப் பாட்டு 97
ஈ. த. இராசேசுவரி அம்மையார், M.A. L,T.
விஞ்ஞான விரிவுரையாளர், மேரி அரசி கல்லூரி, சென்னை

தமிழ் மருத்துவம் 112
பு. வே. தேவராஜ முதலியார், M. D. (S)
அகஸ்திய ஔடதாலயம், திருப்பாதிரிப்புலியூர்

குழந்தைகள் உள்ளம் 117
மயிலை சிவ-முத்துக்குமாரசாமி முதலியார்,
தமிழாசிரியர், முத்தியாலுப்பேட்டை உயர்பள்ளி, சென்னை

இசைத் தமிழ் 124
வித்வான் முருக இலக்குவனார்,
தமிழாசிரியர் சென்னை, தமிழ்ச் சங்கம், சென்னை

கொண்டவன் பெருமை 131
வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், சென்னை

சொற்பொழிவு 143
C. M. இராமச்சந்திரன் செட்டியார் B.A., B.L.
இந்து அறநிலையக் கழக ஆணையாளர், சென்னை

மிருகசீரடம் (ஓரியன்) 151
C. B. ஆனந்தம், சென்னை

வீரர் வழிபாடு 159
A. S. ஞானசம்பந்தம், B.A.. (HONS.)
தமிழ் விரிவுரையாளர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை

வாழ்த்து! 167
மகாமகோபாத்தியாய
பண்டிதமணி. மு. கதிரேசச் செட்டியார்,
ஆராய்ச்சித்துறைத் தலைவர், அண்ணமலைப் பல்கலைக் கழகம்

The Tamilian Judiciary Independent of the Monarch I
E. T. CHOCKAMMAL, B.A., B.L., Madras

Periapuranam V
K. M. BALASUBRAMANIAM, B.A., B.L.,
Advocate, Madras

Thirugnanasambandar XV
T. P. MINAKSHISUNDARAM PILLAI,
M.A., B.L., M.O.L., Madras

Purananooru XX
K. SUBRAMANYA PILLAI, M.A., M.L.,
Professor of Tamil,
Annamalai University, Annamalainagar

Post-War Education XXX
T. GOVINDARAJAN, M.A., L.T.,
Asst. Lecturer in Mathematics,
Annamalai University, Annamalainagar.

திரு. வி. க. இருமுப்பாண்டு நிறைவு வாழ்த்து!

மலிஇரு பத்தைந் தாண்டாய்
வண்டமிழ் நாட்டி லேஉம்
கலியாண சுந்த ரர்தம்
தொண்டுகள் கண்டு வந்தேன்.
எலி,எனப் புலவர், வீட்டில்
இருக்கையில் சுந்த ரர்தாம்
புலிஎன வெளியிற் போந்தார்
முதன்முதல் அரசியற்கே! 1

தமிழறி விலாதார் செய்தித்
தாள்எழு திடுவ தற்கும்,
தமிழுளார் எழுது தற்கும்,
வேற்றுமை இருந்த தன்மை
தமிழ்நாடு தண்ட தந்நாள்;
தமிழ்காணுர் மீன்க டைக்குள்
தமிழறி கலியா ணத்தார்
தமிழேடு மூல்லைக் காடே. 2

துடித்திடு தேச பக்தச்
செய்தித்தாள் தொடக்கம் செய்தார்;
பிடித்தன ஓட்டம் மற்றைப்
பெரும்பெருந் தாள்க ளெல்லாம்.
படுத்தகம் சென்த மிழ்த்தாய்
படிசிலம் படிபெ யர்த்தே
எடுத்ததை அந்நாள் கண்டேன்;
எழிற்கூத்திந் நாள்காண் கின்றேன். 3

திரு.வி.கலி யாணசுந் தரனரின்
செந்தமிழ்க்கட் டுரைகள் என்னும்
அருவிகளில் ஆடியநல் லறிஞர்களும்
அறிவுபெற்றார்; இலேயசிட்டுக்
குருவிகளும் தமிழ்க்காதல் தலைக்கேறிக்
குதித்தனவே; வடசொல் லின்கைக்
கருவிகளும் தனித்தமிழின் கனிச்சுவையைக்
கண்டுகளித் தனவே யன்றே? 4

உணர்வெழுப்ப மெய்ப்பாடும், உடனிசையும்,
மொழிச்சுரப்பும் ஒன்றுய்த் தோன்றிக்
கணகணெனக் கவிதையொலி செயும்என்பர்;
அஃதேபோல் மொழி பெயர்ப்பும்
துணை நூலும் இல்லாமே தனி நூல்கள்,
கட்டுரைகள், புணர்ப்பார் தம்மில்
மணவழகர் தமக்குநிகர் மணவழக
ரேஎன்பேன் இந்நூற் முண்டில்! 5

காய்ச்சிவைத்த பசுப்பாலில் கழுநீரைக்
கலந்ததுபோல் நன்றில் தீதைப்
பாய்ச்சிவைத்துப் பிழைப்பாரும், பாழ்பட்ட
தமிழர்களும் வாழும் நாட்டில்,
பேச்சுவைத்த தோடுகனி பிழிந்துவைத்துச்
சுந்தரர்வாய் பேச வைத்து
மூச்சுவைத்துத் தமிழர்களை முடுக்கியஇத்
தலைமுறையை வாழ்த்து கின்றேன். 6

புதுவையிலே கலியாண சுந்தரனார்
ஆற்றியசொற் பொழிவில், தூய
மதுவையள்ளி மலர்தேக்கி வண்டுகட்கு
விருந்தாக்கி மயக்கு தல்போல்
பொதுவினர்க்குச் சிலப்பதிகா ரச்சுவையை
நடையழகைப் புகலும் போதில்
இதுவையா பேச்சென்பேன்; பாரதியார்
கைகொட்டி எழுவார், வீழ்வார். 7

இத்தியர்கொள் தமிழ்நாட்டில் எனைமகிழச்
செய்தனவாய் இருப்ப வற்றுள்
முத்தமிழ்வாய், உழைப்பாளிக் குழைக்குந்தோள்,
அன்புள்ளம், தமிழே மூத்தை
வித்தியுயிர் விளைக்கும்விரல், தமிழருக்கோர்
தீமையெனில் விரைந்தோ டும்கால்,
இத்தனைகொள் கலியாண சுந்தரனார்
என்றபொதுச் சொத்தும் ஒன்றே. 8

கலியாண சுந்தரனார் இருமுப்பா
ணுண்டுவிழாக் கண்டார்; ஆம்ஆம்
மலிஅறுபான் ஆண்டரசி திரும்பத்தன்
மகனுக்கோர் முத்தம் ஈந்தாள்!
பொலிவான நிலாக்காட்டிப் புதுவாழ்வுச்
சோறூட்டிப் பொன்னே என்று
மெலியிதழால் அவள்,திரும்பத் திரும்பஅனி
முத்தமிட விரும்பு கின்றாள். 9

வாழியவே கலியாண சுந்தரனார்
உறவினொடு மிகப்பல் லாண்டே;
சூழியவே தோளுறுதி, பெருஞ்செல்வம்,
கடல்போன்ற நெடும்புகழ் தான்!
வாழியவே இனியதமிழ்! தமிழர்!தமிழ்
நாடுதமி ழர்க்கே யாகி
வாழியவே எல்லாரும் எத்துறையும்
நிகர்எய்தி வையம் நன்றே! 10

—பாரதிதாசன்

திரு. வி. க. மணி மடல்



1912

திரு. வி. கலியாணசுந்தரனார்

திரு. வி. க. மணி மடல்

சுவாமி சண்முகானந்தர்

திரு. வி. க. மணி மடல்

எழுத்தாளரில் சிலர் :

ஆ. அருள் தங்கையா



அன்பு கணபதி



தி. கி. நாராயணசாமி

பு. வே. தேவராஜன்

திரு. வி. க. மணி மடல்

S. கிருஷ்ணவேரி

பா. இராசேசுவரி

T. கோவிந்தராஜன்

முருக இலக்குவனர்

டி. எம். பார்த்தசாரதி

திருவாளர்

திரு. வி. க.

வாழ்க்கை வரலாறு

தண்டமிழ் நாட்டில் இன்று தமிழ்த் தலைவராக - தமிழ்த் தாயின் தலைமகனாக - பெரும் பேராசிரியராகத் திகழ்பவர் நம் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் ஆவார்கள். திரு. வி. க. அவர்களை அறியாத தமிழர் இன்று தமிழ்நாட்டில் எவரு மிலர். மாணவர் முதல் பெரியவர் ஈறாக உள்ள எல்லோருடைய வாயும் திரு. வி. க. என்ற அழகிய பெயரை உவகையுடன் உச்சரிக்கின்றன. ஆசிரியர் கலியாணசுந்தரனார் அவர்கள் இன்றுடன் அறுபது ஆண்டு நிறையப் பெறுகின்றார்.

திரு. டி. எம். பார்த்தசாரதி

மணி விழாவின் நினைவாக வெளி வரும் இம்மணி மாலையில் அவரின் வாழ்க்கை வரலாற்றினை எழுதும் பேறு பெற்றமைக்கு உண்மையிலேயே பெருமகிழ்வடைகின்றேன். அம் மகிழ்ச்சி யிற் றிளைத்து நின்று அதனூடே என் கடமையைச் செய்ய முந்துகின்றேன்.

முன்னோரும் பெற்றோரும்

திரு வி க. வின் முன்னோர் வாழ்ந்தது திருவாரூர் ஆகும். திரு. இராமசாமி முதலியார் என்பவர் திருவாரூரில் தமிழ்ப் பள்ளிக்கூட ஆசிரியராக இருந்தவர். அவருக்குப் பிள்ளையாக வேங்கடாசல முதலியார் பிறந்தார். அவ் வேங்கடாசல முதலியாரே திருவாரூரை விட்டு முதன் முதல் சென்னை வந்தவர். அவருக்கு நமசிவாய முதலியார், விருத்தாசல முதலியார் என இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். விருத்தாசல முதலியாருக்கு மனைவியர் இருவர். முதல் மனைவி மூன்று பிள்ளைகளையும் ஒரு பெண்ணையும் பெற்று மறைய, மரக்காணம் வேங்கடாசல முதலியார் திருமகள் சின்னம்மாளை மணந்தார் விருத்தாசல முதலியார்; மணந்து இராயப்பேட்டையிலேயே மண்டி வியாபாரம் செய்து வந்தார். அப்பொழுது சின்னம்மாள் வாயிலாக இவருக்கு 3 பெண்களும், 1 பிள்ளையும் பிறந்தனர். அக்காலை, சேக்கிழார் பிறந்த குன்றத்தூரின் அருகிலுள்ள செம்பரம்பாக்கத்து ஏரி மராமத்து வேலை நடைபெற்றது. அவ் வேலையை ஒப்பந்தத்திற்கு விட்டனர். நம் விருத்தாசல முதலியார் ஒரு மராமத்துக்காரராகச் சென்றார். போகுங் காலைத் தாம் பார்த்து வந்த மண்டி வியாபாரத்தை முதல் காரத்துப் பிள்ளையாகிய சதாசிவ முதலியாரிடம் ஒப்படைத்துச் சென்றார். அந்த ஏரிவேலை நெடுநாள் நடைபெற்றது. அவ்வேலையில் விருத்தாசல முதலியாருக்குச் சுற்றுப்பக்கத்துக் கிராம மக்கள் யாவரும் பழக்கமாயினர். அக்கிராமங்களுள் துள்ளம் என்பதொன்று. துள்ளம், சைதாப்பேட்டை தாலூகாவில் நூம்பலுக்கும் செட்டியாவரத்திற்கும் இடையிலுள்ளது. துள்ளத்திலுள்ள பெரியவர்கள் "இனி நீங்கள் பட்டணம் போகவேண்டாம்; இங்கேயே தங்கி வியாபாரம் செய்யுங்கள்" என விருத்தாசல முதலியாரை வேண்டினர்கள். வேண்டுதலுக்கு இசைந்த முதலியார் துள்ளத்திலேயே தங்கி வியாபாரம் செய்யத் தொடங்கினர்.

தாம் முன்பு இராயப்பேட்டையில் விட்டு வந்த தம் இரண்டாந் தாரத்துக் குழந்தைகளையும் முதலியார் துள்ளத்திற்கு அழைத்துக் கொண்டார். துள்ளத்தில் இவர் ஒரு சிறிய பனையோலை வேய்ந்த குடிலில் வாழ்ந்து வந்தார். அங்கு இவருக்கு 3 ஆணும், 1 பெண்ணும் பிறந்தனர். ஓராண் குழவி தவறிவிட்டது. ஏனைய இருவரே திரு. வி உலகநாத முதலியாரும், திரு. வி. கலியாணசுந்தரனாரும் ஆய நம் திரு வி. சகோதரர் ஆவர். திரு. கலியாணசுந்தரனார் அவர்கள்

விருத்தாசலமுதலியாருக்கு ஆறுவது மகவாகத் (26-8-1883) தோன்றியவர். இங்கு ஒன்றைக் குறிப்பிட வேண்டுவது இன்றியமையாத தாகின்றது. திரு. வி. க. என்பதிலுள்ள 'திரு' பலரும் நினைப்பது போலத் திருவாளர் என்பதன் சுருக்கமன்று. முன்னோர் பிறந்த ஊராகிய சோணாட்டுத் திருவாரூரைக் குறிப்பதாகும்.

சென்னை மீட்சி

திரு. வி. சகோதரர் இருவரும் தொடக்கத்தில் தந்தை யிடத்திலேயே துள்ளத்தில் கல்வி பயின்றனர். சின்னஞ் சிறுகளுக்கெல்லாம் பிள்ளைகளைப் படிப்பிக்க வேண்டியோ, தம் பெண்களுக்கு மணம் செய்விக்க வேண்டியோ விருத்தாசல முதலியார் துள்ளத்தைவிட்டு மீண்டும் சென்னை வந்தார். வந்து இராயப்பேட்டையில் தங்கினர்; திரு. வி. சகோதரர் இருவரையும் தொடக்கத்தில் இராயப்பேட்டையி லிருந்த 'ஆரியன் பிரைமரி பாடசாலை' யில் சேர்த்தார். பின்னர், அதாவது 1894-ல் இருவரும் வெஸ்லி பள்ளியில் சேர்க்கப் பட்டனர். முதலியார் வெஸ்லியில் நான்காவது வகுப்பிற் சேர்ந்தார். பெரியவர் திரு. வி. உ. மூன்றும் 'பாரம்' வரை படித்துப் பின்னர் பள்ளியை விட்டு விட்டார். ஆரியன் பாடசாலையிலும், வெஸ்லியிலும் வகுப்பில் திரு. சுந்தரனார் முதன் மாணவராகத் திகழ்ந்தார். அன்று முதலியார், உருவத் தில் இன்றுபோலில்லை. 'திண்ணன்' என்று பலரும் அழைக்கு மாறு உடல் உரத்தோடும், பொதுக்கையாகவும் இருந்தார். உடல் கனம் குறைய வேண்டி விட்டார் மருந்துகூடக் கொடுத்தனர். இவருடைய சிறந்த படிப்பும், உடல் வளர்ச் சியும் இராயப்பேட்டையிலுள்ள பலருக்கும் வியப்பினை விளைவித்தன. கண்ணேறு பட்டு விட்டது என்றுகூடக் கூற வேண்டியதாயிற்று. ஏனெனில் இவர் வெஸ்லியில் படித்துக் கொண்டிருந்தபொழுது, ஒரு நாள், ஒரு தண்ணீர்ப் பந்தலில் (சிற்றுணவு விடுதி) உளுந்துவடை ஒன்று தின்றாராம். அபத்தியங் காரணமாக ஒரு கால் மூடங்கியது. பின்னர் ஒரு கையும் மூடங்கியது. வீட்டிலேயே தங்கிவிட்டார். அந்த ஆண்டுப் படிப்புப் போய்விட்டது. மடங்கிய கையும் காலும் தேற பின்னும் ஓராண்டு சென்றது. அடுத்த 2 ஆண்டுகள் பலவிதமான குடும்ப அல்லல்கள் இவரைப் படிக்க விடாது தடுத்தன. இவ்வாறு தொடர்ந்து நான்கு ஆண்டுகள் நம் சுந்தரனார் அவர்களின் படிப்பு இடையறவு பட்டது. மேற் கூறிய நான்கு ஆண்டுகளில் இறுதி இரண்டாண்டுகள் சுந்தரனார் குதிரைப் பந்தயம், மாட்டுப் பந்தயம் விடுபவர்க

ஞடன் தொடர்பு கொண்டார்; மல்லர்களுடன் பழக்கம் கொண்டார்; முதலியாருக்குச் சிலம்பப் பயிற்சியிலும் சிறிது பழக்கமுண்டு.

மீண்டும் படிப்பு

திரு. கலியாணசுந்தரனாரின் பள்ளி வாழ்க்கை 1898-ல் மீண்டும் தொடங்கப் பெற்றது. இவர் விட்டுச்சென்ற நான்காம் வகுப்பிலேயே மறுபடியும் வெஸ்லியில் சேர்ந்தார். எவ்விதத் தடையுமின்றி 1904 வரை இவர் படிப்பு ஒரே ஓட்டமாகச் சென்றது. அக்காலத்தில் திரு. வி. க. வின் படிப்பு மிக உச்ச நிலையிலிருந்தது. பள்ளியில் எல்லாவற்றிலும் பரிசு வாங்கும் மாணவராகத் திகழ்ந்தார். இவர் திறமை கண்டு வியந்த பள்ளி நிருவாகிகள் இவரைச் சம்பளமில்லாது படிக்க வைத்தனர். அதாவது 'ஸ்காலர்ஷிப்' பெற்றுப் படித்தார். Sunday School எனப்படும் ஞாயிறு வகுப்புகளுக்கு இளமையிலிருந்து சுந்தரனார் தவறாது செல்லத் தலைப்பட்டார். அதனால் கிறித்தவ பாதிரிகளின் தொடர்பு இவருக்கு மிகுவதாயிற்று. ஆகவே, கிறித்தவ வேதமாய 'பைபிளை' நன்கு கற்றார். முதலியார் ஆறாம் 'பாரம்' படித்துக்கொண்டிருந்தபோது, யாழ்ப்பாணம். ந. கதிரைவேற் பிள்ளை வெஸ்லியில் தமிழாசிரியராக வந்தமர்ந்தார். கதிரைவேலருடன் முதலியாருக்கு நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. ஆதலின் முதலியாருக்குப் பள்ளிப் பாடங்களைப் படிப்பதைவிட பொதுவாகத் தமிழ் படிப்பதில் ஆர்வம் மிகுவதாயிற்று. இக்காலத்தில் இவருக்கு வெளி விவகாரங்களில் கருத்து மிகுந்து செல்வதாயிற்று. படிப்பில் முன்னைய ஊக்கம் இல்லாவிட்டாலும், நன்றாகவே படித்து வந்தார். அக்காலத்தில் கதிரைவேலர்க்கும், இராமலிங்க சுவாமிகளின் கூட்டத்தார்க்கும் ஒரு பெரும் வழக்கு நடைபெறுவதாயிற்று. இதனையொட்டிய பிறிதொரு வழக்கில் சான்று பகரத் திரு. வி. க. சென்றார். மேலும், மேற்கூறிய வழக்கு நடவடிக்கைகளை வேடிக்கை பார்ப்பதற்காக இவர் பள்ளியை விட்டு அடிக்கடிச் செல்லத் தொடங்கினர். ஆகவே, அவ்வாண்டு 'மெட்றிகுலேஷன்' தேர்வுக்குச் செல்ல இயலாது போயிற்று. இத்துடன் பள்ளிப் படிப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

தமிழ்ப் படிப்பும் பிறமொழிப் பயிற்சியும்

பிறகு திரு. வி. க. கதிரைவேலரிடம் தமிழ் பயிலத் தொடங்கினர். சிலகாலத்திற்கெல்லாம் நீலகிரிக்குச் சென்ற கதிரைவேலர் அங்கேயே இறந்து பட்டார். கதிரைவேல

ரிடம் தமிழ் பயின்ற பலர், பின்னர் யாரிடமும் தமிழ் பயிற லாகாதென விரதங் கொண்டனர். அதனை ஒப்பாததால் திரு. சுந்தரனுர் மற்றவர்களால் குருதுரோகி என்றுகூட அழைக் கப்பட்டார். தமிழின்மீது அளவிலா அன்பு கொண்ட இவர் அதனைப் பொருட்படுத்தினரில்லை. அன்று அதனைப் பொருட்படுத்தி யிருப்பரேல் இன்று பொதுவாகத் திரு. வி. க. நிலைமையும், சிறப்பாகத் தமிழ் நிலைமையும் வேறுவிதமாக இருக்குமல்லவோ ! திரு. வி. க. மயிலை மகா வித்துவான் தணிகாசல முதலியாரிடம் தமிழ் நூல்களையும், சைவ சாத்திரங்களையும் பாடங் கேட்டார்; அவரிடம் வடமொழி பயிலத் தொடங்கினர். அக்காலையில், அம்முயற்சி முற்றுப்பெறவில்லை. மரூஉர். கணேச சாஸ்திரியார் தொடர்ந்து நீலகண்ட பாஷியம் பிரசங்கம் செய்தார். அக்கூட்டங்களுக்கெல்லாம் முதலியார் தொடர்ந்து சென்று கேட்டு வந்தார். அதனோடு அப்பொழுது பகவத்கீதை, வான்மீகி ராமாயணம் பற்றிய சொற்பொழிவுகள் நடக்குமிட மெல்லாம் முதலியார் விடாது செல்லத் தலைப்பட்டார். இவ்வாறு கேட்டல் வாயிலாக வடமொழி நூற் கருத்துக்களை உணரலானுர். மேலும் பாம்பன் சுவாமிகள் திருவல்லிக் கேணியில் தங்கி, உபநிஷதங்களை நாடொறும் முறையாகச் சொல்லி வந்தார். அவைகளையும் சென்று கேட்டுக் குறிப் பெடுத்து வந்தார்.

பின்னர் திரு. வி. க. வடமொழியிலுள்ள சைன நூல்களைத் தெரிந்துகொள்ளப் பேரார்வங் கொண்டார். அவ்வகையில், பேராசிரியர் சக்கரவர்த்தி நயினர் உள்ளிட்ட சிலர் திரு. சுந்தரனுருக்குத் துணை செய்தனர். மேலும், ஒரு பிட்சு இராயப்பேட்டையிலுள்ள தென்னிந்திய சாக்கிய பௌத்த சங்கத்தில் 'திரிபிடகம்' பற்றிச் சொற் பொழிவாற்றியதையும் சுந்தரனுர் சென்று கேட்டனர். அறிஞர். ம. சிங்காரவேல் செட்டியார் வகுப்பு வைத்து 'டார்வின்' கொள்கைகளை விளக்கி வந்தார். அவ்வகுப்பில் நமது முதலியார் ஒரு மாணவராகச் சென்று இடைவிடாது அதனைக் கேட்டனர். பிற்றைநாளில் மகமதலியின் ஆங்கில மொழி பெயர்ப்பான கொராணைக் கூர்ந்து ஆய்ந்தார்; தியாசபிகல் சங்கத்து அறிஞர்களின் நட்பு கிடைத்த காலையில், அச்சங்கக் கலைகள் பலவற்றையும் பயிலும் பேறு பெற்றார். இவ்வாறு இவருடைய தமிழறி வும், பிறமொழி யறிவும் கற்றல்-கேட்டல் வாயிலாக நன்கு வளர்ந்து விரிந்தன. இத்தகைய வாய்ப்புக்களே இவரைப் பின்னாளில் ஒரு பெரும் பேராசிரியராக மிளிரச் செய்தன.

திரு. சுந்தரனர், 'மெட்றிக்குலேஷன்' படிப்புத் தடைப் பட்டதால், இராயப்பேட்டை 'கமர்ஷியல் பள்ளி'யிற் சேர்ந்து Book Keeping-ல் தேறினர். 1906-ல் ஸ்பென்சர் கம்பெனியில் சேர்ந்து வேலை பார்த்தார். அங்கு நீண்டநாள் இருந்தாரில்லை. 2-ஆண்டுகளில் அதாவது 1908-ல் அதைவிட்டு நீங்கினர். காரணம்: அக்காலை சென்னை வந்து பேசிய விபினசந்திரபாலரின் கடற்கரைப் பேச்சு, முதலியாருக்கு நாட்டு வெறியை உண்டாக்கியது. பத்திரிகையில் வந்த அப்பேச்சினைக் காலையில் ஸ்பென்சர் தொழிலகத்திற்கு எடுத்துச் சென்று தொழிலாளர் பலரை யும் ஓரிடத்திற் கூட்டிப் படித்துக் காண்பித்தார். அரவிந்தர் நடத்திய 'வந்தே மாதரத்'தின் செய்திகளையும் தொடர்ந்து தொழிலாளரிடையே படித்துக் காண்பித்து வந்தார். இச் செய்கை அங்குள்ள ஐரோப்பியரிடையே இவர்மீது கசப்பை உண்டாக்கியது. ஆகவே, அவர்கள் முதலியாரைக் கண்டித்தார்கள். உடனே திரு. சுந்தரனர் அவர்கள் அங் கிருந்து புறப்பட்டு, அக்காலை வைஜயந்தி அச்சகத்தில் மேற் பார்வையாளராகவிருந்த தம் தமையனர் திரு. வி. உலகநாத முதலியாரிடம் சென்று, தாம் ஸ்பென்சர் வேலையை விடப் போவதாகச் சொல்லி, அவ்வாறே செய்தனர். பின்னர் திரு. வி. உலகநாதரும், சிவசங்கர முதலியாரும் கூட்டு வைத்து 'உமாபதி குரு பிரகாசம் பிரஸ்' என்ற பெயரால் ஓர் அச்சகத்தைத் தொடங்கி நடத்தினர். அதில் தமிழ் நூல்கள் பலவற்றை முதன் முதலாக அடக்க விலையில் அச்சிட்டு விற்கத் தொடங்கினர். அக்காலை, திரு. கலியாண சுந்தரனர் அவர்கள் பெரியபுராணக் குறிப்புரையினை வசனத் துடன் எழுதித்தர, அது திங்கள்தோறும் சஞ்சிகை சஞ்சிகை யாக வெளிவந்தது. பின்னர் திருமந்திரம் அடக்கவிலைப் பதிப்பு வெளியிடப்பட்டது. அச்சகத்திற்கு இழப்பு (நஷ்டம்) ஏற்பட, அச்சகம் அதனோடு நின்றது.

பிறகு சுந்தரனர் ஆயிரம் விளக்கிலுள்ள வெஸ்லியன் பள்ளியில் முதல் 'பார' ஆசிரியராகச் சென்று அமர்ந்தார். அங்குத் தலைமையாசிரியராக ஜான் ரத்தினம் பிள்ளை என்பவர் அப்பொழுதிருந்தார். முதலியாருக்கு அவர் நட்புக் கிடைத்தது. பின்னர் ஜஸ்டிஸ். சதாசிவய்யர் நட்பைப் பெற்றார். இன்று திரு. வி. க அவர்கள் பொதுமை வேட்பவராக-சமரச சன்மார்க்கப் பேராசிரியராக விளங்கு கிறரென்றால், அதற்கு விதை விழுந்த இடம் வெஸ்லியன் பள்ளியே. மூடப் பழக்க வழக்கங்களில் முதலியார் அவர்

களுக்கு வெறுப்புத் தோன்றிய இடமும் அதுவே. 1910ல் அப்பள்ளியிற் சேர்ந்த முதலியார் தொடர்ந்து ஆறாண்டுகள் அங்கு வேலை பார்த்தார். பிறகு இராயப்பேட்டை வெஸ்லி கல்லூரியின் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராக வந்து, அங்கு ஒன்றரை ஆண்டுகள் இருந்து சிறந்த பணியாற்றினர்.

1917-ல் நடைபெற்ற 'சுயாட்சிக் கிளர்ச்சி' காரணமாக அன்னிபெசண்ட், அருண்டேல், வாடியா ஆகிய மூவரும் காப்புக் கைதிகளாக வைக்கப்பட்டனர். அதுபற்றி நாட்டில் ஒரு பெரும் எழுச்சி உண்டாயிற்று. அக்காலத்தில்தான் முதலியார் வெஸ்லி கல்லூரி ஆசிரியர் பதவியை விட்டார். ஜஸ்டிஸ் கட்சி, சுயாட்சிக் கிளர்ச்சியை ஒடுக்க எண்ணியது. 'திராவிடன்' பத்திரிகையில் சமயத்தாக்குதல் மிகுந்தது. ஆகவே அக்கட்சியைத் தொலைக்க எண்ணினார் முதலியார். அக்காலத்தில் காங்கரசுடன் சேர்ந்துகொண்டே பார்ப்பன ரல்லாதார் நன்மையை நாடுவது என்ற கொள்கையைக் கொண்ட சென்னை மாகாணச் சங்கம் தோன்றியது. அச் சங்க அமைச்சருள் திரு. வி. க ஒருவர். அச்சங்க ஆதரவில் கோகலே மண்டபத்தில் கேசவ பிள்ளை தலைமையில் நடந்த கூட்டத்தில் நமது சுந்தரனார் முதன் முதலாகப் பேசினர். அதுவே இவருடைய அரசியல் கன்னிப் பேச்சு. பின்னர் தமிழ்நாட்டு அரசியல் உலகத்திலேயே ஒரு தலைசிறந்த பேச்சாளராக முதலியார் திகழ்ந்தார். இன்றும் அவர் உணர்ச்சியோடு பேசத் தொடங்கிவிடுவாரானால் அதனை நாம் நாள்முழுமையும் கேட்டுக்கொண்டிருக்கலாம். ஊக்கம் பிறக்கும்; நாம் புது மனிதராய் விடுவோம், அவருடைய பேச்சுக்கு அத்தகைய சக்தி உண்டு.

நமது முதலியார் அவர்கள் 1917-ம் ஆண்டு டிசம்பரில் 'தேச பக்தன்' பத்திரிகையின் ஆசிரிய பீடத்திலமர்ந்து 2½-ஆண்டுகள் ஆற்றிய இணையிலாத் தொண்டினைத் தமிழுலகம் நன்கு அறியும். தேசபக்தன் மூலம் பலருக்கும் அரசியல் உணர்ச்சியை ஊட்டினார்; 'தமிழ் தெரியாது' என்று கூறிக் கொண்டிருந்த பல தலைவர்களையும் தமிழில் பேசச் செய்தார்; தமிழைப் பலவழியிலும் வளர்த்தார்; தமிழிலும் உணர்ச்சியுடன் எழுத முடியும் - உலையா ஊக்கத்தை உண்டாக்க முடியும் என்பதைத் தம் எழுத்துக்களால் மெய்ப்பித்தார்; தமிழில் தனித்ததோர் அழகிய - விழுமிய - தெள்ளிய நடையினைக் கண்டார். இன்று தமிழ்ப் பத்திரிகை உலகில் மிளிரும் மணிகள் பலர் இவரிடம் தயாரானவர்களே. சுருங்கச் சொல்லவேண்டுமானால் முதலியாரின் உரைநடை,

தமிழில் ஒரு தனிநடையினை உண்டாக்கித் தமிழ் உரை நடையினை வளம்படுத்தியதெனலாம். நிற்க, 'தேச பக்தன்' மீது வாங்கியிருந்த முதல் ஈடுகாணத்தை அரசியலார் பறிமுதல் செய்தனர். அக்காலை, முதலியார் அதுபற்றி எழுதிய தலையங்கங்கள் தமிழ் நாட்டில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கின. 'தேசபக்தன்' வாயிலாக இவர் தமிழ் நாட்டில் பல நாட்டுத் தலைவர்களையும், தொண்டர்களையும் உண்டாக்கினர். பிறகு 'தேசபக்தன்' லிமிடெட் காரியதரிசிக்கும், இவருக்கும் இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக இவர் 'தேச பக்தனை' விட்டு விலகினர்.

பிறகு முதலியார் அவர்கள் சுமார் 20 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய உயர்தனித்தாளாகிய 'நவசக்தி' பெரும் பல்கலைக் கழகமாக நின்று நிலவியது. 'நவசக்தி' தமிழ், சமயம், சமூகம், அரசியல், பொருளியல், தொழிலியல், சீர்திருத்தம், பெண்ணுலகு முதலிய பல துறைகளையும் பண்படுத்தியது; பாவலர் பலரை உண்டாக்கியது. சிறப்பாக 'நவசக்தி' தமிழ் வளர்ச்சி கருதிச் செய்த தொண்டு ஈடு மெடுப்புமில்லாதது. இத்தகைய 'நவசக்தி'யை அண்மையில் உலகப் போர் தொடங்கியவுடன் விட்டுவிட்டார்.

அரசியலில் திரு. வி. க.

திரு. கலியாண சுந்தரனார் நான்காம் 'பாரம்' படிக்கும் போதே சுரேந்திர நாதருடைய பேச்சு முதலியவைகளைப் படிக்கத் தொடங்கினர். அக்காலத்தில் திரு. முதலியாரிடம் விழுந்த அரசியல் விதை, விபினசந்திரர் காலத்தில் முளைக்கத் தொடங்கி, அன்னிபெசண்ட் சுயாட்சிக் கிளர்ச்சியின்போது வளரத் தொடங்கியது. அவ்வளர்ச்சி இவரை வெளிப்படையான காங்கரஸ் தொண்டராக 1917-ல் ஆக்கியது. முதலியார் காங்கரஸில் புகுவதற்கு முன்னெல்லாம் காங்கரஸ் மேடை ஆங்கில மயமாக இருந்தது. இவருடைய தமிழ்ப் பேச்சுத்தான் காங்கரஸ் மேடை, காரியக்கமிட்டி ஆகியவற்றையும், காங்கரஸ் சம்பந்தமான எழுத்து, தீர்மானம், பேச்சு முதலிய பிறவற்றையும் தமிழ்மயமாக ஆக்கியது. 1921-ல் நடந்த காந்தியடிகளின் ஒத்துழையா இயக்கத்தில் கலந்து நன்கு உழைத்தார். ஆனல் மற்றவர்களைப்போல முதலியாருக்குச் சிறை வாழ்வு கிடைக்கவில்லை. நெல்லை, திருச்சி, வட ஆற்காடு, தென்னற்காடு என்ற நான்கு ஜில்லா மாநாடுகளிலும், எட்டு தாலூகா மாநாடுகளிலும் தலைமை தாங்கி

அவற்றைச் சிறப்புற நடத்தி யுள்ளார். தமிழ்நாடு எங்கணும் சென்று அரசியல் உரை ஆற்றி வந்தார். 1925ல் காஞ்சியில் முதலியார் அவர்கள் தலைமையில் காங்கரஸ் மாகாண மாநாடு கூடியது. அம்மாநாட்டில்தான் இவரும், பெரியார் ஈ. வெ. ரா வும் கருத்து வேற்றுமை காரணமாகப் பிரிந்தனர். காஞ்சி மாநாட்டில் திரு. ஈ. வே. ரா. அவர்கள் சார்பில் வகுப்புவாதத் தீர்மானம் ஒன்று கொண்டுவரப்பட்டது. தலைவர் என்ற முறையில் முதலியார் அதனைத் தள்ளிவிட்டார். பிணங்கிய ஈ. வே. ரா. வெளியேறினர். காங்கரசை விட்டு நீங்கினர்; ஜஸ்டிஸ் கட்சியிற் சேர்ந்தார். சுயமரியாதை இயக்கம் கண்டார். சில ஆண்டுகள் இருவருக்கு மிடையே பெரும் போராட்டம் நிகழ்ந்தது. பொதுவாக இவ்விருவருக்கும் இன்றுள்ள வேற்றுமைக்குக் காரணம் கடவுள், கலை ஆகிய இரண்டே. பிற எல்லாவற்றிலும் இருவரும் ஒத்த கொள்கையுடையவர்கள். அடுத்து டாக்டர் பி. வரதராஜலு நாயுடு அவர்களும் இவ்விருவரோடு ஒரு காலத்தில் ஒத்துழைத்தவர். **நாய்க்கர், நாயுடு, முதலியார்** என்ற இம்மூவரும் அக்காலத்தில் தமிழ்நாட்டு அரசியலில் மும்மூர்த்திகளாகத் திகழ்ந்தனர். மூவரும் பிரியாது தொடர்ந்து வேலை செய்து வந்திருப்பார்களானால், இன்றைய தமிழ்நாட்டுச் சரித்திரமே வேறுவிதமாக அமைந்திருக்கும். ஆனால் தமிழர்களின் சாபக்கேட்டால் மூவரும் பலவேறு காரணங்களால் பிரிந்தனர். ஆயினும் அவர்களிடையே உள்ள தனிப்பட்ட அன்பு இன்னும் மாறாதிருப்பது நாம் கண்டு மகிழ்தற்குரிய தொன்று.

1926-ல் சட்டசபைகளைக் கைப்பற்றி அரசியலில் முட்டுக்கட்டையிட வேண்டுமென அகில இந்திய காங்கரஸ் தீர்மானித்தது. சுந்தரனார் அதன்படி சென்னைச் சட்டசபைத் தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். அப் பொழுது சட்டசபையைக் கைப்பற்றி முட்டுக்கட்டை போடுவதன் மூலம் அரசாங்கத்தை ஸ்தம்பிக்கச் செய்ய வேண்டுமென எங்கும் பிரசாரம் செய்யப்பட்டது. வெற்றியின் தோற்றம் உண்டாகிற காலத்தில் சென்னைத் தலைவர்களிடையே ஒரு சூழ்ச்சி முளைத்தது. சுயேச்சை வாதிகளை மந்திரிகளாக்கி அம் மந்திரி சபைக்குக் காங்கரஸ் துணைநிற்பது என்று சென்னைக் காங்கரஸ் தலைவர்கள் உள்ளூர வேலை செய்தனர். இதனை அறிந்த முதலியார் அவர்கள் நாம் முட்டுக் கட்டைப் பிரசாரம் செய்கின்றோம்; சூழ்ச்சி வேறுவிதமாக நடக்கின்றதே; முடிவு என்னுமோ? என எண்ணித் தமிழ் நாட்டுக் காங்கரஸ் நிர்வாகத்திலிருந்து உடனே விலகினர்.

பிறகு காங்கரஸில் எந்தவித பொறுப்பும் ஏற்காது, சாதாரண உறுப்பினராக மட்டுமிருந்து தம் கடமையை நேர்மையுடன் ஆற்றிவந்தார். இன்று இவர் காங்கரஸ் அங்கத்தவரோ என்னவோ; ஆனல் காங்கரஸ் காரராகவே இருந்து வருகின்றார்.

தொழிலாளர் உலகம்

தொழிலாளர் உலகத்திற்கு இவர் செய்த தொண்டுகள் பொன் எழுத்துக்களால் பொறிக்கத் தக்கன. இந்தியாவில் முதன் முதலாக ஒரு தொழிலாளர் சங்கம் உண்டான தென்றல், அது சென்னைத் தொழிலாளர் சங்கமே. இச்சங்கம் 1918-ல் காணப்பட்டது. இதைக் கண்ட திரு. வாடியா உள்ளிட்ட ஐவரில் திரு. முதலியாரும் ஒருவர்; முக்கியமானவர். இதிலிருந்தே பின்னர் இந்திய நாடு முழுமையும் பல சங்கங்கள் இனைத்தன. பிற்காலத்தில் பிறந்த பெரிய சங்கங்களாகிய M. & S. M. தொழிலாளர் சங்கம் போன்ற பல சங்கங்களில் முதலியாருக்குத் தொடர்பிருந்தது. தாய்ச்சங்கமாகிய சென்னைத் தொழிலாளர் சங்கத்திலிருந்து 25-ஆண்டுகள் சேவை செய்தார். பலமுறை அச்சங்க நிர்வாகத்திலிருந்து சில வாண்டுகள் துணைத்தலைவர்-தலைவராக-இருந்தும் பெரும் பணி ஆற்றினர். 1919-ல் வாடியா உள்ளிட்ட பதின்மர் மீது முதலாளிகளால் சென்னை உயர்நீதி மன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டது. பிற்காலத்தில் இந்தியத் தொழிலாளர் சங்கச் சட்டத்திற்கு மூலமாக நின்றது அவ்வழக்கே. அக்காலத்தில் தொழிலாளர் சங்கத் தலைவராக விருந்த வாடியா, அப்பதவியினின்று நீங்கி மேனாடு சென்றார். தலைமைப் பதவியைச் சுந்தரனர் ஏற்றார். ஏற்றதும் B. & C. மில்லில் ஒரு பெரிய கதவடைப்பு நேர்ந்தது. பின்னர் அது வேலை நிறுத்தமாக மாறி ஏறக்குறைய 6 மாத காலம் தொடர்ந்துநடந்தது. அக்காலத்தில் சென்னை எங்கும் தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், வெடிவீச்சு முதலியன சதா நடந்தவாறே இருந்தன. அக்கால நிகழ்ச்சிகளைத் தொகுத்து நமது முதலியார் அவர்களே ஒரு பெரிய நூலாக எழுதுவார்களானல் அது தொழிலுலகத்திற்குப் பெரிதும் பயன்படும். அதனை அவர்கள் செய்யவேண்டுமென்று தொழிலுலகத்தின் சார்பாக அவர்களை வேண்டிக் கொள்ளுகின்றேன். அந்நாளில் சூளை பட்டாளம் ஒரு சிறிய போர்க்களமாக விளங்கியது எனலாம். அச்சமயம் சென்னையில் கவர்னராக விருந்தவர் லார்டு வெல்லிங்டன். அவர், இக்குழப்பம் காரணமாகத் திருவாளர்கள் E. L. ஐயர்,

சக்கரைச் செட்டியார், திரு. வி க. ஆகிய மூவரையும் நாடு கடத்த உளங்கொண்டார். அப்பொழுது சென்னையைப் பனகல் மந்திரி சபை ஆட்சி புரிந்தது. எனவே, ஸர். P. தியாகராயர், பனகல், டாக்டர் சி. நடேச முதலியார் முதலிய மூவரின் தலையீட்டால் வெல்லிங்டனின் நாடு கடத்தும் எண்ணம் மாறி, சாதாரண எச்சரிக்கையாக முடிந்தது. அண்மையில் 1942-ல் நடந்த சென்னை வேலை நிறுத்தத்தின் போதும் சிலர் துப்பாக்கிக்கு இரையாயினர். அதில் இவர் இந்திய பாதுகாப்புச் சட்டத்திற்கு இரையாவார் என்று எங்கணும் பேசப்பட்டது. ஆனால் திரு. முதலியார் அவ்வேலை நிறுத்தத்தைத் திறம்பட நடாத்தி எச்சார்பிலும் எவ்விதத் தொல்லையும் நேராவண்ணம் நல்லதொரு முடிவைக் கண்டார். முதலியார் தொழிலியக்கத்தில் சமதர்மக்கொள்கை கொண்டவர். இவ்வாண்டு சிறந்ததொரு ஆண்டாகும். ஏனெனில், முதலியார் ஈன்றெடுத்த குழவியாகிய சென்னைத் தொழிலாளர் சங்கம் நன்கு வளர்ந்து இருபத்தைந்து நிறைந்து வெள்ளிவிழாவை அண்மையில் கண்டது முதலியாரும் அறுபது நிறையப் பெறுகிறார். மணிவிழா அழகுற நடக்கின்றது.

பெண்ணுலகு

பெண்ணுலகத்திற்கு நமது சுந்தரனார் செய்து வரும் தொண்டினைத் தமிழ்நாடு நன்கறியும். இதுவரை யாரும் செய்திராத அத்துணை நலங்களை முதலியார் பெண்ணுலகுக்குச் செய்திருக்கின்றார். இன்று தமிழ்நாட்டில் பெண்ணுரிமை கருதிப் பேசப்படுகிறதென்றால், பெண்ணுலகு ஓரளவு தழைத்து வளர்ந்துள்ளதென்றால் அதற்கு மூல காரணர் நமது முதலியார் அவர்களே. எனவே, பெண்ணுலகம் முதலியாருக்குப் பெரிதுங் கடமைப்பட்டுளது. முதலியார் பள்ளிப் படிப்பை விட்டதும் திருமணம் செய்ய இசைந்தாரில்லை. பின்னர் திருமணம் செய்துகொள்ள ஒருப்பட்டார். கமலாம்பிகை என்ற அம்மையை 1912-ல் மணந்தார். ஆறாண்டு காலம் அவர்கள் இல்லறம் இனிது சென்றது. அக்காலத்தில் ஆணும் பெண்ணுமாக இரு மகவு பிறந்து சின்னாளில் மறைந்தன. 1918-ல் அம்மை கமலாம்பிகை தம் ஆருயிர்க் கொழுநரைத் துறந்து, தம் அரும் பெறற் குழவிகளைத் தேடிச் சென்றார். அதனோடு முதலியாரின் மனையற வாழ்வு முடிந்தது. மறுமணம் செய்து கொள்ளுமாறு உற்றார் உறவினர் எவ்வளவோ வற்புறுத்தியும் திரு. வி. க. அதற்கு இணங்கினாரில்லை.

பொதுத் தொண்டிலே அவர் சிந்தை முற்றும் சென்றது. ஆறு ஆண்டு இல்லற வாழ்க்கை அவருக்கு நிறைந்த அனுபவத்தைக் கொடுத்தது. பெண்ணுலகத்திற்குச் சேவை புரிய வேண்டுமென்ற பெருவேட்கையும் இவருக்கு அக்காலத்திலேதான் பிறந்து வளர்ந்து, அதன் காரணமாக அவர் பொறித்த 'பெண்ணின் பெருமை' என்ற அரும் பெறல் நூல் இன்று தமிழ்நாட்டைச்சிறப்பாகத் தமிழ்மகளி ருலகத்தை எவ்வெம் முறைகளில் வளர்த்து வருகிறதென் பதை யான் இங்கு விரித்துக்கூற வேண்டுவதில்லை. முதலி யார் எழுதிய பிற நூல்களிலும் பெண்மை மணம் ஆங் காங்கே கமழ்ந்து கொண்டேயிருக்கும்.

சமயம்

திரு. வி. க. பிறந்த குடும்பமே சமயப்பற்று மிகுந்தது. முதலியாரின் சமயத் தொண்டிற்குக் கால்கோள்விழா இராயப்பேட்டை பாலசுப்பிரமணிய பக்த ஜன சபையில் நிகழ்ந்தது. 1909-ல் திருவல்லிக்கேணி சிவனடியார் திருக் கூட்டத்தில் முதலியார் பெரிய புராண வகுப்புத் தொடங் கினர். நாளடைவில் அவ்வகுப்பு பெரியதொரு பிரசங்க மேடையாயிற்று. ஞாயிறுதோறும் பிரசங்கம் செய்து வந் தார். அப்பிரசங்கங்கள் மிகச் சிறந்தன; சீர்திருத்த வாடை வீசுவன. பெரிய புராணத்தை அக்காலத்தில் ஒரு சிறந்த சீர்திருத்த நூலாகவே சுந்தரனார் விரிவாக விளக்கி வந்தார். ஒரு சருக்கம் முடிய ஆறு ஆண்டுகள் ஆயின. 1911 முதல் சைவசித்தாந்த சமாசத்திற் சேர்ந்து பெருந் தொண்டாற்றி வந்தார். கிழக்கு மருதூரில் நடைபெற்ற சைவசித்தாந்த சமாச வெள்ளி விழாவில் முதல் நாள் கூட்டத்தில் தலைமை தாங்கித் திறம்பட நடத்தினர். பின்னர் 1934-ல் திருவதிகையில் கூடிய சமாச ஆண்டு விழாவிலும் தலைமை தாங்கினர்.

திரு. வி. க. சைவக் குடும்பத்தில் பிறந்தவ ராதலால் இயற்கையில் அவருக்குச் சைவப்பற்று மிகுதியாயிருந் தது. ஆயினும் இளமை முதலே இவருக்கு வைணவத்தி லும் பற்றுண்டு. ஆகவே முருகனுடன், பார்த்தசாரதியை யும் சென்று வணங்கிவந்தார். முருகன் மீது இவர்கொண்ட பக்தி 'முருகன் அருள் வேட்டல்' என்ற நூலாக வெளி வந்தது. 'திருமால் அருள் வேட்டல்' பாடிக் கண்ணனையும் வணங்கினர். வரவர 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திருவாக்கைப் பின்பற்றத் தொடங்கினர்.

எல்லா சமயங்களையும், கடவுள்களையும் ஒன்றுகக் கண்டார். அந்த எண்ணம்-கொள்கை அண்மையில் 'பொதுமை வேட்டல்' என்ற நூலாக விரிந்து மலர்ந்தது. இன்று திரு. வி. க. சமரச சன்மார்க்கத்தை வேண்டுகின்றார். சமரச சன்மார்க்கமே—பொதுமை வேட்டலே இன்று அவருடைய அழுத்தமான கொள்கையாக நிற்கின்றது. இவருடைய சமயமும் சமரச சன்மார்க்கமே. முதலியார் வீடுபேற்றை விரும்புபவரல்லர். அண்மையில் சென்னைத் தமிழ்ச் சங்கத்தில் திரு. வி. க. இதனை விரிவாக—வெளிப்படையாகக் கூறினர். மீண்டும் பிறப்பை விரும்புகிறார். பிறந்து மேலும் மக்களிடையே தொண்டாற்ற வேண்டுமென்கிறார்.

இளைஞர் உலகம்

திரு. வி. க. தமிழ் இளைஞர் முன்னேற்றத்திற்காகப் பெரிதும் பாடுபட்டுள்ளார்; பாடுபட்டும் வருகிறார். துறையூர் மாணவர் மகாநாட்டில் இவர் ஆற்றிய சொற்பெருக்கு மாணவர் உலகத்தையே தட்டி எழுப்பியது. அதனை இன்றைய மாணவர் உலகமும் பாட புத்தகங்களின் மூலமாகப் பயின்று பயனடைந்து வருகின்றது. இவரை எங்கும்—சிறப்பாக மாநாடுகளிலும், பிற இடங்களிலும் பெரும்பாலும் இளைஞர்கள் இடையே உலவக் காணலாம். இளைஞர்களை ஊக்கி முன்னுக்குக் கொண்டு வருவதை அவர் தமது பெருங் கடமையாகக் கொண்டுள்ளார். தமிழிளைஞர்கட்கும் முதலியாரிடம் ஒரு தனி மதிப்பு—பேரன்பு உண்டு.

தமிழாசிரிய உலகு

தமிழாசிரிய உலகிற்கு முதலியார் செய்த தொண்டு பெரிது. நாட்டில் தமிழாசிரியர்கள் நிலை, மதிப்பு, பிற எல்லாம் உயரப் பெரும்பாடுபட்டார். இன்றும் அவர் செய்து வரும் தொண்டு இணையற்றது. தமிழ் வளர்ச்சிக்கு அவர் செய்த தொண்டுகளை முன்பே குறித்துள்ளேன். அதுபற்றிச் சிறப்பாகக் குறிக்கத் தக்க தொன்றுண்டு. அண்மையில் தமிழ்நாட்டில் 'இந்திக் கட்டாயப் பாடத் திட்டம்' வந்த காலையில் முதலியார் அதற்கு இணங்கவில்லை.

தொகுப்பு

திரு. வி. க. பொதுவாகத் தமிழ்நாட்டிற்கும், சிறப்பாகத் தமிழ் உலகம், பத்திரிகை உலகம், தொழிலுலகம், பெண்ணுலகம், ஆசிரிய வுலகம், மாணவருலகம், அரசியல் உலகம் ஆகிய பல துறைகட்கும் பெரும் தொண்டு செய்துள்ளார். அவருடைய வாழ்வே தொண்டு மயமானது. அவர் ஒரு பெரும் பல்கலைக் கழகமாக—அனுபவப் பேழையாக இன்று விளங்குகின்றார். அவருடைய வாழ்வு தமிழ் இளைஞர்கட்கு ஒரு பேரிலக்கியமாகத் திகழ்கின்றது. அவருடைய வாழ்க்கை அனுபவங்களைத் தொகுத்து அவர்கள் வெளியிடுவார்களானால் தமிழ் நாட்டிற்கு அது பெரும் பயன் தருவதாகும்.

முதலியார் தூய உள்ளம் உடையவர். எளிய வாழ்க்கையும், எளிய உடையும் கொண்டவர். குணக்குன்று. பொறுமையே வடிவமானவர். பணத்தைப்பற்றிச் சற்றும் கவலை யில்லாதவர். எல்லோரையும் ஒன்றுக நடத்துபவர். இல்லற ஞானியாக வாழ்பவர். அவர் கண்ட அச்சகத்திற்குச் ' சாது அச்சுக்கூடம் ' என்ற பெயரிட்டதே அவருடைய சாந்த நிலையை விளக்குகின்றதல்லவா? இத்தகைய பெருமகனார், இன்று சமரச சன்மார்க்கத்திற்காக உழைக்கின்றார்; தமிழ் வளர்ச்சி கருதிப் பெரும்பாடு படுகின்றார். சென்னைத் தமிழ்ச் சங்கத் தோற்றத்தில் பங்கு கொள்ள முன்வந்ததே தமிழில் முதலியாருக்குள்ள ஆர்வத்தை நன்கு விளக்குகின்றது. இன்று மணிவிழா சிறப்புற நடைபெறுகின்றது. என் சிந்தை யமர்ந்த எந்தையாம் கந்தவேள் இவருக்கு நீடிய ஆயுளையும், வலிய உடலினையும், குன்ற ஊக்கத்தையும் தந்தருளுவானாக!

வாழ்க திரு. வி. க! **வாழ்க தமிழகம்!**

வாழ்க தமிழ் மொழி!

"வழ வழப்பு"

—சுவாமி சண்முகானந்தர்

மக்களின் நாகரிக நிலையினைத் தேர்ந்தறிய வழிகள் பல உண்டு; அவற்றுள் தலைசிறந்தது எது? பிறர் வெளியிடுங் கருத்துக்களில் எவ்வெவற்றை எவ்வெவ்வாறு மக்கள் சுவைக்கின்றார்கள் என்பதே தலைசிறந்த தேர்வு எனலாம்.

புத்தர் வரலாற்றை நடிக்கும் நாடகத்தில் வாழ்வின் அரிய பெரிய கூறுகள் நிகழும்போதெல்லாம் சோர்ந்து கிடந்து, கோமாளியின் வீண்பேச்சுக் கேட்டபோது கிளர்ச்சி பெற்று மகிழ்வோர் நாகரிகம் அறியாதவர்கள் அல்லரோ? சிலப்பதிகாரம் முழுவதும் கற்று உண்மை உணர்வுகளுக் கெல்லாம் கல்போல் அசைவற்றுக் கிடந்து, கவுந்தியடிகளை நோக்கிக் காமுகர் கூறிய சிறு சொல் கேட்டு எழுச்சி பெறுவோர் அநாகரிகக் குழுவினர் அல்லரோ? பாலைக் கலிப் பாக்களைப் பாடி உள்ளம் உருகாதவராய், குறிஞ்சிக் கலியிலும் முல்லைக் கலியிலும் பிற்பகுதியில் உள்ள பாக்களில் கீழ்மக்கள் உரையாடுதலை உணர்ந்து உருகிப் படிப்பவர் காதலின் பெற்றி அறியாத அநாகரிகர் அல்லரோ? தமிழ்ப் பண்பு மிக்கவளாய்ப் பெண்ணின் பெருந்தகைமை வாய்ந்தவளாய்த் தலைவி கூறும் குறிப்பு மொழி நிறைந்த அகப் பாட்டுக்களின் நாகரிகம் அறியாமல், நாய் என்றும் பேய் என்றும் பாணனை இழித்துரைத்தல் போன்ற பிற்போக்கான பாடல்களைப் பாடிப் பாடி மகிழ்வோரும் அத்தகையர் அல்லரோ? தற்காலத்துச் சினிமாக்களுக்குச் சென்று கண்டு, நல்லன பலவும் அப்போதே மறந்து, விலைமாதர் விடுதிக் காட்சி, மனைவியின் விளக்குமாற்றிற்குக் கணவன் ஆளாகும் அல்லல், கயவரும் காணக் கூசும் களியாட்டம், சுவாமிகள், தாசானு தாசன், ஐயோடா போன்ற அரிய மறைமொழிகள் முதலான இவற்றையே மறவாமல் போற்றிச் சுவைப்பவரும் அநாகரிகத்தின் சேய்கள் அல்லரோ? ஒருவர் குணங்களை எடுத்துரைக்கும்போது செவி கொடாமல் ஊக்கம் இழந்து கிடந்து, குற்றங்களை எடுத்துரைக்கும்போது ஊக்கம் மிகுந்து வியந்து கேட்பவர் நாகரிகம் அறியா நன்மரங்கள் அல்லரோ? சமயத்

துறையிலோ, அறிவியல் துறையிலோ, அரசியல் துறையிலோ சொற்பொழிவுகள் நிகழும்போது, உயர்ந்த உண்மைகளை நாகரிக முறையில் பேசும்போது கண்மூடி மௌனியாய்த் தூங்கி விழுந்து, உண்மை கூறும் எல்லையினை எட்டிப் பாராமல் எதிர்க்கட்சியினரின் இயல்புகளையே எடுத்துக் கூறி இழிசொற்களால் பல படப் பழித்துப் பேசும் பேச்சுக்களை மணிக்கணக்காய் எழுச்சி பெற்றுக் கேட்டு மகிழ்ந்து இடைவிடாமல் கைதட்டி ஆரவாரம் செய்யும் தன்மையோர் நாகரிக இனத்தாருள் எண்ணப்படாதவர்கள் அல்லரோ? இத்தகைய மக்களின் சுவை இன்னது என்று அறிந்தபின், இவர்கள் நாகரிகம் இத்தகையது என்று கூறிவிடல் எளிதே அன்றே? இவர்கள் எத்தகையோருக்குத் தலைமை நல்குவார்கள்? தங்களுக்கு நல்விருந்து அளிப்போருக்கே — தாங்கள் சுவைக்கும் கருத்துக்கள் நிரம்பப் பேசுவோருக்கே — தாங்கள் மதிக்கும் இழிசொற்களும் பழிசொற்களும் நிறையச் சொற்பொழிவு ஆற்றுவோருக்கே — தாங்கள் விரும்பியவாறு எதிர்க்கட்சிகளை இடைவிடாமல் தூற்றித் திரிந்து வம்பளப்பவருக்கே - தங்கள் நிலைக்கு ஏற்ப இழிந்து நாகரிகப் பேச்சு முறையினை மறந்து 'மூட்டாள், அயோக்கியன், பேடி, அடி, உதை, கொல்' முதலான நன்மொழிகளை அடிக்கடி எடுத்தாண்டு, ஓயாக் கைத்தட்டுக்கு இடந்தந்து வாய்வீரம் காட்டுவோருக்கே - சமயம், மொழி, அரசியல் முதலான எல்லாத் துறைகளிலும் தலைமை தருவார்கள்; அவர்களுக்கே தேர்தல்களில் வாக்குரிமை வழங்குவார்கள்; அவர்களுக்கே பொதுக் கூட்டங்களில் பெருஞ் சிறப்புச் செய்வார்கள்; அவர்கள் நடத்தும் செய்தித் தாள்களுக்கும், வேடிக்கைத் தாள்களுக்குமே வாழ்வு நல்குவார்கள்.

எவருடைய குறை? எவரோடு நோவது? பாமர மக்களின் வாழ்வைப் பற்றிக் கவலை கொள்ளாமல் தம் அறிவு ஆராய்ச்சிகளுக்காகவே உழைத்து ஒதுங்கும் அறிஞர்களிடம் குறைகண்டு நோவதா? அறிஞர்களின் அறிவுரைகளுக்குச் செவி கொடாமல் செவிடர்களா யிருந்து, தன்னலத்தால் தலைமை தாங்க முன்வரும் சிலரைத் தலைமேல் தாங்கிப் போற்றி மதித்து உயர்த்தும் பாமர மக்களிடம் குறைகண்டு நோவதா? பாமரமக்களிடமே குறைகண்டவர்கள் சிலர்; அவர்களைப் பாமரர் வெறுத்த போதிலும், அறிஞர்கள் "நன்று நன்று, இதுவே வீரம்" என்று போற்றினர்கள். அறிஞரிடமே குறை கண்டவர்கள் சிலர்; அவர்களை அறிஞர்கள் பகைத்த போதிலும், பாமரர் "என்ன உண்மை! என்ன உறுதி!" என்று தாங்கினர்கள். பாமரமக்களிடமும்

குறைகண்டு, அறிஞர்களிடமும் குறைகண்டார் ஒருவர். அவரை இருசாராரும் பகைத்தார்கள்; வெறுத்தார்கள்; வீரம் இல்லை என்றார்கள் ஒரு சாரார்; உறுதி இல்லை என்றார்கள் மற்றொரு சாரர்; எல்லோரும் ஒருங்கு கூடி 'வழ வழ' என்றார்கள்.

தலைவர்களில் சிலர் கொள்கை அற்றவர்கள்; தங்களுக்கு என்று ஒரு கொள்கையும் இல்லாதவர்கள். அந்த அந்த வேளைக்குத் தகுந்தாற்போலப் பேசுவதில் வல்லவர்கள். நேற்றுவரை நல்லது என்று புகழ்ந்து வந்த அதனையே இன்றைக்குத் திடீரெனத் தீயது என்று பழித்துரைப் பார்கள். நேற்றுவரை வெறுத்து வந்த ஒன்றை இன்றைக்கு எதிர்பாரா வகையில் விரும்பிப் பேசுவார்கள். அவர்களை இந்த உலகம் 'வழ வழ' என்று சொல்வதில்லை; ஆனால், திறமை வாய்ந்தவர்கள், முன்னேற்றமானவர்கள் என்று அவர்களைப் புகழ்கின்றது.

தலைவர்கள் சிலர் பேசத் தொடங்கினால், அவர்களின் திண்மை - உறுதி இமயமலைபோல் அசைக்க முடியாததாகத் தெரியும். பேசின மேடையைவிட்டுக் கீழே இறங்கின வுடனே, "எது எப்படிப் போனால் நமக்கு என்ன? இப்படிப் பேசாவிட்டால் இந்தப் பாமர மக்களை ஏமாற்ற முடியாது" என்று உடன்வந்த நண்பரிடம் சொல்லுவார்கள். அவர்களை அந்தப் பாமர உலகம் "**உறுதி இல்லை**" என்று குறைகூறுவதில்லை; ஆனால், அவர்களின் போலி வீரத்தை நம்பி ஏமாந்து மயங்கிவிடுகின்றது.

இறந்தபின் உயிர் அடையும் நிலை இன்னது என்றும், வீடு என்பதன் இயல்பு இது என்றும் நீண்ட சொற்பொழிவு நிகழ்த்துவார் ஒருவர். அவர் மற்றச் சமயத்தார் சொல்வன எல்லாம் எடுத்துச் சொல்லி அவற்றிற்கெல்லாம் மறுப்பும் சொல்லிக் கடபடம் என்று உருட்டுவார். அவர் காலில் விழ நூற்றுக் கணக்கான மக்கள் கைகட்டிக் காத்திருப் பார்கள். ஆனால், பொருமை என்பது இன்னது, அதனால் உள்ளத்தில் நிகழும் மாறுதல்கள் இவை, அவற்றை அகற்றினால் உயிர் அடையும் முன்னேற்றம் இது என்று திருவள்ளுவர் காட்டிய நல்வழியை விளக்குவார் மற்றொரு வர். அவரை இந்த உலகம் அறிந்து போற்றுது; "என்ன என்னவோ வெறும் பேச்சுப் பேசினார்; இவரைப் போன்ற வர்களுக்கு உண்மையான சமயம் இல்லை; கடவுளும் இல்லை; ஒன்றும் இல்லை" என்று தூற்றும்.

'நான் இந்தக் காலத்தில் இப்படிச் செய்தேன்; அந்தக் காலத்தில் அவ்வாறு நடந்தேன்; அந்த மாநாட்டில் அவரை

அவமானப் படுத்தினேன்; இந்த மாநாட்டில் இவர் என்னிடம் அகப்பட்டுக் கொள்ளப் போகிறார்; இன்று இதைச் செய்கிறேன்; நாளை அதை முடிப்பேன்; எடுத்ததை முடிக்காமல் விட்டது என் பிறவியிலேயே இல்லை; என் றெல்லாம் எவரிடமும் தம் பெருமையே பேசி வாயில் வந்த வாறு பிறரை இகழ்ந்து திரியும் சிலரை, இந்தப் பாமர உலகம் கண்டு அஞ்சி 'வீரம்' என்று பெருமூச்சு விடும். அடுத்தபடி, அவர்களின் தோல்விகளையும் ஏமாற்றங்களையும் பணம் என்னும் வாய்திறக்கும் பண்புகளையும் ஆராய்ந்தறிய உலகத்திற்கு வாய்ப்பும் இல்லை; ஆற்றலும் இல்லை. 'இது தகும்; இது தகாது' என்று வழிகாட்டித் தங்கள் கடமை களைச் செய்து வரும் சிலரைக் கண்டு, இந்த உலகம் போற்று கின்றதா? இல்லை. போற்றுவிடினும், வாளா இருப்பின் அமையும். அதுவும் இல்லை. கடமை தவறாது ஆற்றிப் பண வருவாயினையும் இழந்து நிற்கும் அவர்களை 'வீரம் இல்லாத வர்கள்' என்று இந்த உலகம் கடியவும் முன்வருகின்றது. வாழ்வு எப்படி ஆயினும், வெறும் பேச்சில் வீரம் வேண்டும் போலும்!

"அந்த ஆசிரியர் தான் சிறந்தவர்; இந்த ஆசிரியர் பயனற்றவர்; அந்தக் கருத்துத்தான் உயர்ந்தது; இந்தக் கருத்து வெறும் வம்பு" என்று வெட்டிப்பேசும் ஒருவரையே கண்மூடி உலகம் கற்றவராய் மதிக்கின்றது. "அந்த ஆசிரி யர் இன்னவகையில் சிறந்தவர்; இந்த ஆசிரியரும் மற்றொரு வகையில் சிறந்தவர்; அந்தக் கருத்து ஒரு காரணம் பற்றியது; இந்தக் கருத்துக்குக் காரணம் வேறு" என்று ஆராய்ந்து கூறும் ஒருவரை இந்த உலகம் மதிக்கின்றதா? இல்லை. அவர் படித்த படிப்பின்மீதும் வழவழப்புத் தன்மை ஏற்றி ஒதுக்குகின்றது.

பணம் வரும் வழிகளுக்கு ஏற்றவாறு கொள்கைகளை மாற்றி மாற்றித் தங்களுக்கென ஒரு வழி இல்லாதவர்களாய் வாழும் சிலருக்குத் திருமகள் அருள் கிடைப்பதும் உண்டு. அவர்கள் பெருஞ் செல்வராக மாறுதலும் உண்டு. அப்போது இந்த உலகம் அவர்களை வியந்து பாராட்டிப் பாடி, நூல்கள் எழுதி, நினைவு நிலையங்கள் எழுப்பிப் போற்றுகின்றது. அல்லது, நல்ல நிலையிலிருந்து பிறகு தாங்கள் செய்த ஏமாற்றங்களின் பயனைத் தாழ்நிலை உற்றபோதும், உலகம் அவர்களைச் சில வேளைகளில் இரக்கத்தோடு பார்க்கின்றது. ஆனால், இரண்டும் அல்லாத நிலையில், உண்மையைக் கடைப் பிடித்து ஒரு நெறிப்பட்டு ஒழுங்காக வாழும் தலைவரைக் காண உலகத்திற்குப் பொறுமை இல்லை. ஏன்? அவரிடம் கண்டோரை மயக்கும் எழுச்சியும் இல்லை; வீழ்ச்சியும்

இல்லை. உலகம் எரிமலைகளையும் பூகம்பங்களையுமே விரும்பு கின்றது போலும்! பசும்புல் தரை சூழ்ந்த பூஞ்சோலையின் இயற்கை அழகு அதற்கு இனிமை பயவாத வழவழப்பாக உள்ளது போலும்!

பொதுவாக ஒவ்வொருவருக்கும் சில கொள்கைகள் இருத்தல் வேண்டும்; அவற்றில் உறுதியும் இருத்தல் வேண்டும். உடம்பு பற்றியும் ஒழுக்கம் பற்றியும் குடும்பம் பற்றியும் ஊர் நாடு மொழி முதலியன பற்றியும் சோர் வில்லாத கொள்கைகள் வேண்டும். இவைகளே வாழ்வுத் துறையில் திண்மையோடு கொள்ளத் தக்க கொள்கைகள்.

அறிவை வளர்க்கும் முறையில், அறிவின் வளர்ச்சிக்கு இடந் தருதல் வேண்டும். அங்கே அறிவுத் துறையில் கொண்டது விடா உறுதி, தீமை பயக்கும்; அறிவு வளர்ச்சியைத் தடைப்படுத்தும். ஒவ்வொன்றுக்கும் காரணம் கண்டு பொருந்துமோ பொருந்தாதோ என்று ஆராய்வது அறிவுத் துறை. அவ்வாறு ஆராய்வதை விடுத்து, பற்றே அறியாமையோ அவசரமோ காரணமாகக் கொண்டு, தான் அறிந்ததே உண்மை என்றும் பிறர் கூற்றெல்லாம் பிதற்றல் என்றும் துணிபவன் பேதைமைக்கு அணிகலன் ஆவான். ஆதலால், இந்தத் துறையில் திண்மை என்றும் வீரம் என்றும் பேசுவதற்கு இடம் இல்லை. அறிதல் வேண்டும் என்னும் வேட்கையும், பலவற்றையும் அறிந்து போற்றும் ஆற்றலும், உண்மை காணும் வரைக்கும் தயங்கும் அமைதியும், ஒன்றிலிருந்து மற்றொன்றினுக்குப் பற்றற்றுச் செல்லும் நெகிழ்ச்சியும் இல்லாத விடத்து அறிவு வளராது. சுருங்கக் கூறின், வாழ்வுத் துறையில் திண்மையும் வீரமும் வேண்டும்; விட்டுக் கொடுக்கும் இயல்பு கூடாது. ஆனால் அறிவுத் துறையில் விட்டுக் கொடுத்து நெகிழும் இயல்பு வேண்டும்; திண்மையும் வீரமும் வேண்டியதில்லை. அறிதோறு அறியாமை காணுதல் **சாக்ரடீஸ்** முதலான பிறநாட்டு அறிஞர்க்கும், திருவள்ளுவர் முதலான நம்நாட்டு அறிஞர்க்கும் உடன்பாடான அனுபவமாகும். ஆதலின் அறிவுத் துறையில் முடிந்த எல்லை வரையறுக்காமல், வேட்கை பெருக்கி நெகிழ்ந்திருத்தல் வேண்டும்.

உலகப் போக்கு இன்று நேர்மாறாக உள்ளது. வாழ்வுத் துறையில் பொருளுக்கு அடிமையாகி, விட்டுக்கொடுத்தல் மிகுந்து விட்டது. ஆனால் அறிவுத்துறையில் பரந்தநோக்கம் குறைந்து விட்டது; அவரவர் கண்டதே காட்சி என்னும் போலித்திண்மை பெருகிவிட்டது. உலகப் போக்கு இவ்வாறு மாறினமையால் தான், வாழ்வுத் துறையில் உறுதி

யும் அறிவுத்துறையில் நெகிழ்ச்சியும் உடைய ஒருவரை இன்று உலகம் தெரிந்துகொள்ளாமல் இடர்ப்படுகின்றது; வழ வழ என்கின்றது.

வழ வழப்பு வேண்டியது தான்; அது எந்தத் துறையில் வேண்டும் என்பதை ஆராய்ந்து அறிதல் வேண்டும். அஞ்சாமை, அஞ்சுதல் என்னும் இரண்டனுள் எது வேண்டும் என்று திருவள்ளுவரைக் கேட்கலாம்; என்ன கூறுகிறார் என்று அறியலாம். திருவள்ளுவரும் ஒரு வழ வழ! அஞ்சாமையும் வேண்டும்; அஞ்சுதலும் வேண்டும் என்கின்றார். "அஞ்சாமை அல்லால் துணை வேண்டா" (குறள் 497) என்று கூறிய அவரே,

> "அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது
> அஞ்சல் அறிவார் தொழில்" (குறள் 428)

என்னும் குறளில் அஞ்சுதல் வேண்டும் என்கின்றார். எனவே அஞ்சவேண்டிய இடம் எது, அஞ்ச வேண்டாத இடம் எது என்று அறிந்து கொள்வதே ஒருவர் கடமையாகும். அது போலவே, ஒருவருக்கு உறுதியும் வேண்டும்; நெகிழ்ச்சியும் வேண்டும். உறுதி வேண்டிய இடம் எது, நெகிழ்ச்சி வேண்டிய இடம் எது என்று அறிந்து கொள்வதே ஒருவர் கடமையாகும். வாழ்வுத் துறையில் - கொள்கை யுலகத்தில் உறுதி வேண்டும்; அறிவுத் துறையில் - கருத்துலகத்தில் நெகிழ்ச்சி வேண்டும்; வழவழப்பு வேண்டும்; இதுவே உண்மை.

உலகம் உண்மை உணரவில்லை. அறிவுத் துறையில் - கருத்துலகில் - நெகிழ்ச்சி பெற்றிருக்கும் ஒருவர் சிறப்பை உணரவில்லை; அவரை வழ வழ என்கின்றது. அவர், சேக்கிழார் சிறந்தவர் என ஓரிடத்தில் பேசுகிறார்; மற்றோரிடத்தில் நக்கீரர் முதலான சங்ககாலப் புலவர்களைப் போற்றுகிறார்; மற்றுமோரிடத்தில் ஷெல்லி முதலான மேனாட்டுப் புலவர்களை உயர்த்துகிறார். எதிர்பாரா வகையில் இன்னுமோரிடத்தில் திருஞான சம்பந்தர் புலமையைப் புகழ்ந்து உருகுகிறார். இவற்றை எல்லாம் கேட்ட உலகம் அவரை வழ வழ என்கின்றது. அவருடைய அறிவும் ஆராய்ச்சியும் செல்லும் வழியைப் பின்பற்ற முடியாமையே, அவரிடத்தில் உள்ள வழவழப்பைக் குறையாகத் தோற்றுவிக்கின்றது.

அவர், காலையில், "பாட்டென்றால் கம்பர் பாட்டே" என்பார்; மாலையில், "சங்கப் பாடல்களைக் கற்காமல்

வேறு என்ன கற்றும் பயன் இல்லை; இல்லை" என்பார். ஒருவேளையில், "ஆலமரத்திற்கு விழுது ஏன்? யானைக்குத் துதிக்கை எற்றுக்கு? இத்தகைய ஆராய்ச்சியே வேண்டற் பாலது. அறிவியல் (Science) தொடர்புடைய கல்வியே இயற்கைக் கல்வி; நம்நாட்டு இளஞாயிறுகளுக்கு அக்கல்வி வேண்டும்; சமயக் கல்வியினும் இதுவே இன்றியமையாதது" என்பார். மறுவேளையில், "மேலைட்டு விஞ்ஞானக் கல்வி குறையுடையது; அது நாத்திகத்துக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது. நம்நாட்டுச் சான்றோர் கோலிய கல்வித் துறையைப் புறக்கணித்தல் பாவம். புராணங்களில் கலைகளைக் காணும் கண் வேண்டும். கோயில்களெல்லாம் நம்நாட்டுக் கலைக் கூடங்கள் என்பதை உணரும் வகையில் கல்வி முறை மாறி அமைதல் வேண்டும்" என்பார். உயர்நிலைப்பள்ளியில் கணக்கு ஆசிரியர் கணக்கே பெரிது என்பதும், ஆங்கில ஆசிரியர் ஆங்கிலத்திற்கே முதன்மை என்பதும், தமிழ் ஆசிரியர் தமிழே கல்வியின் உயிர்நாடி என்பதும் இவ்வாறே மாணவர்களின் நன்மையைக் கருதி மற்ற ஆசிரியர்கள் மற்றப் பாடங்களைச் சிறப்பாக வற்புறுத்துவதும் நினைவுக்கு வருகின்றன. விரிந்த அறிவுடைமையின் பயனாக, ஒருவரே மாறிமாறிப் பல கருத்துக்களையும் வற்புறுத்துவதுதான் இவர்க்கு உள்ள சிறப்பு. திருவள்ளுவரைக் கற்பவர்களுக்கும் இந்த உண்மை விளங்கும். தாம் எடுத்துக் கூறப்புகுந்த அதிகாரத்துக்கு ஏற்ப, அந்த அந்தப் பகுதியை வற்புறுத்திச் செல்வது திருக்குறள் முழுதும் காணப்படுவதே அன்றோ?

இவர், "**புதுமை வேண்டும்; சீர்திருத்தம் வேண்டும்**" என்று எவ்வளவு உணர்வுடன் உரைப்பாரோ, அவ்வளவு உணர்வுடன், "அந்தோ! பழமையின் பெருமையைப் போற்றுவார் இல்லையே! நம் நாட்டுக் கலைகள் என்ன! பழக்க வழக்கங்கள் என்ன! ஒழுக்கக்கூறுபாடுகள் என்ன!" என்று உருகுவார். சீர்திருத்தக்காரர், "இவர் நெற்றியில் திருநீறு அணிந்து சீர்திருத்தம் பேச வந்து விட்டாரே" என்று மயங்க, பழஞ் சைவரோ, "கண்டிகை அணியாத இவர்க்குச் சைவசித்தாந்தம் பேச உரிமை ஏது" என்று புழுங்குவர். "**தமிழ் நாடு உலகம் கண்ட முதல் நாடு,** நாகரிகத்திற்கு உறையுள், காதல் மணம் கமழும் பூங்கா, வள்ளுவர் அறம் வளரும் வளநாடு" என்பன போன்ற கருத்துக்களைக் கேட்கும் இளைஞர் மனம் இறும்பூது எய்தும். மற்றொரு காலத்தில், "தமிழ்நாடு கெட்டுவிட்டது. இந்த நாட்டில் பிறக்கும் பாம்புக்கும் கொடிய நஞ்சு உண்டு; மக்களுக்கும் கொடிய நஞ்சு உண்டு; நேர்மை குறைந்தது; அழுக்காறு மிகுந்தது; இந்த நாடு இவ்வாறு கீழ்நிலை எய்தி

இடர்ப்படுவதிலும் கடல் கொள்ளப்பட்டு அழிதல் நலம்" என்று கடிந்து பேசுவார். கேட்போர் மனம் வருந்தும். பொறுமையும் ஆராய்ச்சிக்குரிய அமைதியும் இல்லாதவர்கள் வழுவழுப்புக் குற்றம் கூறுவார்கள். ஒரு குடும்பத்துத் தந்தை தன் குடும்பத்தையும் மக்களையும் புகழ்ந்து ஊக்கம் ஊட்டும் சமயமும் உண்டு; பழித்துத் திருத்தமுனையும் சமயமும் உண்டு. இந்த உண்மை குறை கூறுவோர்க்குத் தெரியாதோ?

இவையெல்லாம் அறிவுத் துறையை - கருத்துலகத்தைச் சார்ந்தவை. சிறந்த அறிஞர்க்கு இன்றியமையாத நெகிழ்ச்சி - விட்டுக் கொடுக்கும் இயல்பு ஒன்றே இவற்றிற்குக் காரணம். இதனை அறியாதவர்கள் இவரை அறிதலும் அரிதே!

இனி வாழ்வுத் துறையை - கொள்கையுலகத்தையும் சிறிது நோக்குவோம். அவர்தாம் வழிபடும் குருமாராக உள்ள - நாயன்மார் ஆழ்வார்களின்மீது குறைகூறிப் பார்க்கட்டும். வழுவழுப்புப் பறந்து போய், திண்மையும் வீரமுமே செறிந்த பேச்சை அப்போது காணலாம். ஏசுநாதரையும் முகம்மது நபியையும் ஒப்பப் போற்றுதலை வழுவழுப்பு என்போர், அப்போது காணும் வீரத்தையும் திண்மையையும் என்ன என்று கூறுவார்களோ?

மூதியோர் பலர் நிறைந்திருக்கும் கூட்டங்களில், அவர்கள் எல்லோரையும் விட்டு, இளைஞரை நாடிச் சென்று அவர்களிடையே அமர்ந்து முகமலர்ந்து பேசி மகிழும் அவர் இயல்பைக் கண்டவர்கள், அவர் வாழ்வில் உறுதி அற்றவர் என்று கூற முன் வருவார்களோ? துறவிகளும் துறவுக் கோலம் கொண்டவர்களுமே நிறைந்த சங்கங்களில் சென்று தலைமை தாங்கி, "வீட்டைத் துறந்து காட்டிற்கு ஓடி மூச்சைப் பிடித்து அலைவோர்க்கு வீடு (மோட்சம்) இல்லை; பெண்ணை மாயை எனக் காண்பதே அஞ்ஞானம்; பெண்ணுடன் வாழ்ந்து பெண்ணின் பெருமை உணர்வதே ஞான நெறி; பெண்ணைப் பழிக்கும் கொடுமை - பெண்ணடிமை உள்ள வரைக்கும் இந்த நாட்டுக்கும் இந்த நாட்டுச் சமயங்களுக்கும் உய்வு இல்லை; இல்லை" என்று பெண்ணின் பெருமை பேசும் வீரத்திண்மையை யாரேனும் மறத்தல் இயலுமோ? துறவிகளில் நல்லவர் சிலரைப் போற்றியபோதிலும், துறவு வாழ்க்கையை அவர் ஒரு நாளும் போற்றுமல் கடிந்தே வந்துள்ளார் என்பது உலகம் அறிந்த உண்மை அன்றோ?

பிறவாமை பிறவாமை என்று விழைந்து பிறவியைத் துன்பமாகவும் பாவத்தின் விளைவாகவும் பழித்துப் பேசும் இந்த நாட்டில், "மீண்டும் பிறப்பேன், இந்த நல்ல தொண்டு செய்யும் நோக்கம் கொண்டு மீண்டும் பிறப்பேன்" என்று பேசவும் முன்வந்தவரின் வாழ்வில் உள்ளது திண்மையா? பிறிதொன்று? அன்று முதல் இன்று வரை; வடவேங்கடம் முதல் தென்குமரி வரை, சமரச சன்மார்க்கம் - சமரச சன்மார்க்கம் என்று ஓயாது முழங்கிவரும் வாழ்வில் உள்ளது திண்மையா? பிறிதொன்று? ஏழை மக்களிடம் அன்பு கொண்ட நெஞ்சு ஒருநாளும் மாறுமல், அவர்களுக்குத் தொண்டு செய்வதில் நோக்கம் பிறழாமல், செல்வர் பற்பலர் செய்ய முன்வந்த உதவிகளையும் உயர்வுகளையும் உறுதியாக மறுத்தே வந்து, எளிய வாழ்வில் நிலைத்து நின்றவர் திண்ணியரா? அல்லரா? பிறர் நலம் கருதித் தொண்டு செய்யும் போது நாட்டுப் புறங்களுக்குச் சென்று ஏழைமக்கள் வீடுகளில் வேகாத உணவுகளையும் சுவையற்ற சிற்றுண்டிகளையும் உட்கொண்டு தம் மெல்லிய உடலின் நிலைமையும் போற்றாது புறக்கணித்த அவரே, தம் நலம் கண்ணிய தென்று எண்ணி ஒரு தொழிலை ஏழு நிமிஷ நேரத்திலும் மற்றொரு தொழிலை மூன்று நிமிஷ நேரத்திலும் இன்னொரு தொழிலை ஒன்றரை நிமிஷ நேரத்திலும் தயங்காமல் விடுத்து உதறி ஓதுங்கி அமைந்தார் என்றால், மூதுமை நெருங்க நெருங்கத் திண்மை மேன்மேலும் மிகுந்து வருதலை உணராதிருத்தல் இயலுமோ?

உலக முன்னேற்றத்துக்கான அறநெறிகளில் **வழு வழுப்பும்**, தம் முன்னேற்றத்துக்கான சிறு நெறிகளில் **உறுதியும்** கொண்டவர்களைத் தலைவர்களாகக் கொண்டுள்ள இந்த உலகம் இதனைச் சிறிது ஆராய்தல் வேண்டும். வீட்டுப் புறத் திண்ணைகளில் இருந்து வீரம் பேசிக் காலம் கழித்து, போர்க்களத்தின் அழைப்பு வந்துற்றபோது தயங்கித் தயங்கி மக்களைத் தந்திரமாக ஏமாற்றி "இதுதான் வெற்றிக்கு வழி" எனக் காட்டுவோர் வீரரா? அன்றி, போர் கொடியது எனவும், அமைதியே இனியது எனவும் தாம் உணர்ந்த உண்மையை என்றும் எடுத்துரைத்துப் போர் வந்துற்றபோது "எம் கடமையைச் செய்து மறைவேம்" என நேர்மையாகச் செயலாற்றி அஞ்சாது வாழ்வோர் வீரரா? போர் என்றால் இரத்த வெள்ளமும் வெடிகுண்டும் நச்சுக் காற்றும் நிறைந்த ஒன்றே என்று கொள்ளலாகாது. அந்தப் போருக்கும் அறிஞருலகுக்கும் நெடுந் தொலைவு. இங்குப் போர் எனக் குறித்தது வாழ்வில் வரும் இடையூறுகள். வாழ்வில் வரும் இடையூறுகளுக்கு அஞ்சித் தப்பிப் பிழைக்கும் தன்னலம் மிகுந்து

தந்திரத்தைக் கையாண்டு வாழ்ந்தவர்கள் யார்? இடையூறு களுக்கு அஞ்சாமல் தியாக உணர்வே மிகுந்து நேர்மை யாகப் பொருதவர்கள் யார்? இந்தப் போரைப்பற்றி அறியச் செய்திக் தாள்களும் வானொலிகளும் விளம்பரப் பேச்சுகளும் துணை செய்யா. இயற்கை யறிவும் உண்மை யன்பும் நிறைந்தவர்களே இந்தப் போர் வீரரை அறிதல் கூடும்; அவர்களே இந்தப் போர்வீரரின் வாழ்வுத் துறையில் சீரிய திண்மையையும், அறிவுத் துறையில் தூய வழ வழப்பையும் தெரிந்து தெளிந்து போற்றல் கூடும்.

வாழ்க திரு. வி. க!

"தமிழர் தலைவர்"

—திரு. பா. இராசேசுவரி அம்மாள்.

ஓர் ஊரில் சாமியார் இருவர் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் கல்வி, கேள்வி, அறிவு, ஒழுக்கம், எல்லாம் நிறைந்தவர். அவர் எல்லாரோடும் அன்போடு பேசுவார். காரணம் இல்லாமல் வீணாக ஓர் இடத்திற்குப் போய் அங்கே உள்ளவர்களோடு பேசமாட்டார். ஆனால் யாருக்காவது ஏதாவது உதவி செய்ய வேண்டுமானால் எந்த வகையான உழைப்பிலும் ஈடுபடுவார். ஊரில் மரம் செடி கொடிகளை வைத்து வளர்ப்பதும், ஏழைச் சிறுவர்களுக்கு இராப் பள்ளிக்கூடம் வைத்து நடத்துவதும் ஆகிய இந்த இரண்டிலும் சலிப்பு இல்லாமல் தொண்டு செய்வார். இவ்வளவு நல்ல வழியில் வாழ்ந்தும் ஊரார் அவரை நம்பவில்லை; அவர்மேல் என்ன குற்றம் சுமத்தலாம் என்று காத்துக் கொண்டிருந்தார்கள். நாளடைவில் அந்த ஊரில் அவருக்கு உணவுக்கும் வழியில்லாமல் போயிற்று. அவருக்கு சிஷ்யர் என்று ஒருவரும் இருந்ததில்லை; இருக்க அவர் இடங் கொடுக்கவில்லை.

மற்றொரு சாமியார் வல்லவரே; எதில் வல்லவர்? இந்த உலகம் உண்மையை நம்பாது, தந்திரத்தையே நம்பும் என்று தெரிந்து கொண்டு ஏமாற்றுவதில் வல்லவர். அவருக்குக் கல்வி, கேள்வி, அறிவு குறைவே. ஒழுக்கம் அவரிடத்தில் உண்டா என்பது அவர் பேச்சிலிருந்தே தெரிந்து விடும். யாராவது நெருங்கிப் பேசச் சென்றால், "யார் அது! பிஷ்டையைக் கலைக்க வந்தது! சாமி இருக்கும் இடத்தில் கண்டது போனது எல்லாம் வரலாமோ" என்பார். அன்பு என்பது அவருக்கு இன்னது என்று தெரியாது. கோயில்களில் செல்வம் பெருத்தவர்களுக்குச் சாமி தரிசனம் நன்றாகக் கிடைப்பதுபோல, நிறையக் காணிக்கை தருகின்றவர்களிடம்தான் அவர் நீண்ட நேரம் பேசுவார். அவருக்கு அந்த ஊரார் சேர்ந்து பங்குபோட்டு நல்ல மடம் ஒன்று குளத்துக் கரையில் கட்டிக் கொடுத்தார்கள். வேளா வேளைக்குப் பாலும் பழமும் அனுப்பி வந்தார்கள். பௌர்ணமி நாளில் அவர் காலில் விழுவதற்கு நான் முன்னே நீ முன்னே என்று முந்தினார்கள்; அவரைப் பார்த்தாலும் போதும் என்று பூரித்தார்கள்.

காரணம் வேறென்றும் இல்லை. தொண்டு செய்த சாமியார்க்கு விளம்பரம் தெரியாது. மடத்துச் சாமியார்க்கு அந்த விளம்பரம் நன்றாகத் தெரியும். விளம்பரம் என்றால் முக்காலே மூன்று வீசம் பொய் கலந்திருக்க வேண்டும். அது தான் விளம்பரத்தின் இலக்கணம். பால் பழச் சாமியார் அந்த ஊரில் நுழைந்த போதே ஒரு சிஷ்யருடன் வந்தார். அந்தச் சிஷ்யருக்கு விளம்பர முறையைக் கற்றுக்கொடுத் திருந்தார். அந்தச் சிஷ்யர் மெல்ல மெல்ல ஊரில் ஒரு செய்தி பரவவிட்டார். அது என்ன? புதிதாக வந்த சாமியார் இரவில் தூங்கும்போது கால்வேறு கைவேறு ஆகி விடுகின்றதாம் என்று ஊரார் பேசிக் கொள்ளும்படி யாகச் சிஷ்யர் விளம்பரம் செய்துவிட்டார். ஊரார் எல்லாரும் மதிமயங்கி மதிக்கத் தொடங்கி விட்டார்கள். அதுதான் மடம் கட்டச் செய்தது; பால் பழம் அனுப்பச் செய்தது; காணிக்கை பெருகச் செய்தது; பௌர்ணமி பூசைக்குச் சிறப்புச் செய்தது.

திரு. வி. க. விளம்பரம் தெரியாதவர். ஆழ்வார் நாயன் மார்களை நம்புகின்றவர். உண்மைக்கு உயர்வு உண்டு என்று உணர்கின்றவர். கடவுள் உண்டு என்று கருதுகின்றவர். ஆனால் அவர் விளம்பரம் தெரியாதவர். அவர் அரசியல், மொழி, சமயம், சமூகம் முதலான பல துறைகளில் பல ஆண்டுகள் தொண்டு ஆற்றி உழைத்திருக்கின்றார். ஆனால் அவர் அங்கெல்லாம் விளம்பர முறையைப் பின்பற்ற வில்லை. அதில் அவர் மனம் நாடவில்லை.

'வேடிக்கைத் தாள்படிப்பு விளம்பரமோ மனிதம்?' என்று பொதுமை வேட்டல் என்னும் நூலில் அவரே பாடி யிருக்கின்றார் அல்லவா?

கைகால் வேறாகும் சாமியார்கள் ஊர்களில் குளத்துக் கரைகளில் மடங்களில் இருக்கின்றார்கள் என்று மட்டும் எண்ணுவது போதாது. அரசியல் உலகத்தில் கைகால் வேறாகும் சாமியார்கள் இருக்கின்றார்கள். மொழித் துறை, சமூகத்துறை முதலியவற்றிலும் கைகால் வேறாகும் சாமியார்கள் இருக்கின்றார்கள். அவர்கள் அங்கங்கே விளம்பர முறையைக் கையாண்டு அற்புதம் காட்டி முன்னேற்றம் அடைகின்றார்கள்.

முன்னேற்றம் அடைகின்ற தலைவர் சிலரைப் பற்றிக் கவலை இல்லை. அவர்களுக்கு முன்னேற்றம் கொடுத்து ஏமாறுகின்ற மக்களைப் பற்றித்தான் கவலை. கைகால் வேறுவதற்கும் சாமியார் கொள்கைக்கும் என்ன தொடர்பு என்று இந்த மக்கள் ஒருநாளும் எண்ணியது இல்லை. அதனால்தான் அரசியல், மொழி, சமூகத் துறைகளிலும்

அற்புத விளம்பரங்களைக் கேள்விப்பட்டவுடன் ஆ! என்று வாய்திறந்து மயங்குகின்றார்கள். அதனால்தான், அரசியல் போராட்டங்கள் குறையாமல் இருக்கின்றன; மொழித் துறையில் இடர்கள் பெருகியிருக்கின்றன; சமூகத்துறையில் வஞ்சகச் செயல்கள் மிகுந்திருக்கின்றன.

ஆயிரம் மேடைப் பேச்சுக்களை மற்றவர்களிடம் கேட்பதைவிட, அரைம்மணி நேரம் திரு. வி. க. வின் திண்ணைப் பேச்சைக் கேட்பதுமேல் என்று நான் அடிக்கடி எண்ணுவது வழக்கம். ஏன்? அவர் கூறும் அரசியல் கருத்துக்களில் அன்பும் உண்மையும் அடிப்படையாக இருந்து உள்ளத்தைக் கவர்கின்றன. இப்போது அவர் அரசியலிலிருந்து ஒதுங்கி வாழும் காலம். இப்போதும் இவ்வளவு சிறப்பு இருக்குமானால், தமக்கு யாரும் இணையில் லாமல் தமிழ்நாடெல்லாம் முழங்கிவந்த அந்தக் காலத்தில் அவர் ஆற்றிய தொண்டின் சிறப்பை என்ன என்று நினைப்பது? பழைய நவசக்தியின் இதழ்களைப் பிரித்துக் காணும் தலைப்புக்கள் - இடியேறு முதலியன என் போன்றவர் உள்ளத்தை எவ்வளவோ மாற்றியுள்ளன. தொழிலாளர் தலைவராக அவர் உழைத்த முறை ஒரு தனி முறைதான். அவரை எந்த இடத்தில் பார்த்தாலும் எந்த நிலையில் பார்த்தாலும் தொழிலாளர்கள் சூழ்ந்துகொள் வார்கள். மணிக்கணக்காக முகம் கோணாது அவர்களுடன் நண்பர்போல் கலந்து பேசுவதைக் கண்டு எனக்கு வெறுப்பு வந்த வேளையும் உண்டு. இவ்வளவு பெரிய அறிஞர் இப்படிப்பட்ட மக்களோடு கலந்து பேசிக் காலம் கழிக் கின்றாரே என்று வருந்திய வேளையும் உண்டு. ஏழை மக்க ளிடம் இவ்வாறு பழகி ஓய்வையெல்லாம் போக்குகின்ற இவர் இன்னும் பல நூல்கள் எழுதி அவ்வளவு ஓய்வும் பயன்படுத்தினால் தமிழுலகம் முன்னேற்றம் அடையுமே என்று ஏங்கிய காலமும் உண்டு. ஆனால் அவர் இயற்கை வேறு. தலைமை பற்றிய நினைவே இல்லாமல், சமத்துவமே எண்ணி, எல்லாருக்கும் உரிமை கொடுப்பதில்தான் திரு. வி. க. பெருந்தன்மை வாழ்கின்றது.

மொழித்துறையில் அவர் புதுமை கண்டு உணர்த்திய வர். உயர்நிலைப்பள்ளியில் எத்தனையோ உரைநடைகளை, மாணவர்களாக இருக்கும்போது படிக்கின்றோம். பல ஆசிரியருடைய நடைகளைப் படித்துப் பழகியும் பரீட்சைக்கு மறுநாளே எல்லாவற்றையும் மறந்துவிடுகின்றோம். ஆனால் திரு. வி. க. எழுதிய நூல்களிலிருந்து ஒரு பகுதியை (ஐந்தாறு பக்கங் கொண்டதே) ஒரு முறை படிக்கும் வாய்ப்புக் கிடைக்கின்றது. அந்த அழகிய நடையை மட்டும்

எங்களால் எப்போதும் மறக்க முடிவதில்லை. அது சில வேளைகளில் எங்கள் சொந்த நடைபோலவும் தெரிகின்றது. நாங்கள் எழுதும் கட்டுரைகளில் எங்களை அறியாமல், 'அறிதல் வேண்டும்' 'உணர்தல் வேண்டும்' என்றும், 'என்னை' என்றும், 'என்னே' என்றும், 'எற்றுக்கு' என்றும், 'தமிழன்னை' என்றும், 'முடி எங்கே, கோல் எங்கே' என்றும், 'இளஞரயிறுகளே' என்றும், 'விழிமின் விழிமின்; எழுமின் எழுமின்' என்றும், எழுதத் தொடங்குகின்றோம். **திரு. வி.க. நூல்களே எட்டிப்பார்க்க இடம் தராத கல்லூரிப் படிப்பிலும்** எங்கள் மனம் திரு. வி. க. உரை நடையை விழைந்து நிற்கும். அவர் நடை தனிநடை. அழகிய அருஞ் சொற்கள்; எழுச்சியான எளிய நடை; உயர்ந்த தெளிவான கருத்துக்கள் - இப்படிப்பட்ட புது முறையில் அவர் எழுதும் தமிழ், விழுமிய அமிழ்தமே ஆகும். ஒருவர் மனத்தை அவர் எழுதும் உரை நடையால் அறியலாம் என்பார்கள். அந்த உண்மையைத் திரு. வி. க. எழுத்தில் காணலாம். அழகு எழுச்சி தெளிவு இந்த மூன்றும் அவர் முகத்திலும் காணலாம்; அவர் மனத்திலும் காணலாம்; அவர் மொழி நடையிலும் காணலாம். அழகும் எழுச்சியும் தெளிவும் கலந்த வாழ்வே திரு. வி. க.

பெண்ணை மாயப்பிசாசு என்று நம்பி, பெண்ணை வெறுத்தலே முத்தி என்று பேசி, பெண்ணைத் தாழ்த்தலே ஆண்மை என்று வாழ்ந்து வந்த தமிழ்நாட்டில் பெரிய புரட்சி செய்த வீரர் யார்? எங்கள் திரு. வி. க. எங்கள் திரு. வி. க. என்றே பறை கொட்டுவோம். பெண்ணின் பெருமை என்ற நூல் மட்டுமல்ல, அவர் பேசிய சொற்பொழிவுகளெல்லாம் இந்தப் புரட்சியைச் செய்து விட்டன. நான் முதல் முதலாகத் திருக்குறளில் 'பெண்ணின் பெருந்தக்க யாஉள' என்ற குறளைப் படிக்கும்போது திடுக்கிட்டேன். திரு. வி. க. ஒருவரே முதலில் பெண்ணின் பெருமை பேசியவர் என்று அதுவரை நினைத்திருந்தேன். ஆனால் திரு. வி. க. வுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே திருவள்ளுவர் என்று ஒருவர் இந்தப் புரட்சிக்கு வித்திட்டிருக்கின்றார் என்று எண்ணி அமைந்தேன். **திருவள்ளுவர் கேள்விகேட்டார்; திரு. வி. க. விடைபகர்ந்தார்.** 'பெண்ணின் பெருந்தக்க யா உள?' என்பது கேள்வியாக எழுந்த ஒரு குறள். 'பெண்ணின் பெருமை' என்பது விடையாகப் பிறந்த ஒரு நூல். ஒரு வினவுக்கு விடை சொல்ல இரண்டாயிரம் ஆண்டுகள் ஆயினவே!

திரு. வி. க, பெண்ணிடம் குறை காணுமல் ஆணிடமே குற்றம் காண்கின்றார் என்று சிலர் சொல்கின்றார்கள்.

அது தவறு. ஒருவருடைய உள்ளத்தை அறிவதற்குப் பொறுமை வேண்டும். பொறுத்தே ஆராய வேண்டும்.

சமய அமைப்பான ஒரு சங்கத்தின் ஆண்டுவிழா. அதற்குத் தலைவர் திரு. வி. க. மாலை 5 மணி. தலைவர் முன்னுரை நிகழ்கின்றது. பெண்கள் இருந்த பகுதியில் ஒரு குழந்தை வீறிட்டு அழுகின்றது. தாய் எவ்வளவோ முயற்சி செய்தும் அழுகை நிற்கவில்லை. மற்றப் பெண்கள் அந்தத் தாயை வெறுத்த நோக்குடன் பார்க்கின்றார்கள். ஆண்களின் கண்கள் எல்லாம் அந்தப் பக்கம் திரும்பி ஆத்திரம் அடைகின்றன. திரு. வி. க. முகத்தில் அன்பே தவழ்கின்றது. முன்னுரையை நிறுத்திவிட்டுக் குழந்தை பக்கம் திரும்பினார். குழந்தையை ஏந்த விரும்பியவை போல் கைகளும் அந்தப் பக்கமே நீண்டன. குழந்தையின் அழுகை குறைந்து வந்தது. "தாய்மார்களுக்கு ஒரு விண்ணப்பம்" என்றார். ஓர் அமைதி ஏற்பட்டது. "குழந்தையை வளர்ப்பதுதான் பெரிய திறமை; அரிய தொண்டு. அதைவிட உயர்ந்தபேறு இல்லை. குழந்தை, நம்முடைய முருகன், நம்முடைய கண்ணன். குழந்தையைக் கைவிட்டுவிட்டு எந்தச் சமயமும் வளரவேண்டிய தில்லை; எந்தச் சங்கமும் விழாக் கொண்டாட வேண்டியதில்லை. என் முன்னுரையை விட, அந்தக் குழந்தையின் வாழ்வே எனக்குச் சிறந்தது. ஒரு குழந்தையின் அழுகையைப் பொறுத்துக் கொண்டு அதைத் தேற்றத் தெரியாதவர்களுக்கு முருகன் அருள் செய்ய மாட்டான்; கண்ணன் கருணை புரிய மாட்டான். அவர்களுக்குக் கடவுள் ஏன்? அறம் எற்றுக்கு? சங்கம் ஏன்? விழா எற்றுக்கு? இந்தக் குழந்தையின் தாயை நான் மனமாரப் போற்றுகின்றேன். அந்த அம்மையாருக்கு என் அன்பான நன்றி. சங்கக் கூட்டத்திற்கு வரும்போதும் குழந்தையை விடாமல் எடுத்துக்கொண்டு வந்த அம்மையாரைப் பாராட்டுகின்றேன். நம் சகோதரிகள் சிலர் சினிமாவுக்குச் செல்லும்போது குழந்தையைத் தனியே வீட்டினுள்ளே விட்டுவிட்டு, வெளியே கதவைத் தாழிட்டுப் பூட்டிக் கொண்டு செல்கின்றார்கள். அது தாய்மை அல்ல; அதுதான் பேய்மை. மறுநாள் என்ன ஆகும்? குழந்தைக்கு 104-டிகிரி ஜ்வரம் அடிக்கும். குழந்தை தனியே இருந்து அலறி அழுத கொடுமை வாளா விடுமா? அதுதான் 104 டிகிரி ஆனது. டாக்டர் வருவார். டெலிரியம் என்பார். ஊசி ஏற்ற வேண்டும் என்பார். இன்புளூயென்சா என்பார். டைபாய்ட் என்பார். இன்னும் கொஞ்சம் நம்பிக்கை இருக்கின்றது என்பார். அந்தோ! அந்தோ! அதுதான் பேய்மை; தாய்மை அல்ல. அந்தத் தாய்தான் டெலிரியம்; அந்தத் தாய்தான் இன்புளூயென்சா, டைபாய்ட், எமன் எல்லாம். கொடுமை!

கொடுமை! போலி நாகரிகம் தாய்மையை - நம் நாட்டுத் தாய்மையை - தெய்வத் தாய்மையை - கொல்வதை நாம் பார்த்துக் கொண்டிருத்தல் தகுமா? தாய்மார்களே! எண்ணிப் பாருங்கள்!" என்றார். உள்ளத்தில் எழுந்த உண்மையான உணர்வு எவ்வளவு ஆற்றலுடன் வெளி வந்தது என்பதைச் சொல்ல முடியாது. தாய்மார் உள்ள மெல்லாம் உருகின. பெண்களைப் புகழும் திரு. வி. க. பெண்களைக் கடிந்து திருத்தவும் வல்லவர் என்பதற்கு வேறு என்ன சான்று வேண்டும்?

இது ஒரு துறை. ஒவ்வொரு துறையிலும் இப்படி ஆராய்ந்தால்தான் அவர் பெருமை விளங்கும்; அவர் தமிழ் நாட்டிற்குச் செய்த தொண்டு விளங்கும்; இன்று பிறந்துள்ள தமிழரில் அவர்தாம் உயர்ந்தவர், **தமிழர் தலைவர் அவரே** என்னும் உண்மையும் விளங்கும்.

கம்பரின் ஒரு திவலை

—பண்டிதை அசலாம்பிகை அம்மாள்.

"மாணநோற் றீண்டிவள் இருந்த வாறெலாம்
காணநோற் றிலன்அவன் கமலக் கண்களால்"

ஈண்டு - இவ்விடத்து, இவள் அழகின் உண்மை உயிர் ஓவியமும், ஆக்கப் பெருக்கின் அதிதேவதையுமாகிய திருமகளை, அசோக மரத்தின் அடியில் பொலியும் பொற்புச் சுடரை, ஆறும் ஐம்பொறிகளையுடைய மாருதி காண்கின்றார். அவர் உள்ளம் துணுக்குற்றது; வியம்புற்றது. அது காறும் அவர் உணர்ச்சியில் முகிழ்த்திடாத ஒரு புது முளை தோன்றிற்று. என்னே! பூணெலாம் பொறுத்த மேனிப் புண்ணிய மூர்த்தியை எண்ணி எண்ணி ஏங்கி ஏங்கி இளைத்திளைத்து மெலிந்து தேய்ந்து வெயிலில் இட்ட விளக்கென நிற்கும் இந்தப் பெண்மை ஓவியத்தில் உண்மைத் தவப்பொலிவைப் பருகித் தன்னை மறந்தான்; பின்பு உணர்வு சிறந்து அந்தோ, உயரிய வனப்பிற்கு உண்மை உறைவிடம் தவக்கோலமே போலும் என்று தெளிந்தான்.

இயற்கை அழகு, செயற்கையால் வீறுகொண்டு ஒளிரும் என்பது உலக இன்பத்தில் ஊறிய உள்ளமுடைய பல்லோர் களின் துணிபு - பாவாணர்களில் பற்பலர் நோக்கமும் அதுவே என்பதைப் பரக்கக் காணலாம். நமது கவியரச ருக்கு அவ்விதப் போலி மயக்கம் ஒரு சிறிதும் இல்லை என்பதற்குக் கடிமணப் படலத்தில்,

"அமிழ்தினுக் கணிசெய்தென்ன அழகினுக் கழகுசெய்தார்
இமிழ்திரைப் பரவைஞாலம் ஏழமை யுடைத்துமாதோ"

என்று எடுத்துக் காட்டிய செய்யுட் கருத்தே தக்க சான்றாகும். ஆயினும் கட்டிளமைப் பருவத்தின் கனிந்த செவ்வியிலும், உள்ளத்துவகைக் கிளர்ச்சியிலும் ஓங்கி இடம் பெறும் பொலிவையே பருகிய இராமன், இத்தவக் கோலத்தில் சுடர் விட்டெழுந்த எழுச்துக்களால் புனைந் துரைக்க வியலாத பேரெழிலைப் பருகத் தவம் செய்திலனே என மனம் வருந்துகின்றார்.

எவ்வுலகத்தோர் யாவரும் தவஞ்செய் தேறுவான் ஆதரிக்கின்ற அவ்வுலகத்தின் கடவுளின் அவதாரமாகிய இராமன், வைதேகியின் உண்மைத் தவத் தெழிலைக் காணத் தவம் செய்திலன் அந்தோ என இரங்குகின்றார். அவனது கண்கள் செந்தாமரை போன்று அழகிற் சிறந்திருப்பினும் காண்டற்கரிய இத்தவ ஓவியக் காட்சியை நேரில் காணப் பெறும் பேறு பெற்றிலவாயின என்றெண்ணினார். அப் பேற்றைப் பெற்ற தமது கண்களே பெரிதும் தவம் செய்தன வென்று மகிழ்கின்றார் என்பதும் சொல்லாமலே இனிது விளங்குகின்றது. கன்னிமாடத்தில் உணர்ச்சியற்ற கல்லும் திண்சுவரும் கண்டுருகும் வனப்பு வாய்ந்த பெண் கனி யென்றார் - பிராட்டியாரை. பின்னர், ஆரணிய காண்டத்தில் 'தேவர்க்கும் அணங்காம் என்னத் தாமரை இருந்த தையல், சேடியாம் தரமும் அல்லள்' எனச் சூர்ப்பனகை என்னும் அரக்கி வாயிலாக விதந்து கூறிய கவிஞர் பெருமான், சுந்தர காண்டத்தில் மாசுண்டமணியனுள் தவக்கோலத்தின் அருள் விளக்கம், மேலேகாட்டிய புனைந்துரைகளைக் கடந்து நிற்கும் காட்சியைச் சித்திரித்துள்ளார். இனி மற்றொரு வகையாக உற்றுநோக்குமிடத்து கண்கள் தம்மிடத்துள்ள கருமணி யைக் காணமுடியாத வாறுபோல செந்தாமரையும், தன்னகத்தில் இடம்பெற்ற திருமகளை எங்ஙனம் காண முடியும்?

இராமனது கண்கள் செந்தாமரை மலர்கள் ஆதலினால் அதனுள் அமர்ந்த திருமகளின் பொற்பினை வேறுப் நின்று காண்பதெப்படி? இராமன் கண்ணிற் கருமணியன்றோ

பிராட்டியார்! அவன் எவ்வாறு புறக்கண்களால் காணல் நடக்கும்? அநுமான் சித்தவிகாரமற்ற செல்வனுதலினுல் அவரது கண்களுக்கு அன்னையாரின் தவ ஓவியத்தின் அருட் பெருக்கே புலனுயிற்று. அதுவே மரபு என்பதும் ஈண்டு உன்னற் பாலதாகும்.

மெய்த்துறவின் பொலிவிற்கு, எத்தகைய அணிந்துரை களுக்குரிய செவ்வியும் இணை நிற்காதென்னும் கம்பநாடரின் உள்ளக் கிடக்கை இதனுல் ஒளிபெறுகின்றது.

அன்றியும், ஆடவர் பெண்மையை அவாவும் தோளின னுகிய இரவிகுல திலகனை, ஒப்புவமை யில்லாத் திப்பியப்பே ரெழில் பலகாலம் தவம் புரிந்து பெற்ற பெறலரும் பேருகிய பிராட்டியார் எதிர்ப்படுவராயின், இத் தவக்கோலத்தின் பொலிவு மறைந்து கண்டோர் உள்ளத்தை அள்ளும் எழில் ஓவியப் பொற்பாக வன்றே காட்சி வழங்கும்? அரச போகத்தையும் கட்டிளமையின் இயற்கை ஆணையையும் மதியாது நிட்டனைத் துறந்து கான்புகுந்த ஆண்மைச் செம்மலும், முற்றத் துறந்த முதுக்குறை வாளராகிய இருடியர்கட்கும் தலைவனுகிய ஜனகன்மாமகளும் அன்பாற் பிணிப்புண்டவர்களாய் ஒன்றுபட் டிருந்தார்களென்பதும், புன்மைப் போகமாகிய வெம்மைக் கிரையானர்கள் இல்லை யென்பதும் கம்பநாடரின் காவிய ஓவியத்தை ஊன்றிப் படிப்போர்களுக்கு உணரமுடியாததன்று. உடற்றுறவுடை யார் பலர் இருக்கலாம்; உள்ளத் துறவுடையார்களைக் காண்டலே யரிது. பகைவனுகிய இராவணனும் இராமன்து ஆண்மைக்கும் அழகிற்கும் யானும் காமனும் நாய்க்குச்சமம் என்று கூறினன். அத்தகைய காதற் கொழுநனுடன் மரவுரி யுடுத்துக் காய்கனி புசித்துத் தவத்திற் கிடையூறின்றி விரதங் காத்துப் பிரியாதுறைந்த கற்புக் கடவுளின் உள்ளத்துறவை எடுத்துரைக்க உரைகளும் உண்டோ? நுண்ணறிவுதான் உளதாமோ? விரிக்கிற் பெருகும்.

ஆண்டாள் அருள் தமிழ்

—பண்டிதை S. கிருஷ்ணவேணி அம்மாள்.

நற்றமிழ்ப் புலவரையும், புலவச் செல்விகளையும் ஈன்று உவகை பூத்து நின்ற நம் செந்தமிழ்ச் செல்வியார் செங்கோல் நடாத்திய பாண்டிய நாட்டில் நம் ஆண்டாள் தோன்றினர்; கண்ணன் என்னும் கருந்தெய்வத்தைத் தாலாட்டிப் பாலூட்டி வளர்த்த பெரியாழ்வார் அன்பு நிழலில் வளர்ந்தார். பாண்டி நாடு தமிழிலும், வண்மையிலும், இறையன்பிலும் இந்நாள் வரை சிறப்புற்றிருங்குவதும் அன்னையாரின் தோற்றத்தின் தொடர்பேபோலும். மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் பெரியாழ்வார் பக்தியை, உயர்நிலையில் வைத்தெண்ணுதற்கும் நம் கோதையாரே காரண மெனல் மிகையாகாது. எம்பெருமானுக்குப் பெரியாழ்வார் அளித்த மலர் மாலைகள் மணம் பெற்றது எப்போது? அவர் பாமாலை கண்ணனுக்கு இனிமை தந்தது எந்நாள்? எம்பெருமான் அவர் கனவில் தோன்றியது எந்த இரவு? அவர் பெட்பு, பக்தி, தொண்டு நிறமடைந்தது எக்காலம்? நம் அன்னையார் அவரிடம் புகுந்த பின்னரே அல்லவா?

பெட்பு—"புதுவை மன்னன் பட்டர்பிரான் கோதை" —நாச்சியார் (5-11)

"வேயர்புகழ் வில்லி புத்தூர்கோன்கோதை" —நாச்சியார் (6-11)

பக்தி—"போகத்தில் வழுவாத புதுவையர்கோன் கோதை"

—நாச்சியார் (8-10)

"வில்லி புதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரே லதுகாண்டுமே" —நாச்சியார் (10-10)

தொண்டு—"செம்மையுடைய திருவரங்கர்தாம் பணித்த
மெய்ம்மைபெரு வார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்"

—நாச்சியார் (11-10)

எந்தப் பெரியாழ்வாரிடம் கண்ணன் குழவிப் பருவம் உருக்கொண்டெழுந்ததோ, அந்தப் பெரியாரிடமே நம் அன்னையாரின் குழவிப் பருவமும் உருக்கொண்டெழுந்தது. வேறொருவருக்கும் அமையாத கண்ணனின் உயர் பண்புகள் பலவற்றையும் தம் தந்தையார் வாயிலாகச் செவியேற்ற நம் அன்னையார் பீடுடைய கண்ணனை அன்றி வேறொருவரை மணக்க விரும்புவரோ? இதனாலன்றோ "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்னும் உறுதியில் நிற்கிறார்.

அவ்வச்சுதனை அடைய இவர் நோற்ற நோன்புகள் எத்தனை ? விட்ட தூதுகள் எத்தனை ? எத்தனைப் பேரைச் சரணடைகிறார் ? இவருக்கு எத்துணை ஆற்றாமை பொங்கி எழுகிறது ! நனவிலும் கனவிலும் அவன் எண்ணமன்றி மற்றொன்று இவர் மனத்தில் இடங்கொண்டதோ ? இவற்றை நமக்குத் தெளித்துக் காட்டும் ஆடி எது ? இவர் உளார்ச்சி தோன்ற உள்ளத்தினின்று கிளம்பி எழுந்த சொற்களின் கூட்டமேயாகும் ! அஃதன்றே திருப்பாவை, நாச்சியார் திருமொழி எனப் பெயர் பெற்று யாவர் மனத்தையும் இன்றும் உருக்கிக் கொண்டிருக்கிறது ! இவர் திருமொழிக்குக் கனியாதார், வேறெந்த மொழிக்கும் கனியார் என்பது திண்ணம். இவர் திருவாக்கிற்கு அமைந்த பெட்பு வேறெவர் வாக்கிற்கும் அமைய வில்லை என்பது அறிஞர் கருத்து. ஊன்றிப் படித்தோர் இதை உணராமலிரார். விரிக்கில் பெருகும்.

இத்தூய சொற்கள் வெளிப்பட்டதற்குக் காரணம் என்னை ? அருளன்றே ! இவ்வருளை இருவகையாகக் கொள்ளலாம் : இறைவன் அருளாலேயே உயர் கருத்துகளும் எளிய நடையும் அமைந்த அழகிய பாக்கள் அன்னையாரிடமிருந்து வெளிப்பட்டன என்பது ஒருவகை. ஆண்டாளுக்கு நம் உய்வில் ஏற்பட்ட அருளானது பெருகிப் பாசுரங்களாகப் பெருக்கெடுத் தோடிற்று என்பது மற்றொரு வகை.

இன்னும் எம்பெருமான் அருளைத் தாம் பெறுதற் பொருட்டே அன்னையார் இப்பாசுரங்களைத் திருவாய்மலர்ந்தருளினர் எனவும் கூறலாம்.

> " பாடுங் குயில்காள் சுதென்ன பாடல்கல் வேங்கட
> நாடர் நமக்கொரு வாழ்வுதர் தால்வந்து பாடுமின்
> ஆடும் கருடக் கொடியுடை யார்வந் தருள்செய்து
> கூடுவ ராயிடில் கூடுதும் பாட்டுகள் கேட்குமே " நாச்சியார்—(10-5)

என்னும் பாசுரத்தைக் காண்க.

இங்ஙனமிருப்பினும் இவ்வருட்பாசுரங்கள், நாம் அன்னையாருடைய அருளையும் எம்பெருமான் அருளையும் பெறுதற்குச் சிறந்த கருவிகளாய் உள்ளன என்பது உறுதி.

> .....மாலிருஞ் சோலை நின்ற
> சுந்தரனைச் சுரும்பார் குழற்கோதை தொகுத்துரைத்த
> செந்தமிழ்ப் பத்தும் வல்லார் திருமாலடி சேர்வர்களே. (9-10)

இம்முறையில் இறைவனுக்கு ஆண்டாள் மாட்டும் ஆண்டாளுக்கு நம்மாட்டும் அன்பு மிகுந்தது. அவ்வன்பாகிய தாய், அருளென்னும் குழவியை ஈன்றது. இறைக்கும் நமக்கும் இடையில் நின்ற அன்னையார் அவன் அருளைத் தம்மிடம் தேக்கி நம்மிடம் பாய்த்தார். அச் செயல் உலகமாதாவாக உள்ள நம் அன்னையார் ஒருவருக்கே ஏற்ற தாகும். மற்ற ஆழ்வார்கள் பல பாசுரங்கள் அருளி இருப்பினும்,

ஈஸ்வரனுக்கும், சேதனனுக்கும் நடுவில் நின்று இருவரையும் அருளால் பிணிக்கும் தகுதி அவர்களுக்கேது ? ஆதலின், கோதை யார் பாசுரங்களே அருட்பாசுரங்கள் எனக் கூறும் பெட்பு வாய்ந்தன.

இனி, இவர் தமிழைப் பற்றி நோக்குவாம் : இவர் பாசுரங்கள் இனிமையையே உருக் கொண்டிருத்தலின், அவற்றை இனிமை என்னும் பொருள் வாய்ந்த தமிழே என இயம்பத் தடையில்லை. கோதையாரின் பேச்சு மட்டும் தெள்ளிய தமிழில் அமைந்திலது; இவர் உள்ளந் தமிழ் ; இவர் கருத்துத் தமிழ் ; இவர் கொள்கை தமிழ் ; இவர் செயல் தமிழ் ; தமிழ் நாட்டிற் பிறந்த இவர் தமிழர் நோன்பையே நோற்றார் ; தமிழ் நாட்டு நிலங்களுள் ஒன்றாகும் முல்லை நிலப் பெண்களையே தமக்கு உற்ற தோழி களாகக் கொண்டார் ; தாமும் அவருள் ஒருவராக நின்றார் ; அவர்கள் கண்ட கண்ணன் என்னும் கருந்தெய்வத்தையே தாமும் கண்டு காதலித்தார் ; தமிழர் விளையாட்டையே விளையாடினர் ; தமிழர் பார்க்கும் குறியையே பார்த்தார் ; தமிழ் நாட்டெல்லையாகும் திரு வேங்கடத்தில் எழுந்தருளியிருக்கும் திருமாலுக்கே தூதுவிட்டார் ; திருமாலிருஞ்சோலை நம்பிக்கே வெண்ணெயையும், அக்கார அடிசிலை யும் கொண்டு கொடுத்தார் ; தமிழரங்கத்தில் எழுந்தருளி இருக்கும் திருவரங்கனையே துதித்து இறுதியில் அவன்பாலே கலந்து இறவாத இன்பத்தை எய்தினர். ஆதலின் அன்னையார் தமிழிலே பிறந்து, தமிழிலே தவழ்ந்து, தமிழிலே உருக்கொண்டு, தமிழையே பேசி, தமிழ்க் கடவுளையே பாடி, அவ்விறைவன் அருளையே பெற்றுயர்ந்தார் என அறிகிறோம். தம் பாசுரங்கள்தாம் தமிழ்; தமிழ்தான் தம் பாசுரங்கள் எனப் பல இடங்களில் அவரே பகருகிறார். அவற்றுள் சில காண்போம்:

"சங்கத்தமிழ் மாலை முப்பதும்" —திருப்பாவை 30.

"விட்டுசித்தன் கோதை
விருப்புடை இன்தமிழ் மாலைவல்லார்" —நாச்சியார் 1-10.

"கோதை வாய்த்தமிழ் வல்லவர்" —நாச்சியார் 2-10.

".....சும்பார் குழற்கோதை தொகுத்துரைத்த
செந்தமிழ் பத்தும் வல்லார்....." —நாச்சியார் 9-10.

இதுகாறும் "**ஆண்டாள் அருட்டமிழ்**" எனத் தலைப் பிட்டதற்குக் காரணங்களை ஒருவாறு சுருக்கிக் கூறினேம். இனி அன்னையார் அருட்டமிழில் அமைந்த பண்புகளையும் சீர்மை களையும் நோக்குவாம் :

இயற்கை

இயற்கை என்பது யாவர்க்கும் இன்பத்தை அளிக்கும் நிதி; மக்கள் மனத்தைக் கவரும் களஞ்சியம் ; புதுப்புது அழகுகள்

தோன்ரு நிற்கும் ஊற்றிடம்; புலவர் புலமையை வெளிப்படுத்தும் பொக்கிஷம்; அறிஞர் அகத்தை அலசச் செய்யும் திறவுகோல்; இஃது அப்போதைக் கப்போது வெவ்வேறு அணிகளையும் ஆடைகளையும் அணிந்து மிளிராநிற்கும். மண், புனல், மலை, மலர், மரம், மேகம் யாவும் இயற்கைப் பொருள்களே. இறையன்பர் எங்கு இறையைக் காணுகின்றனர்? இயற்கைப் பொருள்களைக் காணுந்தோறும் அவர் தம் தூய நெஞ்சம் எங்குச் செல்கிறது? அவ்வியற்கையிலேயே பதிந்து விடுகின்றதா? இல்லை; இல்லை. இயற்கையைத் தனக்கு உடலாகக் கொண்டுள்ள இறைவனிடத்துச் செல்லுகிறது.

இம்முறையில் "எம்பெருமானை எங்குக் காண்போம்? அவன் இன்சொற்களை என்று கேட்போம்?" என ஆர்வங் கொண்டிருந்த கோதையார் நீல நிற மேகத்தைக் காண்கிறார். அதனை உடலாகக் கொண்ட திருமாலாகிய தம் காதலன் அதனூடே போதருவான் என்றும், அதன் வாயிலாகத் தமக்குச் சில செய்திகள் அனுப்பி இருப்பான் என்றும் உன்னி அவற்றை விளவுகிறார்.

"விண்ணீல மேலாப்பு விரித்தாற்போல் மேகங்காள்
தெண்ணீர்பாய் வேங்கடத்தென் திருமாலும் போந்தானே"
—நாச்சியார் திருமொழி (8-1)

"மாமுத்த நிதிசொரியும் மாமுகில்காள் வேங்கடத்துச்
சாமத்தின் நிறங்கொண்ட தாளாளன் வார்த்தைஎன்னே!"
—நாச்சியார் திருமொழி (8-2)

ஒருவர் கருத்தை மற்றொருவருக்கு நயமாகச் சென்றுரைப்பவரையே தூதுவர் என அழைக்கின்றோம். இவர்களுக்குக் கல்வி, அறிவு, ஆராய்ச்சி, உயர் குடிப்பிறப்பு, சொல்வன்மை, மனத் திண்மை, கெம்பீரத் தோற்றம், அஞ்சாமை முதலியன இன்றி யமையாதவைகளாகும். இதை "ஆன்ற குடிப்பிறத்தல்" "அன்பறி வாராய்ந்த சொல்வன்மை", "உரு" "கல்வி" முதலிய திருக் குறள் அருஞ்சொற்களால் உணரலாம். இது நிற்க.

நம் கோதையாருக்குத் தூதுவராக அமைந்தவர் யாவர்? திருமாலின் பிரிவைத் தாங்காது கோதையாரின் உடல் இளைத்துவிடுகிறது; கை வளைகள் தாமாகவே கழன்று விடுகின்றன; இவர் பெண்மைக் குணங்களும் குறைய, ஆற்றுமை மீதூருகின்றது; உலகம் அறிய அரற்றுகின்றார். இங்ஙிலையில் தம் ஆற்றுமையை உள்ளவாறே இறையிடம் உணர்த்தற்கு இயற்கையைக் காட்டிலும் இயைந்த பொருள் வேறொன்றும் இலது என்பது இவர் தம் உறுதி. தமக்குத் தூது செல்லற்குப் பொருத்தமுடையன இவையே என் றல்லவா இவர் தீர்மானித்தார்.

"ஊன்கொண்ட வள்ளுகிரால் இரணியனை உடலிடந்தான்
தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே"
—நாச்சியார் திருமொழி (8-5)

" உலங்குண்ட விளங்கனிபோல் உள்மெலியப் புகுந்தென்னை
நலங்கொண்ட நாரணற்கென் நடலைநோய் செப்புமினே "

—நாச்சியார் திருமொழி (8-6)

" கடலே கடலே யுன்னைக் கடைந்து கலக்குறுத்து
உடலுள் புகுந்துநின் னூறல் அறுத்தவற்கென்னையும்
உடலுள் புகுந்துநின் னூற லருக்கின்ற மாயற்குஎன்
நடலைகள் எல்லாம் நாளைக்கே சென்றுரைத்திடே "

—நாச்சியார் திருமொழி (10-9)

மலர்கள் இதழ்களை விரிக்கின்றன; மணத்தை வீசுகின்றன; அழகிய நிறத்தால் மிளிர்கின்றன; தேனைத் துளிக்கின்றன; அன்னையார் மனத்தைக் கவர்கின்றன. இவ்வியற்கை இன்பத்தில் தோய்ந்து தோய்ந்து நிற்கிறார். இதுபோழ்து இவரைப்போன்று இயற்கை இன்பத்தை உள்ளபடி துய்ப்பவர் எத்தனை பேர்? எத்தனை பேருக்கு இவ்வியற்கை, இன்பத்தை ஊட்டுகிறது. செயற்கையிலே படிந்து கிடக்கும் தற்போதைய உலகம் இயற்கையின் நுட்பத்தை அறிதல் யாங்ஙனம்? பண்டைய புலவர் இயற்கையிலேயே படிந்து படிந்து அதன் நலத்தை அள்ளி அள்ளிப் பாக்களின்மூலம் உலகோர்க்கு அளித்தனர். இங்ஙனம் இயற்கை மாண்பைக் கவியில் பொருத்தி, கற்போர் மனத்தைக் களிக்கச் செய்யும் கவிஞரும் அருகிவிட்டனர். அன்றியும் இயற்கைக்காட்சிக்கு இதுபோன்ற நகரங்களில் இடமெங்கே? அப்பறவைகளுக்கு உணவையும் உறையுளையும் ஈயும் இலை, காய், கனி நிறைந்த மரங்கள்தாம் காணப்படுகின்றனவா? இம்முறையில் இவற்றின் இனிய பாடலையும் ஓசையையும் மிழற்றலையும், பேச்சையும் கேட்பது யாங்ஙனம்? இவற்றோடு கொஞ்சிக் குலாவல் எவ்வாறு? நம் அன்னையாருக்கோ பறவைகள் கலந்து பேசிக்கொண்டிருக்கின்றன; புட்கள் சிலம்புகின்றன; கோழிகள் அழைக்கின்றன; குயிலினங்கள் கூவுகின்றன; வண்டுகள் மிழற்றுகின்றன; மஞ்ஞைகள் தோகை விரித்து நடிக்கின்றன.

" கீசுகீச்சென் றெங்கும் ஆனைசாத் தங்கலந்து
பேசினபேச் சரவங் கேட்டிலையோ "

" புள்ளும் சிலம்பின காண் "

" வந்தெங்கும் கோழி அழைத்தன காண்மாதவி
பந்தர்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண் "—திருப்பாவை.

" கணமா மயில்காள் கண்ணபிரான் திருக்கோலம் போன்று
அணிமா நடம்பயின் றாடுகின்றீர் "

—நாச்சியார் திருமொழி (10-6)

என்ன இன்பம்! என்ன இன்பம்! இவ்வின்பத்தை ஊன்றித் துய்க்கும் நம் அன்னையாரின் இயல்பு இம்மட்டோடு நிற்க இடந்தருமோ? மலர்கள், பறவைகள், கடல் முதலிய இயற்கைப் பொருள்களின் உள்ளுறைப் பொருளினிடத்துச் செல்லுகிறது. அவ்வுள்

ஞறைப் பொருள் எஃது ? இறையன்றே ? அவ்விறையின் முறுவலை யும் இன்பச் சிரிப்பையும் முல்லைக் கொடிகளிடத்துக் காணுகின்றார். என்ன மகிழ்வு ! என்ன மகிழ்வு ! இஃது இவருக்கு எம்பெருமான் புன்சிரிப்பை நினைப்பூட்டுகிறது ! அவனே தம்மை நோக்கி நகை முகங் காட்டுவதாகக் கருதுகிறார்.

" போர்க்களிறு பொருமாலிருஞ் சோலையம் பூம்புறவில்
தார்க்கொடி முல்லைகளும் தவளநகை காட்டுகின்ற
கார்க்கொன்படாக் கள்நின்று கழறிச்சிரிக் கத்தரியேன் "

—நாச்சியார் திருமொழி (9-2)

நம் நாட்டில் சகுனம் பார்த்தல் பண்டு தொட்டுக் கைக்கொள் ளப்படும் ஒரு வழக்கம். பல்லிச் சகுனம் பார்த்தல் போன்றவற்றை அகநானூறு முதலிய நூல்களில் காணலாம். கருங்குருவிகள் எம்பெரு மான் வரவைச் சொல்லிக்கொண்டு மருள் என்னும் பண்ணைப் பாடு கின்றன. இதைச் செவியேற்ற கோதையார் இந்நற் சகுனத்தின் பயனை யான் அடைவேனே ? இஃது உண்மையாக முடியுமோ ? இக் குருவிகளின் வார்த்தைகள் பொய்க்காமல் பலிக்க வேண்டுமே ! என ஆற்றமை தோன்ற நிற்கிறார்.

" காலை எழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்
மாலின் வரவு சொல்லி மருள்பாடுதல் மெய்ம்மை கொலோ "

—நாச்சியார் திருமொழி (9-8)

இறை, எங்கும் நிறைந்த ஒரு பொருள். எல்லாப் பொருள்களிலும் உள்ளுறையும் ஒரு தத்துவம். ஆயினும் அஃது அழகிய இயற்கைப் பொருள்களில் பெரிதும் காட்சி அளிப்பதை அறிஞர் கண்டு களிக் கின்றனர். இயற்கைப் பொருள்களையே தொழுந் தெய்வமாகக் கொண்டிருந்த வழக்குச் சங்கநூல்களிலும், தேச சரித்திரங்களிலும் காணக்கிடக்கும். நாள் ஏற ஏற இறைக்குச் செயற்கை உருவங்கள் கற்பிக்கப்பட்டன. இவ்வுருவங்கள் ஞானிகளின் பாவனைக்கும், இதிகாச புராணங்களின் போக்கிற்கும் ஏற்ப அமைந்தன. இவ்வுருவங்கள் சந்நிதானங்களில் இன்னும் காட்சி யளிப்பதைக் காண்கின்றோம் ! இவ்வுருவத்தின் உள்ளுறையும் அருஞ் சக்தியை நினையாது இவ் வுருவத்தையே இறையெனக் கருதுதல் இறை வழிபாடு ஆகாது. இவ்விக்கிரகத்தின் உண்மைத் தத்துவத்தை மனங்கொண்டு வழிபா டியற்றுவதில் நம் பெரியோர்கள் சிறந்தவர்கள். அவர்களுள் தலையாய வர் நம் ஆண்டாள். இவர் மலர்களையும், வண்டுகளையும் என்ன நோக்கத்தோடு காணுகிறார் ? புறநோக்கத்தோடு மட்டுமா ? இல்லை; இல்லை. இவர் அகக்கண் திறக்கின்றது. அவ்வகக் கண்ணிற்கு எது தோற்றமளிக்கும் ? இயற்கைப் பொருளின் உள்ளுறையும் பொரு ளன்றே ! அவ்வுள் தத்துவத்தை ஊன்றி நோக்குகிறார். அம்மலர் களும், அவ்வண்டுகளும் தம்முள் இறையை அடக்கிக்கொண்டு புறத் தில் அவன் நிறத்தைக் காட்டி மினிர்கின்றன. அன்னையாருக்கு

ஆற்றுமை பொங்கி எழுகிறது ; அவற்றை உற்று உற்று நோக்கு கிறார். " நீங்கள் இழைத்த தவத்தையும் யானிழைத்திலனே ! என்ன நிறம் ! என்ன அழகு ! என்ன செழுமை ! என்ன ஒளி ! அவன் திருமேனி ஒளியைப் பெற்று விளங்கும் நீங்களல்லவா புண்ணிய சொரூபிகள் ! அவன் நிறத்தையும் உருவத்தையும் பெற் றுத் துலங்கும் நீங்கள் எனக்கு உய்வகை இயம்பீரோ ? யான் உங்களை அடைக்கலம் புகுகிறேன். எனக்குச் சரண் ஈயுங்கள் " என்கிறார். இவர் இயற்கைக்கும், இறைக்கும் உள்ள தொடர்பை எம் முறையில் கொண்டிருப்பின் அப்பொருள்களிடம் சரணடை வார் என்பதை ஓர்க !

" கருவிளை ஒண்மலர்காள் காயாமலர் காள்திருமால்
உருவொளி காட்டுகின்றீர் எனக்குய்வழக் கொன்றுரையீர் "

—நாச்சியார் திருமொழி (9-3)

" தங்கமலர்ப் பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைகின்ற
செங்கட் கருமுகிலின் திருவுருப்போல் மலர்மேல்
தொங்கிய வண்டினங்காள் தொடுபூஞ்சுனை காள்சுனையில்
தங்குசெந் தாமரைகாள் எனக்கோர்சரண் சாற்றுமினே "

—நாச்சியார் திருமொழி (9-5)

இயற்கை, இறைக்கு உடல் என்பதை கோதையார் இன்னும் நன்கு நிலைநிறுத்துகிறார். அம்மழைக் காலத்தில் திருமாலின் திருமேனி நிறத்தைப் போன்ற கோடல் மலர்கள் மலர்ந்தும், அவன் திருவதரத்தைப் போன்ற கோவைக் கனிகள் கனிந்தும் காணப்பட் டன. அவை எம்பெருமானை நினைப்பூட்டிக் கோதையாரை வருத் தின. அன்னையார் அலமருகின்றார். அவனோடு கலந்திருக்குங் கால் இவருக்கு இன்பமூட்டும் இவைகளே, பிரிந்திருக்கும் அவ்வம யம் அளப்பிலாத் துன்பத்தை யூட்டா நிற்கின்றன. அவை தமக் குப் பகைகள் எனக் கருதுகிறார். இவ்வளவில் நின்றாரில்லை. இறையே அவைகளைப் போர்க்கோலஞ் செய்து தம்மேல் விடுத்துள் ளான் என உறுதி கொள்கிறார். என்னே இவர் இயற்கைக்கும் இறைக்கும் வகுத்த தொடர்பு !

" கார்க்கோடல் பூக்காள் கார்க்கடல் வண்ணன் எம்மேல் உம்மைப்
போர்க்கோலஞ் செய்து போகாவிடுத்தவன் எங்குற்றான் "

—நாச்சியார் திருமொழி (10-2)

" கோவை மாணாட்டீர் உன்கொழுங்கனி கொண்டெம்மை
ஆவி தொலைவியேல் வாயழகர் தம்மை அஞ்சுதும் "

—நாச்சியார் திருமொழி (10-3)

வீரம்

ஓர் ஒப்பற்ற வீரன், கையில் வாளைத் தாங்கி ஆண் சிங்கம் போன்று கெம்பீரமாகப் போர்க்களம் புகுகிறான்; பகைவர் சேனை

திரண்டு தன் முன்னே நிற்கின்றது; அச்சேனைத் திரள்கள் முழுவதையும் தன் வீரக் கண்ணால் காணுகின்றான்; அவர்களின் வன்மை, படைத்திறன் முதலியன அவனுக்குப் புலனாகின்றன. அப்பகைவரை வெல்லும் முறையைத் தன் மனத்துள் வகுத்துக் கொள்கிறான்; தான் ஒருவனாகவே நின்று நாற்புறமும் சுழன்று சுழன்று வாளை வீசுகிறான். பல யானைகளும் பல படைவீரரும் வெட்டுண்டு நிலத்தில் சாய்கின்றனர். அவன் போர்க்களத்தில் வாகை சூடி ஆண் சிங்கம் போன்று நிற்கிறான். இத்தகையோன் எவனை அவனையே உலகம் வீரன் என அழைக்கிறது. இச் செயலையே வீரமெனப் போற்றுகிறது. இத்தகை வீரரைப்பற்றிப் பாடிய பரணிகள் எத்தனை! புகழ்கள் எத்தனை! வீர முழக்கங்கள் எத்தனை! அங்ஙனமாயின் இவ்வொரு திறத்தினர் மட்டுந்தான் வீரர் குழுவினருள் அடங்குதற்கு ஏற்புடையரா? இல்லை; இல்லை.

ஒருவர் சில நூல்களை ஆழ்ந்து ஆராய்கிறார்; மற்றொருவர் சிறந்த நூலொன்று எழுத எண்ணுகிறார்; இன்னொருவர் தம் தந்தையாரின் பேரால் அறநிலையம் ஒன்று நிறுவ உன்னுகிறார்; இன்னும் பலர் பல உயர்ந்த செயல்களைப் புரியக் கருதுகின்றனர். ஒவ்வொருவரும் தாம் தாம் மனங்கொண்ட காரியங்களை முடித்தற்குள் அளவிறந்த இடுக்கண்கள் நேர்தல் உலகியல்பு. ஆயினும் அவற்றிற்குச் சிறிதும் தளராமல்,

> 'இடுக்கண் வருங்கால் நகுக அதனை
> அடுத்தூர்வ (து) அஃதொப்ப(து) இல்'

என்னும் பொய்யாமொழியை மனத்துட் கொண்டு தாம் கொண்ட காரியத்தில் ஊன்றி நின்று அதை முடித்து வெற்றியுடன் நிற்கிறார். இம்மனோதிடத்தை நாம் என்னென்று கூறுவது? இது வீர மன்றே! இவ்வீர வெற்றியில் அவருக்குண்டாகும் ஆனந்தப் பெருக்கை அளந்து கூறல் யாரால் இயலும்? இதை மனத்திருத்தி நம் கோதையாரை நோக்கின், இவர் வீரர் தொகுதியினருள் தலை சிறந்தவர் என அறியலாம்.

இவர் ஏன் உலகில் தோன்றினார்? மக்களை அஞ்ஞான இருளினின்று கரையேற்றி ஞான ஒளியில் உலவச் செய்யவே அல்லவா? இவர் வளர்ப்பு எங்கு அமைந்தது? வீரத்தோடு வைணவ மதத்தை நிலைநாட்டி, திருமாலுக்குப் பல்லாண்டு பாடி வீர முழக்கஞ் செய்த பெரியாழ்வாரிட மன்றே? தாம் சூடிக் கொடுத்த மாலையையே எம்பெருமான் அணிந்து ஆனந்த முறுமாறு செய்த வீரம் வேறு எத்தொண்டர், எப்பத்தருக்கு வாய்த்தது? பரமான்மாவை நோக்குகையில் ஜீவான்மாக்கள் எல்லாம் பெண் தத்துவங்களே என்பதை உறுதிப்படுத்த, பெண்ணாகவே அவதரித்து அப்பெருமானை அடைய அகப்பொருள் இலக்கணமுறையின்படி ஒழுகி இறுதியில்

அவனே அடைந்து இன்புற்ற வீர வெற்றி எவ்வாழ்வாருக்குக் கிடைத்தது? இங்ஙனம் இவர் வீரங்களைப் பேசிக்கொண்டே செல்லின் அளவு கடந்து விரியாநிற்கும்.

ஆகவே, சூடிக்கொடுத்த நாச்சியார் தாம் கருதிய தூய பொருளை அடைய எத்தனைப் பெயரை இரக்கிறார்! எத்தனைக் குறிகளை இழைத்துப் பார்க்கிறார்! எத்தனைப் பொருள்களைத் தூது விடுகிறார்! எத்தனைப் பேரிடம் எம்பெருமான் செய்திகளை வினவுகிறார்! கண்ணன் நிறத்தை யொத்த எத்தனைப் பொருள்களைக் கண்டு மனந்தளர்ந்து சோருகிறார்! எத்தனை முறை தம் வளைகளையும், தம் வனப்பையும், வன்மையையும் இழந்து வருந்துகிறார்! கண்ணன் கொடுமையைப் பழித்துரைத்தோரை எத்தனை நாட்கள் எதிர்த்து நின்று அவன் நற்பண்பை எடுத்தோதுகிறார்! எம்பெருமான் இருக்குமிடத்தில் தம்மைக் கொண்டு விடுமாறு எத்தனைச் சான்றோரை இறைஞ்சுகிறார்! இவை ஒன்று இரண்டா? பலவாகும்! இத்தனை இடையூறுகளையும் எதிர்த்து நின்று இறுதியில் திருமாலை அடைந்து இன்புற்று வெற்றிமாலையைச் சூடி நின்ற நம் வீர மங்கையராகிய அன்னையார் நெஞ்சம் யாரை மணக்க விரும்புகிறது? பல வீரச் செயல்களிலும் தவழ்ந்து திண்ணிய வீரனைத் திகழ்ந்த எம்பெருமானையே யாகும். மக்களுள் சிறந்த வீரரும் இவருக்கு வீரராகத் தோன்றிலர். ஆதலின், இவர் மானிடருக்கு வாழ்க்கைப்படேன் என்கிறார். வீரமங்கையர் வீரனையல்லாது வேறெவரைத் தமக்குத் தலைவராகத் தேர்ந்தெடுப்பர்? இவர் வீரக்கொடி வானப் பந்தலில் படர்கிறது; பாற்கடலில் இறங்குகிறது; இறுதியில் அவதாரத்தில் பதிந்து அதைச் சுற்றிக்கொள்ள முயல்கிறது. அம்முயற்சி இவரை ஆயர் மங்கையரிடம் ஈர்த்துச் செல்லுகிறது; அம்மங்கையர் உள்ளக் கிடக்கைகளிலும், செயல்களிலும் நுழைந்து நுழைந்து துழாவுகிறது. அங்நிலையில் அவர்கள் இயற்றிய மார்கழி நோன்பு இவர் கண்ணிற்குக் காட்சி யளிக்கிறது. அதைத் தாமும் இயற்றி அக்கொழுகொம்பை அடைய விரும்புகிறார். இவர் நோன்பு அழகிய முப்பது பாசுரங்களால் அமைகின்றது. இம் முப்பது பாசுரங்களும் முப்பது இரத்தினங்கள் எனக் கூறல் மிகை யாகாது. இவற்றுள் பெரும் பான்மையன இவர் மணக்க விரும்பும் திருமாலின் வீரத்தையே வடிவாகக் கொண்டுள்ளன.

இங்ஙனம் மார்கழி நோன்பியற்றிய அன்னையார், தாம் விரும்பிய வரங்களைப்பெற வீரக்கண்ணனை ஓர் அரியாசனத்தில் அமர்த்துகிறார். இப்பாசுரத்தில் கோதையாரின் வீரச் சொற்களும், வீரக் கருத்துகளும், வீர உவமையும், வீரப் போக்கும் கண்டோர் மனத்தைக் கவராமலிரா.

" மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்

போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணஉன்
கோயில்நின்று இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து யாம்வந்த
காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்"

என்கிறார்.

இவர் இயம்பிய வாறே, இருக்கையில் வந்தமர்ந்த கண்ணனைக் கான்டலும் அவன் வீரச் செயல்கள் ஒவ்வொன்றாக இவர் மனக் கண்ணிற்குக் காட்சி யளிக்கின்றது. அவற்றாலேயே அவனை வாழ்த்தா நிற்கிறார். ஈதன்றோ வீரச் செல்வியின் மனப்பான்மை!

"அன்றிவ் வுலக மளந்தாய் அடிபோற்றி
சென்றக்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி
பொன்றச் சகட முதைத்தாய் புகழ்போற்றி
கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி
குன்று குடையாய் எடுத்தாய் குணம்போற்றி
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய்."

வீர மகளாகப் பிறந்து வீரத்தோன்றலையே மணக்கக் கருதி வெற்றி பெற்ற நம் ஆண்டாளுக்கு யாவரும் வீராகவே தோன்றுகின்றனர்.

அண்ணையார் கண்ணன் தந்தையாராகிய நந்த கோபரை நோக்குகிறார். அவர் கரத்தில் கூர்மையான வேல்! பகைவரை ஒரே வீச்சில் அழிக்கும் வீரம்! மதங்கொண்ட யானைகளையும் எதிர்த்து நிற்கும் தோள்வன்மை! முதலியன இவர் கண்ணெதிரில் நிற்கின்றன. அவற்றை உருவாகக் கொண்ட பொன்போன்ற சொற்களை நாச்சியார் கொட்டுகிறார்.

"கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன்"
"உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்" —திருப்பாவை

நோன்பு நோற்றற் பொருட்டுத் தமக்குத் துணையாகக் கொள்ளும் தோழியரும் வீரக்குடியில் பிறந்தவராகவே இவருக்குப் புலப்படுகின்றனர்.

"செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே"

என அழைக்கிறார்.

இவர் மொழிந்த நாச்சியார் திருமொழியிலும் திருமால், வீரத் தலைவனாகவே உருவெனக்கொண்டு திகழ்கிறார். அதில் பல்வகை வீரங்களும் வெள்ளங் கொண்டு ஓடுகின்றன.

" .....கரியலற,
மருப்பினே யொசித்துப்புள் வாய்பிளந்த
மணிவண்ணற் கென்னே வருத்திடென்று "

—நாச்சியார் திருமொழி (1-10)

" .....கடலேயடைத் தரக்கர் குலங்களே முற்றவும்
செற்றிலங்கையைப் பூசலாக்கிய சேவகா எம்மைவாதியேல் "

—நாச்சியார் திருமொழி (2-6)

" அன்றின் ஞாதன செய்சிசு பாலனும்,
நின்ற நீள்மருதும் எருதும் புள்ளும்,
வென்றி வேல்விறற் கஞ்சனும் வீழ,மூன்
கொன்ற வன்வரில் கூடிடு கூடலே "

—நாச்சியார் திருமொழி (4-7)

" கோளரி மாதவன் கோவிந்தன் என்பானேர்
காளை புகுதக் கனக்கண்டேன் தோழீநான் "

—நாச்சியார் திருமொழி (6-2)

" ஊன்கொண்ட வள்ளுகிரால் இரணியனே உடலிடந்தான்,
தான்கொண்ட சரிவளைகள் தருமாகில் சாற்றுமினே "

—நாச்சியார் திருமொழி (8-5)

காதல்

உலகப் பொருள்கள், காட்சிப் பொருள் கருத்துப் பொருள் என இரு பிரிவினுள் அடங்கும். முந்தியது ஐம்பொறிகளால் அறியப்படுவது; பிந்தியது மனத்தால் மட்டும் உணரப்படுவது. அன்பிற்கும் இவ்விலக்கணம் உண்டு. ஆயினும் காதல் என்பது அன்பைக் காட்டிலும் மிக்க உயர்ந்த நிலையில் இருப்பது. இவ் வன்பையும் காதலையும் வெவ்வேறுகப் பிரித்துரைத்தலை நம் ஆன்றோர் நூல்களில் காணலாம்.

ஒத்த வயதும், ஒத்த நலனும், ஒத்த அறிவும், ஒத்த பண்பும், ஒத்த திருவும் உடைய இருபாலாரிடையே தோன்றும் அன்பு காதல் எனப் பகரப்படுகிறது. இவர்களுக்குக் காதலன், காதலி என்னும் சிறப்புப் பெயர் அமைந்திருத்தலை நோக்குக. இவர்கள் இருவர் இடையே நிகழும் இன்பச் சுவை, இத்தன்மைத் தென்றும் இந்நிலை உடையதென்றும் பிறர்க்கெடுத்தோதாதற்கு இயலாமலிருத்தல் மட்டுமே யன்றி, மூன்பு அனுபவித்தவராலும் பின்பு இன்ன இயல்புடையதென நன்கு உணர்தற்குக் கூடாததாய் அகத்தோடு அடங்கி இருத்தலின் அகப்பொருள் எனப் பெயர் பெற்றது.

நம் சமயநூல்கள் அன்பைப் பக்தி எனவும், இக்காதலைப் பிரேமம் எனவும் கூறுகின்றன. பக்தியைக் காட்டிலும் பிரேமமே சிறந்தது. இப்பிரேமம் என்னும் காதலின் இலக்கணத்தை வெளியிட எழுந்த இலக்கணங்களும், இலக்கியங்களும் பலப்பல. இத்துணை உயரியதும், தூயதுமான காதல் இவ்வுலக மக்களிடை நிகழ்தல் அரிதாகும் என்ப

தும், தெய்வத்தன்மை வாய்ந்த சிரியோரிடையே இஃது அரும்பா நிற்கும் என்பதும் அறிஞர் கருத்து. இதற்குச் சான்றுவார் மாணிக்கவாசகரும் ஆழ்வார்களுள் சிலருமேயாவர். பரம்பொருளுக்கும் ஆன்மாவிற்கும் ஒன்பது வகையான தொடர்புகள் ஏற்பட்டிருக்கின்றன என வைணவ தத்துவம் விளம்பாநிற்கும். அவற்றுள் தலைவன் தலைவி தொடர்பும் ஒன்று. இதுவே உயிராயது. இம்முறையில் பரமான்மாவைத் தலைவனாகவும், ஜீவான்மாவைத் தலைவியாகவும் வைத்து அகப்பொருள் சுவை தன்னைப் பாடியவருள் சிறந்தவர் திருமங்கையாழ்வாரும், நம்மாழ்வாரும், ஆண்டாளுமாவர்.

இவருள் முன்னைய இருவருக்கும், பல தொடர்புகளுள் தலைவன் தலைவி தொடர்பும் ஓர் அங்கமாக அமைந்துள்ளது. நம் அன்னையாருக்கோ, தம் இருநூல்கள் முற்றிலும் இத்தொடர்பே செல்லாநிற்கிறது. இஃதொன்றிலு மட்டுமன்று, இன்னும் பல துறைகளிலும் அவர்களைக் காட்டிலும் நம் அன்னையார் காதல், உயர் நிலையில் ஒளிர்வதைக் காணலாம்:

அவர்களுக்கோ, இத்தொடர்பை எம்பெருமானிடம் கொள்ளுநிலைக்குங்கால் தங்களை மகளிராகப் பாவிக்க வேண்டியிருந்தது. நம் கோதையாருக்கோ, அப்பெண்மைநிலை இயற்கையாகவே அமைந்திருந்தது.

பாகவதர்களை முன்னிட்டே ஈஸ்வரனிடம் செல்ல வேண்டுமென்பது வைணவத்தின் வழக்கு. இது மற்றையோருக்கு ஓரோ இடத்தில் உருக்கொண்டுள்ளது. நம் சூடிக்கொடுத்த சுடர்க்கொடிக்கோ, இத்தத்துவம் திருப்பாவை முதல் பாசுரந் தொடங்கி நாச்சியார் திருமொழி இறுதிப் பாசுரம் வரையும் பொருந்தி இருத்தலைக் காணலாம். விரிக்கிற் பெருகும். இவர் நூலை ஆராய்பவருக்கு இவர் கொண்ட இறைக்காதல், படிப்படியாக வளர்ந்து உயர்நிலையை அடைந்திருத்தல் நன்கு புலனாகும்.

இக்காதலின் ஊற்ற மன்றோ, இவரை எம்பெருமானோடு இரண்டறக் கலந்து நிலைபெற்ற இன்பத்தைத் துய்க்கச் செய்தது! இவ்வரிலின்பம் மற்றவர்க்குக் கிடைத்ததோ?

இவரியற்றிய இவ்விரு காதல் நூல்களையும் இருமாடிகள் அமைந்த ஓர் அரண்மனை என்னலாம். முதல் மாடியில் (திருப்பாவையில்) இறைக்கும் தமக்கும் உள்ள தொடர்பு, பக்தியாக உருக்கொண்டெழுகிறது. இரண்டாவது மாடியில் (நாச்சியார் திருமொழியில்) ஏற்பட்ட தொடர்பு, பிரேமமாக உருக்கொண்டு வரம்பு கடந்த செயல்களையும் இயற்றி அவனை அடையுமாறு தூண்டுகிறது.

"ஞானதசையில் ரகஸ்ய ரகஸ்ய பாவம் தன் கப்பிமேல கிடக்கும்; பிரேம தசையில் தட்டுமாறிக் கிடக்கும்" என்னும் பிள்ளை லோகாசாரியர் வாக்கியம் இங்குப் பொருத்தமுடைத்து. ஆண்டாளாகிய

கற்பகத் தருவில் தோன்றிய இவ்விரு கிளைகளுள் ஒன்று சிறு அரும்புகளுடன் காட்சி அளிக்கிறது. மற்றொன்று அவ்வரும்புகள் முற்றி பூத்துக் காய்த்துக் கனிந்து பயன் துய்க்கும் பக்குவ நிலையில் உள்ளது. இந்நிலை எந்த ஆழ்வார்க்கேனும் வாய்த்ததோ? இல்லை. இங்ஙனம் பேசிக்கொண்டே செல்லின் நீளா நிற்கும்.

திருப்பாவைச்செல்வியார் காதற்கண், எம்மட்டும் செல்கிறது? அக்கண்ணிற்குப் பொருத்தமான எப்பொருளும் இவ்வுலகில் அகப்படாமையின், பரமபதம் அளவும் அளாவிப் போந்து அவணுள்ள இறையின்கண் படிகிறது. அக்காதற் கண்ணை மறுபக்கம் திருப்ப இவரால் இயலவில்லை. ஆதலால் இவர் அப்பொருளிலேயே அழுந்தி அதற்கே தம்மை உரிமைப்படுத்தக் கருதுகிறார்; தம் வாழ்க்கை வேறுவிதமாக மாறுபடின் தாம் உயிர் வாழ இயலாதென்பதை உறுதியாக இயம்புகிறார்.

"மானிடவர்க் கென்று பேச்சுப்படின் வாழகில்லேன்"

—நாச்சியார் திருமொழி (1-5)

ஒருவர்பாலே காதலைச் செலுத்தும் உயர்குடி மகளிரின் சிறந்த பண்பு இஃதாகும். இது தமிழ் நாட்டிற்கே உரியது. இச்செய்தியைத் தஞ்சை வாணன் கோவை எடுத்துரைக்கும் அழகு என்னே!

"பொருபால் மதியினைப் போல்மருப் பியானையில் பொன்னெ டின்பம்
தருபால் மொழிவஞ்சி! சாரவந் தார்தஞ்சை வாணன் வெற்பின்
ஒருபால் கொதுமலர் என்னவெந் தீவேல உற்ற செவ்வேல்
இருபால் மருங்கினும் கொண்டெறிந் தால்ஒத்த தென் செவிச்சே"

—தஞ்சை வாணன் கோவை (226)

இத்தெய்வக் காதலில் ஆழ்ந்துள்ள இவருக்கு, அத்திருமால் தம்மைக் கைப்பற்றுவனோ? என்னும் ஐயப்பாடு நிகழ்கிறது. அவ் வையப்பாட்டால் இவர் மனம் நைகிறது. அதைத் தாங்க இவரால் இயலவில்லை. அதற்கு ஏதேனும் பரிகாரம் தேடக் கருதுகிறார். பெரியோர் குறிபார்க்கும் கொள்கை ஒன்று இவர் நினைவில் தோன்று கிறது. அதன்படியே இவர் கூடல் இழைத்துப் பார்க்கிறார். கூடல் இழைத்தல் என்பது: ஒரு பெரிய வட்டக்கோடு இட்டு, அதனுள் பல சிறு வட்டங்களைச் சுழித்து அவை ஒற்றையில் முடியின் எண்ணிய எண்ணம் முடியாதென்றும், இரட்டையில் முடியின் கருதியது கைகூடும் என்றும் தீர்மானிப்பது.

"தெள்ளி யார்பலர் கைதொழுந் தேவனூர்
வள்ளல் மாலிருஞ் சோலை மணாளனூர்
பள்ளி கொள்ளும் இடத்தடி கொட்டிடக்
கொள்ளு மாகில்நீ கூடிடு கூடலே"

—நாச்சியார் திருமொழி (4-1)

அகநானூறு முதலிய நூல்களிலும், கழங்கு குறிபார்த்தல் போன்றன இடம் பெற்றுள்ளன.

"வரற்காலம் என்றென் றெனைப்பல கூடல் வளைத்துதிரம்
விரற்கால இன்று மெலியல்மின் னே!"

—தஞ்சை வாணன் கோவை (413)

ஒருவருக்கு மற்றொருவர்பால் உண்டாகும் அளவு கடந்த காதல் அவர் மட்டோடு நிற்குமோ? அவர் தொடர்புற்ற பொருள்களிடத்தும் செல்லுமன்றே? அப்போது தான் அஃது ஊன்றிய காதலாகும். அங்ஙனமே நம் அன்னையார் எம்பெருமானிடத்தில் கொண்டகாதல் அவனளவோடு நின்றிலது; அவன் இடது கரத்தில் தாங்கி இருக்கும் சங்களவும் செல்லுகிறது. அச்சங்கின் வெண்மையும், திருமாலின் உடல் கருப்பும், அச்சங்கு ஒலித்தற்கிடமான அவன் திருவதரத்தின சிவப்பும் இவருக்குக் காட்சியளிக்கின்றன. "என்ன சேர்க்கை! என்ன அழகு! என்ன அழகு! காண்போர் மனத்தைக் கவரும் இதன் பெட்புதான் என்னே! இதற்கு உறையுளும், உணவும் எவை? முறையே எம்பெருமானின் இடக்கரமும் அவன் திருவாயில் ஊறிய அமுதமே அல்லவா? இஃது என்றேனும் என்னைப் போன்று அவனைப் பிரிந்து வருந்தியது உண்டோ? இல்லை; இல்லை. இரவும் பகலும் அவன் அழகிய கைத்தலத்தையே தனக்கு அணையாகக் கொண்டுள்ளதே! இதன் தவந்தான் என்னே! தவமுடையார்க் கல்லவா தவம் கூடுவது? என்ன ஆனந்தம்! உவகை பொங்கி வழிவது போன்றன்றே, இஃது என்றும் நகைமுகங் காட்டிக் கொண்டுள்ளது! உலகில் தோன்றின் இங்ஙனமன்றே தோன்றல் வேண்டும்! இதற்கன்றே அவன் வாய்ச்சுவை தெரியும்! அதைத் துய்க்கப் புண்ணிய மியற்றுத யான் இப்போது செய்யவேண்டுவது யாது? இதனைக் கேட்டேனும் அச்சுவையைத் தெரிந்துகொள்ள வேண்டுவதே. இதுவே தக்கவழி!" எனக்கருதி,

"கருப்பூரம் நாறுமோ? கமலப்பூ நாறுமோ?
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித் திருக்குமோ?
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச்சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே"

—நாச்சியார் திருமொழி (7-1)

என்று சங்கை அன்புடன் வினவுகிறார்.

இன்னும் கொடிய அசுரரை அலக்கழிக்கும் அச்சங்கத்தின் ஒலியையும், கடலிற் பிறந்து திருமால் கைத்தலத்தில் கண்வளரும் அதன் அழியாச் செல்வத்தையும் மிகப் பாராட்டிப் பேசுகிறார்.

"கடலில் பிறந்து கருதாது பாஞ்சசனன்
உடலில் வளர்ந்துபோ யூழியான் கைத்தலத்து
இடரில் குடியேறித் தீய வசுரர்
நடலைப் படமுழங்குந் தோற்றத்தாய் நற்சங்கே"

—நாச்சியார் திருமொழி (7-2)

இங்ஙனம் தலைவன் கரத்திற்ருங்கும் சங்கைப் புகழ்தல் தலைவியர் வழக்கம் போலும்!

"தேனிறவார் கண்ணிச் செம்பியன் மாறன் செழுங்குமரி
மானிற வெண்டிரை மால்கடல் தோன்றினை ; மண்ணளந்த
கீனிற வண்ணனும் ஏந்தினன் தம்மூன் நிறம்புரைதீம்
பானிற வெண்சங்கம் ; யார் நின்னின் மிக்க படிமையரே ?"

—இறையனாரகப் பொருள் (315)

ஒரு தலைவியை விட்டுத் தலைவன் பிரியுங்கால் அவள் அழகு, வளை, உறக்கம், சிந்தை யாவும் அவளைவிட்டு நீங்கி அவளை வருத்துதல் இயல்பு. அங்ஙனே நம் அன்னையாரையும் வந்தடைகிறது. அவ்வமயம் கோதையார் என்ன செய்கிறார்? யாங்ஙனம் அவர் தம் உயிரைக் காத்துக் கொள்ளுகிறார்? அத்திருமாலை ஒத்த பொருள்களைப் பார்த்தலும், அவற்றோடு தம் ஆற்றுமையையும், அவன் தம்மைக் கைவிட்டிருத்தலால் அவனுக்கு ஏற்படும் பழிப்பையும் அவனிடம் தெரிவிக்குமாறு அப்பொருள்களிடம் கூறுகிறார்; அன்றியும் அவன் என்று தம்மோடு கலந்து தம்மை ஆட்கொள்வான் என அவன் வரவை எதிர்பார்த்த வண்ணமாய் அவன் உயரிய குணங்களை நாவாரா வாழ்த்திக் கொண்டே தம் காலத்தை அரிதாகக் கழிக்கா நிற்கிறார். இவர் காதலின் ஊற்றம், தாம் காதலித்த பொருளின் சிறப்பு, தாம் செய்தி அனுப்பும் பொருளின் ஞானம் முதலியவற்றை ஓர்ந்து பார்த்தற்கும், தம் அரற்றலினால் ஏற்படும் உலக வசையை உற்று நோக்கற்கும் இடந் தந்திலது. கரை கடந்த உண்மைக் காதல் எதைத்தான் ஊன்றி நோக்கும்!

"ஒளிவண்ணம் வளைசிந்த உறக்கத்தோ டிவையெல்லாம்,
எளிமையா லிட்டென்னை ஈடழியப் போயினவால்,
குளிரருவி வேங்கடத்தென் கோவிந்தன் குணம்பாடி,
அளியத்த மேகங்கா ளாவிகாத் திருப்பேனே"

—நாச்சியார் திருமொழி (8-3)

"கதியென்றும் தானுவான் கருதாதுலர் பெண்கொடியை
வதைசெய்தா னென்னும்சொல் வையகத்தார் மதியாரே"

—நாச்சியார் திருமொழி (8-9)

என அன்னையார் அரற்ற நிற்றலைக் காண்க.

உயர் குடியில் தோன்றிய மகளிர்க்கு நாணம் உயிரினும் சிறந்தது. அவர் உயிரைத் துறக்க நேரினும் நாணைத் துறக்க உடன்படார். இத்துணை உயரிய நாணமும், காதல் கரைபுரண்டோடுவார் மாட்டு நிலைபெற்றிருத்தல் இல்லை. காதலே தலைதூக்கி நிற்கும். அதைத் தம்முள் அடைத்து வைக்கும் தாழை அவர் கண்டிலர். இத்தகையோருள் தலைசிறந்த நாச்சியாருக்குத் தம் காதலராகிய திருமாலின் உருவெளிப்பாடு தம் கண்முன் தோன்று

கிறது. அவன் நிறத்தை ஒத்த மலர்களும், மேகங்களும் முகங் காட்டி இவர் மனத்தை ஈர்க்கின்றன. கண்ணன் ஸைலப்பியம் (கட்புலனுக்குத் தோன்றுத இறை, யாவரும் கண்டு பற்றுமாறு எளியனுய் இருத்தல்) முதலிய சிரிய குணங்களை நினைக்கிறர்; நெஞ்சம் அலமருகிறர். இவர் மனப்போக்கை அறியாத மற்றை யோர் இவர் பெண்மைக்குரிய நாணத்தைக் கைவிட்டனர் என வசை கூறிப் பழிக்கின்றனர்; இவர் உடல் மெலிவிற்கு வேறு சிகிச்சை செய்யவும் முயல்கின்றனர். "அந்தோ! என் உண்மைப் பிணியை நீர் அறிந்தீரில்லையே! என். நோய் முனிவர்க்கும் அறிவரிதுதான்! ஆயினும் கடல் வண்ணனை கண்ணன் தன் கைகளால் தடவின் என் நோய் பறந்தோடும்! கண்ணனிடம் எனக்குள்ள ஆர்வ வெள்ளம் நாணக்கரையை உடைத்தெறிந்து விட்டது! இனி என் செய்வேன்! என் மனப்போக்கை உலகோர் யாவரும் அறிந்தனர். இனி நாணித் தான் பயனென்னே? ஆதலின் என்னைக் கொண்டு போந்து அவன் உகந்து வதியும் ஏதேனும் ஓரிடத்தில் விட்டுவிடுங்கள்! அஃதே இவ் வமயம் நீங்கள் செய்ய வேண்டுவது!" எனச் சுற்றத்தாரை இறைஞ்சு கிறர். இஃது,

> "நாணியினியோர் கருமமிலை நாலயலாரு மறிந்தொழிந்தார்,
> பாணியா தென்னை மருந்து செய்து பண்டுபண்டாக்க வுறுதிராகில்,
> மாணியுருவா யுலகளந்த மாயனைக்காணில் தலைமறியும்,
> ஆணையால் நீரென்னைக் காக்கவேண்டில் ஆய்ப்பாடிக்கே யென்னை
> [உய்த்திடுமின்"
>
> —நாச்சியார் திருமொழி (12-2)

என்னும் பாசுரத்தால் நன்கு புலனுகின்றது.

இப்பொருளைச் சங்கநூல்கள் நேரிதாக விரிக்கின்றன.

> "காமக் கணிச்சி யுடைக்கும் நிறையென்னும்
> நாணுத்தாழ் வீழ்த்த கதவு" —திருக்குறள் (126-1)
>
> "சேணும் அகலா துடன்என்னை டாடித்திரிந்துவந்த
> நாணும் அழியத் தகுகற்பு மேம்பட நைகின்றதே"
>
> —இறையனுரகப் பொருள் (178)

> "அளிதோ தானே நாணே; கம்மொடு
> நனிநீ டுழந்தன்று மன்னே; இனியே
> வான்பூங் கரும்பி னெங்குமணற் சிறுசிறைத்
> தீம்புன னெரிதர வீங்குக் காஅங்குத்
> தாங்கு மளவை தாங்கிக்
> காம நெரிதரக் கைந்நில் லாதே" —குறுந்தொகை (149)

காதலில் ஆழ்ந்திருப்பாருக்குத் துன்பந் தருமவற்றுள் மாரிக் காலமும் ஒன்று. அக்காலம்மட்டும், அவர்களை வருத்துதல் இல்லை. அவ்வமயம் பூத்தொளிரும் மலர்கள், மகிழ்ந்துறையும் உயிர்த் தொகுதிகள், யாவும் அவர் மனப்புண்ணிற்குக் கருவிகளாக உள்ளன. இம்முறையில் கார்காலம் தொடங்குகின்றது. எல்லாப் பொருள்

கள்தும் தளதளவென்று ஒளிர்கின்றன. சூடிக்கொடுத்தார் சுற்று முற்றும் பார்க்கிறார். குதுகலிப்புடனும், முழு அழகுடனும் தோன்றும் பறவைகள், மலர்கள், கனிகள் இவர் கண்ணிற்படுகின்றன. "அந்தோ! யான் எந்தத் திருமாலை அடையக் கருதுகிறேனோ அந்தப் பெருமானின் நிறத்தை யன்றே இவைகள் பெற்றுள்ளன. இவைகட்கு இஃது என்ன பயனைத் தரும்? தமக்குப் பயனளியாத இதை இவை மேற்கொண் டிருத்தல், என்னை இம்சிக்கவே போலும்! யானோ கொன்றைமலர்கள் மேல் தொங்கும் பொன்னிற மாலைகளோ டொப்ப வாளா கிடக்கின்றேன். ஏ, மயில்களே! உங்கள் நடனத்தைக் காணும் வன்மை எனக் கிப்போதில்லை! உயரப்பூத்துள்ள மலர்களே! திருமால் சக்கரத்தைப் போன்று என்னைச் சுட்டு எனக்கு அல்லலை விளைவியாதீர்கள்! காந்தள் மலர்களே! உங்களைப் போர்க்கோலஞ் செய்து என்மேல் பாயுமாறு விடுத்தவன் எங்குற்றனன்?" எனக் கதறுகிறார்.

"பைம்பொழில் வாழ்குயில்காள் மயில்காள் ஒண்கருவிளைகாள்
வம்பக் களங்கனிகாள் வண்ணப்பூவை நறுமலர்காள்
ஐம்பெரும் பாதகர்காள் அணிமாலிருஞ் சோலைகின்ற
எம்பெருமானுடைய நிறமுங்களுக் கென்செய்வதே"

—நாச்சியார் திருமொழி (9-4)

"மேற்றோன்றும் சோதிவேத முதல்வர் வலங்கையின்
மேற்றோன்றும் ஆழியின் வெஞ்சுடர் போலச்சுடார்"

—நாச்சியார் திருமொழி (10-2)

"முல்லைப் பிராட்டிநீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை
அல்லல் விளைவியேல் ஆழி நங்காய்"

—நாச்சியார் திருமொழி (10-4)

"நடமாடித் தோகை விரிக்கின்ற மாமயில்காள் உம்மை
நடமாட்டங் காணப் பாவியேன் நாளோர் முதலிலேன்"

—நாச்சியார் திருமொழி (10-7)

கோதையார் உள்ளத்தின் உணர்ச்சியைக் காட்டுதற்கு இப்பாசுரங்கள் மாசற்ற பளிங்கு என்னலாம்.

இன்னும் அன்னையார், தம்மிடம் உள்ளாரை நோக்கி, "நீர் என்னை என் காதலரிடம் கொண்டுபோய் விடுவதாகக் காணப்பட்டிலர். அங்ஙனம் செய்திலரேனும் அவன் உடுத்துள்ள பீதாம்பரத்தை யேனும் கொணர்ந்து என்மேல் வீசுவீராக! என் நோயைத் தீர்ப்பதற்கு அஃதொரு சிறந்த கருவியாகும்" என்கிறார்.

"கண்ணனென்னும் கருந்தெய்வம் காட்சிபழகிக் கிடப்பேனை
புண்ணில் புளிப்பெய்தாற்போலப் புறநின்றழகு பேசாதே,
பெண்ணின் வருத்தமறியாத பெருமானரையில் பீதக
வண்ண ஆடை கொண்டு, எனை வாட்டந்தணிய வீசிடே"

—நாச்சியார் திருமொழி (13-1)

நம் கோதையாருக்குத் திருமாலிடம் எத்துணை அன்பு ஏற் பட்டிருப்பின், அவர் தொடர்புற்ற பொருளும் தம் காதலைத் தணிக் கும் எனக் கருதுவார்!

திருப்பாவைச் செல்வியாருக்கு ஏற்பட்ட காதல், கேவலம் ஊனுடலைப் பற்றியதன்று என்பதை அவர் மொழிந்த சொற்களே தெளித்துக் காட்டுகின்றன. எம்பெருமானிடம் ஈடுபட்டு அவருக் குத் தொண்டு புரிதலே இப்பிறவியின் பயனெனக் கோதையார் கருது கிறார்; இறைவனுக்கே ஆட்பட்டு, தம் உடலையும் உயிரையும் அவ னுக்கே உரிமை யாக்கி மனம் வாக்கு காயங்களால் தொண்டு பூண் டொழுகுமாறு செய்யும் அன்பின் திறத்தையே, இங்குக் காதல் காதல் எனக் கழறுகிறார். இஃதே ஆன்மாவிற் குரிய உயரிய காதலா கும். இக்காதலை உடையவர்களையே ஞான, பக்தி, வைராக்கியம் நிறைந்தவர்கள் எனச் சமய உலகம் கொண்டாடுகிறது.

".....கோவிந்தற்கோர் குற்றேவல்
இம்மைப் பிறவி செய்யாதே இனிப்போய்ச் செய்யுந் தவந்தானென்"
—திருமொழி (13-9)

"சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரைஅடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றமேய்த் துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண் கோவிந்தா
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேகா மாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்."

—திருப்பாவை (29)

இத்தகைய உயரிய காதலைக் கொண்ட பெண்ணரசியார், எம் பெருமான் எவன் இருப்பான்? என்ன நிலையில் தோற்றப்படுவான்? என ஆராய்கிறார். அவன் உயர்வு, எளிமை, அருள், அழகு முதலிய வற்றை இவர் சிந்தை சிந்தித்துச் சிந்தித்துப் பார்க்கிறது. பின்பு அது சில விளக்கங்களை எழுப்புகிறது. அவ்விளக்கங்களுக்கு இவர் ஆய்ந்த அறிவு, பொருத்தமானதும் கெம்பீரமானதுமான விடைகளை இறுக் கின்றது. இன்னலமும் இன்பமும் நிறைந்த அவ்விடைகளைச் செவி யேற்ற நம் அன்னையார் நெஞ்சம் குளிர்ந்து குதூகலமடைகிறது. அவன் வீரச் செயலைக் கேட்டுக் கேட்டு மகிழ்கிறார். கஜேந்திரனைப் போன்று பல நாட்கள் காதல் என்னும் முதலையின் வாயகப்பட்டு ஆற்றுமையில் துவக்குண்ட அன்னையார், இறுதியில் எம்பெருமானை மனக்கண்ணால் சேவித்து இப்பிறவியிலேயே அவனுக்குத் தொண்டு புரிந்து அழிவில்லா இன்பப் பேற்றை யடைந்தார் என்பது அவர் இறுதித் திருமொழியில் வெளிப்படுகிறது. ஆகவே இவர் இறைவன் மாட்டுச் செலுத்திய உயரிய காதல் இவர் தூய ஆண்மாவை உய்யச் செய்தது என அறிந்தாம். இஃது எம்பெருமானின் அருளாகும்.

" பட்டி மேய்ந்தோர் காரேறு பலதே வற்கோர் கீழ்க்கன்றாய்
இட்டே றிட்டு விளையாடி யிங்கே போதக் கண்டீரே
இட்ட மான பசுக்களே யினிது மறித்து நீரூட்டி
விட்டுக் கொண்டு விளையாட விருந்தா வனத்தே கண்டோமே "

—நாச்சியார் திருமொழி (14-1)

" கார்த்தண் கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறு படுத்தி என்னை
ஈர்த்துக் கொண்டு விளையாடு மீசன் றன்னைக் கண்டீரே
போர்த்த முத்தின் குப்பாயப் புகர்மால் யானைக் கன்றே போல்
வேர்த்து நின்று விளையாட விருந்தா வனத்தே கண்டோமே "

—நாச்சியார் திருமொழி (14-4)

எனத் தாம் எம்பெருமானைக் கண்டுகளித்ததைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறார்.

சான்றாண்மை

எல்லா நற்குணங்களும் நிறைந்த தன்மைக்குச் சான்றாண்மை எனப் பெயர். சால்புடையார் செயலும் சொல்லும் மனமும் வஞ்சனை யற்றன. அவர் பிறர் நலத்தையே பெரிதும் விரும்புவார். மற்றோர், தமக்குப் புரிந்த தீனையளவு நன்றியையும் பனையளவாகக் கருதும் பெருந்தகைமையை அவரிடம் காணலாம். தமக்கு இன்ப மீவன எவையோ அவற்றின் வழியாகவே பிறர்க்கும் இன்பமூட்ட முயல்வார். அவர் விரிந்த உள்ளம் யாவரையும் தம் உடன்பிறந்தாராகவும், சுற்றத்தினராகவும் கருதாநிற்கும். தாம் துய்க்கும் நலனைப் பிறருக்கும் பகுத்தளித்துக் களித்தல் அவர் தம் இயல்பு. இவ்விலக்கணங்களை மனத்திருத்தி நம் ஆண்டாளிடம் செல்வாம்.

ஆண்டாள், ஆயர் மங்கையர் கண்ணனை அடைய நோற்ற மார்கழி நோன்பைத் தாமும் இயற்றி அவனைச் சேர விழைகிறார். ஆனால் ஆயர் பெண்களுக்குச் செயலில் நடைபெற்ற அந்நோன்பு இவர்க்குப் பாவனையில் அமைகிறது. அப்பாவனையிலும் இவர் இறை இன்பத்தைத் தாம் ஒருவரே நின்று துய்க்க எண்ணிலர்; இவர் அருளுள்ளம் தம்போன்ற மங்கையர் பலரையும் சென்று சென்று துயிலுணர்த்துகிறது. இறை இன்பத்தைப் பலருடன் கலந்து துய்க்க உன்னி, அன்பும் அச்சமும் கலந்த சொற்களால் அவர்களை அஞ்ஞானத் துயிலிலிருந்து ஞானவிழிப்பிற்குக் கொணர்கிறார்.

" வல்லே உன் கட்டுரைகள் பண்டேஉன் வாயறிதும் "

" உன்னைக் கூவுவான் வந்துநின்றோம் கோது கலமுடைய
பாவாய் எழுந்திராய் "

" குற்றம் ஒன்றுமில்லாத கோவலர்தம் பொற்கொடியே
புற்றர வல்குல் புனமயிலே போதராய் " —திருப்பாவை.

நம் திருப்பாவைச் செல்வியார் தாம் பேசிய பல திருமொழிகளின் இறுதிப் பாசுரத்திலும் தம்மை மறப்பினும் தம் தந்தையாரை

மறந்திலர். அன்றியும் தம் தந்தையாரின் பெயரை முன் அமைத்தே தம்மை யாவருக்கும் அறிமுகப்படுத்துகிறார். இவை மட்டுமோ? ஆங்காங்கே பெரியாழ்வாரின் பெட்பை அழகுபட வெளியிடுவது இவர் நன்றியுடைமையைப் புலப்படுத்துவதாகும்.

" பைங்கமலத் தண்தெரியல் பட்டபிரான் கோதைசொன்ன "
" வேயர் புகழ் வில்லிபுத்தூர்க் கோன் கோதைசொல் "
" வெய்ந்தபுகழ் பட்டர்பிரான் கோதை தமிழீரைந்தும்
ஆய்ந் தேத்த வல்லார் அவரு மணுக்கரே "
" வில்லிபுதுவை நகர்நம்பி விட்டுசித்தன் வியன்கோதை "

இங்ஙனம் தம்மை வளர்த்த பெரியாழ்வாரிடம் இவர் காட்டிய மதிப்பை நோக்குக.

தாம் எம்பெருமான் பிரிவை நினைத்துத் துன்புறுங் காலத்தும் தாயினிடத்தும், தோழிகளிடத்தும் இவர் மிக்க நாகரிகமாகவே நடந்துகொள்ளுகிறார். ஒரு தீய சொல்லும் இவர் வாயினின்று வெளிவந்திலது. ஆழ்ந்த ஆற்றுமையும், கவலையும் கூட இவரை வரம்பு கடந்த செயல்களில் தூண்டித்தில. மறந்தும் கொடிய சொற்களைச் சொல்லல் ஒழுக்கமுடையாரிடம் உண்டாகுமோ? நாவை நற்சொற்களில் பழக்கி வைத்தல் சான்றோர் இயல்பன்றே!

" எழிலுடைய அம்மனைமீர் என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானூர் என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே யாக்கினரே "

—நாச்சியார் திருமொழி (11-2)

" பாலா லிலையில் துயில்கொண்ட பரமன் வலைப்பட் டிருந்தேனை
வேலால் துன்னம் பெய்தாற்போல் வேண்டிற் றெல்லாம் பேசாதே
கோலால் நிரைமேய்த் தாயனுய்க் குடந்தைக் கிடந்த குடமாடி
நீலார் தண்ணந் துழாய்கொண் டென்னெறி குழல்மேல் சூட்டீரே "

—நாச்சியார் திருமொழி (13-2)

இத்துணை நற்குணங்கள் வாய்ந்தவர் அல்லவா சான்றோர் எனக் கூறப்படுவர். இன்னும் நம் அன்னையாரின் பண்புகளை ஊன்றி நோக்கின் இவரைப் போன்ற சால்புடையார் பலர் தோன்றல் அருமை யெனக் காணப்படும்.

கனவு

மக்கட்கு, பகற்பொழுதில் உயிரும் உடலும் உழன்று தொழில் புரியும் நிலை ஒன்று; துயிற் காலத்தில் பொறி புலன்களின் செயலோய்ந்து, மனது தத்துவம் மட்டும் நடையாடும் பாதி துயிலும் பாதி விழிப்புமாய் இருக்கும் நிலை ஒன்று; மனமும் அடங்கி தன்னைத்தான் அறியாமல் தூங்கும் நிலை ஒன்று. ஆக நம் ஒவ்வொரு நாள் வாழ்க்கையும் முத்திறப்பட்டிருக்கும். இவற்றுள் இடை நிலையில்தான் கனவுகள் தோன்றி நிற்கும். இக்கனவைக் குறித்துப்

பலருக்கும் பலவித அபிப்பிராயங்கள் உண்டு. அவற்றை விரித்தல் இங்கு வேண்டற் பாலனவல்ல. ஆயினும் பொதுவாக நல்லெண்ணமுடையார் நற்கனவையும், தீய எண்ணமுடையார் தீக்கனவையும் காணுதல் ஒருதலை. இம்முறையில் பெரியாழ்வார், ஆண்டாள் அவதாரச் சிறப்பையும் இவர் பிற்காலப் போக்கையும் எம்பெருமானே தம் கனவில் வந்துரைக்க உணர்கிறார். ஆண்டாளோ தாம் கொண்ட உயர் எண்ணம் முற்றுப்பெற்றுத் திருமாலே தம்மை மணம்புரிய ஓர் உத்தமக் கனவு கண்டு களிக்கிறார்.

" மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீநான் " (6-6)

இச் செய்தியை,

" துஞ்சுங்கால் தோள்மேல ராகி விழிக்குங்கால்
நெஞ்சத்தவ ராவர் விரைந்து "

எனத் திருக்குறள் தெரிவிக்கிறது.

அக்கனவில் எத்தனை மங்கலப் பொருள்கள்! எத்தனை அலங்காரங்கள், எத்தனை வாத்திய ஒலிகள்! எத்தனைத் தத்துவங்கள் தவழ்கின்றன. தாம் மணக்க விருக்கும் எம்பெருமானின் குண நலங்களும், அறச் செயல்களும் அக்கனவில் அமையும் அழகுதாம் என்னே! மணத்தின் சிறந்த கருத்துகளைக் காண அஃதோர் ஆடி என்னலாம்.

" பூரண பொற்குடம் வைத்துப் புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீநான் " (6-1)

" மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத " (6-6)

" வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்
பாசிலை நாணல் படுத்துப் பரிதிவைத்துக்
காய்சின மாகளி றன்னனென் கைபற்றித்
தீவலஞ் செய்யக் கனாக்கண்டேன் தோழீநான் " (6-7)

இங்கு இன்னுமொரு சிறப்பைக் காணுதல் வேண்டும். நம் அன்னையார் கனவில் கண்ட மணத்தின் தொடர்பு இப்பிறவிக்கு மட்டும் துணைபுரியும் எனக் கருதினர் இல்லை. இங்குங் கோதையார் தம் கனவு நிலையிலும், தம்மையும் தம்மை ஆட்கொள்ளும் எம்பெருமானையும் எம்முறையில் அறிந்துள்ளார் என்பது,

" இம்மைக்கும் எழேழ் பிறவிக்கும் பற்றுவான்
நம்மை உடையவன் நாராயணன் நம்பி
செம்மை யுடைய திருக்கையால் தாள்பற்றி
அம்மி மிதிக்கக் கனாக்கண்டேன் தோழீநான் " (6-8)

என்னும் பாசுரத்தால் நன்கு புலனாகின்றது.

பரணிப் போர்

—திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L.

ஏறக்குறைய எண்ணூற்றைம்பது ஆண்டுகட்கு முன்பு குலோத்துங்கன் என்னும் வளவன் சோழநாட்டை ஆண்டு வந்தான். அவனுடைய காலத்தில், குழப்பம் ஒழிந்தது; வளப்பம் மிகுந்தது; குடிகள் கவலையற்று வாழ்ந்தார்கள். கல்வியிலும் கேள்வியிலும் சிறந்து விளங்கிய காவலன், கலிவாணர் கவியினையும் இசையினையும் பொழுது போக்கினன். அம்மன்னவன் பண்ணுறவுகுத்த இசைக்கலை அவன் முன்னிலையிற் பாடிமகிழ்ந்தனர் பெரும்பாணர். அவன் தேவியராய்த் திகழ்ந்த மூவருள், ஏழிசைவல்லபி என்னும் இசை மாது, எற்றமுற்று இலங்கினள்.

இத்தகைய வளவன், ஒருநாள் தொண்டை நாட்டிலுள்ள பாலாற்றங்கரையில் வேட்டையாடப் புறப்பட்டான்; பரிவாரங்களோடு எழுந்து சென்று, காஞ்சிமாநகரில் தங்கியிருந்தான். அங்குச் சிற்றரசர் பலர் போந்து, அவனடி பணிந்து, திறை செலுத்தினர்கள்.

"பரிசில் சுமந்தன கவிகள்; பகடு சுமந்தன திறைகள்;
அரசு சுமந்தன இறைகள்; அவனி சுமந்தன புயமும்."

முறையாகத் திறை செலுத்துதற்குரிய குறுநில மன்னருள் வடகலிங்கத்தரசன் ஒருவனே இருமுறை வரத் தவறினன் என்று மந்திரக் கணக்கர் வாயிலாக அறிந்தான் மன்னவன்; உடனே கலிங்க நாட்டின் மீது படையெடுக்கப் பணித்தான். அப்போது, தண்டத் தலைவருட் சிறந்த கருணகரத் தொண்டைமான் எழுந்தான். மன்னனிடம் விடைபெற்றுப் படை திரட்டத் தொடங்கினன்.

இவ்வாறு காஞ்சியில் போர்மேகம் திரண்டு கொண்டிருக்கையில், பின்னிநின்னும் பேய்கள், நெடும் பசியால் நலிந்து வயிறு காய்ந்தன. பாராளும் தேவியாய காளியின் அருளைப் பெற்றலன்றிப் பசி தீரு மாறில்லை என்றறிந்து, அத்தேவியிடம் தம்குறையை முறையிடச் சென்றன. காளிதேவி கோயில் கொண்டிருந்த இடம் நீரும் நிழலு மற்ற நெடும்பாலைவனம். அந்நிலத்தைக் கண்டால் கண்ணெரியும்; கருகினால் மனம் கருகும். கரிந்த சூரையும் பொரிந்த காரையும் காய்ந்த கள்ளியும் முள்ளியும் அங்கே காட்சி யளிக்கும். செந்நெருப்பைத் தகடு செய்து பரப்பினாற்போன்ற அப்பாலை வனத்தில் கடும்பசியால் உழன்று கண்சுழன்ற பேய்கள், காளியின் முன்னே

வீழ்ந்து வணங்கித் "தாயே! எம் வயிறு காய்ந்தது; கைசோர்ந்தது; மெய் தளர்ந்தது; உன் முன்னே எழுந்து நிற்கவும் வலிமையற்றோம்; முன் செய்த பாவத்தால், இப் பாழும் வயிற்றில் பரமன் பசியை வைத்தான். பாராளும் வளவன், போர் புரிந்து எங்கள் பசி தீர்ப்பானல்லன். நாங்கள் இனி எவ்வாறு உய்வோம்? வெறு வாயை மென்று ஒறு வாயானோம்.

"பதடிகளாய்க் காற்றடிப்ப நிலைநி லாமல்
பறக்கின்றோம் பசிக்கலைந்து; பாதி நாக்கும்
உதடுகளிற் பாதியும் தின்று ஒறுவாயானோம்;
உனக்கடியேம் அடியேமை ஓடப் பாராய்"

என்று அலறி அழுதன.

அந்நிலையில், வடதிசையினின்று வந்தடைந்த பேயொன்று, காளி தேவியை வணங்கித் "தாயே! கேள்: வட கலிங்க நாட்டிலே வானம் செந்நீர் சொரிகின்றது; கேணிகளில் குருதி சுரக்கின்றது; நரிகள் ஊளையிடுகின்றன; கரிகள் கொம்பொடிந்து குழைந்து கிடக்கின்றன; பூமேல் புலால் நாற்றம் வீசுகின்றது" என்று தான் கண்ட காட்சியை விரித்துரைத்தது. அந்நிமித்தங்களைக் கேட்ட காளி, 'கலிங்கநாட்டில் ஒரு பரணிப்போர் நிகழும்' என்று கட்டுரைத்தாள். சுற்றி நின்ற பேய்கள், வாயூறி வடதிசையை நோக்கித் தொழுது, காளிதேவியை மனமார வாழ்த்தின.

காஞ்சியில் எழுந்த கடும்படை, கலிங்கத்தை நோக்கி நடந்தது. மலைபோல் உயர்ந்த மதயானைப் படையும், காற்றினும் கடிது செல்லும் குதிரைப் படையும், காரெனத் திரண்ட தேர்ப்படையும், சிறு கடலெனப் பரந்த காலாட் படையுங் கண்டோர்,

"பார் சிறுத்தலிற் படை பெருத்ததோ!
படை பெருத்தலிற் பார் சிறுத்ததோ!"

என்று வியந்து நின்றார். இவ்வாறு சென்ற சேனை பல பதிகளும் நதிகளும் கடந்து கலிங்கநாட்டை யடைந்தது. கலிங்க மன்னவன் மனங் கலங்காது, வளவன் சேனையோடு போர் புரிய எழுந்தான். போர்க்களத்தில் படைக்கலங்களை எடும் எடும் எடுமெனும் ஓசையும், விடும் விடும் விடுமெனும் ஓசையும், இடையறாது எழுந்தன. மலையொடு மலை மோதினாற் போல, மதயானைகள் மலைந்தன. காரொடு கார் தாக்கினாற் போல, தேரோடு தேர் மோதிற்று. புலியொடு புலி தாக்கினாற் போலப் போர் வீரர்கள் பொருதனர். அரியொடு அரி பொருதாற்போன்று அரசரோடு அரசர் அமர் விளைத்தார்கள். செருக்களம் செங்கள மாயிற்று; குருதி பெருகி ஆறாக ஓடிற்று; வடுவுற்று வீழ்ந்த கரிகளும் பரிகளும் நரிகளுக்கு இரையாயின; வீழ்ப் புண்பட்ட வீரர் உடல்கள் கழுகுக்கும் பருந்துக்கும் விருந்தாயின; வற்றி யுலர்ந்த பேய்கள் பிணங்களை வயிறாரத் தின்று, வளவன் சேனையை வாயார வாழ்த்தின.

இங்ஙனம் கடும்போர் நிகழ்ந்த களத்தில் ஒரு போர்வீரன் மனைவி, அவனறியாது பின்னேபோந்து நின்றாள். மாற்றார் விடு படை, அவ்வீரன் மார்பைத் துளைத்தது. அந்நிலையில் அவன் தலை சாய்ந்தது ; ஆவிசோர்ந்தது. புறத்தே நின்ற மங்கை தள்ளாடிய தலைவன் உடலைத் தாங்கிய வண்ணமாகத் தரையிடைச் சாய்ந்து வீழ்ந்தாள் ; உயிர் துறந்தாள். காதலன் உடல் மண்மகளைச் சேராமற் காத்துத் தன்னுயிரை நீத்து, அவனுயிர் விண்ணுலகை யடைவதன் முன்னமே அதனை வரவேற்பாள் போல், அவ்வுலகடைந் தாள் கற்புடைய மங்கை.

"தரைமகள்தன் கொழுநன்தன் உடலந் தலைவைத்
தாங்காமல் தன்னுடலால் தாங்கி, விண்ணுட்டு
அரமகளிர் அவ்வுயிரைப் புணரா முன்னம்
ஆவியொக்க விடுவாளைக் காண்மின் ! காண்மின் !"

இவ்வாறாக, நெடும்பொழுது நிகழ்ந்த கடும்போரில் கருணைகரன் வெற்றிபெற்றான். கலிங்கநாட்டினின்றும் அளவிறந்த பொருளை வாரிக்கொண்டு, வளவன் சேனைமீண்டது.

மன்னன் ஆணையேற்றுப் போர்க்கோலம் புனைந்து, கலிங்கம் போந்த கணவர் வரக்காணுது, வழிமேல் விழிவைத்துக் காத்திருந் தார் அவர் காதல் மனைவியர். கங்குலும் பகலும் கண்ணுறக்க மின்றி, கணவர் வந்தார் என்று கதவைத் திறப்பார்; அவரைக் காணுது கதவை அடைப்பார். பின்னும் போய்த் திறப்பார் ; மீண்டும் அடைப்பார். இவ்வாறு இடையருது திறந்தும் அடைத்தும் கதவின் குடுமி தேயக் கண்டாரே யன்றிக் காதலர் வரக் கண்டாரல்லர்.

"வருவார் கொழுநரெனத் திறந்தும்
வாரார் கொழுநர் எனஅடைத்தும்
திருகுங் குடுமி விடியளவும்
தேயுங் கபாடம் திறமினே !"

என்றார் கவிஞர்.

இங்ஙனம் காத்திருந்த காதல் மனைவியர் மனங்களிக்கக் கலிங்கப் போரில் வாகைமாலை சூடிய வீரர், ஓகையாற் செருக்கி வந்தடைந்தார். அவரைக் கண்டு மகிழ்ந்த மங்கையர், கதிரவனைக் கண்ட கமலம் போற் களிப்புற்றார். வளவன் புகழ்பாடி, இன்புற்று வாழலுற்றார். கலிங்க நாட்டுச் செல்வத்தைக் கவர்ந்து வந்த கருணைகரன், வளவன் அடிகளில் அதனை வைத்து வணங்கினன். பகையாறிப் பண்புற்ற பேய்களும் மன்னனை மனமார வாழ்த்தின.

"பொன்னித் துறைவனை வாழ்த்தினவே
பொருகைக் கரையனை வாழ்த்தினவே
கன்னிக் கொழுனனை வாழ்த்தினவே
கங்கை மணவனை வாழ்த்தினவே."

வால்டர்

—திரு. ச. த. பத்மாவதி அம்மாள், M. A., L. T.,

கவி என்ற சொல்லைக் கேட்டவுடன் நம்முள் பல கலைகளுக்கும் இருப்பிடமாகிய ஓர் உருவம் தோன்றுகின்றது. இவ்வுலகில் மக்கள் தாம் தாம் ஈடுபட்டுள்ள துறையிலே மூழ்கித் திளைத்து ஆங்காங்குள்ள் அருமை பெருமைகளை உணர்ந்து துய்க்கின்றார்கள்; அந்த இன்பம் பொங்கப் பொங்க அவற்றை அறியாதோருக்கு எடுத்தும் உரைக்கின்றனர்; ஒரு மரநூற் புலவர் இயற்கையிலுள்ள செடி, மரம், பூ, காய் இவற்றின் அமைப்பையும் அழகையும் ஆராய்கின்றார்; அவற்றின் பெருமையை இழுமெனும் மொழியால் புனைந்து உரைக்கின்றார். ஒரு விலங்கு நூற்புலவர் விலங்குகள் முதலியவற்றின் சிறப்பையும் தோற்றத்தையும் மனதைக் கவரும் சொற்கள் கொண்டு விளக்குகின்றார். பூகோள சாத்திரி கல்லிலும் மண்ணிலும் மற்ற உலோகங்களிலும் உள்ள அழகைக் காண்கின்றார். வான சாத்திரியோ ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்கள் கோளங்கள் என்ற இவற்றின் அற்புதங்களைக்கண்டு அவற்றிலே ஈடுபட்டுத் தன்னையே மறந்து நிற்கிறார். சித்திரகாரி தனது திறமையால் தன் சித்திரத்திற்கு உயிரூட்டுகிறார். ஆனால் கவியோ இவ்வாறு ஒரே துறையில் மாத்திரம் தேர்ந்தவரல்ல. இவர் சிறந்த அறிஞர் - உயர்ந்த ஞானி உலகிலுள்ள எல்லாவற்றையும் தன் மனக்கண்ணால் கண்டு களிக்கிறார். தன் ஞானக்கண்ணால் உண்மையினுள்ளே ஊடுருவிச் சென்று இயற்கையின் இயல்பை இனிதே கண்டு இன்பப் பெருக்கால் அதனை எல்லோருக்கும் எடுத்துரைத்து நிலை நாட்டுகிறார். இயற்கை அழகுடன் விளங்குகின்ற பரந்துபட்ட மலைபோன்ற பொருளைச் சின்னஞ்சிறு ஆடி காட்டுமாறு போலச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பொலிவுடனும் எடுத்துக் காட்டும் புலவர் இவரொருவரே. கவியின் மனத்தில் ஓர் உணர்ச்சி பொங்கி வழிகிறது. நீர்ப்பொருள் படிகமாகத் தத்தமக்கேற்ற வடிவத்தோடு திரள்வது போல இந்த உணர்ச்சி அழகிய எண்ணங்களாக மலர்கிறது. அக்கருத்திற்குத் தன் உயிரையும் பலிகொடுத்து ஓர் உண்மைக் கவிதையை இயற்றுகின்றார். இத்தகைய கவிதை ஓவியப் புலவனுக்கு ஒரு பெரிய விருந்தாம்; சித்திரக்காரனுக்கு ஒரு நிகரில்லாக் காட்சியாம்; இசைவாணனுக்கு இனியதொரு பண்ணும்;

ஒவ்வொரு கலைஞனும் தன் கலையின் சிறப்பைக் கவிதையிலே நிழலிட்டு விளங்கக் காண்கின்றான். கவிதை, படிப்போர் நெஞ்சைக் கவருகிறது. ஒருவிதமான ஊக்கத்தைத் தூண்டு கிறது. உவகையை ஊட்டுகிறது. கவிதையே தீராப் பிணிக்கும் ஆராமருந்தாம். ஒற்றுமைக் காட்சியிலே பழகிய உண்மைக் கவிக்கு வகுப்பு வேற்றுமை இல்லை; சமய வேற்றுமை இல்லை. ஆகையால் ஒவ்வொன்றிலும் இயற்கை யின் அழகையும் நுட்பத்தையும் கண்டு மகிழ்கின்றான். மாறு பட்ட ஓசைகளும், அமைக்கின்ற முறையால் இனிய பண் ணோசை யாகின்றன. ஈதன்றியும் ஒரு கவி கவிதையை யாக்கும்போது தான் பிறந்த கால தேச வர்த்தமானத்தை ஓட்டி யாக்கின்றான். ஆனால் அவற்றிற் கடிமை அல்ல சிறந்த கவி. ஒருவருக்கும் அஞ்சாமல் குற்றங்களை எடுத்துக் காட்டுகிறான். அவை அரசனைச் சார்ந்தவையே ஆயினும் மடாதிபதிகளைச் சார்ந்தவையே ஆயினும் மக்களைச் சார்ந்தவையே ஆயினும் அஞ்சாமல் உள்ளது உள்ளபடி உள்ளத்தே உறுத்த உரைத்துப் போவான். தேள் என முன்னிருக்கும் தீங்கைக் கூறினால் தப்ப அன்றோ மக்கள் முயல்வார்கள். இவ்வாறு அவர்களைச் சீர்திருத்துவதே அவனுடைய கடமையாகும். தன் காலத்து மக்கள் முன்னேற்றம் அடைந்து அச்சமின்றி வீரப் பெரு மக்களாக வாழ வற்புறுத்துவதே அவனுடைய சிறந்த நோக்கமாகும். இதற்காகத் தன் உயிரையும் பொருட்படுத்த மாட்டான். காலத்திற்கும் இடத்திற்கும் தக்கபடிப் பாடி வந்தாலும் அவற்றையும் தாண்டிப் பாடுகின்றவனே சிறந்த பாவலன். எந்நாட்டிற்கும் எக்காலத்திற்கும் உரியவனாக உண்மையுலகில் வாழ்கிறான். ஆகவே கவி ஒரு தீர்க்க தரிசியாக விளங்குகின்றான்.

இவ்வாறு மக்கள் நலனைக் கருதியே வாழ்ந்த ஓர் சிறந்த கவிஞர் பதினெட்டாம் நூற்றாண்டில் பிரான்சு தேசத்தில் வாழ்ந்து வந்தார். ஐரோப்பிய நாடுகளிலெல்லாம் இவரை அந்நாளிலேயே சீரும் சிறப்புமாகக் கொண்டாடி வந்தார்கள். இன்றும் கொண்டாடி வருகின்றனர். இத்தகைய கீர்த்தி பெற்றவர் கவி வால்டேர் (Voltaire) ஆவர். அக்காலத்தில் இவர் பெயரைக் கேட்ட அளவில் பொதுமக்களுக்கு மகிழ்ச் சியும் விம்மிதமும் பெருகின. ஆனால் இப்பெருமை யத்தனை யும் கிறிஸ்தவ மடாதிபதிகளுக்கு கோபத்தையே எழுப்பியது. வால்டேரைப் பற்றி நாம் நன்றாக அறியவேண்டுமானால் அவர் இருந்த காலத்தையும் அந்நாளில் வாழ்ந்த மக்கள் நிலையையும் அறியவேண்டும்.

வால்டேர் பிறந்த காலத்தில் (அதாவது பதினேழாம் நூற்றாண்டின் கடைசியில்) ரோமன் காதோலிக் (Roman

Catholic) மதமே பிரான்சு நாட்டை ஆண்டது. என்று சொல்வது மிகையாகாது அப்பொழுது பிரான்சு தேசம் முழு உரிமைபெற்ற அரசனது ஆளுகைக்கு உட்பட்டு இருந்தது. அது குடியரசாக இன்னும் மாறவில்லை. ஆனால் அந்தக் காலத்தில் ஒவ்வொரு பிரபுவும், ஒவ்வொரு கிறிஸ்துவத் துறவியும் நேசப் புரட்சிக்குரிய விதையைத் தங்களை அறியாமலே பொதுமக்களின் மனத்தில் விதைத்துக் கொண்டு வந்தார்கள். நேர் நின்று சுவரிலே பந்தை எறிந்தால் நம்மீது தாக்கும். அவர்களுடைய அட்டூழியங்கள் அவர்கள் தலைமேலேயே வந்து விடிந்தன. அக்காலத்தில் பிரான்சு நாட்டு அரசன் லூயி (Louis XV), உரிமைக் கேற்ற ஆற்றல் அற்றவன். எங்கும் ஒரே ஊழல்; மடாதிபதிகளோ காமுகர்கள்; நியாயாதிபதிகளோ கொடூரமான வர்கள்; அரண்மனையோ வேசியர் வீடு; பிரபுக்களோ ஆணவம் பிடித்தவர்கள்; இரக்கமற்றவர்கள்; மிகக் கொடியோர். இவர்கள் அனைவரும் பொதுமக்களை மிருகங் களைக் காட்டிலும் இழிவாக நடத்தினர்கள்.

அக்காலத்தில் அஞ்ஞான வைராக்கியமும் மூடபக்தியுமே பொதுமக்களின் உள்ளத்தைக் கவர்ந்தன. அற்புதங்களை மக்கள் நம்பி வந்தனர். நோயாளிகள் வைத்தியரிடம் போவதில்லை. கிறிஸ்துவத் துறவிகளே இவர்களுடைய வைத்தியராவர். ஆண்டவனுக்கு நிவேதனம் செய்த காகிதமடைத்த தாயத்துக்களே நோயாளிகளுக்கு அவர்க ளளித்த மருந்தாகும். நோயாளிகளுக்கு இவற்றைக் கட்டினவுடனே நோய் பறந்து போகும் என்பது பொது மக்களின் உறுதி. விரைவிலே நோய் பறந்து போகுமோ; பெட்டியிலுள்ள பணம் மடத்துக்குப் பறந்து போகுமோ என்பதுதான் நமக்குத் தெரியாது. இத்தகைய காப்புக்களைத் தொட்டிலில் கட்டி வைத்தால் பேயும் பிசாசும் குழந்தைக ளிடம் அணுகாவாம். மச்சுக்குள் வைத்தால் எலிகள் நெல்லைத் தின்னுவாம். வயலில் புதைத்தால் நல்ல அறுவடை ஆகுமாம். இவற்றிற் கெல்லாம் காரணர் யார்? மடங்களும் மடாதிபதிகளுமே. எல்லா நோய்களையும் கடவுளின் நாமத்தைக் கொண்டே தீர்க்கவேண்டும் என்று மக்களை ஏமாற்றிப் பணம் பறித்து வந்தார்கள். கோயிலில் இருக்கும் புண்ணிய தீர்த்தத்தைத் தெளித்தால் போதுமாம். வானுலகடைந்த தெய்வ பக்தர்கள் சிலர் சில சில நோயைத் தீர்க்கவல்லவர்களாம். ஸெயின்ட்வாலன்டீன் (St. Valentine) காக்காய் வலியோட்டும் தெய்வம்; ஸெயின்ட் ஜெர்வாசியஸ் (St. Gervasius) வாத வைத்தியர்; ஸெயின்ட் மிக்கேல் (St. Michael) என்பவர் தீராப் புண்ணைத் தீர்க்கும் பெரும் வைத்தியர்; ஸெயின்ட் ஜூடாஸ் (St. Judas) இருமலுக்கும்

நீர்க்கோவைக்கும் மருத்துவத் தேவர்; ஸெயின்ட் ஓவிடஸ் (St. Ovidus) செவிடு தீர்க்கும் தெய்வம்; ஸெயின்ட் ஸெபாஸ்டியன் (St. Sebastian) பாம்பு கடி தீர்ப்பவர்; ஸெயின்ட் அப்பலோனியா (St. Apollonia) பல் மருத்துவர், ஸெயின்ட் க்ளாரா (St. Clara) கண் வைத்தியர்; ஸெயின்ட் ஹ்யூபர்ட் (St. Hubert) நாய்க்கடி தீர்ப்பவர்.

மக்கள் என்ன செய்வார்கள்! அவர்களுடைய உடம்போ அரசர் பெருமானுடைய உடைமை; ஆன்மாவோ கிறிஸ்தவத் துறவிப் பெருமக்களின் உடைமை. இருவரும் இவ்வாறு இவர்களைத் துண்டிட்டுக் கைப்பற்றி விழுங்கி ஆண்டார்கள். அரசர் சட்டங்களை ஏற்படுத்தினர்; துறவியோ மதாசாரங்களையும் ஒழுக்க வழக்கங்களையும் ஏற்படுத்தினர். அரசர் உலக வரி விதித்தார்; துறவி, மக்களிடத்தில் பயத்தை ஊட்டி, தாம் விரும்பியவற்றையே தர்மம் என்று அவர்கள் நம்பிச் செய்து வரும்படித் தூண்டி இவ்வாறு வான வரி விதித்தார். இருவரும் தங்கள் தங்கள் முறையில் மக்களைக் கொள்ளை அடித்து வந்தனர். அந்தோ! பொது மக்கள் இவ்வாறு இவ்வுலகச் சுமையையும் அவ்வுலகச் சுமையையும் முணுமுணுக்காமலே சுமந்து வந்தார்கள். ஏன்? இருவரும் கடவுளிடமிருந்து அதிகாரம் பெற்றவர்கள் என நம்பினர். ஆதலின் எதிர்த்துப் பேசவே கூடாதாம்; பேசினுல் பெருந் துரோகி ஆவார்களாம்; எதிர்த்தாலோ மதத்தை பிடித்து விட்டது என்று அவர்களை வெருட்டி யோட்டும் அடக்குமுறை தாண்டவமாடிற்று. எதிர்ப்போர் பாஸ்டில் (Bastille) என்ற கொடுஞ் சிறையில் கால முழுதும் கழிக்கவேண்டி வரும். பல வேதனைகளுக்கும் ஆளாகவேண்டும். இவ்வாறு எங்கும் கொடுமைகளும் அட்டூழியங்களும் நடமாடி வந்தன.

இப்படிப்பட்ட காலத்தில், இத்தகைய நிலையில் 1694 - வருஷம் நவம்பர் மாதம் 21-ம் தேதி வால்டேர் (Francois Marie Arouet de Voltaire) பிறந்தார். குழந்தை பிறந்ததும் இதுவும் உயிரோடிருக்குமா என்று பெற்றோரே ஐயுற்றனர். அவ்வாறு இருந்தது அதன் தேகநிலை. குழந்தையின் ஆன்மாவைக் காப்பாற்ற அதற்கு வெகு சீக்கிரத்தில் அவர்கள் ஞானஸ்நானம் பண்ணி வைத்தார்கள். இப்படிச் செய்யாத முன்பு குழந்தை இறந்து விட்டிருந்தால் அதன் ஆன்மா மீளா நரகத்திலே மூழ்கும் என்பது அவர்கள் கொள்கை. அந்தச் சமயத்தில் இக்குழந்தை அநேக வருஷங்கள் உயிரோடிருந்து சிறந்த கவியாகவும், உலகம் போற்றும் அறிஞராகவும் விளங்கும் என்று கனவிலும் நினைக்கவில்லை.

குழந்தைக்குப் பெற்றோர் வைத்த பெயர் ப்ரான்சுவா மாரி அரூவே (Francois Marie. Arouet) என்பதாம். பிற்காலத்தில் இவரை வால்டேர் என்று அழைத்தனர். இவருடைய தாய், மார்கரிட் தோமார்ட் (Marguerite d' aumard) என்பவர். இவருக்கு ஏழு வயதாகும்பொழுது இறந்து விட்டார். ஆனால் தாயாரானவள் தன் பிள்ளைக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செம்மையாகச் செய்து வைத்தது பிற்காலத்தில் வால்டேருக்கு அனுகூலமாயிற்று. பத்து வயதானதும் வால்டேர் லூயிலு க்ராண்ட் (Loius Le Grand) என்னும் பள்ளிக்கூடத்திற்குச்சென்றார். இங்கு வால்டேர் பதினேழு வயது வரையிலும் கல்வி கற்றார். ஆனால் அவர் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்டது சிறிது க்ரீக்கும் லத்தீனும் தவிர வேறொன்றுமில்லை. பதினேழாவது வயதில் வால்டேர் இலக்கியத் துறையில் ஈடுபடத் தீர்மானித்தார். ஆனால் இவர் தந்தையோ நியாய சரித்திரம் படிக்கும்படியாக இவரை வற்புறுத்திக் கட்டளை யிட்டனர். 1713-ம் வருஷம் வால்டேர் பிரான்சு நாட்டு அரசியல் துறையில் நுழைந்தார். அங்கு ஒரு காதல் காரணமாகத் தந்தையார் கோபத்திற்கு உள்ளாகிக் கடைசியில் சட்டம் பயில வந்தார். ஆனால் வால்டேருக்கு இதில் விருப்பமே இல்லை; ஆதலால் ஊக்கமும் எழவில்லை. முழு நேரமும் கவிதை எழுதுவதிலேயே அவருடைய மனம் இலயித்தது. அவருடைய கற்பனைக்கு நிகரே இல்லை. அவருடைய நூல்களிலுள்ள கருத்துக்கள் அக்காலத்து அரசாங்கக் கொள்கைகளுக்கும் மடங்களுடைய முறை களுக்கும் மாறுனவை; மக்களுடைய மனத்திலே சுதந்தரப் போராட்டத்தை எழுப்பக்கூடியவை; ஆகையால் பலமுறை அவர் தன் காலத்தை பாஸ்டில் (Bastille) என்னும் சிறைச் சாலையிலேயே கழிக்கவேண்டி நேர்ந்தது. இதன்றியும் சிலபோது தன் தாய்நாட்டை விட்டு வெளியேறும்படியாக அரசர் அவரை நாடு கடத்தினர்.

தேசப் பிரஷ்டனாக வெளியேறி, இருபத்தேழு வருஷம் சென்று மீண்டும் இவர் பாரிஸ் நகரத்தை அடைந்தார். அப்போது அவருடைய இறுதிக்காலம் நெருங்கிவந்துகொண் டிருந்தது. இருந்தாலும் வெற்றிக் கொடியோடேயே அவர் திரும்பினர். லாகாடெமி பிரான்சேய்ஸ் (L' academie Francaise) என்ற பிரஞ்சுக்கழகம் அவரை அரசரையும் பாராட்டாத முறையில் வரவேற்றது. ஐரீன் (Irene) என்னும் நாடகம் நடைபெற்றது. நாடகக் கொட்டகையிலேயே வால்டேருக்கு வெற்றிமாலையைச் சூட்டிப் பூமாரி பெய்தனர். மக்களுவந்தளித்த வரவேற்பாலும் வாயார-மனமாரக் கூறிய வாழ்த்தாலும்

அவர் உள்ளம் பூரித்தது. வயது ஏற ஏற உடல் உரம் குன்றி வந்தாலும் கவி இயற்றுவது மட்டும் குறையவில்லை. இவ்வாறு கடைசி வரையிலும் அறிவு பிறழாமல் வாழ்ந்து 1778-ம் வருஷம் மே மாதம் 30-ம் தேதி 84-வது வயதில் காலஞ் சென்றார்.

வால்டேர் நாகரிக உலகத்தில் முதன்மையான இடத்திலே விளங்கினர். ப்ருஷியா (Prussia) தேசத்து அரசராகிய ப்ரெடரிக் (Frederic) இவரை பெர்லினுக்கு (Berlin) அழைத்துச் சிலகாலம் தன்னிடத்தே விருந்தாளி யாக இருக்குமாறு வேண்டிக்கொண்டார். ருஷியா Russia தேசத்துப் பேர் அரசி (Catherine) இவரைச் சிறப்பாக எண்ணி மதித்துப் பாராட்டி வந்தார். இங்கிலாந்திலும் இவருக்குப் பல நண்பர்கள் உண்டு. இத்தகைய சிறப்பிற்குக் காரணம் என்ன? அவருடைய எழுத்துக்களே.

பிரான்சு நாட்டுக் கவிகள் வரிசையில் முதலிடம் பெற்றுச் சிறந்து திகழ்பவர் இவரே. நூலாசிரியர் உலகத்திலே தலைவராக விளங்குகிறார். அறிவிற்கே ஒரு சிறப்புரிமை உண்டு; அதுவே கடவுட்டன்மை வாய்ந்த பேருரிமையாம். அவ்வுரிமை வாழ்வு வாய்ந்த இக்கவியரசர் பெருமானுர் புரவியரசர் பெருமானுரினும் பலமடங்கு மிக உயர ஓங்கி வாழ்ந்தார். இதன் காரணமாக அரசும் கத்தோலிக் மதமும் வால்டேரும் ப்ரான்சு நாட்டு மூன்று பெருஞ் சக்திகள் என்று, அந்நாளைய மக்களாலே பெரும் பொருள்களோடு ஒன்றுக வைத்தெண்ணும் பெருமை பெற்றார். அரசனுடைய விரோதியா யிருந்தபோதிலும் இராஜ சமுகம் வால்டேருககு ஒரு கெடுதியும் செய்ய முடியாமற் போயிற்று. கத்தோலிக் துறவிகள் இவரை வெறுத்து வந்தாலும் ஏதும் செய்ய முடியவில்லை. இவர்மேல் தம் வஞ்சத்தைத் தீர்த்துக்கொள்ளச் சமயம் பார்த்திருந்தனர்; ஆனல் சமயம் வாய்க்கவே இல்லை. இவருடைய சிறப்பு பொது மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. அரசாங்கத்திற்கும் மடத்திற்கும் விரோதமாக இவர் ப்ரான்சு நாட்டின் திருவுருவாகவே விளங்கினர்.

வால்டேர் ப்ரான்சு பாஷைக்கு அகத்தியராக அமைந் தார் எனலாம். அம்மொழியில் வரும் வினைப்பாகு பாடுகள், காலவேறுபாடுகள், வேற்றுமை யுருபுகள் முதலிய இலக் கணக் குறிப்புகள் எல்லாம் குயவன் கையிலுள்ள மண்போல் இவர் எண்ணியபடி எல்லாம் உருப்பெற்று வந்தன. ஒவ் வொரு எண்ணத்தையும், ஒவ்வொரு கற்பனையையும் கட் புலனுக்கிக் காட்டி திட்பநுட்பஞ் செறிந்த திப்பிய மொழி

களின் கோவைகளால் ஆற்றொழுக்காய் வியக்கத்தக்கமுறையில் அமைப்பார்; நயமாகச் சொல்லுவதிலும் வல்லவர்; வசை பாடுவதிலும் சிறந்தவர். இவற்றை ஒன்றோடொன்று இனிதே இயைய வைப்பதில் ஒப்புயர்வற்ற தம் திறமையால் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டவர். ஒவ்வொரு கொள்கையையும், ஒவ்வொரு எண்ணத்தையும், ஒவ்வொரு ஆராய்ச்சியையும், ஒவ்வொரு செய்தியையும் மிகமிக எளிதாக விளக்கும் ஆற்றல் படைத்தவர். பழைய சொற்களில் புதிய பொருளைப் பொதிந்து வைத்து இந்திர ஜாலம் காட்டவல்லவர். மொழித்திறத்தின் முட்டறுத்த முதுமை நிலையை ஒவ்வோர் எழுத்தும் விளக்குகின்றது. அவருடைய கவிதை மனதைக் கவரத்தக்கதும், உள்ளத்தை உருகச் செய்வதுமாகும். அழுகையும், சிரிப்பும், அறிவும், உணர்ச்சியும் அவர் எழுத்திலெங்கும் சுவையாகத் ததும்பி வழிகின்றன. விரல்களின் நயத்தகு திறத்தால் மிகவும் இனிக்கும் இசையினை எழுப்பும் யாழ்ப்பாணரைப்போல வால்டேர் தன் கவிதையில் எந்தெந்த இடத்தில் எப்பேர்ப்பட்ட சொற்கள் வந்தால் மக்கள் உள்ளத்தைக் கவருமோ அத்தகைய சொற்களைத் தகுந்த இடத்தில் தக்க வகையிலே அமைத்து நம்மைக் களிக்கச் செய்கின்றார்.

வால்டேர் தன் நளின வார்த்தைகளாலும் மந்தஹாஸத்தாலும் இயற்கைத் தத்துவத்தை எளிதே உணர்த்துகின்றார். தன் காலத்திலுள்ள அஞ்ஞானத்தைப் பரிகாச பாணங்களால் வீழ்த்தினார். இப்பாணங்கள் அவருடைய மனோகற்பனையால் விரைந்து பறந்து தாக்குவன; விவேகத்தினால் கூர்மையடைந்தவை; உண்மையால் நஞ்சேறியவை; இவ்வாறமைந்த இவை தாக்கவேண்டிய குறியை எப்பொழுதும் தவறாமல் தாக்கின. நகைச்சுவை பட எழுதுவதிலே வால்டேர் மிகவும் கைதேர்ந்தவர். பொய்யினைப் பொறுதவர்; முடியாதவற்றை நம்பும் மூடபக்தியை வெறுப்பவர்; புராணங்களையும், அற்புதங்களையும் போலித் துறவிகளின் பொய் ஒழுக்கங்களையும், வஞ்சகத்தையும், பொய்யையும் கண்டு நகையாடுபவர். இப்படி இருந்தும் இயற்கைக் கடவுளின் இனிய அடியவராவர். இயற்கையிலுள்ள அழகைக் கண்டு களிக்கும் பேறுபெற்றவர். பிறர்க்கு அக்கடவுட் டன்மையையும் அழகினையும் காட்டவல்ல சதுரப்பாடு சான்றவர்; ஆம்.

அக் காலத்தில் வால்டேர் ஓர் தலைசிறந்த கவியாகவும் தத்துவ சாஸ்திரியாகவும் விளங்கினார். அளவற்ற ஊக்கமும், கவித்திறமும், நகைச் சுவையும் அவருடைய சிறப்பியல்புகளாம். அவருடைய கவிகளில்,

இழுமென் மொழியால் விழுமியது பயப்பதோடு பொருளாழம் கொண்டு விளங்கும் சிறு சொற் கோவைகளே சிறந்தனவாம். புலவர்களில் மிகவும் வியக்கத் தக்கவரும் வால்டேரே என்று சொல்வது மிகையாகாது. அவருடைய கவித்திறமைக்கு ஈடானவர் ஒருவருமில்லை என்றே சொல்லலாம்.

வால்டேருடைய சிறப்பைப்பற்றி கெத்தே (Goethe) என்னும் ஜர்மன் பெரும் பாவாணர், "பொருளாழம் தெய்வப் புலமை, மணக்காட்சி, சுவையுணர்வு, ஆராய்ச்சி, உணர்ச்சி, மெய்யறிவு, உயர்நிலை, தானே இயற்றும் தனிப்பட்ட தன்னுணர்வு, இயற்கை நிலை, அறிவு நிலை, புனைந்துரை நேர்மை, எளிமை, இடத்திற்குத் தக்க உருப்படும் இளக்கம் நுட்பம், செய்திறம், கொழுமை, பலவகையாய் அமைந்த பன்மை யழகு, ஊற்றெனச் சுரக்கும் மாரூச் செழுமை, குளிர்ச்சி, இந்திரஜாலம், மனக்கவர்ச்சி, சாயல், ஆற்றல் பருந்தின் வீழ்வென அனைத்தையும் ஒருங்கு காணும் நுண்ணிய நோக்கம்; பரந்துபட்ட பேரறிவு; வளப்பமான் படிப்பினைகள், சீரிய போக்கு, நாகரிகம், இனிமை, மென்மை, தவறுப் பெருநிலை. தூய்மை, தெளிவு, உரைவளம், ஓத்திசை, மின்னெனப் பொலியும் விளக்கம், தங்கு தடையற்ற ஓட்டம், பொலிவு, கழிவிரக்கம், மேம்பாடு, முழுமைக் காட்சி, குறைவிலா நிறைவு"—இவை வேண்டு மானால், வால்டேரிடம் காணுங்கள்" என்று புகழ்கின்றார்.

கிறிஸ்துவும் புது உலகமும்

—ரெவரெண்ட் ஆ. அருள்தங்கையா.

புத்துலக அமைப்புப் பற்றிய ஆராய்ச்சி பல இடங்களில் நடந்து வருகிறது. இக்கால உலக நிலையை நோக்கும் அறிஞர் இந்நிலை மாறுதலுறல் வேண்டுமென்று கருதுகின்றனர். பிணக்கும் போரும் உள்ள உலகம் மாய்தல் வேண்டும்; அன்பும் அமைதியும் நிலவும் உலகம் தோன்றுதல் வேண்டும் என்று விரும்பாத அன்பர் இலர். உலகப் போர் ஓய்ந்த பின்னர் உலகியல் எவ்வாறு நடைபெறுதல் வேண்டுமென்பதுபற்றி அரசியல் அறிஞரும் பிறரும் திட்டங்கோலத் தொடங்கி விட்டனர். 'புத்துலக அமைப்பு' என்பது இப்புதுக் காலத்தில் தோன்றிய புதுக் கருத்தா? இல்லையேல், முற்காலத்தார் உள்ளத்திலும் இவ்வெண்ணம் பிறந்த துண்டா? முற்காலத்துப் பெரியாரின் வாழ்க்கை வரலாறுகளை நோக்குவோர் புத்துலக நினைவு புதுக்கால நினைவன்று எனக் காண்பர். மேனாட்டிலும் கீழ்நாட்டிலும் வெவ்வேறு காலங்களில் பிறந்த அறிஞரும், பெரியோரும், அறவோரும், கவிஞரும், சமயத் தலைவரும் புத்துலகக் கனவு கண்டோரேயாவர். ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டு கட்கு முன் ஆசியாக் கண்டத்திலுள்ள பலஸ்தீன நாட்டில் அருளுடல் தாங்கிய கிறிஸ்து பெருமானும், புத்துலகம் தோன்றுதல் வேண்டும் என்று கருதி அதுபற்றிய திட்டங்களை வகுத்தனர். அவர் கண்ட புது உலகம் யாது என்பதை இக் கட்டுரையில் சுருக்கமாகச் சொல்லக் கருதுகிறேன்.

கிறிஸ்து கண்ட புத்துலகின் பெயர்

'கடவுள் ராஜ்யம்' 'பரலோக ராஜ்யம்' என்னும் சொற்களால் கிறிஸ்து தாம் தோற்றுவித்த புத்துலகத்தைக் குறித்தார். அதுவே அவர் வாழ்ந்த உலகம். அவர் தம்முடைய அடியார்களும் அவ்வுலகத்தில் வாழவேண்டுமென்று விரும்பினர். அவ்வுலகம் கடவுளாட்சி நிலவும் உலகமாதலின், அதனைக் 'கடவுள் ராஜ்யம்' என்றார். அஃது இவ்வுலக நெறியல்லாத புது முறைபற்றி நிகழும் உலகமாதலின், அதனைப் 'பரலோகராஜ்யம்' என்றார். கடவுளாட்சியாகிய வானரசை நிலைநாட்டுவதையே அவர் தமது

வாழ்க்கை நோக்கமாகக் கொண்டார். அப்புதிய ஆட்சியை எவ்வாறு நிலைநாட்டுவது? படை வலிமை கொண்டு பல நாடுகளை வென்று தம் ஆட்சியை நிலைநாட்டுதல் உலக மன்னர்க்கு வழக்கம். கிறிஸ்து அம்முறையை ஏற்றுக் கொள்ளவில்லை. அவ்வுலகியல் முறையை ஏற்றுக்கொள்ளு மாறு அவர் சோதிக்கப்பட்டார். அவரோ போர் முறை வேண்டாமென்று தள்ளிவிட்டார். கடவுளாட்சியை ஏற்றுக் கொள்ளுமாறு மக்களை எம்முறை பற்றியும் அவர் வற்புறுத்தக் கருதினாரில்லை. உலகில் கடவுளாட்சி நிலவினால் உலகம் நன்னிலை யெய்தும். ஆயினும் மக்களைக் கட்டாயப் படுத்துவது நன்றன்று. அவர்களே மனமுவந்து அவ் வாட்சியை ஏற்றுக்கொள்ளல் வேண்டும். அவர்கள் தாங்கள் இருக்கின்ற நிலையில் அவ்வாட்சியை ஏற்றுக்கொள்ள முடியாது. அவர்கள் நிலை மாறுதல் வேண்டும். ஏனெனில் கடவுளாட்சி என்பது உலகுக்குப் புது ஆட்சி. ஆதலின், அதனை ஒப்புக்கொள்வோர் புது நிலையடைதல் வேண்டும். அவர்களது புறத்தோற்றம் மாறுவதால் யாதொரு பயனும் இல்லை. அவர்களது உள்ளம் மாறுதல் வேண்டும்.

புது உலகமும் புது மனமும்

கிறிஸ்து, "மனந்திரும்புங்கள், வானரசு வந்தாயிற்று" என்று மக்களுக்குச் சொன்னார். மனந் திரும்புவோர்தான் கடவுள் ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாக முடியும். மனம் மாறினால் பேச்சு மாறும், செயல் மாறும். மனம் புது மன மாதல் வேண்டும். பழைய மனத்தினர் புதிய உலகில் வாழ முடியாது. கிறிஸ்து கண்ட புது உலகுக்குக் கடவுளே அரசர். கடவுளையே அரசராகக் கொண்டோரே அவ்வுலகில் வாழ்வோர். அவ்வாறு கடவுளையே தங்களுக்கு அரசராகக் கொள்வோர் தாங்கள் செய்த தீச்செயல்களுக்காக வருந்தி, பிழை பொறுக்க ஆண்டவனை வேண்டிக் கொள்ளல் வேண்டும். பழைய வாழ்க்கையை அவர்கள் முற்றும் ஒழித்து விட்டுப் புது முறையில் வாழத் தீர்மானித்தல் வேண்டும். அவர்கள் மனம் திரும்பி, மனம் மாறி, மனம் திருந்தல் வேண்டும். இவ்வாறு மனந் திரும்பி யவர்களே கடவுள் ராஜ்யத்தின் குடிகள். அவர்கள் புத்துலகில் வாழ்கின்றவர்களாவர்.

கடவுள் நம்பிக்கையே புத்துலகத்துக்கு அடிப்படை

கடவுளைப் புறக்கணித்து விட்டு, புதிய உலகமொன்றை ஆக்குமாறு கிறிஸ்து கருதவில்லை. கடவுள் நம்பிக்கையால் புத்துலகம் கெட்டுவிடுமென்று அவர் நினைக்கவில்லை. கடவுள்

நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டே அவர் புத்துலகை அமைக்கக் கருதினர். உலகிலுள்ள கேடுகளுக் கெல்லாம் காரணம் மனிதர் கடவுளைத் தள்ளிவிட்டதே யாகும். மக்கள் கடவுளாட்சியைப் புறக்கணித்து மனம் போல வாழத் தொடங்கி விட்டனர்; ஆதலால் உலகை இருள் கவிந்துவிட்டது. எனவே, மக்கள் கடவுளுணர்வு பெற்று, தங்கள் தீச்செயல்களை நினைத்து வருந்தி, கடவுள் திருவடிகளைச் சேர்ந்து, அவருக்கு அடிமை பூண்டொழுகு வார்களாயின் புத்துலகம் காட்சியளிக்கும்.

கிறிஸ்து தமது தொண்டு நிலைபற்றி அறிவித்தவை

கிறிஸ்து தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்தூரிலுள்ள கோயிலில் தமது வாழ்க்கைத் தொண்டு இன்ன தென்பதைப் பழைய ஏற்பாட்டிலுள்ள பகுதியொன்றைப் படித்துக் காட்டிச் சிறிது விளக்கினர். அதில் அவர் கண்ட புத்துல கத்தின் நிலைமை ஒருவாறு உணர்த்தப்பட்டுள்ளது. "வறி யோருக்கு நற்செய்தி உரைக்கக் கடவுள் என்னை ஏற்படுத் தினர்; சிறைப்பட்டோருக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் தெரிவிக்கவும், ஒடுக்கப்பட்டோரை விடுதலை யாக்கவும், ஆண்டவனது அருள் விளங்கும் காலத்தை அறிவிக்கவும் அவர் என்னை அனுப்பினர்" என்று கிறிஸ்து மொழிந்தருளினர். வறியோருக்கு நற்செய்தி, சிறைப் பட்டோருக்கு விடுதலை, குருடருக்குப் பார்வை, ஒடுக்கப் பட்டோருக்கு விடுதலை, அருட்காலத் தோற்றம். கிறிஸ்து கண்ட புத்துலகம் கடவுள் அருள் விளங்கும் உலகம். அவ்வுலகில் வறியோர் தம் வருத்தந் தீர்ந்து மகிழ்வர்; சிறைப்பட்டோர் விடுதலையாகிக் களிப்பர்; குருடர் கண் பெற்றுக் குதிப்பர்; ஒடுக்கப்பட்டோர் விடுதலை யடைந்து இன்புறுவர். கிறிஸ்து கண்ட புத்துலகத்தில் ஆண்டவன் அருள் விளங்கும்; வறுமையும் சிறுமையும் தலைகாட்டா; பார்வையின்மை போன்ற குறைபாடுகளும் நோய்களும் காணப்படா; ஒடுக்கப்பட்டாரையும் தாழ்த்தப்பட்டாரை யும் காணமுடியாது.

அப் புத்துலகம் தூயோர் வாழும் அருளுலகம்

அஃது தூய்மை நிலவும் அருளுலகம். அத்தகைய அருளுலகம் தோன்ற வேண்டுமாயின், முன்னர்க் கூறப் பட்டுள்ளவாறு மக்கள் முதலில் மனந்திரும்ப வேண்டும். மனந் திரும்பிக் குழந்தைகளைப் போன்றவர்களாதல் வேண்டும். ஒவ்வொருவரும் தனித்தனியே கடவுளிடம் திரும்பவேண்டும். ஒவ்வொருவரும் தனித்தனியே கடவு ளோடு தொடர்பு கொள்ளல் வேண்டும். கடவுள் முற்றும்

தூயர்; மனிதர் தீய இயல்புள்ளவர்கள், பாவிகள். தூய கடவுளுக்கும் தீய மக்களுக்கும் தொடர்பு ஏற்படவேண்டுமாயின் தீய மக்கள் மனந்திரும்ப வேண்டும். மனந்திரும்புவோரின் பாவங்களைக் கடவுள் மனமுவந்து மன்னிக்கிறார். மன்னிக்கப்பட்ட மக்கள் தூய கடவுளோடு உறவு பூண்டு தூயராய் வாழலாம். தனித்தனியே ஒவ்வொருவரும் இவ்வாறு தூய வாழ்க்கை நடத்தல் வேண்டும். உளத் தூய்மை யுள்ளோரே கடவுட் காட்சி பெறுவர் என்பது கிறிஸ்து பெருமான் திருவாக்கு. தூய வாழ்க்கை நடத்துவோரே அருளாளராய் விளங்க முடியும். கிறிஸ்து கண்ட புத்துலகில் தூய மக்கள் வாழ்வர். அது தூய்மை மணங் கமழும் அருளாளர் வாழுகின்ற உலகம்.

கிறிஸ்து கண்ட உலகம் அன்புலகம்

கடவுள், அன்பு நிறைந்த தந்தை. அன்பே அவரது முக்கிய இயல்பு. மனிதர் யாவரும் அவருடைய பிள்ளைகள். அன்பு நிறைந்த தந்தையாகிய கடவுளின் மக்கள் ஒருவரிடத்திலொருவர் அன்புள்ளோராயிருத்தல் வேண்டும். மனிதர் எந்நிறத்தராயினும், எந்நாட்டாராயினும், எக்குலத்தாராயினும் யாவரும் இறைவன் மக்களாதலின் உடன் பிறப்பாளரேயாவர். ஆதலின், பகைமையும், பொறுமையும் போரும் புத்துலகில் தலைகாட்டா. அன்பற்ற உலகில்தான் மனிதர் வாளெடுத்து வாளால் சாவர். கிறிஸ்துவின் உயிரைக் காத்தற்பொருட்டு அவர் அடியாராகிய பேதுரு வாளைப் பயன்படுத்தத் தொடங்கினர். கிறிஸ்து, "வாளை உறையில் செருகு; வாளெடுப்போர் வாளால் சாவர்" என்று மொழிந்தருளினர். மக்கள் தம் பகைவரிடத்தும் அன்புகூர்தல் வேண்டும் என்பது கிறிஸ்து பெருமான் அறவுரை. பகைவருக்காகவும் கடவுளை வேண்டிக்கொள்ளல் வேண்டும் என்று அவர் சொன்னார். சிலுவையில் தம்மைப் பகைவர் அறைந்து கொண்டிருந்தபோது அவர் கடவுளை நோக்கி, "தந்தாய், இவர்களை மன்னிக்க, இவர்கள் தாங்கள் செய்வது யாதென்று அறியார்கள்" என்று வேண்டுதல் செய்தார். அன்பின்தன்மை இன்னதென்பதை அவர்தம் வாழ்க்கையால் காட்டினர். அவரது சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடு இருந்ததில்லை. ஒருவன் தன் நண்பனுக்காகத் தன் உயிரையும் கொடுத்தலே தலையாய அன்பு என்று அவர் சொன்னார். அவ்வாறே அவர் மற்றவர்கள் பொருட்டுத் தம் உயிரையும் கொடுத்தார். "மற்றவர்கள் உங்களுக்கு யாது செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அதனையே நீங்களும் மற்றவர்களுக்குச் செய்யுங்கள்" என்னும் பொன்னுரையையும் அவர் திருவாய் மலர்ந்தருளினர். உலகிலுள்ளார்

யாவரும் இவ்வருளுரையைக் கடைப்பிடித் தொழுகினுல் உலகில் துன்பம் இருக்க முடியுமோ? பகைமையும் போரும் ஏற்படுமோ? மக்கள் ஒருவரையொருவர் வஞ்சிப்பார்களோ? கிறிஸ்து பெருமான் பொன்னுரையைக் கடைப்பிடித்தால் உலகமெங்கும் அன்பு நிலவும்; மக்கள் உள்ளத்தில் மகிழ்ச்சி ததும்பி நிற்கும்; ஒவ்வொருவர் வாயினின்றும் அன்புரைகளே பிறக்கும். அத்தகைய அன்புலகத்தைப்பற்றி நினைப்பதே நமக்குப் பேரின்பம் விளைவிக்கின்றது. கிறிஸ்து பெருமான் கண்ட புத்துலகம் அன்புலகமேயாகும்.

புத்துலகம் மகிழ்ச்சி நிறைந்த உலகம்

மக்கள் ஒருவரிடத்திலொருவர் உண்மை அன்புள்ளோராய் ஒழுகும்போது, இன்று நாம் காணும் பசியும் பட்டினியும் சிறுமையும் உலகில் காணப்படா. கிறிஸ்துவின் அன்பு நெறிக் கேற்ப, அரசியல் பொருளியல் முதலியவற்றையும், வேறு வாழ்க்கைத் துறைகள் யாவற்றையும் அமைத்துக்கொண்டால் ஏழ்மை என்பது இல்லாதொழியும்; கொடுமை என்பதுபற்றிக் கேள்விப்பட முடியாது; பட்டினி என்பது பறந்து போகும்; எங்கும் மகிழ்ச்சியே காணப்படும்; அன்புலகில் துன்பம் தலைகாட்டாது. அஃது இன்ப உலகமாக விளங்கும். பெருஞ் செல்வன் ஒருவன் கிறிஸ்துவிடம் வந்து, "நான் உமக்கு அடியானுகி உம்மோடு வருவேன்" என்று சொன்னன். அதற்கு அவர், "நீ உன் உடமைகளையெல்லாம் விற்று ஏழைகளுக்குக் கொடுத்துவிடு; அதன்பின் என் பின்னே வா" என்று உரைத்தார். உலகில் பலர் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் இல்லாதவர்களாயிருக்கும்போது சிலர்மட்டும் செல்வர்களாயிருந்து குறைவின்றி வாழ்தல் கிறிஸ்துவின் அன்பு நெறிக்குப் பொருந்தாததாகும். கிறிஸ்துபெருமானின் அறவுரைகளைக் கேட்டற்பொருட்டுப் பெருந்திரளான மக்கள் வந்திருந்தனர். அவர்களிடம் உண்பதற்கு ஒன்றும் இல்லை. அவர் தம்முடைய அடியார்களை நோக்கி, "இவர்களுக்காகப் பரிதபிக்கிறேன்; இவர்கள் மூன்று நாளாய்ச் சாப்பிட ஒன்றுமில்லாதிருக்கிறார்கள்; இவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிட்டால் வழியில் சோர்ந்து போவார்களே" என்று சொன்னர். அவர் இவ்வாறு அவர்கள் பசி நோக்கி வருந்தியதுமன்றி, தம்முடைய அடியார்களிடமிருந்த ஏழு அப்பங்களைப் பெற்று, கடவுளுக்கு நன்றி சொல்லி, அவற்றைப் பிட்டுக்கொடுத்தார். ஏறக்குறைய ஏழாயிரம் மக்கள் நிறைவாய் உண்டார்கள். ஏழு கூடை அப்பம் மீதியாயிற்று. உள்ளதைப் பகிர்ந்து உண்டதால் ஆண்டவன் அருளால் எல்லாரும் பசி நீங்கப் பெற்றார்கள். உலகில் உள்ளதை யாவரும் பகிர்ந்து உண்

டால், உணவுப் பஞ்சம் என்பது ஒருநாளும் ஏற்படாது; பசியும் பட்டினியும் ஒழிந்துபோகும்.

புத்துலகம் பேரின்ப உலகம்

கிறிஸ்து கண்ட புத்துலகம் முன்னர்க் கூறப்பட்டுள்ள நலன்களுள்ள உலகமாதலின் பேரின்ப உலகமாகும். உயிர்கள் யாவும் இன்பத்தை விழைகின்றன; துன்பத்தை வெறுக்கின்றன. பின்னே துன்பம் விளக்கும், இன்பங்கள் உள. ஆண்டவன் அருள் பெற்றோர் அத்தகைய இன்பங்களை விரும்பார். நிலையான பேரின்பத்தை விரும்புவதே அறிவுடைமையாகும். துன்பத்தை வெறுக்கும் மக்கள் நிலையான பேரின்பத்தையே நாடல் வேண்டும். கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த காலத்திலும் அப்பேரின்ப உலகில் வாழ்ந்து வந்தார். பொழுது விடியுமுன் அவர் எழுந்து தனியிடத்தில் அமர்ந்து கடவுளோடு உறவு கொள்வர். அவர் நெடுநேரம் தியான நிலையில் இருப்பர். இரவு முழுவதும் இறைவனை நினைத்து அவர் வேண்டுதல் செய்ததுமுண்டு. அவர் கடவுளைத் தம்முடைய 'பிதா' என்று சொல்வது வழக்கம். அவர் இடையறாது கடவுளாகிய தந்தையோடு உறவு பூண்டு வாழ்ந்தாராதலின், "நானும் பிதாவும் ஒன்று" என்று சொன்னார். கிறிஸ்து கண்ட புத்துலகில் வாழும் மக்கள் கடவுளோடு இன்ப உறவு பூண்டு வாழ்தல் வேண்டும்; கடவுளை ஓயாமல் நினைத்து, அவர் திருவருளைப் போற்றி வாழ்தல் வேண்டும். அவ்வாறு வாழ்வோர் உண்மையான பேரின்பம் துய்ப்போராவர். கடவுளை நினைப்பதே அவர்களுக்கு மகிழ்ச்சி யளிக்கும். கடவுள் நினைப்பால் நிய எண்ணங்கள் ஒழியும்; உளம் திருந்தும்; பேச்சும் செயலும் பண்படும். உலகிலுள்ள மக்கள் யாவரும் இவ்வாறு கடவுள் நினைப் புள்ளவர்களாய் வாழ்ந்தால் உலகில் துன்பம் என்பதைக் காண முடியுமோ? உலகம் பேரின்பம் நிறைந்த இடமாக மாறிவிடுமன்றோ? கிறிஸ்து இத்தகைய பேரின்ப உலகை ஆக்கக் கருதினர்.

ஒவ்வொருவரும் மனம் மாறி, கடவுளிடத்தில் அன்பு கூர்ந்து, அவர் அருளைப் பெற்று, தூய வாழ்க்கை நடத்தி வந்தால் உலகம் புது உலகமாக மாறும். அப் புது உலகம் அருளுலகமாய் விளங்கும்; அஃது அன்புலகமாய்த் திகழும். கிறிஸ்து, பேரறிஞருக்குமட்டும் விளங்கக்கூடிய அறிவு நெறியைப்பற்றி விரிவுரைகள் செய்யவில்லை; அவர் யாவரும் கடைப்பிடித் தொழுகவேண்டிய அன்பு நெறியையே உலகத்துக்கு அறிவுறுத்தினர். மக்கள் அவர் காட்டிய நெறியைக் கடைப்பிடிப்பார்களாயின் அவர் கருதிய புத்துலகம் காட்சி யளிக்கும்.

திருவள்ளுவரும் பொதுமையும்

—வித்வான் மு. வரதராசன் B. O. L.

ஒருவனே ஒருவன் அடுதலும் தொலைதலும்
புதுவது அன்று;இவ் வுலகத்து இயற்கை. —புறநானூறு - 76.

இது இடைக்குன்றூர் கிழார் என்னும் புலவர் அறிவுரை ஆகும். ஆரவாரம் பெருக அமைதி குலைய நடைபெறும் போர்களே உலகத்து இயற்கை என்று கொள்வோமாயின், எந்த நாடு ஆக்கம் எய்தினுல் என்ன? எந்த நாடு அழிவு எய்தினுல் என்ன? உலக முன்னேற்றம் என்பது குறித்து எண்ணுதற்கும் இடம் உண்டோ? அறிவை வளர்த்தலாலும், அறநெறிகளைக் கோலுதலாலும் சிறிதேனும் பயன் உண்டோ? விலங்கினம் போலக் கண்மூடி வாழ்ந்து, கவலையின்றிக் காலம் கழிப்பதே சாலச் சிறந்தது ஆகும் அன்றே? திருவள்ளுவர் முதலான சான்றோர் கண்ட தெல்லாம் வெறுங் கனவே ஆகும் அன்றே? ஆனல் உண்மை அது அன்று.

உலக வரலாற்றை நோக்கின், பெரும் போர் நிகழ்ந்த போதெல்லாம் அமைதி வேட்கை மக்களிடையே பெருகி யதைக் காணலாம். பகையும் பூசலும் மிகுந்து இரத்த வெள்ளம் பெருகின நாட்டில், மக்கள் அன்பும் அமைதியும் நாடி இன்ப வாழ்விற்கு உருகி நின்றதைக் காணலாம். குழப் பத்தின் விளைவான துன்பக் கடலில் அலைந்த மக்களே, அமைதியின் பயனை இன்பக் கரை காண விரைந்ததை அறியலாம். ஆதலால் அமைதி வேட்கையும் உலகத்து இயற்கையாக உள்ளது. அந்த வேட்கை இதற்கு முன் இருந்ததிலும் இன்று மிகுந்துள்ளது என்றே கூறல் வேண்டும். இதுவரை உலகம் காணுப் பெரும்போர் இப் போது நடைபெறுகின்றது. அதற்கு ஒப்ப இன்று தான் என்றும் இல்லா அமைதிவேட்கை மக்களிடையே எழுந் துள்ளது. ஆதலின், போர், உலகத்து இயற்கை ஆவது போலவே அமைதியும் உலகத்து இயற்கை எனல் வேண்டும். இவ்விரண்டில் ஒன்று தொடக்கம்-காரணம். மற்றொன்று முடிவு - காரியம். குழப்பமாய்த் துன்பமாய்த் தொடங்கும் உலக இயற்கையே அமைதியாய் இன்பமாய் முடிவதாகும்.

உலக வரலாறு மற்றோர் உண்மைக்கும் சான்றாக உள்ளது. அது என்ன? சமயம் அல்லது அரசியல் இவ்விரண்டில் ஒன்று காரணமாகவே குருதி வெள்ளமும், குழப்பமும் அவ்வப்போது பெருகி நின்றன. இவ்விரண்டில் ஒன்று காரணமாகவே, அவ்வப்போது அமைதியும் ஒற்றுமையும் காணப்பட்டன.

சமயம் காரணமாக மக்கள் பிளவுபட்டுப் பகைத்த போதெல்லாம் குழப்பமே பெருகிற்று. அரசியல் காரணமாக மக்கள் பிரிந்து பொருத போதெல்லாம் குருதிவெள்ளமே பெருகிற்று. சமய உண்மைகள் அனைவருக்கும் பொது எனப் பொதுமை உணர்வு பெருகின போதெல்லாம் மக்கள் அமைதி இன்பம் கண்டனர். அரசியல் செல்வம் அனைவருக்கும் உரிமை எனப் பொதுமை வாழ்வு சிறந்த போதெல்லாம் மக்கள் அமைதியின்பம் நுகர்ந்தனர். சுருங்கக் கூறின், சமயத் துறையிலும் அரசியல் துறையிலும் வேற்றுமை குழப்பமே விளைக்க, பொதுமையே அமைதி அளிக்க வல்லதாய் உள்ளது. யூத கிறிஸ்தவர், சமண பௌத்தர், சைவ வைணவர், இந்து முகம்மதியர், தென்கலை வடகலையர் பகையெல்லாம் சமயத்துறையில் பொதுமை-சமரசம் இல்லாக்குறையால் விளைந்தனவே. தேர்வு காலங்களுக்கு உரிமையான அடிதடி முதல் உலகப் பெரும்போர் வரை எல்லாத் தொல்லைகளும் அரசியலில் பொதுமை - சமவுரிமை இல்லாக் குறையால் விளைந்தனவே.

மற்றும் ஓர் உண்மை மறக்கவொண்ணாதது. அதுதான் சமயத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பு. ஒன்றை விட்ட மற்றொன்று பாழ் என்னலாம்; வீண் என்னலாம். பொதுவாக நோக்கின் மேல்நாடு அரசியலைப் பெரிதாகப் போற்றிச் சமயத்தைப் புறக்கணித்து வந்துளது. கீழ் நாடோ சமயத்தைப் பெரிதாகக் கொண்டு அரசியலைக் கைவிட்டு வந்துள்ளது. ஒன்றைவிட்டு மற்றொன்றைப் பற்றுவதால் உளதாகும் தீங்குக்கு இன்று மேல்நாடும் சான்றாக உள்ளது; கீழ்நாடும் சான்றாக உள்ளது. சமயத்தைக் கைவிட்டு அரசியலையே போற்றிய நாட்டில் விலங்குநிலை ஆக்கம் பெற்றது; மக்கள் வாழ்வில் உணர்வு குறைந்து இயந்திரம்போல் ஆயினர்; ஓய்வும் இன்பமும் இன்ன என்று அறியாமல் உரிமை என்ற பெயரால் அடிமைத் தளை பூண்டு இயங்கலாயினர். அரசியலைக் கைவிட்டுச் சமயத்தையே போற்றின நாட்டில் துறவிகள் பெருகினர்; உலகம் பொல்லாதது என்று அஞ்சி ஒதுங்கும் கோழைத்தன்மை மிகுந்தது; எது எப்படி ஆனாலும் எமக்கு என்ன என்று எண்ணும் தன்னலம் வளர்ந்தது. சமயத்தைக்

கைவிட்ட நாட்டில் அரசியல் போலியாயிற்று; அழிவுகளுக்கு அடிப்படையாயிற்று. இதை மேல்நாட்டில் காணலாம். அரசியலைக் கைவிட்ட நாட்டில் சமயம் போலியாயிற்று; அல்லல்களுக்கு அடிப்படையாயிற்று. இதைக் கீழ்நாட்டில் காணலாம். சமயத்தை விட்டபின் அரசியலில் உண்மை இல்லை; அரசியலை விட்டபின் சமயத்திலும் உண்மை யில்லை. இந்த இரண்டற்கும் உள்ள தொடர்பைத் திருவள்ளுவர் காலத்துச் சான்றோர் எவ்வாறே உணர்ந் திருந்தார்கள். பண்டைக்காலத்தில் அறத்துறைத் தலைவர் வேறாகவும், அரசியல் தலைவர் வேறாகவும் இருந்தது இல்லை. இளங்கோவடிகள், கூலவாணிகஞ் சாத்தனார், சேரன் செங்குட்டுவன் முதலானோர் அறத்துறை, அரசியல் துறை இரண்டிலும் கலந்திருந்தனர். இன்று உலகில் உள்ள அரசியல் தலைவர் பலர் அறத்துறை இன்னது என்று அறியார்; சமயத் தலைவர் பலர் அரசியல் இன்னது என்று அறியார். மிகச் சிறந்த நோக்கம் கொண்டு கோயிலும், கோன் ஆட்சியும் பிணைக்கப்பெற்ற இங்கிலாந்திலும் இந்தத் தொடர்பு வெறுஞ் சடங்கு ஆகிவிட்டது. அசோகன் போன்ற மன்னர் பிறந்த இந்நாட்டிலும் அறமும் அரசியலும் பிரிந்து நிற்கின்றன. சான்றோர் செய்த முயற்சி எல்லாம் விழலுக்கு இறைத்த நீராயினவே என்று எண்ண வேண்டியதாயிற்று.

(அறத்தையும் அரசியலையும் பிணைக்க வல்லது பொதுமையே. சமயத்தின் பெயரால் அரசியலில் பகையை வளர்த்தலும், அரசியலின் பெயரால் சமயத் துறையில் பூசலை எழுப்புதலும் இன்றும் காணக்கூடிய காட்சியே அன்றே? பொதுமை ஒன்றில் ஏற்படின், மற்றொன்றன் தொடர்பு தானாகவே வரும். **திருவள்ளுவர் இவ் விரண்டையும் பிணைக்கவல்ல பொதுமை கண்டவர்.** திருக்குறளில் அறத்திற்கும் அரசியலுக்கும் உள்ள தொடர்பு அறத்துப்பால், பொருட்பால் இரண்டனையும் கற்று உணர்ந்தவர்க்கு நன்கு விளங்கும்.)

பொருள் இன்றேல் அறம் இல்லை என்பது திருவள்ளு வர் கருத்து. பொருட்குறை நீங்கினால் அன்றி, அறம் வாழ வழியில்லை என்று அச்சான்றோர் அறிவுறுத்தி யுள்ளார். மழையும், அதனால் விளைபொருளும் குறையாதிருப்பின் உணவுப் பஞ்சம் அக்காலத்தில் இல்லை. மழை வளம் ஒன்று உண்டானால் ஒவ்வொருவருக்கும் அக்காலத்தில் எவ்வாறே னும் உணவு கிடைத்து வந்தது. அக்கால அமைப்பு அவ் வாறு. இக்காலத்திலோ காசு இருந்தால் அன்றி உணவு கிடைக்கவில்லை; மழை வளம் சுரப்பினும் காசுவளம்

இல்லாதவன் கஞ்சி அற்றவனே. சுருங்கக் கூறின் அக் காலத்தில் உணவு என்றால் மழை; இக்காலத்திலோ உணவு என்றால் காசு; (ரூ. அ. பை.) அறவொழுக்கத்தைப் பற்றிக் கூறப்புகுந்த திருவள்ளுவர்,

"வான் இன்று அமையாது ஒழுக்கு" (திருக்குறள்-20)

என்று தெளிவுறுத்தினர். அறம் வாழ வேண்டுமானால் பொருட் குறை நீங்கல் வேண்டும் என்பதன்றோ இதன் கருத்து? அறம் அறிவுறுத்திய தலைவர் பொருள் துறையில்-அரசியல் துறையில் பொதுமை வேண்டும் என்று வற்புறுத் தியது அன்றோ இது?

கொல்லாமை என்னும் அறத்தைக் கூறப்புகுந்த அதி காரத்தில் மீண்டும் பொதுமையை வற்புறுத்துகின்றார். உயிர்க்கொலை வேண்டாம் என்று உரைக்க வந்தவர், அறிவு ஆற்றல் அறம் ஒழுக்கம் கற்பு உரிமை முதலான பல வற்றைக் கொல்லும் பசித்துன்பமும் உலகில் நில்லாது ஒழிக என முயல்கிறார்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை" (திருக்குறள்-322)

என்கின்றார். பொருள் பொதுமையுறல் வேண்டும் என்ற கருத்தையே, அறத்துப் பாலில் ஒப்புரவு என்ற அதிகாரம் ஆக்கினர். ஈகை என்னும் அதற்கு அடுத்த அதிகாரத்திலும்,

"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி"
"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுங்
கூற்றம் குதித லரிது"
"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்" (திருக்குறள்-226-8)

முதலான பாக்களில் வற்புறுத்துகின்றார். அரசியலைத் துறந்த அறவோரை விட, அரசியலில் கலந்த அறவோர் உயர்ந்தவர் என்பது அவர் கருத்து. உலகை விட்டு ஒதுங்கி உண்ணு நோன்பு கிடப்பாரைவிட, உலகுடன் கலந்து பிறர் பசி தீர்க்க முயல்வார் சிறந்தவர் என்கின்றார்.

"ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்" (திருக்குறள்-225)

உலகம் பொல்லாதது என்று ஒதுங்கி உண்ணுது நோற் பாரைவிட, உலக வாழ்க்கையை ஏற்றுப் பிறர் சொல்லும்

கொடுஞ் சொல் எல்லாம் பொறுப்பவர் சிறந்தவர் என்கின்றார்.

"துறந்தாரின் தூய்மை உடையர் இறந்தார்வாய்
இன்னுச்சொல் நோற்கிற் பவர்"
"உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்" (திருக்குறள்-159-60)

அறம் உலக வாழ்வில் - அரசியலில் கலந்து நிற்றல் வேண்டும் என்னும் கருத்தை விளக்க வேறு என்ன வேண்டும்?

பொருட்பாலில் திருவள்ளுவர் அறத்தை வற்புறுத்தும் இடங்கள் மிகப் பல. உண்மையைப் போற்றினால் வாணிகம் நடவாது எனவும், நேர்மையை மேற்கொண்டால் அரசியலில் வெற்றி பெற முடியாது எனவும், லஞ்சம் வாங்காது ஒழியின் வயிறு வளர்த்தல் இயலாது எனவும், தந்திரம் இல்லையானால் உலக வாழ்வு இல்லை எனவும், இன்ன பலவாறுகவும் வாணிகரும் அரசியல் தலைவர்களும் உத்தியோகஸ்தர்களும் பொது மக்களும் பிறரும் அஞ்சி அஞ்சி வாழுங்காலம் இது. எவ்வாறேனும் பொருள் ஈட்டிச் செல்வன் என்ற பெயர் பெற்றபின் எது செய்யினும் உலகம் போற்ற முன் வருகின்றதே என்று அறிஞரும் திகைக்கும் காலம் இது. வறியவன் செய்வதெல்லாம் பாவம் என்றும், உடையவன் செய்வ தெல்லாம் புண்ணியம் என்றும் பாமரர் மயங்கும் காலம் இது. இந்தக் காலத்திலும் பொருட்பாலில் திருவள்ளுவர் கூறும் உண்மைகளை ஆழ்ந்து உணர்வார்க்குத் திகைப்பு இல்லை. அறத்தை அடிப்படையாகக் கொண்டே பொருள் ஈட்டுக என்று வற்புறுத்தும் வள்ளுவர், பிறரை அழவைத்து ஒருவன் கொண்ட பொருள் எல்லாம் அவனை அழவைத்து விட்டுப்போம் என்கின்றார். எடுத்துக்காட்டாக, முசோலினி வென்ற அபிசீனிய நாடு ஒன்று போதாதோ?

"அழக்கொண்ட எல்லாம் அழப்போம் இழப்பினும்
பின்பயக்கும் நற்பா லவை" (திருக்குறள்-659)

அரசியலில் சிறந்து விளங்கக் கல்வி வேண்டும்; பலநூல் கலைக் கற்றல் வேண்டும். ஆனால் நோக்கம் நூல்களைக் கற்றலே அன்று. அறத்துப் பாலில் வற்புறுத்தியவாறு 'மனத்துக்கண் மாசிலன் ஆதல்' வேண்டும். அத்தகைய நல்லமனம் - அறமனம் இல்லாதவர்க்கு அரசியலால் ஒரு பயனும் இல்லை.

"பலகல்ல சற்றுக் கடைத்தும் மனம்கல்லார்
ஆகுதல் மாணார்க்கு அரிது" (திருக்குறள்-823)

பொருட்பாலில், அரசியலில் தொடக்கத்திலேயே அறம் தவறுமல் ஒழுகல் வேண்டும் என்று வற்புறுத்துகின்றார்.

"அறன்இழுக்காது அல்லவை நீக்கி மறன்இழுக்கா
மானம் உடையது அரசு."

அறத்துக்கும் அரசியலுக்கும் தொடர்பு வேண்டும் என்று இவ்வளவு கூறுதல் ஏன்? மண் நீர் தீ காற்று வான் என்னும் இவற்றின் இயல்புகள் இன்ன இன்ன என்று ஆராய்ந்து கற்கும் அறிவியல் கல்வியில் எம். ஏ. பட்டம் பெற்றவன் ஒருவன், அந்த அறிவைப் பயன் படுத்தாமல் வாளா இருப்பின் அவனுக்கு ஒரு பெருமை உண்டோ? அல்லது, இவற்றின் இயல்புகள் இன்ன என்று அறியும் அறிவே இல்லாத ஒரு பேதை பெரிய பெரிய ஆக்க வேலைகளில் ஈடுபட்டுப் புதிய புதிய கருவிகளைக் கண்டு பிடிக்க முனைந்தால், அவனுக்குத்தான் ஒரு பெருமை உண்டோ? அழுக்காறு அவா வெகுளி இன்னுச்சொல் என்பவற்றினை நீக்கி ஒழுகுதலே அறம் என்று அறிந்தவன் அரசியலில் பயன்படாது ஒதுங்குதலும், அறம் இன்னது என்று அறியாதவன் அரசியல் தலைமை தாங்க முன் வருதலும் என் என்பது? முன்னவன் அறமும் போலி என்க. பின்னவன் அரசியலும் பாழ் என்க. இதுவே திருவள்ளுவர் கண்ட உண்மை.

இன்பமே வாழ்க்கையின் நோக்கம். இன்ப நோக்கமே அறத்துக்கும் அரசியலுக்கும் உள்ள முடிவு. திருக்குறள் நூலாக அமைந்த முறையும் இதுவே. **முன்னே அறம் வழி காட்ட, பொருள் பயன்பட, இன்பம் முடிவாகின்றது.** அறத்துப்பால் பொருட்பாலுக்கு அடிப்படை. பொருட்பால் காமத்துப்பால் என்னும் இன்பப்பாலுக்குத் துணைசெய்தல் வேண்டும். இதுவே திருக்குறள் - திருவள்ளுவர்.

சமயத்திலும் அரசியலிலும் பொதுமை வேண்டும். அதுவே அமைதியின்பத்தைக் கூட்டும் என்று மேலே கண்டோம்.

இன்று வரை ஏற்பட்டுள்ள சமயங்களில் எல்லாம் சிறந்த உண்மைகள் உள்ளன. அவற்றை இந்த உலகம் ஏன் பொதுவுடைமை ஆக்கிக் கொள்ளுதல் ஆகாது? அரசியல் துறையில் பல புதுவழிகள் காணப்பட்டுள்ளன. அவற்றையும் இந்த உலகம் ஏன் பொதுவுடைமை ஆக்கிக் கொள்ளுதல் ஆகாது? காரணம் ஒன்றே; மக்கள் இன்னும் மக்கள் ஆகாமையே; வயிற்றைப் பொருளாகக் கொண்டு வாழும் மாக்கள் நிலையிலிருந்து, மனத்தைப் பொருளாகக்

கொண்டு வாழும் மக்கள் நிலைக்கு இன்னும் உயராமையே; மனிதன் மனத்தால்-மன வளர்ச்சியால் சிறப்புறுமையே.

> சமய நெறியையும் அரசியல் துறையையும் வயிற்றுக்கே பயன்படுத்தும் பாழ்நிலை ஒழிதல் வேண்டும்; அவற்றை மனத்துக்கே பயன்படுத்தும் வாழ்நிலை வருதல் வேண்டும்; அன்றே பொதுமை - சமரசம் ஓங்கி நிற்கும்.

திருவள்ளுவர் கூறும் அறம் வயிற்றைக் கடந்தது; அவர் கூறும் அரசியலும் வயிற்றைக் கடந்தது. உணவுக்குறை தீர்ந்தபிறகே ஒழுக்கம் என்று அறத்துப்பாலில் அறிவுறுத்துகின்றார். உயிர் வாழ்தல் அனைவருக்கும் பொதுவான உரிமை, இரந்து உயிர்வாழ்தல் வேண்டா-என்று பொருட்பாலில் தெளிவுறுத்துகின்றார். **திருக்குறள் சாதி சமய வேறுபாடுகளைக் கடந்த பொது நூலாதல் போலவே, வயிற்றுத் தொல்லையும் கடந்து உரிமை பேசும் பொது நூலாகும்.**

சமயம் எல்லாம் மனத்தைப் பண்படுத்தவே என்ற உண்மையை உணர்ந்த பின், சமய வேறுபாடு கொண்டு குழம்புவதற்கு இடம் ஏது? அறநெறியால் மனம் பண்பட்ட திருவள்ளுவர், அறத்துப்பால் முழுமையும் மனம் மனம் மனம் என்று பன்முறை எடுத்துரைத்தலும், பல சமயங்களுக்கும் அடிப்படையான இயற்கை உண்மைகளை எடுத்துரைத்துப் பொதுமையைப் போற்றுதலும் காண்க. அடக்கம் ஒருவனை உயர்த்தும்; அழுக்காறு ஒருவனை அழிக்கும் என்பன முதலாக அவர் கூறும் உண்மைகள், நீர், கீழ்நோக்கிச் செல்லும்; தீ, மேல் நோக்கிச் செல்லும் என்பன முதலாக அறிவியலார் கூறும் இயற்கை உண்மைகள்போல மறுக்க முடியாதன அல்லவோ? அறிஞர் பெர்னட்ஷா கூறுவதுபோல, மேனாட்டு மனவியல் நூல் (Psychology) இன்னும் பச்சிளங்குழந்தைப் பருவத்திலேயே உள்ளது. அது வளர்ச்சி பெறட்டும்; துருவித் துருவி அறத்துப்பாலை ஆராயட்டும்; அன்றுதான் திருவள்ளுவர் வாய்மொழியின் பொதுமை உலகிற்கு விளங்கும்.

அறம் மனத்திற்கு உணவு என்றால், அரசியல் மனத்திற்குப் பயிற்சி எனலாம். இன்றுள்ள அரசியல் ஒரு சாரார்க்கே உரியதாய், மற்றவரைப் புறக்கணித்ததாய், வயிற்றுக்காகவும், அதன் தொடர்பான ஆடம்பரங்களுக்காகவும் வழி கோலுவதாய் உள்ளது. இந்த அளவில் நின்று தேங்கும் அரசியல், பொதுமை காணுது; போர்

களுக்கும் பேராழிவுகளுக்கும் காரணமாய் நின்று இறுதியில் தானும் அழியும். உயிர் வாழும் உரிமையை எல்லோருக்கும் வழங்குதலே முதற்கடமையாகக் கொண்ட அரசியல் - 'ஊண் உடை எச்சம் உயிர்க்கெல்லாம் வேறு அல்ல' என்று திருவள்ளுவர் கண்ட உண்மையை முதற்சட்டமாகக் கொண்ட அரசியல் - பொதுமையைப் போற்றும் அரசியலாகும். அந்த அரசியலே மனத்திற்குப் பயிற்சி அளிக்கவல்லது.

இவ்வாறு அற உணவு உண்டு, அரசியல் பயிற்சி பெற்ற மனமே அமைதி இன்பத்தை நுகர வல்லதாகும். இந்த மன இன்பமே திருக்குறள் காமத்துப் பாலில் - இன்பப்பாலில் காண்பது. திருவள்ளுவர் கூறும் தலைவனும் தலைவியும் அன்பும் அறிவும் நிறைந்தவர்; அறத்தால் அன்பும் அரசியலால் அறிவும் வளர்ந்த மனத்தினர். அத்தகைய மனம் பெற்றவர் விலங்குணர்ச்சியைப் பொருளாகக் கொள்ளாமல் மன உணர்வையே போற்றுவர். விலங்குணர்ச்சி வெறுங்காமம்; மன உணர்வே உண்மைக் காதல்; திருக்குறளில் கூறப்படுவது உண்மைக் காதலே, மன உணர்வே. பண்பட்ட மன உணர்வு எந்த உலகத்தில் இருப்பினும் என்ன? அது காதலர் காதல் உலகத்திலும், புலவர் புலமை உலகத்திலும் கடவுளன்பர் அன்பு உலகத்திலும் ஒத்திருப்பது. பண்பட்ட மன உணர்வினர் காதலராக வாழலாம்; அல்லது புலவராகத் திகழலாம்; அல்லது கடவுளன்பராக விளங்கலாம். மூவகை நிலைக்கும் அடிப்படை ஒன்றே. அதனாலன்றே திருக்குறள் காமத்துப் பால் காதலர்க்கு விருந்தாதலே அன்றி, புலவர்க்கும் கடவுளன்பர்க்கும் இன்னமுது ஆகின்றது. இங்கும் ஒருவகைப் பொதுமை காண்க.

சுருங்கக் கூறின், மன வளர்ச்சியை நோக்குவார்க்கே திருவள்ளுவர் கூறும் அறத்தில் பொதுமை விளங்கும்; மனப் பயிற்சியை நோக்குவார்க்கே அவர் கூறும் அரசியலில் பொதுமை விளங்கும்; மன உணர்வை நோக்குவார்க்கே அவர் கூறும் இன்பத்தில் பொதுமை விளங்கும். திருக்குறளில் மட்டும் அல்ல, உலகத்திலேயே பொதுமை விளங்க வேண்டுமானால், உணவும் உடையும் பிற ஆடம்பரங்களும் பற்றிய கவலை அறவே ஒழிந்து, மன வளர்ச்சியும் மனப் பயிற்சியும் மன உணர்வும் பற்றிய கவலை பெருகல் வேண்டும்; மக்கள் மக்களாய் வாழ்வதும் அன்றே. வாழ்க பொதுமை! வாழ்க திருவள்ளுவர்!

தேவாரத் திருப்பதிகம்

—திரு. தி கி. காராயணசாமி, கிழக்கு மருதூர், திருகாவலூர்.

இதுவரை வெளிப் போந்துள்ள கல்வெட்டு நூல்களால் நமக்குத் திருப்பதிகம் குறித்துக் கிடைத்த சாசனங்களைத் தொகுத்து ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம். பல வெட்டுகளின் மூலம் வெளியிடாததால் அவற்றிலும் பின் வரும் குறிப்புகள் காணக் கூடுமாயினும், இதுவரைப் போந்த சாசனசாலை அறிக்கையைப் பெரும்பாலும் தழுவியும், தென்னிந்திய சாசன நூலில் வேண்டுவன ஆண்டும், இவற்றை நேரில் கண்டும் கிடைத்ததை ஈண்டுத் தொகுத் துரைப்பாம்.

பதிகம் தொண்ணூற்றாறு வகைப் பிரபந்தங்களில் ஒன்று. அது பெரும்பாலும் பத்து அல்லது பதினொரு செய்யுட்கள் கொண்டு தெய்வத்தைப் புகழ்ந்துரைக்கும் பாடற் றொகை; புத்தரின் அருமை பெருமைகளைப் பாராட்டும் நூலுக்குப் பெயர் பதிகமே. "பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத் தொகுதியாகச் சொல்லுத றானே- என்பவாகலின், மேல் வகுக்கும் ஐந்து பொதுவும், பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருளையுந் தொகுத்துச் சொல்லுதலிற் பதிகம்" என்ற சிவஞான சுவாமிகள் நன்னூல் விருத்தி யுரையும் காண்க. இவ்வுரை, பாயிரத் துக்குப் பதிகமென்ற மறு பெயர் தந்தமைக்குள்ள காரணம் காட்டுகிறது. மணிமேகலை, சிலப்பதிகாரக் காவியங்களின் எழுவரியில் பயின்றிருப்பது பதிக மென்பதை ஈண்டு கவனிக்க. நூல் வகை குறிக்கும் **பதிகப் பதமே பதிய** மென்று கல்வெட்டில் வந்துளது. பதிய மென்பது பதிகத் தினும் வேறுயதொன்றே வெனின், அற்றன்று.

> அன்னவயல் புதுவை யாண்டான் அரங்கற்குப்
> பன்னுதிருப் பாவைபல் பதியம்—இன்னிசையால்
> பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
> சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

என்ற திருப்பாவைத் தனியனைக் கவனிக்க. சில செதுக்கில் திருப்பதிகம் [1] திருப்பாட்டு என்றுளது. சாசனத்தில்

---

(1) 57 (1924); 10 (1918) இதை அவிரோத வந்தியார் சிதம்பர சுவாமிகள் உரை 20, 49, 73-ம் பாட்டுகளிலும் காண்க.

[2] 'இவ்வுடையார் (இறைவன்) திரு முன்பு திருஞானம் ஓத' என்று வருமிடத்துள்ள 'ஞானம்' பதிகத்தைக் குறிக்குமோ என்ற ஐயம், பின் ஆராய்ச்சி யாளர்க் குரியது.

திருவல்லத்து வில்வநாத சாமி கோவில் 'திருமண்டப மிழிச்சி யெடுப்பதற்கு முன்புள்ள சிலாலேகை'ப் படியில் விஜயநந்தி விக்ரமன் 17-ம் ஆண்டு சாசனத்தில், [3] 'திருப் பள்ளித் தாமம் பறிப்பார்க்கும் திருப்பதியம் பாடுவா ருள்ளிட்ட பல பணி செய்வார்க்கு நெல்லு நூற்றுக் காடியும்' என வருகிறது. இச்சாசனமே பதிகம் பற்றி வந்துள்ள ஏனைச் சாசனங்களிலும் காலத்தால் முந்தியது. பி. தி. ஸ்ரீநிவாச ஐயங்கார் [4] பல்லவர் சரித்திரத்தில் இந்நந்தி விக்ரமன் காலம் கி. பி. 830 முதல் 854 வரை என்றதால், இச்சாசன காலம் கி. பி. 847. இது திருப்பதிகங் குறித்துப் பொதுவாகவும் சுருக்கமாகவும் கூறுகிறது. இதற்கு அடுத்து வருவது, மதுரையும் ஈழமுங் கொண்ட கோப்பர கேசரிவர்மரான முதற் பராந்தகனது 41-ம் ஆண்டில் அல்லூர் பசுபதீஸ்வரர் கோவில் தென் சுவரில் செதுக்கியது. இவ்வெட்டின் காலம் 948 கி. பி. முன்னதின் பின், நூறுண்டுகள் கழிந்து இச்சாசனம் பயின்றுளது கவனிக்கத் தகுந்தது. இதன்பின் மதுராந்தக உத்தம சோழன் காலத்தில் திருப்பதிக விண்ணப் பத்திற்கு இரண்டு சிலாலேகை பொறித்துள்ளன. அவற்றில் முன்னது கோனேரி ராஜபுரத்தில் (திருநல்லம்) * கண்ட ராதித்தர் மனைவி செம்பியன் மாதேவி செய்தது. இதன் காலம் கி. பி. 976. இச்சாசனத்தின் வரி 61-ல் **'திருப்பதியம் பாடுவார் இருவர்க்கு நிசதம் தூணி பதக்காக ஓராட் டைக்கு நெல்லு நூற்றெண்பதின் கலத்துக்கு பூங்கு டியில் ஒன்றேயெழுமாகாணி யரைக்காணி முந்திரிகை'** என்றும், வரி 88-ல் 'திருப்பதியம் **பாடுவா ரிருவர்க்கு மனை முந்திரிகைக்கு** $ என்றும் நடை செல்கிறது. † இதன் பின்னது கி. பி. 983-வது ஆண்டில் வெட்டியது. இதில் குறிப்பிடத்தக்கது ஒன்றுமில்லை. இவ்வுத்தமச் சோழன் பிதாமகன் முதற்பராந்தகன். இவர்கட்கு இடையில் நாட் டின் நிலை சீர்குலைந்திருந்ததால் சமய சம்பந்தமான கல் வெட்டுகள் அதிகம் பயில வில்லைபோலும்!

---

(2) No. 420 & 421. S. I. I. Vol V.

(3) S. I. I. Vol 3 No 43.

(4) பாகம் 3 பக்கம் 60.

$ S. I. I. Vol III No 151 A.

† S. I. I. Vol III No 139 & 15.

உத்தமச் சோழனுக்குப் பின் அரியணை யேறியவன் தஞ்சை இராஜராஜன். இச் சிவபாத சேகரன் ஆட்சியில் தான் முதன் முதலாகத் திருப்பதிகத்துக்கு ஒரு சிறப்புக் கல் வெட்டு கிடைத்திருக்கிறது. இச்சாசனம் ஒன்றே பதிக விண்ணப்பத்திற்கென ஏற்பட்ட சிறப்புடையது. இதன் முக்கியப்பகுதி வருமாறு :—

"ஸ்ரீ ராஜ ராஜ தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதா வது வரை உடையார் ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரம் உடையார்க் குத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும் இவர் களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும், இவர் களிலே நிலையாய்க் கொட்டி மத்தளம் வாசிப்பான் ஒரு வனும், ஆக ஐம்பதின்மர்க்கும் நிசதம் நெல்லு முக்குறுணி நிவந்தமாய் ராஜகேசரியோ டொக்கும் ஆடவல்லானென்னும் மரக்காலால் உடையார் உள்ளூர்ப் பண்டாரத்தே பெறவும், இவர்களில் செத்தார்க்கும் அனுதேசம் போனார்க்கும் தலை மாறு அவ்வவர்க்கு அடுத்தமுறை கடவார் அந்நெல்லுப் பெற்றுத் திருப்பதிகம் விண்ணப்பம் செய்யவும். அவ்வர்க்கு அடுத்த முறை கடவார் தாந்தாம் யோக்யர் அல்லாவிடில், யோக்யரா இருப்பாரை ஆளிட்டுத் திருப்பதியம் விண்ணப் பஞ் செய்வித்து அந்நெல்லுப் பெறவும். அவ்வவர்க்கு அடுத்த முறை கடவாரின்றி யொழியில், அந்த நியாயத்தாரே யோக்யரா யிருப்பாரைத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய இட்டு, இட்ட அவனே அவ்வவர் பெறும்படி நெல்லுப் பெறவும்; ஆக இப்படி உடையார் ஸ்ரீ ராஜ ராஜ தேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது."

கி. பி. 1014-ல் ஏற்பட்டுள்ள இச்சாசனத்தில், விண்ணப் பிக்க ஐம்பதின்மருள்ள குழு அமைத்ததும், இவர்களில் ஒலிக்கருவியாகிய உடுக்கை, கொட்டி மத்தளம் வாசிக்க இருவரும், இவர்கட்குப் பின்வருவார் இன்னு ரென்பதும், அவர்கட்குரிய யோக்யதையை வற்புறுத்திக் கூறுவதும், அவர்கட்குத் தின நிவேதனம் முக்குறுணி என்பதும் தெரி கிறது. இதில் எத்தனை சந்தி விண்ணப்பித்தார்கள் என் பதும் பிறவும் தெரியவில்லை. அண்ணமலைப் பல்கலைக்கழக சரித்திர ஆசிரியர் காலஞ்சென்ற ச. க. கோவிந்தசாமிப் பிள்ளை, M. A. அவர்கள் தஞ்சைப் பெரிய கோவிலில் சுவற்றுச் சித்திரங்கள் கண்டுபிடித்தனவற்றில் ஒன்று, ராஜ ராஜன் யானையின்மேல் கையில் தாளங்களோ டிருப்பது. இவ்வோவியத்தால் இவன் எவ்வளவு அளவில் திருப்பதிகங் களை நேசித்தான் என்பதை அறியலாம்.

திருப்பதிகம் ஓதுதற்கு [1] விண்ணப்பித்தல் என்று கல்வெட்டு கூறுகிறது. இவ்விண்ணப்பமும் † இரண்டு அல்லது ‡ மூன்று சந்தியும் செய்ததாக அறிகிறோம். மற்றும் பாடலை ¶ அனுபவத்தின்படிப் பாடியதாகத் தெரிகிறது. இறைவன் முன்பு ஓத ஆண்மக்கள் பெற்ற உரிமைபோல் பெண்மக்களும் பெற்றிருந்தமை * திருவொற்றியூர் சாசனம், 'முன்பு நிமந்தமுடைய தேவரடியார் மேல் ஏற்றமாகத் திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய பெண்டுகள் பன்னிருவர்க்கும்' என்று கூறுவது காண்க. பதிகம் குருடர்களுக்கு உய்வளித்தமை பின்வரும் வரிகளா லறிக:

‖ "ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு இரண்டாவது ராஜ ராஜ வளநாட்டுப் பஹ்ரூர் நாட்டு வாவலூர் நாட்டுத் தேவதானம்: திருவாமாத்தூர் ஆளுடைய அழகிய தேவர் கோயிலில் திருப்பதிகம் பாடிவரும் குருடர்களைத் தவித்து நம் **தேவாரத்து திருப்பதியம்** பாடும் பொய்யாத சேவடி தேவர்கணநாதனை இராஜராஜ பிச்சனுக்கும் இவன் வர்க்கத் தார்க்கும் இக்கோயிலில் திருப்பதியக் காணியான இவ்வூர் முதல் காணியாகக் குடுத்தோம். இவன் வர்க்கத் தாரையும் மெய் இட்டுத் திருப்பதியம் பாடுவித்துக்கொண்டு குருடர்களுக்கு விட்டுவரும் நிவந்தப்படி இவர்களுக்கும் விட்டுக் கல் வெட்டுகவென்று திருவாய் மொழிந்து திருமுகம் பிரசாதஞ் செய்து வந்தமையில் இக் குருடர்கள் முன்பிலாண்டுகள் அநுபவத்தின்படி பாடிவரும் குருடர்கள் பேர் பதனறுவரும் இவர்களுக்கு கண்காட்டுவார் இருவரும் ஆகப் பேர் பதினெண்மர்க்கு பேரால் நெல்லு பதக்காக, நாளொன்றுக்கு நெல்லு முக்கலமாக, நாள் முன்னூற் றறுபதுக்கு நெல்லு ஆயிரத் தெண்பதின் கலமும் **புடவை முதலுக்கு** பேரால் காசு ஒன்றுக காசு பதினெட்டுக்கு காசு ஒன்றுக்கு நெல்லு இருபதின் கலமாக இத்தேவர் தேவ தானம் கடுவனூரில் விட்ட நிலம் பன்னிரு வேலி இந்நிலம் பன்னிருவேலியும் காணியாக இவ்வூர் நிலங்கலந்த படியே கைக்கொண்டு இத்திருப்பதியம் பாடுவார் பேர் பதினெண் மரும் **மூன்று சந்தியும்** வந்து திருப்பதியம் விண்ணப்பஞ் செய்து முன்பிலாண்டுகள் இக்குருடர்கள் நிலங்கைக் கொண்டு செய்து வரும்படியே இத்திருப் பதியம் விண்ணப் பஞ் செய்வாரும் செய்துவரக் கடவார்களாக."

இச்சாசனத்தில், துணிக்கும் ஏற்பாடு செய்திருப்பது கவனித்தற் குரியது. இறைவனது பல்வகைத் திருமேனி

---

1 433 (1903). S. I. I Vol II No 65 ; 128 (1912). † 280 (1917) ‡ 433 (1903) ; 96 (1925). * 128 (1912). ¶ 433 (1903). ‖ பூ மேவுவனார் - மெய்க்கீர்த்தி யுடையது ; 433 (903).

பற்பல நிலைகளுக்கு உரித்தாயதுபோல, தஞ்சை இராஜ ராஜனுக்கு ஒரு மேனி தேவாரம் கேட்பதற்கென அமைந்தது காண்க.

[1] "பெரிய பெருமாளுக்கு **தேவார தேவராக** எழுந்தருளுவித்த தேவர் பாதாதி கேசாந்தம் ஐவிரலே இரண்டுதொரை உசாத்து நாலு ஸ்ரீ ஹஸ்தமும் உடையராகக் கனமாகப் பித்தளையால் எழுந்தருளுவித்த சந்திர சேகர தேவர் திரு மேனி ஒன்று."

பக்க ஒலிக்கருவி [2] உடுக்கை, கொட்டி மத்தளம், [4] தாளம் முதலியன வருகின்றன. '**திருமுறை தேவாரச் செல்வன்**' என இரு † இடங்களில் காணப்படுவதிலிருந்து திருமுறை அக்காலத்திற்கு முன் வகுத்தது தெரியவரும். இவ்விரு பட்டயங்களால் தேவாரம், திருமுறை யென்பதும் அறிகிறோம். கோயில்களில் [5] அர்த்த மண்டபம், மகா மண்டபம், [6] வியாக்யான மண்டபம், [7] புராண மண்டபம் இருப்பன போன்று திருமுறை மண்டபம் இருந்தமை 'எந்தை கோயிலுள் திருமுறை மண்டப மெடுத்து' என்ற உபதேச காண்ட அடிகளைக் காண்க. இதற்குச் சிதம்பரத்தில் ஒரு வெண்பா, சாசனமாக இருக்கிறது.

‡ நட்டப் பெருமான் நாம் ஞானம் குழைத் தளித்த
சிட்டப் பெருமான் திருப்பதியம் முட்டாமைக்
கேட்போர்க்கு மண்டபத்தைச் செய்தான் தேவவேந்தர் கெட
வாட்டிக்கும் தொண்டையர் கோன் மன்.

நிற்க, தென்னிந்திய சாசன இரண்டாம் பதுமம் 20-ம் சாசன 121-வது வரியில் 'கோப்பர கேசரி வன்மரான உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர்க்கு யாண்டு மகூ-வது நாள் இருநூற்று நாற்பத்திரண்டினால் உடையார் ஸ்ரீ ராஜேந்திர சோழ தேவர் கங்கை கொண்ட சோழ புரத்துக் கோயிலி னுள்ளால் முடிகொண்ட சோழன் திருமாளிகையில் வடபக்கத்து '**தேவாரத்துச் சுற்றுக் கல்லூரியில்** தானஞ் செய்தருளா இருந்து' என்று செல்கிறது. இதில் வரும் 'தேவாரத்துச் சுற்றுக் கல்லூரி' யென்பது தேவாரக் கல்லூரியா என்பது பின் ஆராய்ச்சிக் குரியது.

---

(1) No 38 S. I. I. Vol 11.
(2) S. I. I. Vol. II. No. 65. 129. (1914.)
(3) S. I. I. Vol. II. No. 65.
(4) 129 (1914) † 158 (1911); 10 (1918)
(5) 420 (1924) (6) 110 (1912)
(7) கீழ்ச் கல்வெட்டு.
‡ S. I. I. Vol IV. No. 225. L. 15.

தேவார ஏடுகளைப் பார்த்துப் புதுப்பிக்க வேண்டிய வற்றைப் புதுப்பிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்ட தாகச் * சீர்காழிக் கல்வெட்டு கூறுகிறது. செப்பேடுசெய்தது சிதம்பர சாசன வெண்பா வொன்றில் வருகிறது.

† மூத்திறத்தா ரீசன் முதற்றிறத்தைப் பாடியவர்
ஒக்கமைத்த செப்பேட்டி னுள்ளின்—எழுதி
தலக்கி லெல்லைக் கிரிவாயிசை யெழுதினுன்
கூத்தன தில்லைச்சிற் றம்பலத்தே சென்று.

‡ திருக்குருகூர் அமரனீஸ்வரர் கோயில் வடசுவரில் அதிராஜேந்திர தேவன் மூன்றும் ஆண்டில் ஒரு சாசனம் அரசர்க்காக இரண்டு சந்தியும் திருப்பதியம் விண்ணப் பித்தமை தெரிகிறது. இதில் **அரசர்க்காக வென்பது அரசர் உடல் நலத்திற்கெனச்** சாசனக்காரர் கூறுதலின், பதிக விண்ணப்பம் நலம் பயக்குமென்ற நம்பிக்கை அற்றை நாளில் ஏற்பட்டமை அறிகிறோம். மற்றும் நமக்கு இற்றை நாள் வரை கிடைக்கப் பெறுத திருவிடைவாய் சம்பந்தர் தேவாரம் கல்வெட்டாகக் கிடைத்தது சாசன ஆராய்ச்சியின் அவசியத்தை நிலைநாட்டுகிறது.

$ ஆறும் மதியும் பொதிவே ணியனூரா
மாறில் பெருஞ்செல் வம்மலி விடைவாயை
நானும் பொழிற்கா ழியர்ஞா னசம்பந்தன்
கூறுந் தமிழ்வல் லவர்குற்ற மற்றோரே.

இப்பதிகங்களில் சிறப்பாகப் பாராட்டக் கூடிய [1] தாண்டகம், [2] திருத்தொண்டத் தொகை முதலியவற்றைக் குறித்தும் சாசனங்கள் கூறுகின்றன. விண்ணப்பித்தார் பெயர்களை இராஜ ராஜன் கல்வெட்டு கூறுகிறது. அவை வருமாறு:—

"பாலன் திருவாஞ்சியத் தடிகளான ராஜராஜ பிச்சன், திருவெண்ணெவல் செம்பொற் சோதி, தக்ஷிண மேருவிடங் கப் பிச்சன், அம்பலத்தாடி, பொற்சுவரன் திருநாவுக்கரை யன், மாதேவன் ஞானசம்பந்தன், கயிலாயன், ஆரூரன், செட்டி எடுத்தபாதம், இராமன் சம்பந்தன், அம்பலவன் பக்தர், கம்பன் திருநாவுக் கரையன், நக்கன் சிராளன் அப்பி

---

* 381 (1918) † S. I. I. Vol IV. No. 225 L. 21. ‡ 280 (1917)

$ 8 of 1918. First published by T. M. Swaminatha. upathiyaya of திருக்களர் in 1918. Journal G. F. M. S. Vol 24 P. 266, 343. 18th year Rajaraja II. செந்தமிழ் 18-19. Vol 27. P. 169.

(1) 219 (1917). (2) 137 (1912); S. I. I. Vol IV No. 223 திருமாசித் திருநாளில் திருத்தொண்டத்தொகை விண்ணப்பம் செய்வார்க்கு

நாவுக்கரையன், சிவக்கொழுந்து சீராளன், ஐந்நூற்றுவன் வெண்காடன் திருமறைக்காடன், அம்பலக்கூத்தன், ஆரூரன் நாவுக்கரையன், கூத்தன் மிழலைச் சிலம்பன், சம்பந்தன் ஆரூரன், பிச்சன், காசிபன், சுப்ரமண்யன், கூத்தன் அமர புஜங்கன், திருவாய்மூரான், திருமலைக் கூத்தன், தில்லைக் கரசன், காளி சம்பந்தன், காபாலி கவாலி, நமசிவாயன், சிவன் ஆனந்தன், சிவக்கொழுந்து சம்பந்தன், $ நம்பி ஆரூரன், சோமன், ஐயாறன், பெண்ணேர் பாகன், ராஜா தித்தன், செல்வன் கணவதி" என்பன.

இப்பெயர்கள் ஒவ்வொன்றும் பின்வரும் பெயர்களி லொன்றில் முடிபுறுகின்றன:

"சதாசிவன், ஞானசிவன், மனோன்மத சிவன், பூர்வசிவன், தர்மசிவன், கவச்ச சிவன், சத்திய சிவன், வாமசிவன், நேத் திரசிவன், ஓங்காரசிவன், தத்புருஷசிவன், உருத்திரசிவன், அகோரசிவன், யோகசிவன், ஈசான சிவன், இருதய சிவன்"

இப்பெயர்கள் தீக்கை நாமமா என்பது பின்னராய்ச்சிக்கு விடப்பட்ட ஐயப்பாடு. திருமுறை ஓதிச் செல்வதின் காரண மாகப் பூசல் விளைந்து ஒருவன் உயிர் துறந்ததை வெண் ணெய் நல்லூர் † சாசனம் கூறுகிறது. இனிப் பதிகத்திற்கு முன்னும் பின்னும் திருச்சிற்றம்பலம் தீட்டும் வழக்கம் உண்டோ வென்பது நன்றாகத் தெரியவில்லை. ஆனால் பதிகம் குறித்து வாராத கல் வெட்டொன்று திருச்சிற்றம்பலம் என்று முடிவதைத் காட்டிக் கட்டுரையை முடிப்பாம்.

‡ 'ஸ்ரீ பாதம் என்தலை மேலது ஹர திருச்சிற்றம்பலம்.'

$ S. I. I. Vol 6 No. 33.
† 437 (1921) ‡ 118 (1698) of S. I. I. Vol. VI.

திரு. வி. க. நூல்

—வித்வான். அன்பு கணபதி.

நூலாவது யாது? பலர் பலவாறு கூறுவர். ஓர் ஆசிரியனுடைய எண்ணங்களை அவனுடைய நூலில் காண்கின்றோம்; அவனுடைய வாழ்க்கை அடைவு (அனுபவங்)களை அவன் நூல் தெரிவிக்கின்றது; நூல் என்பது சுவடி அன்று. ஆசிரியனே நூலாகத் திகழ்கின்றான். நாம் நூலைப் படிக்கும்போது வெறும் எழுத்துக்களாக அவற்றைப் பார்ப்பதில்லை. ஆசிரியன் அவனுடைய கருத்துக்களை நம்மிடம் கூறுவதாக - நாம் அவற்றைக் கேட்பதாகவே உணர்கின்றோம். அவ்வெழுத்துக்களின் பின்னே ஆசிரியன் ஒளிந்திருக்கின்றான். அவனை மனக்கண்ணால் காணுகின்றோம். அவனொடு அளவளாவுகின்றோம். ஆகவே நூலை, நூலாகப் பாராது ஆசிரியனைப் பார்க்க வேண்டும். நூலைக் கொண்டு ஆசிரியனை அளந்தறிய - தெரிந்துணர வேண்டும். நூலை ஆசிரியனைப் பார்ப்பவர்க்கு - நூலில் ஆசிரியனைக் காண்பவர்க்கு இது முடியும். எனவே, ஆசிரியனின் வேறு வடிவமே நூல் என்பது; சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நூல் என்பதொன்றில்லை; ஆசிரியனே நூலாம். திருவள்ளுவர் என்பது அவர் செய்த திருக்குறளைக் குறிப்பதுபோல.

அடுத்து, ஒரு நூலை நாம் படிப்பதன் முன், அந்நூலாசிரியனைப் பற்றிய வரலாறுகளை எல்லாம் நன்கு அறிதல் வேண்டும். அதாவது அவனுடைய வாழ்க்கை நிகழ்ச்சிகளைப்பற்றிய - கிடைக்கக்கூடிய தனித்த செய்திகளை எல்லாம் திரட்டி நாம் உணர்தல் வேண்டும். ஆசிரியன் தனக்குக் கிடைக்கக் கூடிய செய்திகளை வைத்துக்கொண்டு, காலம் இடம் இவற்றிற்கேற்பத் தனது நூலை யாக்கின்றான். அவனுடைய சுற்றுச் சார்புகளை ஒட்டியே அவனது நூல் திகழும். அவன் கூறிச் சென்ற பல கருத்துக்கள் பின்னர் மறுக்கப் படலாம் - எக்காலத்திற்கும் ஒப்ப நூல் யாக்கும் ஆசிரியர் உலகில் ஒரு சிலரே இருப்பராதலின். எனவே, நாம் ஒவ்வொரு நூலையும் அவ்வக்காலக் கண்கொண்டு பார்க்க வேண்டும். அவ்வந்நூலில் காணப்படும் கலை யழகைக் கண்டு துய்க்க வேண்டும். இந்த வசம்புகளுக்குள்ளே நின்று ஒரு நூலைப் படித்தால்தான் - அதுவாக நாம் ஆனால்தான் - அந்நூலை உள்ளவாறு அறிந்து மகிழ முடியும்.

இனி, ஆசிரியர் திரு. வி. க. அவர்களின் நூலைப் பார்ப்போம். திரு. வி. க. நூல் என்றால் என்ன? அவர் செய்த நூலா? அல்ல! பின் என்ன? அவர் நூலில் அவரையே நாம் காண்கின்றோம்;

அவ்வெழுத்துக்களுக்குள்ளே அவர் உருவமே நின்று காட்சி யளிக்கின்றது. அவர் நூலைப் படிப்பதென்றால் என்ன? சுந்தரனாரை - அவருடைய வாழ்க்கையிற் கண்டு கூறும் அனுபவ அறிவு மொழி களை - படிக்கின்றோம்; அவரையே உணர்கின்றோம். அவர் நூலைப் படிக்க விரும்பும் நீங்கள் தயவுசெய்து, அது செய்யுமுன், அவரைப் பற்றிய வாழ்க்கை நிகழ்ச்சிகளை அறிய முயலுங்கள். அவற்றை அறிந்து கொண்ட பின்னர் அவர் நூலை எடுங்கள். அப்பொழுது விளங்கும் அவர் செய்த நூல்கள் நன்றாக. ஏனெனில், அவர் நூல்களில் ஓரோ விடங்களில் மறைந்து நிற்கும் கருத்துக்களையும் கொள்கைகளையும் நன்கு அறிவதற்கு, அவர் வாழ்க்கையினை அறிதல் சிறந்த திறவுகோலைப் பெறுவது போலாகும். நிற்க.

அருமை முதலியாரவர்கள், அன்பு கூர்ந்து அடியேற்கு அளித்த அன்பளிப்பான 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற உயரிய நூல் இதோ என் முன்னே இருக்கின்றது. இதனை ஒரு முறை படித்தேன்; மறுமுறை படித்தேன்; மும்முறையும் பயின்றேன். கீழே வைப்பதற்கு மனம் வரவில்லை. நீரோட்டம் போலத் தொடர்ந்து செல்லும் தெளிந்த எளிய நடை, பொருட் செறிவு, தடை விடைகளுடன் எடுத்த பொருளை இனிது விளக்கிச் செல்லும் திறன், விழுமிய உயரிய கருத்துக்கள் எல்லாம் ஒன்றுகத் திரண்டு நிற்கும் காட்சி, ஆகிய இவை என் கருத்தைப் பிணித்தன; சோர்வைப் போக்கின; உணர்வைத் தட்டி எழுப்பின; உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. இந்நூலில் காந்தியடிகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும், அருள் மொழிகளையும் நீக்கி விடுவோ மானால் எஞ்சி நிற்பன அனைத்தும் திரு. வி. க வின் உருவத்தை - வாழ்க்கையை - அவரது திருவுள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டு வனவாக மிளிர்கின்றன. நீங்கள் என்ன கூறுவீர்களோ அறியேன். ஆனால், 'திரு. வி. க. வும் காந்தியடிகளும்' என்ற பெயரே இதற் குப் பொருத்த முடையது என்று என் உள்ளங் கூறுகிறது! ஏன்? யானறிந்த சுந்தரனார் இதில் காட்சி தருகின்றார்; நூல் முழுமையும் அவருடைய உருவத்தையே காணுகின்றேன்; நூலாகத் திகழு கின்றார் அவர்!

இதற்கு முன்பே யான், இவர் எழுதிய மகளிர் உலக மறு மலர்ச்சி மணியாம் 'பெண்ணின் பெருமை'யினைப் பயின்றேன்; 'முருகன் அல்லது அழ'கினைப் பருகினேன்; இவரளித்த 'சீர் திருத்தம் அல்லது இளமைவிருந்'தினை அயின்றேன்; 'தமிழ்ச் சோலை'யினுள்ளே தனித்து உலவினேன்; 'தமிழ்த்தென்றல்' லை துகர்ந்து சோர்வு நீங்கினேன்; உள்ளங் கிளர்ந்தது; உவகை மிகுந்தது. அதன் பின்னரே அவரொடு பழகவும், அவரது அன்பு கெழுமிய உரைகளைக் கேட்கவும், அவருடைய தனித்த - தூய வாழ்க்கையினை அறியவும் ஆன வாய்ப்புக்களைப் பெற்றேன். இன்று 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்ற நூலைப் படிக்கும் பேறு

பெற்றேன். ஆகவே தான் யான் தொடக்கத்தில் கூறியவாறு இந் நூலை நன்கு உணர - இந்நூலினுள்ளே திரு. வி. க வைக் காண - கண்டு கனிந்து உணர்ந்து மகிழ-முடிந்தது.

ஆசிரியர் சுந்தரனர் இதில் என்ன கூறுகிறார்? இதில் அவரை எவ்வாறு காணமுடிகின்றது? அவராகவே இந்நூல் திகழ்வது எங்ஙனம்? இவை எல்லாவற்றையும் இனித்தொடர்ந்து ஆய்ந்து பார்ப்போம். காந்தியடிகளின் வரலாற்றைக் குறிக்கும் நூல்கள் பலவுள. அவைகளைப்போல இதுவும் காந்தியடிகளின் வரலாற்றைக் கூற எழுந்த ஒரு நூலன்று என்பதை நாம் முதலில் உணரவேண்டும். ஆசிரியர் அவர்களே இந்நூல் எழுந்ததற்குரிய காரணத்தை நூலின் முகவுரையில் பின்வருமாறு குறிக்கின்றார்:

"இந்நூல் காந்தியடிகள் வரலாற்றைக் கூறுவதன்று..... இந்நூற்கண் விளங்கும் மூதற்பொருள் மூன்று: 1 மனிதன் எவன் என்பது. 2 ஒருவன் மனிதனுக எத்தகை வாழ்க்கை நடாத்தல் வேண்டும் என்பது. 3 மனித வாழ்க்கைக்கு இலக்கியர் மகாத்மா காந்தி என்பது"

இவற்றால், இவர் இந்நூல் எழுதப்புகுந்ததற்குரிய காரணத்தை நாம் நன்கு உணர்கின்றோம். ஒருவருடைய வரலாற்றை மட்டும் விரித்துக் கூறும் நூல் மக்களுக்குப் பெரும் பயனைத் தாராது. அதனோடு, அத்தகைய வரலாற்று நூலினை யாரும் எளிதாக எழுதி விடுதல் கூடும். ஆனால் ஒரு பெரியவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட பலவேறு நிகழ்ச்சிகளையும், அவர் அருளிய மொழிகளையும் வைத்துக் கொண்டு, அவற்றைச் செப்பம் செய்து, உரிய இடத்தில் அவற்றைத் தந்து நிறுத்தி, அவைகளின் மூலம் மக்களுக்கு அறிவு புகட்டுவ தென்பது எளிதான வேலையன்று; எல்லோருக்கும் இயலக் கூடியது மன்று. ஆனால் திரு. வி. க. அவர்களின் எழுத்து, இவ்வரிய செயலை மிக எளிதாக - திறம்படச் சித்தரித்துக் காட்டியிருக்கின்றது.

தொடக்கத்தில், மனிதன் யார்? என்ற வினாவை எழுப்பி அதற்குப் பின் வரும் விடையினை இருக்கின்றார்:

"ஆறுவது அறிவு விளங்கப் பெற்று அதன் வழி நிற்கும் மனிதன் தன்னுயிர் போல் மன்னுயிரைப் பார்ப்பவன். இரக்கமே அவன் உள்ளத்தில் குடிகொண்டு நிலவும். அவன் தனக்கென்று உலகத்தில் வாழான். தன் வாழ்க்கை மற்றவர்க்கே என்று அவன் கருதுவன். அவன் கொலை களவு கள் காமம் பொய் என்னும் ஐம் பெரும் பாவங்களுக்கு அஞ்சுவன். அவன் கரணங்களெல்லாம் அன்பு மயமாகப் பொலியும். விலங்கியல்பு அவனிடத்தில் தோன்று தல் அருமை. அன்னன் பிற உயிர்களின் துன்பத்தைத் தன் துன்ப மாகக் கொள்வன். இன்னோரன்ன இயல்பு வாய்ந்த ஒருவனையே **மனிதன்** என்று கூறலாம்"

இத்தகைய அழகிய உரைகள் யாரிடத்து முகிழ்க்கும்? அன்பர்களே, சற்று ஓர்ந்து பாருங்கள்! 'இத்தகைய மக்கள் உலகில் பெருகி, மாக்கள் அருகும் நாள் எந்நாள்? அந்நாள் அணித்தோ? சேய்த்தோ?' என மேலும் கூறி இரங்குகின்றார். அவர் பலகாலும் கூறி வருகின்றபடி - அடுத்து வாழ்க்கை என்ற பகுதியில் கூறியுள்ள வாறு மக்கள் இயற்கை வாழ்வு வாழத்தலைப் படுவராயின், அந்நாளே மனிதன் மனிதனுக வாழும் நன்னாளே அணித்தே காணலாம். அவரே கூறுகின்றார்: "அதை அணித்தே காண்டல் கூடும். அது மனிதன் முயற்சியைப் பொறுத்து நிற்கிறது" என்று. இயற்கை இயற்கை என, இயற்கையினை இறையாகக் கொண்டு அனைவரும் இயற்கையொடு பட்ட இன்ப வாழ்வு வாழ வேண்டுமென எழுதியும் பேசியும் வரும் பெரியாரல்லரோ நம் சுந்தரனார்! ஆதலினாலேதான், மனிதன் மனிதனுக வாழவில்லையே; அவன் என்று மனிதனுக வாழ்வான் என மனமுருகிக் கேட்கின்றார்.

'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற விழுமிய உரை 2000 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு தமிழ்ப் புலவன் உள்ளத்திலே முகிழ்த்தது. அது இன்று ஆசிரியர் திரு. வி. க வின் உள்ளத்தைப் பிணித்தது. இதன் பயனை சுந்தரனாரின் ஒவ்வொரு எழுத்திலும் பேச்சிலும் காண்கின்றோம்; இத்தொடரின் இலக்கியமாக அவரை நாம் பார்க்கின்றோம். இது தான், 'உலகத்தில் மனிதன் தன்னலங் கருதாது பிறர் நலங்கருதி வாழ வேண்டும்' 'நாம் பிறர்க்காக வாழ்கின்றோம் என்னும் எண்ணங் கொண்டு வாழவேண்டும்' 'மனிதன் பிறர் நலங் கருதும் அருளாளனுய் வாழ்தல் வேண்டும்' என்ற மணி மொழிகளாக அவர் உள்ளத்தினின்றும் மலர்ந்து எழுந்து விரிந்தது. மேலும், இதுவே இன்று 'பொதுமை வேட்டு' லாகப் பொங்கி ஓடுகின்றது. ஆதலினாலேயே இச்சிரிய கொள்கையினை நிலைநாட்டுவற்காகத் தம் நூலின் தொடக்கத்தில் தமக்கு இலக்கியமாகக் கீதையினையும், திருக்குறளையும் எடுத்துக்கொண்டார்.

வாழ்வுக்கு வேண்டிய சில முறைகளைக் கூறுமிடத்து, மகன் இளமையில் கற்பனகற்று பெற்றோர்ப்பேணி பெண்ணுடன் அன்பில் ஒன்றி, வறியார்க்கீந்து எளிய உணவு உடைகளை உண்டு உடுத்தித் தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெருவாழ்வை - அருள் வாழ்வைக் கொள்ளல் வேண்டுமென்கிறார். "உடலை நம்பாதே, உலகம் நிலையாதது, ஆசைகளை வெறு" என்று கூறி, இன்தமிழ் நாட்டைக்கெடுத்த ஒரு கூட்டத்தை அஞ்சாது கண்டிக்கின்றார். தம் வாழ்க்கையின் குறிக்கோள்களுள் இதனையும் ஒன்றாகக் கொண்ட வரல்லவோ நம்மணவழகர்! ஆகவே அவர் கூறுகிறார்: "காயமே இது பொய்யடா, காற்றடைந்த பையடா என்று பாடிக் கண்டதைத் தின்று, கள்ளுண்டு, பொருட் பெண்டிர் இன்பந்துய்த்து உடலில் ஒன்றரை அங்குல அழுக்கேறி ஊறத்திரிபவன் ஆண்டவன் அன்பனுகான்" என்று. வருங்கால உலகை மாண்புற ஆக்கும் மணிகளாம்

மாணவர்களே நோக்கி, 'அருமை மாணவர்களே!' என் அன்புடன் விளித்து "ஈதென்ன மாயும் உடல்; உடலே ஓம்பாதே என்று கூறும் போலிக் கூற்றுக்குச் செவி சாயாதேயுங்கள். மண்ணே வெறுத்தல் பெண்ணே வெறுத்தல் பொன்னே வெறுத்தல் என்ற வெறுப்புத்துறவு என்புருக்கி நோயாய் நாட்டை அரித்துக் குலைத்து வருகின்றது" என்று கூறுகின்றார். இதன்மூலம் உடலோம்பலின் இன்றியமையாமை யினை - இயற்கை வாழ்வின் ஏற்றத்தினை இனிது எடுத்து இயம்பு கின்றார். அவரே கேட்கின்றார் 'இவ்வியற்கை வாழ்வு வேண்டு வதா? அன்றே?' என்று. நீங்களே கூறுங்கள் இதற்கு விடையினை. இதனுள் சுந்தரனுரை நீங்கள் காணவில்லை என்று கூற இயலுமா?

மகன் வாய்மை காக்க வேண்டும்; மனச்சான்றின் வழி நிற்க வேண்டும்; பழிக்குப் பழி - மறந்தும் பிறன் கேடு சூழல் கூடாது என்று கூறுகின்றார்; இவற்றைக் கடைப்பிடிப்பவனே மெய்யறிவு பெற்றவனுவான் என்றியம்புகின்றார். பொறுமை மனிதனுக்கு வேண்டிய சிறந்த குணம். "பொறுமை யுடையவன்பால் எல்லா நற்குணங்களும் பொலியும். அவைகளுள் சிறப்பாகத் தோன்றுவன நான்கு: அடக்கம், உள்ளநிறை, உண்மை, அன்பு என்பன"— இவை திரு. வி. க. வின் எழுத்துக்கள். இவற்றினுள்ளே நீங்களும் அவரைக் காணுகின்றீர்களா? இல்லையேல் பின்வரும் அவரது மணிமொழிகளைப் படியுங்கள். அப்பொழுது காணுவீர்கள் உறுதி யாக அவரை. அதுமட்டுமன்று, அவரைக் கொள்கையில்லாதவர்-கோழமை என்று கூறுகின்றதே உலகம், அது எம்மட்டில் உண்மை என்பதையும் உணர்வீர்கள். பொறுமை என்பது பற்றி அவர் என்ன கூறுகிறார்?

"வாய்மையை அப்பனுகவும், மெய்யறிவை அன்னையாகவும் யான் கொள்கிறேன். இரண்டுங்கூடி ஈனும் பிள்ளை பொறுமை..... மெய்யறிவு விளக்கமில்லாவிடத்து விளங்கும் பொறுமை பொறுமை யாகாது. மாற்றுன் வலிமை கண்டு அச்சத்தால் வகிக்கப்படும் பொறுமை பொறுமை யாமோ? அஃது அச்சம்; கோழமை. சிலர் உள்ளத்தில் சினம் எரிபோல் மூண்டெழுந்து கனன்று கொண் டிருக்கும். அதை அவர் நடுக்கத்தால் வெளிப்படுத்தாது உள்ளே அடக்கிக் காலங்கழிப்பர். அவர் பொறுமையாளராகி விடுவரோ? அவர்க்குப் போதிய துணைவலி கிடைக்குமாயின், உடனே அவர் பொறுமை யிழந்து, பொருமை கொண்டு, பிறரைத் துன்புறுத்த எழுவர். இத்தகையோர் காலத்துக்கேற்றவாறு கையாளும் ஒன்று எப்படிப் பொறுமையின்பாற்படும்? மெய்யறிவு ஈனும் பொறுமை, எத்தகை வலிமை யுடையானைக் கண்டுழியும் நடுக்குறு அஞ்சாமை யையும் - எத்தகை இடுக்கண் நேரினும், பிறர் எக்கொடுமை செய்யினும், அவர்க்குக் கனவிலும் மறந்தும் தீங்கு நினையாது, அவர் கொடுமைகளை அன்புடன் ஏற்று வெல்லும் வீரத்தையும்-அடிப்படை யாகக் கொண்டது. ஆள் வலியும் படை வலியும் உள்ளபோது

அஞ்சாது நிற்பதும், அவை பிழந்தபோது அஞ்சி நடுங்குவதும் அஞ்சாமையின் பாற்பட்டன அல்ல என்பதும் மூண்டெழு சினத்தால் பிறரைத் துன்புறுத்த எழுவது வீரமன்றென்பதும் ஈண்டு உற்று நோக்கத்தக்கன."

இத்தகைய பொருளுரைகள் எங்கிருந்து பிறக்கும்? வீரரிடத்தா? கோழை இடத்தா? அவர் தனித்து ஒதுங்கி வாழ்வதன் பொருள் இப்பொழுது விளங்குகிறதன்றே? அதுபோல அவர் ஒதுங்கி வாழ்வதை உணர்ந்தவர்கட்கு, இப்பகுதி நன்கு விளங்குமன்றே! ஆகவேதான் ஒரு நூலைப் படிப்பதன் முன், ஆசிரியனின் வரலாற்றை அறிந்து கொள்வது நல்லதென்று அறிஞர் கூறுகின்றனர்.

அடுத்து, சத்தியாக்கிரகம் ஒவ்வொரு மனிதன் வாழ்க்கையிலும் வேண்டப்படுவது என்கிறார். சத்தியாக்கிரகம் என்பது 'உண்மை கடைப்பிடித்'தலே. சத்தியாக்கிரகம் என்பது அரசியலுக்கு மட்டு மன்று; யாண்டும் கொள்ளப்படுவது. ஊடல் என்ற பெயரால் குடும்பத்தில் நடைபெறுவது இச் சத்தியாக்கிரகமே என்கிறார். ஆம், ஊடலன்றே கூடற் கின்பம் தருவது! ஊடலில்லா வாழ்வு சிறக்குமா? சத்தியாக்கிரகம் அன்பை அடிப்படையாகக் கொண்டு, தீமை போக்க, நேரிய வழியில் எழுதல் வேண்டும் என்று கூறி மார்க்கண்டேயர் முதல் மெய்ப்பொருள் நாயனார் ஈறாக உள்ள சத்தியாக்கிரகிகளையும், அவர்தம் வாழ்வு நுட்பங்களையும் எடுத்தினிது விளக்குகின்றார். சத்தியாக்கிரகம் என்பதன் பிழிவாக அவர் கூறுவது: "சத்தியாக்கிரகம், அன்பு தியாகம் பொறுமை எவர்க்கும் இன்னு செய்யாமை முதலியவற்றால் ஆக்கப்பட்ட தொன்றாகலின், அது மனித வாழ்க்கையைச் செம்மை செய்யும் நீதாம்." இதனை ஓர்ந்து கடைப்பிடிக்க!

'சாதுநிலை எய்தியவன் மனித வாழ்வின் எல்லை கண்டவனாகின்றான்.' 'சாது நிலையென்பது தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் ஒன்றென்க' என்றெழுதுகின்றார் சாது அச்சுக்கூடத்தவ மூனிவர். சாது வடிவமாக - தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியராக - பற்றற்ற பெருமகனை இலங்கும் மணவழகர், "உலகை வெறுத்துக் காட்டுக்குப் போகிறவனே சாது என்று எங்ஙனம் சொல்வது?.....உலகுக் குழைக்கத் தன்பாலுள்ள குறைகளை அறவழியில் போக்கிக் கொண்டவனே சாது" என்று கூறுவதில் ஐயமுண்டோ?

'பிறப்பு இன்பமா? துன்பமா?' என்ற வினாவை எழுப்பி 'யான் அதை இன்பமென இறும்பூதெய்துகின்றேன்' என்று விடையளிக்கின்றார், தொண்டிற்கெனவே பிறந்த தூயவர். மீண்டும் மீண்டும் தமிழ் நாட்டிலேயே தோன்றி தமிழின்பத்தையே பருகிக்

காலங்கழிக்க விரும்புகின்றேன்; என்னருமைத் தமிழ் மக்கட்கு உழைக்க விரும்புகின்றேன் என்று அடிக்கடி கூறும் பெரியாரல்லவா நம் முதலியார்! அவர் பிறப்பினை அஞ்சுவரோ? அஞ்சாரன்றே!

மேலும், பிறவியிலுள்ள உயர்வு தாழ்வுகளைப் பெயர்த்தெடுத்து ஒழிக்கப் பாடுபடுகின்றவர் அல்லவா நம் பெரியார்! தொழில்பற்றிப் பிரிந்த நாற்பிரிவு, பின்னர் பிறப்பு வழிச் சாதியாக மாறினமை யாவரும் அறிந்ததே. இந்நாற்பிரிவே வருணச்சிரமம் என்று கூறப்படுவது. இவ் வருணச்சிரமம் பிறப்பு வழியே இயங்க வேண்டு மெனக் காந்தியடிகள் கூறுகிறார். ஆனால் சுந்தரனார் இதனை ஒப்புக் கொள்ளாது,

"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என வருஉந் திருவள்ளுவர் மொழியே இயற்கை நோக்குக்கு அரண் செய்வதாகும்" "பிறப்பு வழித் தொழில்கள் நடைபெறல் வேண்டு மென்று கட்டுப்படுத்துவது இயற்கையை ஒறுப்பதாக முடியும்" என்று கூறி மறுக்கின்றார். ஆகவே, காந்தியடிகளிடம் இவர் கொண்ட அன்பு, இவரது நேர்மையினை - கொண்ட கொள்கையினை மாற்ற வில்லையன்றே! தீண்டாமையையும், பெண் பிறவி இழிந்தது என்ற பேய் மனப்பான்மையையும் பல விடங்களில் கண்டிக்கின்றார்.

தாய் மொழியாம் தமிழ் மொழியைப் பேசத் தொடங்கினால் சொல்ல வேண்டுவதில்லை. தமிழிலே ஊறிய வாழ்க்கையன்றே அவரது வாழ்க்கை! 'ஒருபோது முடியணிந்து, கோலேந்தி, கலை யணிந்து, அரியாசனம் வீற்றிருந்த நம் அன்னை'—என்று பேச்சைத் தொடங்குவாரானால் அதற்கு முற்றுப் புள்ளிதான் ஏது? வைத்தாலும் நாம் விடுவோமா ? நாளெலாம் கேட்டுக்கொண்டிருக்க லாமே அந்தப் பேச்சை. உளம் கிளர்ந்து எழுமே! உணர்வு பீறிடுமே! பின்வரும் திருமொழிகளை நோக்குக.

"தமிழனைப் பிறந்து தமிழ்ச்சுவை யுணர்ந்த ஒருவன் வீடு பேற்றையுங் காதலியான். அவனுக்கு வீடுபேறு தமிழ் மொழி இன்பமேயாகும். அவன் மீண்டும் மீண்டும் தமிழ் நாட்டில் தமிழனைப் பிறந்து தமிழ்ச்சுவை மாந்தி இன்புறவே விரும்புவன்."

இதில் இவர் உள்ளம் தெள்ளத் தெளிய விளங்குகிறதன்றே? 'மீண்டும் பிறப்புண்டேல் யான் பஞ்சமனுய்ப் பிறக்க விரும்பு கின்றேன்' என்று கூறிய காந்தியடிகளை நோக்கி, 'அடிகள் தமிழ்க் குடியில் தோன்ற வேண்டு'மென முறையிடுகின்றார். சுந்தரனாரின் தமிழ்ப்பற்று இருந்தவாறு என்னே! 'தாய் மொழிப்பற்றில்லாதவன்

தாய் நாட்டுப்பற்றில்லாதவன்' என்பது இவரது கொள்கையல்லவா? வாழ்வு அல்லவா? கல்வியிலும் கட்டாயம் கூடாதென்பது இவரது கருத்து. ஏன்? கட்டாயம் என்பது இயற்கை நெறிக்கு மாறுபட்டதன்றே! கலியினை இவர், இசை காவியம் ஓவியம் என முக்கூறுபடுத்திக் கூறும் திறன் பெரிதும் போற்றத்தக்கது; பேணத்தக்கது.

பெண்ணுரிமைக்கெனப் பெருந் தொண்டாற்றிய - பெண்ணின் பெருமை பொறித்த பெம்மான், 'இல்லறமே நல்லறம்' என்கிறார். 'இல்வாழ்க்கை ஓங்கி வளர்க! வளர்க!' என வாழ்த்துகின்றார். காதல் மணமாம் அன்பு மணம் கனிக என்கிறார். அன்றே, நாட்டில் ஒருவரிடத்துக் கட்டுப்பட்டுக் கிடக்கும் அன்பு, முறையே வளர்ந்து யாண்டும் அருள் வெள்ளமாய் ஓடும் என்கிறார். பெண்ணைக் காமப் பொருளாகக் கருதுவதோ, அவளை நீத்துக் காட்டுக்கோடுவதோ கூடாதென்கிறார்.

"பெண்ணினல்லாள் தாயாகவும் சகோதரியாகவும் மனைவியாகவும் நின்று உலகை வளர்க்கின்றாள். ஒருத்தி ஒருவனுக்குத் தாய்; இன்னொருவனுக்குச் சகோதரி; மற்றொருவனுக்கு மனைவி. பெண்மை எவ்வெவ்வாறு உலகுக்குத் துணைபுரிகிறது பாருங்கள்! பெண்ணினல்லாளிடம் பெண்மை தாய்மை இறைமை என்னும் மூன்று இயல்புகள் சிறந்து விளங்குகின்றன." "பெண்ணை விடுத்து ஓடுவது 'துறவு' என்ற கொள்கை எப்படியோ உலகில் மூளைத்து விட்டது. அம்மூளை நச்சு மரமாகி உலகை எரிக்கிறது" என வருஉம் மொழிகளை உன்னுக. பெண்ணை வெறுத்தல் என்ற இடையில் மூளைத்த இப் பேய்க்கொள்கை, என்று நம் நாட்டை விட்டுத் தொலையும்? இப் போலித் துறவின் உண்மை கூறி, பெண்ணினல்லாட்குப் பெருவாழ்வு அளித்த பெரியாரை எம் மொழிகளால் வாழ்த்துவேம்? துறவு என்றால் காட்டுக்கு ஓடுவதா? துய்க்க வேண்டிய பருவத்தில் அரும்பெறல் துணைவியை இழந்த தூயவர் காட்டுக்கா ஓடினர்? இல்லையே. மக்கள் தொண்டன்றே ஆற்றி வருகின்றார்! இம்மாண்புறு செயலை உலகம் மனங்கொண்டு திருந்துமாக!

"பெண்ணினல்லாளிடம் உள்ள மூன்று இயல்புகளுள் தாய்மையே சிறந்தது. தாய்மையே உலகை வளர்ப்பது. தாய்மையை வளர்ப்பது மனிதனுக்கு அறமே" என்று கூறுகிறார். இவ்வாறு இவரைக் கூறச் செய்தது எது? சென்ற ஆண்டின் முன் ஆண்டு வரை அன்னை சின்னம்மையின் அன்பில் தவழ்ந்து வளர்ந்தவனன்றே! விதை ஒன்று போடச் சுரை ஒன்று முளைக்குமோ? தாய்மை தரணியில் வாழ்க! வளர்க! வெல்க!

நாடு அழைத்ததும் நல்லாசிரியன் நிலையைத் துறந்த நாயகர் - தியாக வடிவினர், தியாகத்தைப்பற்றிக் கூறுகின்றார். 'தனக்குள்ள

எல்லாவற்றையும் உவகையோடு பிறர்க்களிக்கும் மனமுடைமை தியாகத்தின் இயல்பு' 'உள்ளதை ஈந்து உவப்பவன் தியாகி' என்பன இவர்தம் அனுபவ உரைகள். அடுத்து வரும் அருமணிகளைச் சற்று ஆழ்ந்து பாருங்கள் : "ஆண்டவன் அருள் ஒவ்வொருவரையும் மாய வாழ்வினின்றும் தடுத்தாள்கிறது. அவ்வருள் வழி வாழ்வோர் தியாக மூர்த்திகளாய் அகவிளக்கம் பெற்று மற்றவர்க்கென வாழும் பெரு வாழ்வு பெறுவர்."—'தேசபக்தன்' ஆரிசிய பீடத்தினை அலங்கரிப்பதன் முன்னுள்ள திரு. வி. க. வை இதில் காண்கின்றீர்க ளன்றே! அவரது வாழ்வு முழுவதுமே தியாக வாழ்வு; தியாக வடிவம் திரு. வி. க.

'இயற்கை வாழ்வு' என்ற பகுதியில், பிரமசரியம் என்பது பற்றிக் குறிக்கின்றார். அதில் 'பிரமசரியம் நான்கு ஆச்சிரமங்களிலும் விரவி நிற்கும். இல்லறத்திலும் பிரமசரியம் உண்டு' என்று கூறுவது என் சிந்தையைப் பிணித்தது. 'ஒருத்தியும் ஒருவனும் அன்பால் விழுங்கப்பட்டுக் காமக் கிளர்ச்சிக்கு இரையாகாது, உற்ற வயதில் பிள்ளைப்பேறு கருதிப் புரியுங் கலவி இயற்கையின்பாற்பட்டது; ஆங்கு பிரமசரியம் எங்ஙனம் அறுபடும்?' என்று கேட்பதற்கு, நீங்கள் அளிக்கும் பதில் என்ன?

அஹிம்சையைப்பற்றி யாது கூறுகிறார் ஆசிரியர்? திரு. வி. க. பிறந்தது புலால் உணவு கொள்ளாத குலம். ஆகவே, ஊன் உண்ணுமையைப்பற்றி அவர் என்ன கூறுவார்? இதுபற்றி என்ன கூறுகிறார்? "புலால் உண்ணுமையின் நோக்கமென்னே? உயிர் வதை கூடாதென்பது.....கொலை செய்யாது பிறரை வருத்தல், பிறர் உழைப்பால் வாழ்தல், வட்டியால் பிறரை நெருக்கல், களவாடல், கட்குடித்தல், பிறர்மனை விழைதல், பொய் பேசல், இன்னோரன்ன பிற யாவும் உயிர்வதையின்பாற் பட்டனவே." ஆகவே, எல்லாக் கொடுஞ் செயல்களையும் செய்யும் ஒருவன் ஊன் உண்ணவில்லை என்ற ஒரு காரணத்தாலேயே அருளாளனாக மாட்டான் அன்றே!

சுதேசியம், சுயராஜ்யம், சத்தியாக்கிரகம் என்பனபற்றி எல்லாம் விரித்துக் கூறுகின்றார். நாட்டு விடுதலை வாராததேன்? மணவழகர் கூறும் மறுமொழி இது: "பெண் மக்கள் கண்ணீர், தீண்டாதார் மன வருத்தம், பௌத்த சமண அடிகண்மாரை வதைத்த வதை முதலிய மறச் செயல்கட்குக் கழுவாய் தேட ஒருப்படாத நாடு உரிமைபெற ஆண்டவன் திருவுளங் கொள்வனே?" கொள்ளா னன்றே!

தமிழ் நாட்டில் தொழிலாளர்கட்காகப் பெரும்பாடு பட்டவர் - படுபவர் திரு. வி. க. என்பது உலகறிந்த ஒன்று. தொழிலாளர் இயக்கத்தை இந்திய நாட்டில் முதன் முதல் விதைத்தவருள் இவரும் ஒருவர். இவரது காலமெல்லாம் தொழிலாளரிடையே கழிந்தது -

கழிந்து வருகிறது. பொருளில் சமத்துவம் வேண்டி நிற்பவர் இவர். சிலர் மட்டும் செல்வராக வாழ்தல் இயற்கையாகா தென்பவர். எனவேதான், "செல்வர் வாழ்வு திருட்டு வாழ்வென்பதில் என்ன ஐயம்?.....இயற்கை வாழ்விற்கு மேற்பட்ட பொருளை ஒருவன் பெறுவதும், காப்பதும், பயன்படுத்துவதுங் களவல்லவோ?" என்று கேட்கின்றார்.

சுந்தரனார் சமரச சன்மார்க்கத்தை வேட்பவர் - உலகில் நிலை நிறுத்தப் பாடுபடுபவர் என்பது யாவரும் அறிந்ததே. சாதி மதச் சண்டையினை வெறுப்பவர். கடவுள், நாடு மொழி சாதி சமயம் கடந்த தனிப்பொருள் என்று நாடொறும் கூறி வருபவர். அதனாலன்றே அவர் சைவராயிருந்தும், 'முருகன் அருள் வேட்டல்'லோடு, 'திருமால் அருள் வேட்டல்'லையும் பாடினார். இன்று 'பொதுமை வேட்டல்'லும் அவரிடத்திருந்து பிறந்தது. "சமயம் வேறு, சமய வாதம் வேறு; இரண்டையும் ஒன்றுக்கிக் கலாம் விளைத்தலாகா" தென்கிறார். இன்னும் சற்றுக் கடுமையாக "சமயப் போரிடுவோரைக் காட்டினும் நாத்திகரே மேலானவர்" என்று அவரைக் கூறச் செய்தது, இன்று நம் நாட்டில் நிகழ்ந்து வரும் பலவேறு வகைப் பட்ட சாதி மதச் சண்டைகள் அன்றே! இவை எல்லாம் ஒழிந்து, அவர் கனவு காணும் இன்ப உலகம் மலர்வது எந்நாள்? அந்நாள் விரைவில் வருவதாக!

நான் கண்ட திரு. வி. க நூலை - உள்ளத்தை - உருவத்தை விளக்கி இன்னும் எவ்வளவோ எழுதிச் செல்லலாம். நான் மட்டும் கண்டால் போதுமா? நீங்களும் காண வேண்டாமா? ஆகவே இத்துடன் அமைகின்றேன்.

ஆனால், ஒரு வார்த்தை! தமிழ் நாட்டின் அறிவுப் பெட்டகத்தை - தொண்டே ஓர் உருவெடுத்து வந்த தோன்றலை - மகளிர் மாண்புரைத்த மாமணியை - தொழிலாளர் துயர்துடைத்த தூயரை - இளமைக்கு விருந்தளித்த ஏந்தலை - தியாக உருவாம் தவ மூனியை - பொதுமை வேட்கும் புத்தரை - விடுதலை விரும்பும் வீரரை - தமிழ் வளர்த்த தலைவரை - நம் நாடு இன்னும் நன்கு அறிந்து போற்றவில்லை. இனியாவது அறிந்து போற்றிப் புகழ்மாக!

பொதுமை வாழ்த்து *

உருவமில் இறைவன் ஒருவன் என்றே
அருளிய மகம்மது பெருநபி வாழி
உன்னற் கரிய உருவமில் ஒருவனை
உன்னற் குரியனுய் உதவ உடலளி
கன்னி இயற்கை அன்னை வாழி
'நேசி பகைவரை' என்று பேசி
ஆணி அறைந்த மாணில நிடத்தும்
இரக்கங் காட்டிப் பரக்கச் சிலுவையில்
நின்ற கிறிஸ்து அன்பு வாழி
கொலேயர சோங்கிய நிலேயில் தோன்றி
'அஹிம்ஸா பரமோ தர்மா' என்றும்
'தயா மூல தர்மா' என்றும்
அருளறம் வளர்த்த அருகன் வாழி
சிலமே திரண்ட கோலங் கொண்டு
போதியி னடியில் சோதனை செய்து
ஒருமையில் நின்று தரும முணர்த்திய
சத்திய ஞானப் புத்தன் வாழி
பாரதப் போரிடைச் சாரதி யாகிப்
பயன்கரு தாத வியன்திருப் பணியாம்
பாதை காட்டும் கீதையை ஓதிய
கொண்டல் வண்ணக் கண்ணன் வாழி
நாதக் கொடியும் போதவிந் தூர்தியும்
ஞான வேலும் மான இச்சா
சத்தியும் எல்லாச் சித்தியும் உடைய
அமரன் அழகுக் குமரன் வாழி
காமனைக் காய்ந்து காலனைக் கொன்று
மும்புரம் எரித்தே அப்புர முள்ள
கல்லா லடியில் சொல்லா மற்கொலும்
மோனம் வாழி சாந்தம்
வாழிசன் மார்க்கம் வாழி இனிதே.

---

* ஆசிரியர் திரு. வி. க. அவர்களின் 'பொதுமை வேட்டை'யி னின்று எடுத்தது.

குறிஞ்சிப் பாட்டு

[இக்காலக் காட்சி]

—திரு. ஈ. த. இராசேசுவரி அம்மான், M.A., L.T.

வேலன்:—(பாடுகிறான்)

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவ தெங்கும் காணேம்
பாமரராய், விலங்குகளாய், உலகனைத்தும்
இகழ்ச்சிசொலப் பான்மை கெட்டு
நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ? சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும்வகை செய்தல் வேண்டும்."

முருகன்:—பாடியது போதும். காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு. தெலுங்கர், "தெலுகு தேட்ட; அரவம் அத்வானம்" என்பர். தெரியுமா?

வேலன்:—அப்படி நான் ஒன்றும் பேசவில்லை. நாம் நம் மொழியைப் புகழ வேண்டுவதும் இல்லை. மேனாட்டார்கள் இதனைப் படித்து இதிலேயே சொக்கவில்லையா? போப் (Rev. Pope) என்ன சொல்கிறார்? கோவர் (Rev. Gover) என்ன சொல்கிறார்? கால்ட்வெல் (Rev. Caldwell) என்ன சொல்கிறார்?

முருகன்:—வாட், காட், ஊஸ், கூஸ் என்று பேசுகிற அவர்களுக்கு இது இனிக்கலாம். கம்பீரமான வடமொழி முன்னே இந்த வழ வழ, குழ குழ எங்கே? தெய்வ மொழி அல்லவா அது!

வேலன்:—எடுத்தும், கனைத்தும், உரப்பியும் பேசுகிற அந்த மொழி தெய்வமொழிதான்! கிம்புருஷர் முதலிய தெய்வங்களில் குதிரை முகம் உண்டு; அதுபோல இந்த மொழியும் கனைக்கும். பல பல தெய்வங்கள் முகம் கோணுவதுபோல முகத்தைக் கோணிப் பேசினால்தான் வடமொழி வரும். ஆனால், மக்களுக்கு இயற்கையான மொழி தமிழ் மொழியே. தமிழ் மொழிதான் கடவுள் மொழி. கைலாயத்திலே திரு உலா அரங்கேற்றினார்கள். நம்மாழ்வாரைத் தமிழிலேயே வைகுந்தத்தில் வரவேற்றார்கள். ஆகையால், அங்கெல்லாம் தமிழ்தான்.

முருகன்:—இதெல்லாம் இருக்கட்டும். வடநூல்களிலுள்ள கருத்தாழத்தை என் என்று சொல்வோம்!

வேலன்:—இவ்வாறு வடமொழியைப் புகழ்ந்து தமிழை இகழ்ந்து ஒருவன் செத்தானும்; பின்னே, நக்கீரர் அவனை உயிரெழுப்பினாராம்.

முருகன்:—செத்தாரை எழுப்புவதெல்லாம், இப்போது புதிது புதிதாக இராமலிங்க சுவாமிகள் எழுகின்ற கதை போல ஏமாற்றம் தான்.

வேலன்:—மைசூரிலே இருந்த ஒரு பெரிய வடமொழிக் கலைஞரை வைணவப் பெரியாரான பட்டர் திருநெடுந்தாண்டகத் திலே, "மைவண்ண நறுங்குஞ்சி" என்ற பாடலின் பொருளைக் கூறி மயக்கித் தம் சிடராக்கிக் கொண்டார். அவர் நஞ்சியர் எனத் தமிழ் நாட்டில் நாலாயிரத்திற்கும் பொருள் விரித்து உரைத்து எல்லோர் மனதையும் கவர்ந்து வந்தார். மணவாள மாமுனிவர் முதலியோர் வடமொழிக் கடலின் நிலைகண்டுணர்ந்தும் தமிழையல்லவா புகழ் கின்றார்கள்!

முருகன்:—இவர்கள் எல்லாம் உணர்ச்சியால் நிலை திரிந்தவர் களோ என்னவோ? ஆங்கிலத்தில் ஹிஸ்டீரியா (Hysteria) என்று சொல்லுகிற பேய் நோய் கொண்டவர்கள் போலும்!

வேலன்:—பாவம்! ஹிஸ்டீரியா ஆண்களுக்கு வாராது அப்பா! அது கிடக்கட்டும். தமிழ் மொழி நூல்களை ஓதினால், மனம் அதிலே ஈடுபட்டுப் பொருளை எளிதிலே உணர்ந்து கொள்வதால், வடமொழி நூல்களின் வழக்கே ஒழிந்து போகும்; ஆதலினால், தமிழ்நூலை ஓதுதலாகாது என அப்பைய தீக்ஷிதர் கூறுவது தெரியுமா? இவருக்குமா ஹிஸ்டீரியா!

முருகன்:—அப்படியா கூறுகிறார்?

வேலன்:—அவருக்கு முன்னே **ஆரிய அரசன் பிரகதத்தன்** என்பவன் சங்ககாலத்திலே வாழ்ந்திருந்தான். "தமிழிலே என்ன உண்டு" என இகழ்ந்திருந்தான். அவனுக்குத் தமிழறிவினை ஊட்டக் **கபிலர்** குறிஞ்சிப் பாட்டுப் பாடினாராம்; அரசன் தமிழிற்கு அடிமையாகினனும்.

முருகன்:—எல்லாம் கதை!

வேலன்:—நீரும் நானும் வாழ்ந்ததும் நாளைக்குக் கதையாகத் தான் முடியும்! **வெல்ஸ்** (H. G. Wells) என்பவரிடம் **காலப் பொறி** (Time Machine) ஒன்று வாங்கிக்கொள்ளும்; அந்தப் பொறியில் ஏறிச் செல்லலாம். காலம் நாளை நாளை என்று ஓடினால், இந்தப் பொறி நேற்று நேற்று என்று ஓடும். 2000 ஆண்டுவரை பின்னே ஓட்டிக் கொண்டுபோம். அங்கே நின்று, காலத்தை முன்னே ஓடச் செய்யும். குறிஞ்சிப் பாட்டை நேரே கண்ணால் பார்க்கலாம்.

முருகன் :—காலப்பொறி யொன்று இருக்கிறது. இன்றுதான் வாங்கினேன்; அதனைக் காட்டவே இங்குவந்தேன். இதோ இருக்கிறது; உங்களுக்குத் தெரிய வில்லையா இது? காலந்தான் கண்ணுக்குத் தெரியாதே! அதனால் தான் தெரியவில்லை. அதிருக்கட்டும். கபிலர் என்ன, கபில மகரிஷியா!

வேலன் :—அந்தக் கபிலரை விட இவர் பெரியவர். இவரை நச்சினார்க்கினியர் முதலியோர் எல்லாம், அகத்தியரோடு வைத்து ஒருங்கு எண்ணுகின்றனர்.

முருகன் :—ஓ! ஓ! ஆதிக்கும் பகவனுக்கும் பிறந்த பிள்ளை என்று சொல்கிறார்களே, அவரா? கபிலர் அகவல் பாடி இருக்கிறாரல்லவா? அது ஒரு நல்ல புத்தகம்.

வேலன் :—ஆம் சிறந்த நூல். ஆனால், அந்த அகவல் போன நூற்றாண்டிலே வேறு ஒருவர் எழுதியது எனப் பாம்பன் சாமிகள் கூறுவது உண்டு. குறிஞ்சிப் பாட்டுப் பாடியவர் ஒரு அந்தணாளர்.

முருகன் :—ஆனால் அவர் ஆரியரா?

வேலன்:—ஆரியர் என்றால் என்ன? யான் அறியேன். ஆனால், இவர் தமிழ்பேசியவர்; தமிழ் பாடியவர்; பாரி என்ற வள்ளலின் உயிர்த் தோழர். பாரியை மூவேந்தரும் முற்றுகை யிட்டபோது, புரவிகளை விட்டு நெற்கதிர்களைக் கொண்டுவரச் செய்து பல நாள் அவனுயிரைக் காப்பாற்றினர். அவன் இறந்த பின் அவன் மகளிரைப் பிறர்க்கு மணஞ் செய்ய முயன்று, கடைசியில் பார்ப்பார் கையில் ஒப்படைத்துத் திருக்கோவலூரில் தீக்குளித்தாராம். அவர் நட்பின் பெருமை அது. பாரி மகளிரைத் தம் மகளிராகவே கருதிவந்தார். பெண்கள் நல்ல வாழ்வு வாழவேண்டும் என்பதே அவருடைய குறிக்கோள். பேகன் என்ற மற்றொரு வள்ளல், தான் காதலித்த கண்ணகியைப் புறக்கணித்தான். அந்த இரு காதலரையும் ஒன்று சேர்க்கப் பெரும்பாடு பட்டார் கபிலர். **"காதல் வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை"** என்பதே குறிஞ்சிப்பாட்டின் கருத்து.

முருகன் :—அதில் என்ன பெருமை?

வேலன் :—அன்புதான் தமிழர் கண்ட கடவுள். 'யான் நீ என்ற வேற்றுமை யின்றி அன்பாக வாழ்வதே கடவுள் வாழ்க்கை. வேறு வேறு நிற்கும் இவர்கள் ஒன்றுவது அன்பு உலகிலேதான். அதனைக் காதலரிடம் காண்கிறோம். வெறும் காமம் அல்ல இது. உயிர்ப்பண்பின் ஒற்றுமையே காதல். ஆன்ம நேய ஒருமைப்பாட்டில் ஒளிரும் கடவுட்டன்மையே காதல்வாழ்க்கை. காதல் இல்லாதபோது கற்பு எல்லாம் வெறும் கற்பனையே; கட்டாய வாழ்க்கையே.

முருகன் :—ஆரிய அரசன் குறிஞ்சிப் பாட்டு கேட்டு என்ன ஆனான்?

வேலன் :—தமிழன் ஆனேன். தானும் அகப்பாட்டுப் பாடினேன். குறுந்தொகையில் ஆரிய அரசர் பிரமதத்தன் என ஒரு ஆசிரியர் வருகிறார். அவர் இந்த அரசனே என எண்ணுகிறேன். இவ்வாறு தமிழ் நாகரிகம் பரவி வளர்ந்து வருகிறது.

வேலன் :—எந்த நாட்டிற்கும் இந்த அன்பு நாகரிகம் பொது. இந்த அன்புடையார் அனைவரும் தமிழரே. "யாதும் ஊரே; யாவரும் கேளிர்." இந்த உட்கோளை அல்லவா உலகம் போற்றுகிறது. இதனைப் பரப்புவ தல்லவா சிறந்த தொண்டு? இத்தகைய தொண்டு செய்பவரே "பொய்யடிமை இல்லாத புலவர்." கபிலர் அத்தகையர். இத்தகைய அடியார்களே வேண்டும்.

முருகன் :—நீரும் காலப் பொறியில் ஏற வருகின்றீரா?

வேலன் :—என்னை மட்டும் விட்டுவிட்டுப் போக எண்ணுகிறீரா? என்ன?

முருகன் :—சரி, உட்காரும்!

(புதுக்காட்சி தோன்றுகிறது)

வேலன் :—இதோ! சங்ககாலத்திற்கு வந்துவிட்டோம். கபிலர் அதோ பிரகதத்தரோடு பேசுவதைப் பார்த்தீரா!

முருகன் :—ஆம்.

ஆரிய அரசன் பிரகதத்தர் :—கபிலரே! தமிழின் பெருமையைக் காட்டப் போகிறேன் என்றீரே, எப்போது காட்டப் போகிறீர்? என் மனம் அதனை அறிய மிக மிக அவாவுகிறது.

கபிலர் :—அதனைக் காணக் கவியுலகத்திற்குச் செல்ல வேண்டும். வருகிறீரா?

பிரகதத்தர் :—கவியுலகமா? எங்கே? எப்படிப் போவது?

கபிலர் :—எங்கும் போக வேண்டுவதில்லை; மனத்தை ஓட விடாமல் உணர்வு மயமாக நின்றால் அங்குச் செல்லலாம். நான் பாடும் பாட்டே அங்கு உம்மைக் கொண்டு செல்லும். அந்த உலகிற் புகுமின்!

பிரகதத்தன் :—நானும் கவியானால் அன்றோ கவியுலகில் வாழலாம்!

கபிலர் :—நீரும் அங்குச் சென்றதும் கவியாவீர். இதோ பாரும் அந்த உலகை!

(புதுக்காட்சி தோன்றுகிறது)

தலைவி :—எத்துணை நாள் தலைவரைப் பாராமல் இருப்பேன்?

தோழி :—திருமணத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பார். இவை எல்லாம் ஒரு நாளில் முடியுமா? உன்னையே பார்த்துக் கொண்டிருந்தால், ஏற்பாடுகளை யார் செய்வது?

தலைவி :—பார்ப்பதிலும், களிப்பதிலும் என் மனம் செல்லவில்லை. உனக்குமா என் மனம் தெரியவில்லை! கொடிய விலங்குகள் நடையாடும் மலையிலும் காட்டிலும் வரும்போது அவருக்கு என்ன ஆகுமோ என்றே அஞ்சுகிறேன். மழை பெய்திருப்பதால் மலை வழியில் இன்று சறுக்கித் தவறுதபடி அவரடியைத் தாங்க என் மனம் சென்றது.

தோழி :—'கருங்கதிர் வெம்மையிற் காதலன் தனக்கு நடுங்கு துயர் எய்தி நாப்புலர வாடித் தன் துயர் காணுத் தகைசால் பூங் கொடியே'! நீ வாடுவது அழகா? வீரப் பெரியர்களைப்பற்றி நீ நடுங்குவது அவர் வீரத்திற்குக் குறைவல்லவா?

தலைவி :—சந்தன மரத்திலே கட்டின தேன், சந்தனத்தோடொன்றுய் நறுமணம் வீசுவதுபோலத் தலைவரோடு ஒன்றுய் அவர் எண்ணமேயாக இருக்கின்றேன். ஆம்; அவருக்குத் தீமை வருமோ என்ற எண்ணம் தோன்றினலும் மனம் நடுங்குகிறது.

தோழி :—சரி, ஒன்றுய்ப் போகவே உன் அச்சமும் அவரைப் பிடித்துக்கொள்ளுமா? வீரமெல்லாம் கோழையாகப் போகுமா?

தலைவி :—விளையாடாதே! அவர் வீரமா குறையும்?

தோழி :—உனக்கு வீரம் காணுமே!

தலைவி :—எனக்கா? எதற்கு அஞ்சுகிறேன்? இருதலைப் பறவைபோல ஒருயிரும் ஈருடலுமாகத் தலைவரும் நானும் ஆய்விட்டோம். அந்த வீரம் எனக்கும் உண்டு.

தோழி :—அழுகிற வீரத்தில் உனக்கு இணை யார்! இருதலைப் புள்ளாயிற்றே! அவருக்குத் தீங்கு நேராத முன்பே இங்கு நடுங்கலாமா? பொருத்தமாகக் காணுமே! அன்றியும், நீ வருந்தினல் இருதலைப் புள்ளின் மற்றைப் புறமும் வாடுமல்லவா? அவரை வீணே ஏன் வாட்டுகிறுய்?

தலைவி :—ஆம், நீ சொல்வது சரி. பொறுத்துக் கொள்வதே என்னுடைய கடமை. உன்னுடைய திறமையே திறமை. இப்படி ஏதேதோ சொல்லித் தேற்றுகிறுய். ஆனல், அவர் இன்று வாராவிட்டால் நீதான் சென்று அழைத்துவர வேண்டும்.

தோழி :—அப்படியே செய்கிறேன். நம்முடைய சிறு பெண் களைக் கொண்டு கூத்தொன்று ஏற்பாடு செய்தோமே, அதனை நன்றுக நடத்துகிறுர்களா?

தலைவி :—அதுதான் எனக்கு ஆறுதல். மிக நன்றுக நடத்துகிறுர்கள். அதைப்பற்றி இப்பொழுது என்ன?

குறளன் :—(வருகிறுன்) தோழியம்மா! உங்களைப் பெரிய அம்மையார் பார்க்க வருகிறுர்கள்.

தோழி :—என்னையா! என்ன அவசரம்? அங்கு ஏதாவது உண்டா?

குறளன் :—சின்ன அம்மா வாட்டமாக இருக்கிறதைப்பற்றி உங்களைக் கேட்கலாம் என வருகிறார்கள்.

தோழி :—பழம் நழுவிப் பாலில் விழுகிறது. நீ உன் சிறுமிகளை இந்தக் குறளனுடன் அனுப்பு. தாய்மார் எதிரே அந்தக் கூத்தை அவர்கள் நடத்தவேண்டும். அனுப்பிவிட்டுப் பலகணி வழியாக வேடிக்கையைப் பார். அழாதே ! எல்லாம் நினைத்தபடியே நடக்கிறது. வா! அந்தச் சிறுமிகளைக் கூப்பிடலாம். குறளா, இங்கே வா ! அம்மா வருவதற்குள் வந்து விடலாம்.

* * *

நற்றாய் :—என்ன? தோழி, ஒருவாறு இருக்கிறாய்?

செவிலி :—எல்லாம், நம் குழந்தையைப் பற்றித்தான். நாளுக்கு நாள் இளைத்துப் போகிறாள். ஒருவரோடு பேசுவதும் காணும். விளையாடவும் போவதில்லை. ஏதோ மனவருத்தத்தில் ஆழ்ந்தவள்போல் இருக்கிறாள்.

நற்றாய் :—நானும் அப்படித்தான் எண்ணிக்கொண்டே இருக்கிறேன். அவள் தந்தையாருக்கும் இதே ஏக்கம். அவளுடைய அழகெல்லாம் கெட்டது. தோளும் மெலிந்தது. வளையல் கையோடே கழன்று வருகிறது. துரும்பு துரும்பாக இளைத்துப் போயிருக்கிறாள். பார்ப்பவர்களுக்கு ஏசவும் இடமாயிற்று.

ஒரு பெண் :—மருத்துவன் தாமோதரனிடம் காட்டுவது தானே! தீராத நோயெல்லாம் நீர்க்கின்றாரே.

செவிலி :—என்ன மருந்து கொடுத்தும் நோய் தீர்ந்தபாடில்லை. 'மனநோய்க்கும் உண்டோ மருந்து?' என்று பாடிவிட்டார் அவர்.

மற்றொரு பெண்:—கழங்கு பிடித்துப் பார்த்தால் தெரியுமே? அடுத்த ஊரிலே கட்டுவிச்சி ஒருத்தி இருக்கிறாள். இன்றே பாருங்கள்!

செவிலி:—அந்தக் கட்டுவிச்சி, காடுகிழாளது குற்றம் என்றாள்; காளிக்குச் சிறப்பும் எடுத்தாள். என்ன பயன்?

வேறொரு பெண்:—கழங்கு பிடித்துப் பார்ப்பதெல்லாம் வீண் அம்மா! வேலன் வெறியாடலில் குறி சொல்லுவான். அவன்மேல் தெய்வம் வரும். தெய்வம் பொய்க்குமா?

செவிலி:—தெய்வம் பொய்க்குமோ பொய்யாதோ நான் அறியேன். நம்மூர் வேலன் வெறியாடி முருகனை அழைத்துப் போற்றியும் பலி கொடுத்தும் ஒன்றும் ஆனபாடில்லை. நோய் இன்ன தென்றும் தெரியவில்லை.

நற்றாய்:—உன் மகளைக் கேட்டால் ஒருவேளை ஏதாவது உண்மை விளங்கலாம். அவளது உயிர்த் தோழியாயிற்றே. இவளுக்கு எல்லாம் தெரிந்திருக்குமே.

செவிலி:—நானும் அப்படித்தான் நினைத்தேன். இவளைப் பார்த்து வர ஆள் அனுப்பினேன்; இவளைப் பார்க்கவே வருகிறேன். இதோ வருகிறாள்! வா! அம்மா! வா!

நற்றாய்:—உனக்கு வயது நாறு. உன்னைப்பற்றிப் பேசிக் கொண்டே இருந்தேன். நீயும் வந்தாய்.

தோழி:—எனக்கா வயது நாறு! நான் இவ்வளவு சிக்கிரமா கிழவியாய்ப் போய்விட்டேன். (எல்லோரும் சிரிக்கிறார்கள்)

செவிலி:—எல்லோரையும் இப்படிச் சிரிக்க வைக்கிறாயே! உன் தலைவியைச் சிரிக்க வைக்கக் கூடாதா?

தோழி :—நீங்கள் அல்லவா மனம் வைக்கவேண்டும். நீங்கள் மிக வாட்டமாக இருக்கிறீர்கள். ஏதாவது பொழுது போக்குக் காகப் பாடட்டுமா ?

செவிலி :—பாட்டு ஒன்று ! உன் தோழி ஒரே வாட்டமாக இருக்கிறாளே. அஃது ஒன்றும் விளங்கவில்லையே!

தோழி :—அதுவா ! நானும் சொல்லத்தான் வந்தேன்.

(சிறுமிகளும் குறளனும் வருகிறார்கள்.)

செவிலி :—இவர்கள் ஏன் வருகிறார்கள் ?

தோழி :—நாங்கள் ஒரு சிறு கூத்தாட்டம் ஏற்பாடு செய்திருக் கிறோம். உங்கள் எதிரே ஆடிக் காட்டுமாறு வரச் சொன்னேன்.

செவிலி :—இப்போது வேண்டாமே; நீ என்னவோ சொல்லப் போகிறேன் என்றாயே?

பெண்கள் :—அந்தக் கூத்தாட்டத்தைத்தான் பார்ப்போமே! நன்றாய் இருக்குமா அம்மா !

தோழி :—நன்றாக இருக்கும். அம்மா ! நீங்களும் பாரும். மருத்துவன் தாமோதரனார் சொல்லவில்லையா, மன அமைதி ஏற்பட்டால்தான் எதுவும் விளங்குமென்று. இந்தக் கூத்து முடிந்த தும் பேசலாம். குழந்தைகள் வேடம் போட்டுக்கொண்டும் வந்து விட்டார்களே.

நற்றாய் :—ஆமாம், நீ சொல்வதும் சரி.

தோழி :—குழந்தைகாள் ! நீங்கள் தொடங்கலாம்.

தலைவிச் சிறுமி :—தோழி, இந்தத் திணைப்புனத்தின் அழகே அழகு! இந்தப் பரண் எவ்வளவு உயரம்?

தோழிச் சிறுமி :—யானைக் கெட்டாதபடி உயரமாக இருக்கிறது.

தலைவிச் சிறுமி :—புலியும் கண்டால் அஞ்சுமல்லவா ? இவ்வளவு பெரிய பரணைப் பின்னுவதற்குப் பிரம்பு எங்கிருந்து கொண்டு வந்தார்கள் !

தோழிச் சிறுமி :—இதோ, பக்கத்திலுள்ள மலைச் சாரலிலுள்ள பிரம்பாலேதான் அழகாகப் பின்னியுள்ளார்கள்.

தலைவிச் சிறுமி :—மூங்கிலை வளைக்கத் தூக்கின யானையின் தும்பிக்கை, தந்தத்தின்மேல் சுருண்டாற்போல, இந்தத் திணைக் கதிர்கள் முற்றிச் சாய்ந்திருப்பது அழகாக இருக்கிறது!

தோழிச் சிறுமி :—கிளியை ஓட்டியது போதும். அவர்கள் ஓட்டிக்கொண்டிருக்கட்டும். பறவைகளை ஓட்டும் தழலும் தட்டையும் குளிரும் பிறவும் பண்ணும் ஓசை, காது புளித்துப் போயிற்று. அவற்றை வீசி எறி!

தலைவிச் சிறுமி :—என்ன! இதோ, அருவியினோசை அந்த ஓசைக்குமேல் கேட்கிறதே!

தோழிச் சிறுமி:—ஆம். அதுதான் புது மழை பெய்த வெள்ளம் எவ்வளவு நேரமாகிவிட்டது? சூரியன் நம்மீது நன்றாகக் காய்கிறான்.

தலைவிச் சிறுமி :—மலையினுடைய சிகரத்தினின்றும் விழும் இந்தத் தெள்ளிய நீர் அருவி, உயரத்திலிருந்து விழும்போது, சிதறும் நீர்த்துளிகள், வெள்ளிய துகிலைப்போல இருக்கின்றன. அதிலே சிலபோது சூரியனுடைய கதிர்கள் பாய்வதால் வானவில்லை போலத் தோன்றுகிறது. இது எவ்வளவு அழகாக இருக்கிறது! நான் இதில் ஆடப் போகிறேன்.

தோழிச் சிறுமி :—ஆடின தெல்லாம் போதாதா? இன்னும் உனக்குச் சலிப்பு உண்டாக இல்லையா? இந்த அருவியைவிட இந்தச் சுனை சில்லென்று குளிர்ந்துள்ளது.

தலைவிச் சிறுமி :—பளிங்கைக் கரைத்துச் சொரிந்து வைத்தாற் போன்று பள பள என மின்னுகிறது. இதிலேயும் குளித்து விளையாடலாம், வா! (பாடிக்கொண்டே குளிக்கின்றனர்)

தோழிச் சிறுமி :—குளித்தது போதும். தலையிலிருந்து தண்ணீர் ஒழுகுகிறதே. அதோடும் ஓடாதே. அதனை நன்றாகத் துவரப் பிழிந்து விடு. உன் கண் என்ன, சிவந்திருக்கிறது! என் கண் எப்படி இருக்கிறது?

தலைவிச் சிறுமி :—அம்மா, உள்ளே எல்லாம் சிவந்து இருக்கிறது! எரிகிறதா?

தோழிச் சிறுமி :—ஏன் எரிகிறது! நன்றாகக் குளிர்ந்து சில் என்று இருக்கிறது. இப்போது ஒரு விளையாட்டு. பெண்களே, எல்லாரும் வாருங்கள்! ஒவ்வொருவரும் போய்ப் பூப்பறித்து வாரும்! யார் அதிக வகையான பூக்கள் பறிக்கின்றனரோ, அவரே வென்றவர் ஆவர்.

தலைவிச் சிறுமி :—தோழி! நீ வரவில்லையா?

தோழிச் சிறுமி :—நானும் வந்தால் நடுநிலையாக இருப்பது யார்? இங்கே பறவைகளை ஓட்டிக்கொண்டிருக்க ஒருவரேனும் இருக்க வேண்டாமா? விரைந்து பறித்து வா! (போகிறார்கள்)

எதிரே உள்ள பரணிலே காவலாளர் எங்கே! ஆம். அதோ அவர் மனைவி கள்ளோ ஊட்டுகிறாள். களைப்புத் தீர இந்தக் கீழ் மக்கள் இப்படிக் குடித்துக்கொண்டே இருக்கிறார்கள். அந்தோ! என்னே இந்த உலகநிலை! கீழ்மகன் மேல்மகன். அங்கும் காதல் வாழ்க்கை இன்பமூட்டுகிறது. அந்த அம்மாளின் அன்பும், அந்த ஐயாவின் காதலும் கொஞ்சுகின்றன. தலை கிறுக்கெடுக்கிறது போலும். கிழே வீழ்கிறார். இதோ தோழிமாரும் வந்து விட்டனர். ஒவ்வொருவரும் ஒரே வகையான பூவை ஒவ்வொரு முறையும் எடுத்துக் காட்டவேண்டும். நான் பேரைச் சொல்லிக் கொண்டே பாடுவேன்.

மற்றைய சிறுமிகள் :—காட்டிய பூவை எங்கே போடுவது?

தோழிச் சிறுமி :—நமக்காகத்தான் மழை பெய்து இந்த அகன்ற பாறையைக் கழுவி வைத்துள்ளது. அதன் மேலே பரப்புங்கள்.

"ஒண் செங்காந்தள்.....
.....பரேரம் புழுகு"

தலைவி! நீதான் வென்றாய். 99 பூக்கள் கொண்டு வந்தாய். நூறுகக் கொண்டுவந்திருக்கக் கூடாதா? இந்த மாலையை எல்லாம் கட்டி உனக்கு அணிந்து, இந்த மலைக்கரசியாகப் பட்டம் சூட்டப் போகிறோம். இந்தச் சூரிய வெப்பத்தில் பூக்கள் வாடிப் போகின்றன. விரைந்து கட்டுங்கள்!

தலைவிச் சிறுமி :—என்ன இனிமையாக இந்தச் சின்னஞ் சிறு குருவிகள் இந்த அழகிய மலையினிடையே பாடுகின்றன! நானும் ஒரு பறவையாய்ப் பாடேனே? யாழும், குழலும், பறையும், மணியும் ஒருங்கு இயைந்து ஒலிப்பது போலச் சிறந்த இசை அரங்கல்லவா இவை நடத்துகின்றன! இந்த மலையின் அழகுதான் என்ன! செடிகளின் அழகு, கொடிகளின் அழகு, இவற்றிற் பூத்த பூக்களின் அழகு, நறுங்கனிகளின் அழகு, அருவியின் அழகு, சுனைகளின் அழகு இவைகள் தனித்தனியே இருக்கும் அழகைவிட ஒன்றன் அருகே ஒன்று மாறுபட்டு இருப்பதால் பன்மடங்கு அழகு மிக்கிருக்க வில்லையா? பல பல இசைகளும் பல பண்களாக இயைந்து ஒன்றுப்க் காதுக்கு இனிப்பதுபோலக் கண்ணுக்கு இனிக்க வில்லையா?

தோழிச் சிறுமி:—இவ்வாறு இயற்கை அழகிலே ஈடுபட்டிருப்போமானால் தினைப்புனம் என்னவாக இருக்கும்?

தலைவிச் சிறுமி:—(பாடுகிறாள்)

தோழிச் சிறுமி:—பறவைகளின் ஓசை - அவற்றிடையே உனது இனிய குதலை - அதுகேட்டு அருகே வந்து அதுபோலப் பேசிப் பழகும் கிளிகளின் மழலை - இவையனைத்தும் சேர்ந்த ஈதொரு புதிய பண்ணிசை எவ்வளவு இனிமையாக இருக்கிறது! கட்டி

விட்டீர்களா பூவையெல்லாம்? மலையரசிக்குப் பட்டம் சூட்டலாம் வாருங்கள். நன்றாகக் கோலம் செய்யுங்கள்.

சிறுமிகள்:—வாழிய எங்கள் மலையரசி, வாழிய, வாழியவே!

தலைவிச் சிறுமி:—தோழிக்குப் புனத்தரசிப் பட்டம் சூட்டுங்கள்.

சிறுமிகள்:—வாழிய, வாழிய புனத்தரசி; வாழிய, வாழியவே!

தோழிச் சிறுமி:—வேடிக்கையல்ல மலையரசி என்றால் உனக்கே தகும். உன் தழையும் சிவப்பு; உன் தலையிலிருக்கும் பூக்களும் சிவப்பு; நீயும் மாஞ்சிவப்பு; உன் கண்ணும் ஒரே சிவப்பு. நீ இருக்கும் இடம் ஒன்றுதான் சிவப்பாக இல்லை.

தலைவிச் சிறுமி:—அதுதானே பெரிய குறை? நெருப்புப்போல் விளங்கும் தளிர்களுடைய அந்த அசோகினது மகரந்தம் நிறைந்த நிழலிலே போய் இருந்தால் நீயும் நானும் அசோகமும் ஒரே சிவப்பாக இருப்போம். வா, போகலாம். (போகின்றனர்)

தோழிச் சிறுமி:—என்ன, நறுமணம் திடீரென்று வீசுகிறதே?

தலைவிச் சிறுமி:—ஆம்! ஈதென்ன புதுமை! எங்கிருந்து வருகிறது இது? தோழி! தோழி! அதோ ஒருவர் வருகிறார். ஆண் மகன் என்றால் இவர்தான்.

தோழிச் சிறுமி:—வீரமெல்லாம் நம்மைப் பார்த்தவுடன் அன்பாய்க் குழைகிறது. தன் ஊர் எருதுகளை வென்று, அயலூர் ஆனினைக் கண்டதும் குழைந்துவரும் சிரிய விடையே போல நம்மை நோக்கி வருகிறார்.

தலைவிச் சிறுமி:—அவர் பூசி இருக்கும் மயிர்ச் சாந்தின் நறுமணமே இங்கு வீசுகிறது!

தோழிச் சிறுமி:—விரலால் தலையை அளைத்துச் சிக்கெடுத்து அகிற் புகையூட்டிப் பல நிறப்பூக்களைக் கண்ணியாகத் தொடுத்து அணிந்துள்ளார். பேரணி கலங்களின் இடையே கழுத்திலே ஒற்றைவடப் பிச்சிமாலையைப் பார்த்தாயா? காதிலே சொருகியிருக்கும் அசோகின் தளிர், நடக்குந்தோறும் தோளிலே விழுந்து அலைவதும் ஒரு அழகே. இடுப்பிலே கச்சை எவ்வளவு இறுகக் கட்டிக் கொண்டிருக்கிறார். வீரக் கழல் அவர் நடக்குந்தோ ம் தாளம் போடுவதுபோல மேலுங் கீழும் போவதைப் பார்த்தாயா? இளஞ் சிங்கம்போல் நடந்து வருகிறார்.

தலைவிச் சிறுமி:—நாம் வணங்கும் முருகப் பெருமானே இவ்வாறு நம் எதிரே தோன்றிக் காட்சிக் கொடுக்கிறாரோ?

தோழிச் சிறுமி:—முருகப் பிரானைல் இவர் மாலையிலே மொய்ப்பது போல வண்டு மொய்க்காது. வில்லும் அம்பும் ஏந்திய இவர் ஒரு வீரர் போலும்! சந்தனக் குழம்பு அவருடைய இன்ப வாழ்வைக் காட்டவில்லையா?

தலைவிச் சிறுமி:—என்ன அகன்ற மார்பு! வீங்கிய தோள்! அவர் மார்பிலே மூன்று வரிகளைப் பார்த்தாயா?

தோழிச்சிறுமி:—சிரும் சிறப்புமுடைய பெருமக்களுக்கு அவை அடையாளமாம்!

தலைவிச் சிறுமி:—தூசு கிளம்புகிறதே, இது என்ன?

தோழிச் சிறுமி:—நாய்கள், நாய்கள், வேலேந்திய வீரர்போலப் பாய்கின்றன பார். அம்மவோ! அம்மவோ! எவ்வளவு ஒளியுடைய கூரிய பற்கள்! எவ்வளவு பெரிய நகரங்கள்! என்ன வேகமாக ஓடி வருகின்றன! நம்மை நோக்கியே வருகின்றன. ஓடு, ஓடு! (ஓடுகின்றனர்)

தலைவனும் சிறுமி:—(எதிரே வந்து) அழகிய பெண்களே! தப்பி ஓடிவந்ததைத் தேடி வருகின்றேன். [மௌனம்] என்ன பேசாமல் இருக்கின்றீர்களே? பதில் சொல்லி உதவமாட்டீர்களா? மெல்லியலீர்! அதனைக் கண்டதுண்டோ. அதுதான் சொல்லாமற் போனதும் என்னோடு பேசுதலும் உமக்குப் பழியாகுமா? இவர்கள் பேச்சைக் கேட்கலாம் என்றால் இந்த நாய்கள் என்ன இப்படிக் கத்துகின்றன! சும்மா இருக்க மாட்டீர்களா? இருங்கள். இந்தக் கிளையை ஒடித்து கொறுக்கி விடுகிறேன். [பாடிக் கொண்டே கிளையை ஒடித்து நாய்களை அடிக்கிறான்]

காவலாளன்:—(விழிக்கின்றான்) இது என்ன ஓசை! கனவா காண்கிறேன்! இந்த யானை எங்கே வந்தது? அந்தோ! என் செய்வேன்! என் பிழைப்பின் வாயில் மண் அள்ளிப் போட்டதே! தினை முழுவதையும் தின்று ஒழித்ததே! உன்னைக் கொல்லாது விட்டேனே? விட்டால் என் பெயர் சாத்தனே? இதோ உனக்கு முழு அம்பு! காடெல்லாம் அல்லோல கல்லோலப் படட்டும்!

சிறுமிகள்:—இதென்ன பெருத்த ஆரவாரம்! மதயானை கிளையை ஒடித்தாற்போல் இருந்ததே. இல்லை, இந்த ஆடவர்தான் இப்படி ஒடித்தார். ஏன் இப்படிக் கிளிகள் பறக்கின்றன? நம் சாத்தன் வீளையடிக்கிறான்றான். அம்மா! அதோ! மதயானை, மரங்களை முறித்துக்கொண்டு கார்காலத் திடிபோலப் பிளிறுகிறதே!

தோழிச் சிறுமி:—யானை வெருண்டோடி வருகிறது. இனிப் பிழைப்பதெங்கே? யானைக் காலின் அடியிலேயா நம்முடைய மோடசம்?

தலைவிச் சிறுமி:—ஐயோ! அம்மா, எவ்வளவு மனம் கலங்குவார்களோ!

(தோழி தலைவியை அணைக்கத் தலைவி தலைவனைப் பிடித்துக் கொள்ளுகிறாள்.)

தலைவன்:—அஞ்சவேண்டாம்! நீங்கள் பேசாமற் போனாலும் உங்கள் வளையல்களேனும் கலகல என்று பேசின. இதோ யானை

மாண்டது. யானையாவது உங்களை மிதிப்பதாவது! இதோ அதைப் பிடிக்கும் யமன், இந்த அம்பின்மேல் ஏறிப் போகின்றான். [அம்பை விடுகிறான். யானை முதுகுகாட்டி ஓடுகிறது.]

தோழிச் சிறுமி :—பிழைத்தோம்! எங்கள் உயிரைக் காத்த வீரரே! உங்களுக்கு நாங்கள் பெரிதும் கடமைப் பட்டுள்ளோம். அச்சத்தால் நாணத்தையும் மறந்து கதறியதற்கு மன்னிக்கவும். தோழி! ஏன் இன்னும் நடுங்குகிறாய்? இந்தக் காட்டாற்றிலே குளித்தால் நடுக்கம் தீரும்; போகலாம் வா!

தலைவிச் சிறுமி :—அவர் பிழைத்தாரா ?

[ஆற்றிற் போய்க் குதிக்கின்றனர்.]

தலைவிச் சிறுமி :—ஆறு என்னை அடித்துக்கொண்டு போகிறது! அச்சத்தால் எழுந்த நடுக்கம் விட்டபாடில்லை; காலும் கையும் நீந்த வரவில்லை; யானைக் காலிலிருந்து தப்பியது இந்த ஆற்றில் விழவா. முருகா ! முருகா !! முருகா !!!

தலைவன் :—[ஓடிவந்து] அஞ்சாதே ! என்னையா கூப்பிட்டாய்? இதோ வருகிறேன். (தண்ணீரில் குதித்துத் தலைவியைத் தூக்கி வருகிறான்.) இன்னும் என்ன நடுக்கம்? கரைக்கு வந்தாயிற்று, கண்ணைத் திறந்து பார். (தலைவி அச்சத்தால் தலைவனைப் பற்றிக் கொள்கிறாள்.) பெண்ணரசி! உன்னைவிட்டுப் போகிறேன் என்று அச்சமா ? பிரிவதெங்கே ? [நகைத்து] தோழி ! உன் தலைவிக்கு யான் பிரிவேன் என்ற அச்சம் போலும். பிரியேன் ; பிரியேன் ; பிரியிற் தரியேன்; தரியேன்!

தோழிச் சிறுமி:—(தனக்குள்) என்ன! இவளை உயிரைப் போலப் பாராட்டுகின்றனரே! இவரினும் சிறந்த ஆடவர் யார்? வீரரே! உங்கள் ஊர் எது?

தலைவன்:—அதோ! தெரிகிறதே, அந்த மலைதான்.

தோழிச் சிறுமி:—மாம்பழமும், பலாப் பழமும், பறிப்பா ரின்றிப் பழுத்து உதிர்ந்துள்ளன; மிளகும் பழுத்து உதிர்கின்றன. எவ்வளவு பெரிய பாறை! அதன் நடுவே உள்ளதென்ன? சுனையா? அந்த மயில், சுனை நீரையா குடிக்கிறது?

தலைவன்:—நீரல்ல! அது முப்பழச் சாறு, தேறலாய் முற்றி இருப்பதை அந்த மயில் குடிக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் அது ஆடப்போகும் ஆட்டத்தைப் பாருங்கள்.

தோழிச் சிறுமி:—அதோ ஆடுகிறது! என்ன அழகான ஆட்டம்! பாட்டுக்குந் தாளத்திற்கும் ஏற்ப விறலி கழைக்கூத்து ஆடுவதுபோலத் தள்ளாடித் தள்ளாடி ஆடுகிறது. தோழி! பரண் மேல் ஏறலாம், வா!

தலைவிச் சிறுமி:—[தோழியோடு மறைவாக] யானை வெருட்டிய போதும், ஆற்றில் அமிழ்ந்த போதும் என்னையும் அறியாமல்

முருகப் பெருமான் அவரைப் பற்றிக்கொள்ளுமாறு தூண்டினேன். என் மனமும் அவர்பால் செல்கின்றது. "உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும் செயிர்தீர் கற்புச் சிறந்தன்று." ஒருவரைப் பற்றிய கை, மற்றொருவரைப் பற்றுவதா? ஒருவரை எண்ணிய மனம் மற்றொருவரை எண்ணுவதா?

தோழிச் சிறுமி:—[மறைவாக] முருகப் பெருமான் திருவருள் பொய்க்குமா?

தலைவன்:—என் இன்பமும் துன்பமும் உங்கள் கையில் இருக்கின்றன. மறைவாகப் பேசுவானேன்?

தலைவிச் சிறுமி:—நம் இன்ப துன்பத்தைப்பற்றி எண்ணுவானேன்? எத்துணை ஏழை மக்களும், பெரும் புலவர்களும் உணவின்றி வருந்துகிறார்கள்? இரந்தும் உயிர் வாழ்தல் உண்டெனின், பரந்து கெடுக உலகியற்றியான்" என்ற நாடு வறுமையால் வருந்துவது அழகா?

தலைவனும் சிறுமி:—அத்தகைய அறத் தொண்டு செய்ய - பொருளுலகில் சிறந்து வாழ்ந்து உதவ - ஒத்துழைக்க - முற்படுகின்றேன்.

தலைவிச் சிறுமி:—உதவுதல் என்று பேசப் போமா? நமக்கென உரிமை என்ன! பொருளை ஆக்க அனைவருமே உதவுகின்றனர்; ஆகவே அனைவருக்குமே அல்லவா உரியதாதல் வேண்டும். நாம் சோம்பாது முயற்சி செய்தல் வேண்டும். கதவினைச் சார்த்தி வையாமல் திறந்து விட்டுவிட வேண்டும். வருவார் வருக! கொள்வார் கொள்க! இப்படிப் பாத்துண்டு எஞ்சியது உண்பதே துறக்க வாழ்க்கை; அவ்வாறு செய்வதே இல்லறத்தின் பெருமை என இளமைமுதல் எனக்கு ஓர் எண்ணம் தோன்றி வருகிறது.

தலைவனும் சிறுமி:—என் அரசியலை அவ்வாறு இன்றே மாற்றியமைத்து விட்டேன். உதவி என இனிப் பேசேன்; தொண்டனாக வாழ வருகின்றேன். இந்த அறத் தொண்டும், பொருள் தொண்டும் செய்ய இன்பத் தொண்டனாக நான் ஆக வேண்டும். எனது இல்லறக் கிழத்தியாக நீ யமைந்தால் அன்றோ, இவ்வாறு செய்ய முடியும் இது உண்மை. இந்த முப்பால் தொண்டிற்கே உன்னைத் துணை பிரியாது ஒன்றும் வாழ முந்துகின்றேன். இதோ! இந்த அருவி நீரைக் குடிக்கின்றேன்.

தோழிச் சிறுமி:—சூளுறவும் வேண்டுமா?

(தலைவன் தலைவியின் கையைப்பற்றுகின்றான்)

தோழிச் சிறுமி:—யான், அதோ தோன்றும் சோலையில் உள்ள பூக்களைப் பறித்து வருகின்றேன்.

(போகிறாள்.)

தலைவன் :—கண்ணே ! இந்தப் புறத்திலுள்ள மரங்களிடையே இம் மலையினழகைக் கண்டு உலாவி வரலாமா ?

(இருவரும் போகின்றனர்.)

பெண்கள் :—இவ்வளவேயோ இந்தக் கதை!

தோழி :—ஆம். தாயே, பெற்றோர் தன்னை நம்பித் தனிமையில் விட்ட தலைவியை, இவ்வாறு வந்தவன் கையிலே அவள் விட்டு விடுவது நல்லதா ?

செவிலி :—என்ன ! யாரோ, வந்தவனு ? முருகப் பெருமான் திருவருள் அன்றே கூட்டி வைத்தது!

தோழி:—அந்தத் தலைவி அப்படி அவன் கையைப் பிடிக்க லாகுமா ?

நற்றாய்:—அத்தகைய தலைவியைப் பெற்ற தாய் வயிறே வயிறு! என்ன உயர்ந்த நோக்கம்! இது வெறும் காமமா ? கடவுட்காதல் அல்லவா இது!

தோழி:—மன்னிக்கவேண்டும். உங்கள் பெண் அப்படிச் செய் தால் நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா ?

நற்றாய்:—நமக்கொன்று ; ஊராருக்கு ஒன்று ?

தோழி:—பெற்றோர் அறியாது இவ்வாறு நடக்கலாமா ?

செவிலி:—இருமுறை உயிர் கொடுத்த வீரன் ; அரசர்க்கரசன் ; அழகர்க்கழகன் ; கல்விக்கிருப்பிடம் ; சான்றோர் தலைவன்-இவனினும் சிறந்தார் யார் வாய்ப்பார்கள்?

தோழி:—இருந்தாலும் அவர்களைக் கேட்க வேண்டாவா? வெட்கம் இல்லையா ?

செவிலி:—"உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும் செயிர் தீர் கற்புச் சிறந்தன்று" என்று அந்தத் தலைவியே கூறவில்லையா ! சுத்த கற்பு நெறி. பொன்னைப் பற்றவைக்கலாம் மணியாரத்தைத் திருத்தி வைக்கலாம். ஒருவனை மணந்தபின் பிறனொருவனோடு பொருந்து வது எப்படி ? பெரியோருக்கும் அரிது, அரிது!

தோழி:—இப்படித் தலைவிக்கு நேர்ந்திருந்தால் சும்மா இருப் பீர்களா !

நற்றாய்:—அவ்வளவு புண்ணியம் செய்த வயிறு என் வயிறு ?

தோழி:—அதனினும் சிறந்த தெய்வத்தன்மை வாய்ந்த வயிறு அம்மா !

நற்றாய்:—உண்மையா ?

தோழி:—உண்மையாக நடந்ததையே கதையாக உங்கள் எதிரே காட்டினேனும்!

செவிலி, நற்றாய்:—மெய்யாகவா ?

தோழி:—தலைவிக்கு அதுவே வாட்டம் ! நீங்கள் ஒப்புவீர் களோ, ஒப்பமாட்டீர்களோ என்ற ஐயம்; அவரைப் பாராத நாள் எல்லாம் வருந்துகிறாள்.

பெண்கள்:—காமம் உடம்பை உருக்கிவிடும். தலைவனுக்கு அவ்வளவு ஆசை இல்லை போலும்!

தோழி :—அவர் இரவுதோறும் வருகிறார். காவலர் கடுகி வந்தாலும், கதவாய் குறைத்தாலும், நீங்கள் விழித்திருந்தாலும் தலைவி அவரைப் பார்க்க முடியாதல்லவா ?

பெண்கள் :—தலைவன் கோபித்துக்கொள்வான் என்ற அச்சம் இருப்பது இயல்புதானே!

தோழி :—அத்தகைய அச்சம் ஒன்றும் இல்லை. அவர் கோபிப்பவரும் அல்லர்; வெறுப்பவரும் அல்லர்; ஒருநாளே போலப் பலநாளும் காதலோடு வருகிறார்.

பெண்கள் :—தலைவனைக் காணுமல் கண் பஞ்சடைகிறது போலும்!

தோழி :—தலைவி அத்தகையாள் அல்லள். அவரைக் காணுத போதெல்லாம் அவருக்கு என்ன இடையூறு நேர்ந்ததோ என அஞ்சி நடுங்குகிறாள். அந்த நடுக்கமே அவளைக் குலுக்கி எடுக்கிறது. வருகிற வழியிலே புலியும் யானையும் நடையாடும்; கரடி, பாம்பின் உடலில் நகம் புதையக் கையிட்டுப் புற்றுமண் தின்னும். மடுவில் முதலைகள் கிடக்கும். வீரத்தால் இவற்றை வென்றாலும் இயற்கையை வெல்வது எப்படி? இருட்டு வழி; மின்னலும் வேலுமே கைவிளக்கு! சறுக்கு வழி! சிறிது தவறினால் பாதாளத்தில் விழவேண்டியதே. இவையெல்லாம் பழக்கமான வழி என்றாலும், இத்தகைய அழகிய வரையர மகளிர் காதலித்துக்கொண்டு சென்றால் அவர் தப்புவது எப்படி? இப்படி எல்லாம் எண்ணி எண்ணி அவருக்காகவே வாடி வருந்துகிறாள். இன்று துணிந்து விட்டாள்.

செவிலி நற்றாய் :—என்ன ? என்ன ?

தோழி :—உங்களிடம் இதனைத் தெரிவிப்பது என்று முடிவு செய்தாள். மணம் செய்து கொடுப்பீரானால் மணந்து வாழ்வது; இல்லையானால் இந்த உயிரை இழந்து மறு பிறப்பில் அவரோடு வாழ்வது. ஈதே அவள் துணிவு.

செவிலி:—இன்றே திருமணத்திற்கு ஏற்பாடு செய்தால் போயிற்று! இதற்கு மறு பிறப்பு ஏன் ? தாய்க்கேற்ற பெண். என் மனம் குளிர்ந்தது.

நற்றாய்:—' பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின். '

தமிழ் மருத்துவம்

—திரு. பு. வே. தேவராஜ முதலியார், M. D. (S.)

தமிழ் நாடு மிகப் பழமையானது என்பதை ஆராய்ச்சி யாளர் பலரும் ஒப்புக்கொள்ளுகின்றனர். அதனால் தமிழ் மருத்துவங்களையும் மிகப் பழமையானது எனக் கொள்ளலா மன்றோ? மற்ற நாட்டினர் எல்லாம் நாகரிகமே அறியா திருந்த பழங்காலத்தில் மொழி, இசை, ஓவியம், சிற்பம், மருத்துவம் முதலிய கலைகளின் நுணுக்கங்களைக் கண்டறிந் தனர் தமிழர். வாழ்க்கை நெறியைச் செம்மையாக வகுத்துக்கொண்டு ஆட்சியும் அமைதியும் நிலவ இன்ப வாழ்வு வாழ்ந்தனர்.

இவ்வாறு வாழ்ந்த தமிழர் கண்டவற்றுள் ஒன்றாகிய மருத்துவத்தைப்பற்றிச் சிறிது கூறுவோம். பழைய சித்தர்கள் மருத்துவக் கலையை உலக நன்மைப் பொருட்டு வழங்கினார்கள். அவர்கள் உலக இயலால் வரும் அல்லல் களின் நீங்கி மன ஒருமை பெற்று, திருவருட் கண்கொண்டு உலகத்தையும் உடம்பையும் உயிரையும் கண்டு வந்தார்கள். உணவினைப் பருக்கும் ஊனினைச் சுருக்கி உள்ளத்து ஒளி யினைப் பெருக்கி உலகத்திற்கு மூலமான ஒளி, ஒலி முதலிய வற்றை நேரே கண்டும் கேட்டும் சித்தராஞர்கள். அணிமா முதலிய எண்வகைச் சித்திகள் அவர்கள் ஆற்றலிற் கட்டுப் பட்டுக் கிடந்தன. "திண்டிறற் சித்தர்களே கடைக்கூழை செல்மின்" என மாணிக்கவாசகர், அவர்களுடைய அளவிறந்த ஆற்றலைக் குறிக்கின்றார். எண்வகைக் கன்மங் களையும் வென்றவர்களே சித்தர்கள் எனச் சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இத்தகைய சித்தர்கள் கண்டறிந்தமையால் தமிழ் மருத்துவம் சித்த மருத்துவம் என வழங்கப்படுகின்றது. நிலமும், நீரும், தீயும், வளியும், வானும் என்ற ஐம்பெரும் பொருள்களின் ஒத்ததும் ஒவ்வாததுமான குணங்களையும், கலப்பு முறைகளையும், மிகுதி குறைவுகளையும் பார்த்தறிந்து உலகக் கூறுபாடுகளெல்லாம் இவையே எனக் கண்டனர். பின்னர் இவ்வுலகில் தோன்றி நின்று மறைகின்ற உயிரியற்கையினையும், அவற்றுக்குக் கிடைத்த பல வேறு வகையான உடம்புகளின் இயற்கையினையும் தெளிய

அறிந்தார்கள். உயிர் உடம்போடு கூடி இவ்வுலகில் வாழ வேண்டுமானால், இயற்கை நெறியை விட்டு மாறலாகாது என்பதையும் அவ்இயற்கை நெறிதான் யாது என்பதையும் தெளிய வகுத்துரைத்தார்கள். அவ்வாறு வாழாமல் இயற்கை நெறியினை மீறுவோர் இயற்கையினாலேயே ஒதுக்கப்பட்ட போது, அவர்களுக்கிரங்கிய சித்தர்கள். இயற்கையிலிருந்தே மருந்தையும் தேடித் தந்தார்கள். இயற்கையை அறியா மலோ - எள்ளியோ ஒதுக்குகின்றவர்கள் அல்லது வெறுக் கின்றவர்கள், என்றும் நோயென்னும் பேய் வாயில் குடி யிருப்பவர்களாவர். அவர்கள் தப்பிப் பிழைக்க வேண்டு மானால் இயற்கைத் தெய்வத்தின் திருவடியைத் தவிர வேறு பற்றில்லை.

இனி மருந்து என்பது என்ன என்பதைக் காண்போம். இளைப்புற்ற காலத்தில் வலிமையைப் பெருக்குவதும், நோயுற்ற காலத்தில் நோயினைப் போக்குவதும், குறைவுற்ற சக்தியை நிறைவு செய்தெடுப்பதும் என மருந்தின் வேலை மூவகையாகும். வளி, பித்து, ஐயம் என்ற மூன்றும் உடம்பில் எந்த அளவினவாக இயல வேண்டுமோ அந்த அளவின் மாறுபட்ட காலத்தில், அவற்றை அளவு படுத்துவதே மருந்துகள் செய்யவேண்டிய வேலையாகும். ஆகவே மூவகையாற்றல் வாய்ந்த மருந்துகளால் வளி, பித்து, ஐயம் என்ற மூன்றினையும் உற்ற அளவில் நிறுத்திக் காண்பதே மருத்துவ வித்தையாகும்.

"மன்மூலிகை வகை வல்லுப்புத் தீநீர்
பன்னூடார் பொருள் பாடாணம் லோகம்
இன்னியற் சத்து ரச மணியோகம்
ஒன்றற்கொன் றுயர்விலக்காம் நோய்க்கே" —திருமூலர் 8000

மேற்கண்ட பாட்டில் நோய் விலக்கிற்காகும் மருந்து பேதங் கள் ஒன்றற்கொன்று உயர்ந்ததாக அடுக்கிக் கூறப்பட் டிருக்கின்றன.

நமது நாட்டு வெப்ப தட்ப நிலைக்கேற்ப நமது உடல் அமைந்துள்ளது. ஆகவே நமது நாட்டு நிலைக்கேற்றதாகவே மருந்தும் இருத்தல் வேண்டும். வெப்ப தட்பத்தால் பெரிதும் மாறுபட்ட ஏனைய நாட்டு மருத்துவ முறைகளால் நமது நாட்டு மக்களுக்கு நன்மை விளையாது. நமது முன்னோர்கள் கண்ட சித்த மருத்துவமே நமக்கு ஏற்றதும் மிகச் சிறந்ததுமாகும்.

மணி, மந்திரம், மருந்து என்ற மூவகையால் நோயை நீக்கி வந்தார்கள் சித்தர்கள். மணி என்பது இரசமணி; மந்திரம் என்பது, "நிறைமொழி மாந்த ராணையிற் கிளந்த, மறைமொழி"; மருந்து என்பது உயர்ந்த சத்துப் பொருள்.

இவற்றுள் மருந்து என்பது காப்பு, நீக்கம், நிறைப்பு என மூவகைப்படும். காப்பு என்பது, நோய் வராமற் காக்கும் மருந்துகளைக் குறிக்கும்; நீக்கம் என்பது, வந்த நோய்களைப் போக்கும் மருந்துகளைக் குறிப்பது; நிறைப்பு என்பது, குறைந்த சத்துக்களை உண்டாக்கி நிறைத்துக் குணம் செய்யும் மருந்துகள். இத்தகைய மருந்து முறைகளும் இவற்றைப்பற்றிய விரிவுகளும் சித்த மருத்துவம் ஒன்றில் தான் நிறைந்துள்ளன.

ஒப்புறை, எதிருறை, கலப்புறை, என மருந்து முறையை மூன்றாகப் பிரித்துள்ளார்கள். ஹோமியோபதி வைத்தியமுறை ஒப்புறையாகும்; ஆங்கில மருத்துவமுறை எதிருறையாகும்; ஆனால் அம் முறையிலேயே முற்றும் நிலைப்பதில்லை) தமிழ்ச் சித்தர் கண்ட மருத்துவமோ அவ் விரண்டு முறையுடன் மூன்றாவது முறையாகிய கலப்பு முறையையும் கொண்டு விளங்குகின்றது.

சித்தர்கள், மழையிலும், வெயிலிலும், மதியிலும், பனியிலும், இடியிலும், மின்னலிலும், உலகைச் சூழ்ந்த கடலிலும், ஒன்றும் இல்லாத பொட்டல் வெளியிலும் இவை கலப்பாக உண்டாகும் உப்பு, சுன்னம், காரம், சாரம் முதலியவைகளைக் கொண்டு சரீரத்திலுள்ள குற்றங் களை அறுக்க வழி கண்டார்கள்; நல்ல வலிமைகளை உண்டாக்கத் தாதுப் பொருள்களையும் மற்றும் சில வர்க்கங் களையும் கொண்டு தகுந்த மருந்துகளைச் செய்து காட்டினார்கள்.

சத்துக்களின் குறைவு மிகுதியோ, இல்லாமையோ நோயின் காரணங்களாகும். சில சத்துக்களின் தேவை யில்லாக் கூட்டுறவும் காரணமாகலாம். நோயின் காரணம் எதுவா யிருப்பினும், மருந்தில் எல்லாச் சத்துக்களும் அடங்கி யிருப்பதால் எல்லா நோய்களையும் மருந்துகள் நீக்குகின்றன. முதன் முதலில் உண்டான சரக்குகளைக் காரிய காரண உருவத்திலேயே கொண்டுவந்து சமைத்து வைத்து முடித்த மருந்துகள், எல்லா சத்தும் அமையப் பெற்றன. உடல் அழியாமல் கற்பங்கள்தோறும் நிலைநிற்க இதனைத் தேடிய தால் காயகல்ப சித்தி என இதனை அழைத்தனர்.

உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களையும் உண் டாக்க வல்லதாக - எல்லாவற்றுக்கும் மூலகாரணமாக இருப்பன உப்புச் சத்துக்களே. இந்த ஆதியந்த சரக்குகளைக் கண்டு பிடித்துப் பக்குவப்படுத்தி நோய்களை அவிழ்க்கும் மருந்தாக்கிக் கண்டனர் சித்தர். பலவிதமான உப்புச் சத்துக் களையும் கூட்டி, அவற்றிலுள்ள கசிவுக் குணத்தைப் போக்கி, பிண்ட நீராலும், ஜீவ கருவாலும் கட்டி, சுன்ன நீராலும்,

சுன்ன சத்துள்ள மற்றப் பொருள்களாலும் இவ்வுப்புக்களைச் சுன்னமாக்கி உபயோகப்படுத்துவது சித்தர் முறை. இதில் பிரதானமான மூன்றுவகை உப்புக்களைச் சேர்த்து முடித்த சுன்னமே முப்பூச் சுன்னம் எனப்படுவது. இதனை மகாகுரு சுன்னம் எனவும் வழங்குவர்.

சிவசுன்னந் தகஷிணை மூர்த்தி சுன்னம்
ஜெனகாதி ரிஷிகளுக்குச் செப்புஞ் சுன்னம்
தவமான பதினெட்டுச் சித்தர்க் கெல்லாம்
சகலசித்துங் கொடுக்கின்ற சத்தி சுன்னம்
நவசுன்னந் துவாதசத்தைக் கடந்த சுன்னம்
நாதாந்த குண்டலிக்குள் நண்ணுஞ் சுன்னம்
பவமென்னுங் கடல்கடத்து ஞான தீபம்
பரஞ்சுடரா நின்றிலங்கும் பரம சுன்னம்.

இம் முறையைக் கண்ட ஆயுள்வேத வைத்தியர்களும் மேனாட்டு அறிஞர்களும், தமிழ்ச் சித்த மருத்துவம் உலகிலேயே ஒப்புயர்வற்ற தனிச் சிறப்புள்ளதெனப் பாராட்டியுள்ளனர்.

சென்னை அரசினர் மருத்துவக் கல்லூரியில் சித்த மருத்துவமும் போதிக்கப்பட்டு வருகின்றது. ஆயுள்வேதம் வடமொழியிலிருப்பதால் கேரளம், ஆந்திரம், கன்னடம், வங்கம், சார்ச்சிரம், மாராட்டிரம் முதலிய பல மாகாணத்தினரும் பயிலுகின்றனர்; பல நாட்டு மன்னர்களும் இந்திய அரசாங்கமும் நல்ல ஆதரவு தரப் பெருகி வழங்கப்படுகின்றது.

சித்த மருத்துவத்திற்குத் தாயகமும் புகலிடமும் தமிழ் நாட்டைத் தவிர வேறிடமில்லை; தமிழரைத் தவிர வேறு அறிவாரும் இல்லை. நமது நாட்டுச் செல்வர்களும், செல்வாக்குள்ளவர்களும் ஒத்துழைத்தால் மருத்துவக் கல்லூரி, நூல் நிலையம் முதலியன காணலாம். மாகாண மருத்துவக் கருவூலம் ஒன்று அமைத்து, சித்த முறைப்படி மருந்து தயாரித்துதவலாம். தேர்ந்த மருத்துவர்கள் பலரும் ஊக்க முடையவர்களாயிருந்தும் அவர்களுக்கு ஒருவகையான ஆதரவும் இல்லாமையால் செயலற்று நிற்கின்றனர்.

ஆயுள்வேத பாஸ்கர கந்தசாமி முதலியார் பண்டைக் காலத்தில் சித்த மருத்துவ நூல்களை வெளியிட்டவர். அவர் அச்சிட்ட நூல்களில் புனைந்துரைகளும் கலந்துவிட்டன. போகர் ஏழாயிரம் என்னும் சப்த காண்டத்தில் முதல் இரண்டு காண்டங்களை உள்ளபடி வெளியிட்டவர் சூளை கங்காதர பண்டிதராவார். சென்னைச் சிந்தாதிரிப்பேட்டையிலுள்ள மயிலை அழகப்ப முதலியாரவர்களால் யூகி முனி நூல்கள் ஒருசேர வெளியிடப்பட்டன. தற்கால மருத்துவர் அனைவராலும் போற்றிப் புகழப்படுபவர் வித்துவமணி

கண்ணுசாமிப் பிள்ளை என்பவர். பதார்த்த குண விளக்கம், கண்ணுசாமீயம், சிகிச்சாரத்ந தீபம் என்பன இவர் இயற்றிய நூல்கள். மயிலை. வைத்திய பூபதி S. கிஷ்ணராயரவர்கள், சகஸ்ர சித்த யோகம் சித்தர் கருத்தை யொட்டி, சகஸ்ர சித்த யோகம் என ஒரு நூலை வெளியிட்டார்கள். ஆயுள்வேத நூல்கள் பலவற்றைத் தமிழ் வசனமாக்கியவரும் அவரே. இனி, 'ஜீவக ரக்ஷகா மிர்தம்' என்னும் ரோக நிர்ணய நூலைச் செந்தமிழ் நடையில் மொழி பெயர்த்த பெருமை ஆயுள்வேத பாஸ்கரன் சுப்ரமணிய பண்டிதர்க்கு உரியது. இன்னும் தேரையர் பத்தார்த்தகுண சிந்தாமணி, தைலவர்க்கச் சுருக்கம், நீர்நிறக்குறி சாஸ்திரம் என்பனவும் அவரால் வெளிவந்தன வாகும். தமிழர் தவக்குறையால் எஞ்சிய நூல்கள் வெளி வாராதொழிந்தன போலும். தேரையர் ராஜ வைத்திய மகுடம், தேரையர் மகா கரிசல், மணி வெண்பாவில் சில பாகங்கள் இவற்றை வெளியிட்ட அக்கீம் அப்துல்லா சாகிப் அவர்கள் எழுதிய அநுபோக நூல்கள் அச்சிற் கிடைப்ப தில்லை. ஆயுள்வேத, சித்த, ஆங்கில மருத்துவமாகிய மூன்றிலும் தேர்ந்த மைசூர் ஜகந்நாத நாயுடு அவர்கள் வெளியிட்ட பைஷஜ கல்பம் முதலிய நூல்கள் தமிழ் மருத்துவத்துக்குச் செய்த சிறந்த தொண்டு எனக் கூறலாம். காலஞ் சென்ற திருவாளர் வைத்திய ரத்னம் க. ச. முருகேச முதலியார் செய்த சேவைகளால் அவருடைய மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும், சித்தர்களிடத்துக் கொண்டிருந்த பக்தியும் விளங்குகின்றன. குணபாட முகவுரையில், "பாவலர் நிறைந்த நாவலந் தீவில் முச்சங்க முன்னளினும், பிற்றை நாளினும் நல்லறிவின் முற்றுப் பேறுடையராய், ஞான மூதிர்ச்சி யுடையராய் விளங்கிய சித்தர் பல்லாயிரவ ராவார். அன்னவர் இயற்றிய ஆயுள் மறைச் சார்வான நூல்கள் எண்ணிலவாகும்" எனக் கூறுகின்றார்.

தமிழர், இவ்வாசிரியர்களுக்கு நன்றி செலுத்தும் முறையில் அப்பணியை மேலும் மேலும் வளரச் செய்ய வேண்டும். இக்கடப்பாட்டினை ஒருவரும் மறவாமல் ஊக்கத்தோடு முன் வருதல் வேண்டும். பொது இயக்கங் களில் எவ்விதக் கலப்புமின்றித் தன்னந் தனியராய் மருத்து வத்தையும் அதன் ஆராய்ச்சியையுமே தமது ஜீவியத் தொழிலாகக் கொண்டு உழைத்து வரும் சில அரிய மருத்து வர்கள் இல்லாமலில்லை. பொது மக்களும் பெரு மக்களும் ஒத்துவந்து ஆதரவளித்தால், அவர்கள் தங்கள் கடமையைக் குறைவற நிறைவேற்றுவார்கள். தமிழ் மருத்துவக் கலை மீண்டும் வளர்க!

குழந்தைகள் உள்ளம்

—மயிலை. சிவ-முத்துக்குமாரசாமி முதலியார்.

இராமகிருஷ்ண பரமாம்சர் ஒரு நாள் தம் சீடர்களோடு ஒரு தெருவின் வழியாகச் சென்றுகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு கட்குடியன் குடிவெறியின் மிகுதியால், தன்னை மறந்த நிலையில் தள்ளாடித் தள்ளாடி அவர்கட்கு எதிரே வந்து கொண்டிருந்தான். அவனைக் கண்ட இராம கிருஷ்ணர், "ஆ! இந்த நிலையினை நான் அடைய விழை கின்றேன்" என்றனராம். அடிகளார் விழைந்த ஆனந்த நிலைவேறு; அந்தக் கட்குடியன் அடைந்திருந்த அறிவுமயக்க நிலைவேறு அல்லவா? தமிழுலக ஆசிரியர் என்னைக் "குழந்தைகள் உள்ளம்" எழுதச் சொன்ன தன்மையும் இதற்கு ஒருவகையில் பொருந்தும். அவ்வாசிரியர், நமது திரு. வி. க. பெரியாரின் தூய உள்ளத்தைக் காணும்போ தெல்லாம் அவர்க்குக் குழந்தைகளின் கள்ளம் கபடம் அற்ற உள்ளம் நினைவுக்கு வந்திருக்கலாம்; அதனால் அப்பெரியாரின் மணிவிழாவிற்கு இக்கட்டுரை பொருத்தமாக இருக்கும் என அவர் எண்ணினார் போலும்! ஆனால், இக்கட்டுரைக்கு நான்தான் தகுதி என எக்காரணங் கொண்டு இவ்வாசிரியர் கருதினாரோ! அது எனக்குத் தெரியவில்லை. நான் சிறுவர் கட்குக் கதைப் புத்தகம் எழுதியிருப்பது ஒரு காரணமாய் இருக்கலாம். ஆனால் சிறுவர் நிலை வேறு; குழந்தைகள் நிலைவேறு. நான் சிறுவர்களிடையே பெரிதும் பழகி வருவதனாலும், சிறுவயதில் புரிந்த செய்கைகள் பலவும் நான் நினைத்துப் பார்க்கக் கூடும் ஆதலாலும் அத்தகைய கதைப் புத்தகங்கள் எழுதுவதில் எனக்குச் சிரமம் தோன்றுவதில்லை. குழந்தை களின் நிலையோ எனக்குச் சிறிதும் தெரியவராது. என் குழந்தைகளிடம் கூட நான் கொஞ்சிக் குலாவுவதில்லை. என் குழந்தைப் பருவத்தை எண்ணிப் பார்த்து எழுதுவதற்கும் எனக்கு அப்பருவச் செயல்கள் நன்கு நினைவில் வரவில்லை.

இப்பொழுது சிறிது நினைத்துப் பார்க்கின்றேன்.

1. என் அன்னையார் ஒருநாள் என் குண நலன்களைக் குறித்துப் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார். அப்போது நான் அவர்தம் மடியின்மீது படுத்துக்கொண்டு நல்ல நித்திரையில் இருப்பவன்போல் பாசாங்கு செய்தது என் நினைவுக்கு வருகிறது. அத்தகைய கள்ள உள்ளம் வாய்ந்த

பருவத்தைக் குழந்தைப் பருவம் என்று என்னால் எவ்விதம் சொல்ல இயலும்! கணக்குப் பார்த்தாலும் அப்போது குறைந்தது எனக்கு நான்கு வயதேனும் இருந்திருக்க வேண்டும்.

2. என் தாய்வழிப் பாட்டனார் இறந்து விட்டார். நாங்கள் நல்ல நள்ளிரவில் புறப்பட்டுச் செல்லுகின்றோம். எங்கள் வீட்டு நாயும் குரைத்துக்கொண்டே எங்கள் பின்னால் வருவது எனக்கு நினைவிருக்கிறது. அதுவும் மூன்று வயதுக்கு மேற்பட்டதாகவே எனக்குத் தோன்றுகிறது.

3. நான் ஒருநாள் தெருத் திண்ணையில் தனியே உட்கார்ந்து கற்கண்டு கட்டி ஒன்றை வாயில் வைத்துக் குழப்பிக் கொண்டிருந்தேன், அப்போது ஒரு காகம் என் அருகே வந்து அதைக் கவர்ந்து கொண்டு போய்விட்டது. நான் அழுது கொண்டே வீட்டிற்குள் சென்றது எனக்கு நினைவு வருகிறது. அது இளம் பருவச் செயலாய் இருக்கலாம். அப்போது எனக்கு மூன்று வயது முற்றுப் பெறவில்லை.

இவ்விதம் இரண்டொரு விஷயங்களை நினைத்துப் பார்த்துக் குழந்தைகள் உள்ளம் என்னும் கட்டுரையினை நான் எவ்விதம் எழுதுவேன்!

'செர்கிஅக்ஸாகோப்' என்னும் ரெஷ்யப் பெரியார் ஒருவர் எழுதிய 'என் குழந்தைப் பருவம்' என்னும் புத்தகத்தை நான் படித்துப் பார்த்தேன். அதில் அவர், தம் தாயார் அவரைத் தம் கையில் வைத்துக்கொண்டு கொஞ்சிக் குலாவி முத்தமிட்டதையும், தொட்டிலில் இட்டுத் தாலாட்டியதையும் மற்றும் பல குழந்தைப் பருவச் செயல் களையெல்லாம் நெடுநாள் ஆழ்ந்து சிந்தித்து எழுதி யிருக்கிறார். அவர் அந்த இளம் பருவத்தில் மிக்க நோயினால் வருந்தித் துன்பமுற்றனர் என்றும் கூறுகின்றார். அதனால் அவருக்கு அவை நினைவு வரலாம். அவ்விதம் ஏதேனும் எனக்கு நேர்ந்திருப்பினும் அவை நினைவுக்கு வருதல் கூடும். அத்தகைய நிகழ்ச்சிகளும் அந்த இளவயதில் எனக்கு நேரவில்லை.

ஏதேதோ ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்த என்னைத் தமிழுலக ஆசிரியர் திடுமெனக் குழந்தையாக மாற்றி விட்டார். அவர் அளித்த இந்த ஒருவாரத் தவணையில் நான் குழந்தைகளைக் குறித்த புத்தகங்களையே படிக்கலாயினேன். நான் எங்குச் சென்றாலும் குழந்தைகளே என் கண்களில் படுகின்றனர். ஆதலின் நான் எழுதும் இக்

கட்டுரையும் குழந்தைகளும் படிக்கத்தக்க எளிய நடையிலேயே இருக்கும் என்பதையே அவையடக்கமாகக் கூறி, எடுத்துக்கொண்ட பொருளைக் குறித்து ஆராய விழைகின்றேன்.

அன்பர்களே, இப்பொழுது உங்கள் கண்களுக்கெதிரே ஒரு குழந்தையின் உருவம் தோன்றுவதாக எண்ணிக் கொள்ளுங்கள். நல்ல அழகான குழந்தை! அதை ஞானசம்பந்தர் என்றே சொல்லலாம். அது பிறந்து இன்னும் இரண்டு நாட்கள்கூட ஆகவில்லை. அதற்குக் கண், காது, கை, கால் முதலியன யாவும் குறைவற அமைந் துள்ளன. இப்போது நாம் அதன் உள்ள நிலையினை நினைத் துப் பார்க்கலாம்.

உள்ளம் என்னும் ஒன்று இவ்விளம்பருவத்தில் அதற்கு உண்டா என்பதே சந்தேகம். உணர்ச்சிக் கருவிகள் அனைத்தும் நன்கு அமைந்திருந்தும் இன்னும் நன்முகத் தொழில்படவில்லை. அதற்கு அப்போது ஸ்பரிச உணர்ச்சியே பெரும்பாலும் இருக்கும். அதுவும் தட்பம் வெப்பம் முதலியவைகளையே ஒருவாறு தெரிந்து கொள்ளும். பால் குடித்தல், கைகால்களை அசைத்தல், உறங்குதல், அழுதல் இவைகளே அக் குழந்தையின் தொழில்கள். இவைகட்குத் தக்கபடி உணர்ச்சிக் கருவிகளும், மூளையும் சிறிது வேலை செய்து இருக்கலாம். இவை இயற்கைச் செயல்கள். உள்ளத்தால் உணர்ந்து அக்குழந்தை இவைகளைச் செய்த தாகக் கூற முடியாது.

அக்குழந்தையின் உள்ளத்தை நன்கு கவனிக்க இன்னும் சிலநாட்களேனும் நாம் பொறுத்திருக்கவேண்டும். இப் பொழுது அக்குழந்தை நம்மைப் பார்க்கிறது. ஆனால் எவ்விதம் பார்க்கிறது? நம்முடைய வடிவினை அது உணராது. ஏதோ ஓர் உருவம்போல் தோன்றும்; அதுவும் ஒரு மங்கலான நிறமாக அதற்குத் தோன்றலாம். நம்மை விட, விளக்கு அதற்கு ஆச்சரியமான பொருள். முதலில் திகைப்பு. பிறகு பழக்கத்தால் ஒளியைக் குறித்த ஓர் உணர்ச்சி. இவ்விதமே அன்னையின் தாலாட்டும், கொஞ்சிக் குலாவும் மொழிகளும் ஒலி வடிவில் பொருளின்றி அதன் மூளையில் பதிகின்றன. குறைந்தது மூன்று மாதங்களேனும் ஆனால்தான் அக்குழந்தை உணர்வுடைய ஒரு பொருளாக நமக்குத் தோன்றும். அப்போது அது நம்மைக் கண்டு சிரிக்கிறது. குரல் ஒலி எங்கிருந்து வருகிறது என்று அறிய முயற்சிக்கிறது. பச்சை, சிவப்பு, மஞ்சள் முதலிய நிறங் களைக் கண்டு மகிழ்கிறது.

இப்போது நாம் அதன் உள்ளத்தை ஒருவாறு அறியலாம். உள்ளம் என்பது என்ன? அஃது ஒரு பெரிய கேள்வியே. எனினும் மூளை, கண், காது, முதலிய இயந்திரங்கள், கைகால் முதலிய உறுப்புக்கள் ஆகிய அனைத்தும் தொழிற்படுவதற்குக் காரணமாகிய ஒன்று என்று வைத்துக் கொள்ளலாம். அது எங்கே இருக்கிறது? அது மிகப் பெரிய கேள்வி. அது நம் உடம்பின் எல்லாப் பாகங்களிலும் இருந்து மூளையோடு சம்பந்தம் பெற்று இருக்கிறது. எழுத்துக்களாக நினைக்கும்போது நெஞ்சில் இருக்கிறது; படங்களாக நினைக்கும்போது புருவ மத்தியில் இருக்கிறது; உறங்கும்போது மூளையில் இருக்கிறது. அவ்விதம் உள்ள ஒரு சக்தி என்று நான் எண்ணுகிறேன். அந்த உள்ளம் நன்முக வளர்ந்த பெரியோரிடத்தில் நமக்கு விளக்கமாகத் தெரிவதில்லை. ஒருவன் தன்னிடம் உள்ள கெட்ட குணங்களை முற்றிலும் மறைத்து நம்மிடம் மிகவும் நல்லவன்போல் நடிக்கலாம். ஆனால் அக்குழந்தையோ அவ்விதம் புரியாது. அதன் உள்ளம் கள்ளம் கபடம் அற்றது. அதன் உள்ளத்தில் தோன்றுபவைகளை யெல்லாம் அது தன் முகத்தில் தெரிவித்துவிடும். அதன் முகந்தான் கண்ணாடிக்குச் சரியான உவமை. அதனை நாம் ஒரு நிமிஷ நேரத்தில் அழ வைக்கலாம்; அடுத்த நிமிஷத்தில் அதனைச் சிரிக்கவும் வைக்கலாம். அது தேம்பித் தேம்பி அழுவதையும், அழுத கண்ணீர் உலருவதற்குள் சிரிப்பதையும், சின்னஞ் சிறு செயல்களை யெல்லாம் பார்த்துப் பார்த்து ஆச்சரியப்படுவதையும் நாம் அனைவரும் கண்டு களிக்கிறோம். அந்த வயதில் அதை யார் விரும்பினாலும் எடுத்துச் சீராட்டலாம்; பாராட்டலாம். அதற்கு இவர் அயலார் இவர் உறவினர் என்பது இல்லை. அது யாரைக் கண்டாலும் சிரிக்கும். அதனிடம் பகைமைக் குணம் சிறிதும் இல்லை. வஞ்சனை, பொறுமை முதலிய குணங்களும் இல்லை. அதற்குப் பசுவும் சிங்கமும் ஒன்றே. கிளியும், பாம்பும் ஒன்றே. அதற்கு அச்சம் சிறிதும் இல்லை. "அச்சமில்லை - அச்சமில்லை" என்று பாடிய பாரதியார் பாடல் அதற்கு வேண்டுவதே இல்லை. வள்ளுவர் வகுத்துரைத்த நீதி நூல்களும் அதற்கு வேண்டுவதில்லை. அக்குழந்தை ஒரு வகையில் பெரிய ஞானி. அன்று; தெய்வப் பிறப்பு. தெய்வத்தையும், குழந்தையும் ஒன்முக வைத்துக் கொண்டாடுகிறார்கள் அல்லவா! அத்தகைய தூய உள்ளம் வாய்ந்த குழந்தைகளின் உள்ளத்தைப் பாராட்டாதவர் யாவர்? அதன் வடிவைச் சித்தரிக்காத ஓவியக்காரனும் உளனே! அதன் வடிவ அழகினையும், குண நலன்களையும் புகழ்ந்து பாடாத புலவனும் உண்டோ? உலகமெங்கும் புகழும் இரவீந்திரநாத் தாகூர் பாடிய பாடல்களெல்லாம் குழந்தைப் பாடல்கள் அல்லவா?

குழந்தையைப் பெற்றுரோ இல்லையோ என்று ஐயுறத்தக்க திருவள்ளுவரும் "மக்கள்மெய் தீண்டல் உடற்கின்பம் மற்று அவர் சொற்கேட்டல் இன்பம் செவிக்கு" என்றும், "குழலினிது யாழினிது என்பதம் மக்கள் மழலைச்சொல் கேளா தவர்" என்றும் புகழ்ந்து பாடினர் என்றால் மேலும் கூறவேண்டுமோ? மக்கள் இன்பினைப் பெறுதவர்கட்குப் "பயக்குறை இல்லத்தாம் வாழும் நாளே" எனச் சங்கப் புலவர்களும் புகழ்ந்து கூறிய குழந்தைப் பேற்றினையும் அதன் உள்ளப் பான்மையினையும் நான் எவ்விதம் முற்றும் உணர்ந்து எழுதவல்லேன்!

இத்தகைய குழந்தைகளாலேயே இவ்வுலகம் நடை பெறுமானால் - இவ்வுலகம் குழந்தை உலகமாகவே நிலவி விடுமானால் இங்கே வஞ்சனை, பொறுமை, கோபம் முதலிய தீய ஒழுக்கங்களுக்கு இடன் உண்டோ? இப்போது நடை பெறும் போர்க் குழப்பந்தான் உண்டோ? திரு. வி. க. பெரியார் கூறும் பெண்மை அழகும், இயற்கை யெழிலு மாகவே பொலிவுற்று விளங்கும் அவ்வுலகம்! அப்படியானால் இப்போது நாம் அனைவரும் குழைந்தை களாக ஆகிவிடலாமா? ஆனால் நம்மைச் சீராட்ட ஒரு தாய் வேண்டும். காப்பாற்ற ஒரு தந்தையும் வேண்டும். எல்லாம் வல்ல இறைவியும் இறைவனுமே நமக்குத் தாயாக வும், தந்தையாகவும் இருந்து நம்மைக் காப்பாற்ற உடன் படுவதாக வைத்துக்கொள்வோம். அவ்விதம் உடன் பட்டா லும் அவர்கள் நம்மை மூன்றுமாதக் குழந்தைகட்கு மேல் வளர வொட்டாமல் தடுத்து வைக்கவேண்டும்! இல்லையேல் குழந்தை வளர்ந்து குரங்காக முடிந்தது என்னும் பழ மொழிக்குத் தான் நாம் ஆளாவோம். மறுபடியும் பொறுமை வஞ்சனை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக வந்து விடும்.

மற்றொரு விஷயம்: அவ்விதம் எல்லோரும் குழந்தையாக இருந்தால் அவைகளைக் கண்டு மகிழ்பவர் யாவர்? எல்லாம் வல்ல இறைவனும் இறைவியுமே அன்றோ? அவர்கள் இப் போதும் நம்மைக் குழந்தைகளாகவே எண்ணி மகிழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். அன்றியும் குழந்தைப் பருவம் குழந் தைக்கு இன்பமா? நமக்கு இன்பமா? குழந்தைகள் சாதாரண மாகப் பெரியோராக இருக்கவே விரும்பும். சின்னஞ் சிறு குழந்தைகளும் ஒருபொம்மைக் குழந்தையைஅன்றோ விரும்பு கிறது! அதனால் அந்தக் குழந்தைகள் வளர்ந்து பெரியோ ராகவே, அல்லும் பகலும் முயற்சிக்கின்றன; பொருள்களை அறிய ஆராய்ச்சி செய்கின்றன. மூன்றுமாதக் குழந்தையும் தன் அறிவுக்கு ஏற்றவகையில் ஆராய்ச்சி செய்யவே முயல் கின்றது. அதற்காக அழுகின்றது; கை கூடினால் சிரிக் கின்றது. நாம் அதன் செயல்களைக் கண்டு களிக்கின்றோம்.

குழந்தையின் உள்ளம் ஓர் ஆராய்ச்சிக்காரனின் உள்ளம் என்றும் கூறலாம். அதற்கு ஒவ்வொருநாளும் ஒரு புதுமைப் பொருள் வேண்டும். அது அப்பொருளைப் பலவகையிலும் ஆராய்ச்சி செய்து பார்க்கும்; ஆராய்ச்சி முடிந்தபின் அதனை வீசி எறிந்துவிடும். குழந்தைகள் சிறு நேரமேனும் சோம்பியிருப்பதில்லை. சாதிமத வேற்றுமைகளும் அவைகட்கு இல்லை. சிறுகாக்கை குருவி யாவும் அவைகட்கு நண்பர்கள். அவ்விதம் இருக்க, பாரதியார் "பாப்பா பாட்டு" ஏன் பாடினர் என்று எனக்கு விளங்கவில்லை! அவர் நம்மைக் குழந்தைகளாக எண்ணி நமக்குத் தான் பாடி இருக்கவேண்டும். அல்லது "இத்தகைய அருங்குணம் வாய்ந்த குழந்தைகள் பிறகு பொய், பொறுமை, வஞ்சனை களால் கெட்டு விடுகின்றனவே" என்று வருந்திப் பாடி யிருக்கவேண்டும்.

'கள்ள உள்ளம் சிறிதும் இல்லாத அக்குழந்தைகள் பின்னர் அழுக்காறு நிறைந்த தீயமனிதர்களாக மாறிவிடக் காரணம் என்ன?' எனச் சிலர் எண்ணலாம். குழந்தை உள்ளம் கள்ளம் கபடம் அற்றது என்பது உண்மையே. ஆனல் அது கள்ளத்தின் இழிந்த நிலையினை எண்ணிப்பார்த்து அதனை விலக்கிவிடவில்லை. கள்ளத்தனமாக நடப்பதற்கு வேண்டிய சிற்றறிவும் அதற்கு இல்லை. அறிவு வளர வளர அது அக்குணங்களைக் கடைப்பிடிக்கின்றது. மிகவும் அறிவு முதிர்ந்த பெரியோராக விளங்கும்போது அது ஆராய்ந்து பார்த்து அந்த இழிகுணங்களை முற்றிலும் ஒழித்துவிடுகிறது. குழந்தைகளின் உள்ளம் தூய்மையான தாகக் காணப்படுவதற்கு அக்குழந்தைகளின் அறியாமையே காரணமாகும். ஆதலால் நமது திரு. வி க. அவர்களைப் போன்ற பெரியோர்களின் உள்ளமும் சின்னஞ்சிறு குழந்தை களின் உள்ளமும் பொதுவகையில் ஒன்றுகக் காணப் பட்டாலும் சிறப்புவகையில் வேறுபடும். முன்னது அறிவு நிரம்பிய தூய்மையான உள்ளம்; பின்னது அறியாமை நிரம்பிய வெள்ளையுள்ளம் ஆனல் குழந்தைகளைப்போன்ற அறியாமை நிரம்பிய பெரிய மனிதர்களும் உண்டு; பெரியோர்களைப் போன்ற அறிவு நிரம்பிய குழந்தைகளும் உண்டு. ஞானசம்பந்தர் மூன்றுவயதில் அற்புதங்கள் செய் தார்; மெய்கண்டார் மூன்றுவயதில் ஞானசாத்திரம் போதித்தார். அத்தகைய ஞானிகளின் உள்ளங்களை நம் போன்றவர்களால் அளவிட்டு அறிய இயலாகாது.

கடவுளர்களையும், பெரியோர்களையும் குழந்தைப் பருவத்தினர்களாக மாற்றிப் பார்த்தலில் நம்மவர்க்குப் பெரிதும் விருப்பம். நம்நாட்டில் நிலவும் பிள்ளைத்தமிழ் நூல்களே இதற்குச் சான்று பகரும். பெரியோர்கள் ஒரு வகையில் குழந்தைகளாகவே மாறிவிடுகின்றனர். நாற்பது

வயதுக்குமேல் நாய்க்குணம் என்பர்; ஆனல் அறுபது வயதுக்குமேல் அக்குணம் குழந்தைக் குணமாக மாறுதலே நாம் கண்கூடாகப் பல பெரியோர்களிடம் காணலாம். குழந்தைகட்குக் கிழவரிடந்தான் அதிக ஆனந்தம். கிழவர் களும் தம் பெயரர் பெயர்த்திமார்களிடமே அதிக அன்பினைக் காட்டுகின்றனர். காந்தி அடிகளார் மூன்பு ஒருமுறை சிறையில் இருந்தபோது தம் ஆச்சிரமத்துக் குழந்தைகட்கு ஓர் அழகான கடிதம் எழுதினர் அல்லவா! அக்கடிதத்தில் மிளிரும் குழந்தைத் தன்மையினை இன்று நினைத்துப் பார்த்தாலும் நமக்குள் மகிழ்ச்சி தோன்ற வில்லையா? "ஆ! எனக்கு இறக்கைமட்டும் இருந்தால்-" என்று எழுதிய அக்கடிதத்தில் குழந்தைத் தன்மைதான் காணப்படுகிறது.

என் ஆசிரியர் மணி திருநாவுக்கரசு முதலியாரின் தந்தையாரை நான் ஒருமுறை "உங்களுக்கு இப்போது என்ன வயது?" என வினவினேன். அவர் உடனே நிமிர்ந்து உட்கார்ந்து புன்னகை தவழ்ந்த தம் பொக்கை வாயினை ஆவலோடு திறந்து "நான் இப்போது பதினெறு வயது பாலகுமாரன்" என்று மார்பு தட்டிக்கொண்டு கூறினர். நான் உடனே "அஃதெப்படி?" என்றேன். அதற்கு அவர் "மனிதனுக்கு அறுபது வயதிற்குமேல் குழந்தைப் பருவம் திரும்புகிறது; எனக்கு இப்போது எழுபத்தாறு; ஆதலால் நான் பதினெறு வயது பாலகுமாரன்" என்றார்.

அப்பெரியாரின் கொள்கைப்படி நம் திரு. வி. க. முதலியார் இப்பொழுது ஓராண்டு நிறைவுபெற இருக்கும் இளங்குழந்தையே ஆவர். இப்பொழுது நடைபெறுவது அக்குழந்தையின் முதல் ஆண்டு விழா. அக்குழந்தையின் அழகு முதிர்ந்த இன்ப வடிவினைக் கண்டு மகிழ நாம் பெரிதும் அவாவுகின்றோம். அறிவு முதிர்ந்த அக் குழந்தையின் அமுதமொழியினைக் கேட்க நாம் ஆவல் கொண்டுள்ளோம். அவர் தம் தூய உள்ளம் என்றும் துகளின்றி மிளிர்வதாக! அவர்தம் குண நலன்கள் மேன் மேலும் ஓங்கி ஒளிர்வதாக! அவர் தம் எழில் வாய்ந்த திருவதனம் என்றும் இளமையுடன் திகழ்வதாக! பல்லாண்டு பல்லாண்டு அவர்தம் ஆயுள் நீடித்து நிலவுவதாக! திரு. வி. க என்னும் அவர் தம் திருப்பெயர் என்றும் பொன்னெழுத்துக்களால் பொலிவுறுவதாக! ஒப்புயர்வற்ற அவர் தம் கொள்கைகள் எங்கெங்கும் பரவி என்றென்றும் நிலவுவதாக! தமிழ்நாட்டுப் பெரியார் **திரு. வி. கலியாண சுந்தர முதலியார் வாழ்க!**

இசைத் தமிழ்

—வித்வான். முருக. இலக்குவனார்.

உலகத் தோற்றத்தைப் போலக் கால எல்லை கணித்தறிய முடியாத அவ்வளவு தொன்மைத்தாகத் தமிழ் மொழியின் தோற்றமும் இருக்கின்றது. தமிழ் மொழியின் வரலாற்றை எந்த நாள் முதலாக நாம் அறிகின்றோமோ அந்த நாள் முதலாகவே அது முத்தமிழாகப் பிரிந்திருக்கக் காண்கின்றோம். உலகப் பகுதிகளில் இன்றுவரை தோன்றியுள்ள மொழிகளில் இவ்வாறு மூவகைப் பிரிவும் தனித்தனி இலக்கண அமைவும் பெற்ற மொழி வேறொன்றுமே இல்லை. ஏறக்குறைய மூவாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே தமிழர் நாகரிகத்தின் உயர்நிலையை அடைந்து விட்டனர் என்பதற்கு அவர்கள் மொழியே சான்றாக நிற்கின்றது. கார்காலத்து மேகம் மயில்களை ஆட விட்டதுபோல - இளவேனிற் காலம் குயில்களைப் பாடவிட்டது போல - பழந்தமிழர்களுடைய அமைதியான வாழ்வில் ஊறிப் பெருகிய இன்பவெள்ளம் இசையாகவும் நாடகமாகவும் பொங்கியது. அக்காலத்து மக்களுடைய வாழ்வில் முத்தமிழும் ஒப்பக் கலந்து நின்றன என்பதற்குச் சிலம்புநூல் சான்றாகும். இசைத் தமிழும் நாடகத் தமிழும் நாளடைவில் அருகி மறைய இயற்றமிழ் ஒன்றுமே இன்றளவும் நிலைபெறுவதாயிற்று. எனினும் இருக்கின்ற தமிழ் நூல்களைக் கொண்டு இசைத் தமிழின் வரலாற்றைச் சுருங்கக் கூறுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இதுவரை வெளிவந்துள்ள தமிழ் நூல்களில் தொல்காப்பியம் மிகப் பழமையானது. இயற்றமிழ் இலக்கணமாக எழுந்தது அந்நூல். அதனுள் எழுத்ததிகாரத்தில்,

> "அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
> உளவென மொழிப இசையொடு சிவணிய
> நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என வரூஉம் சூத்திரம், உயிரெழுத்துக்களும் ஒற்றெழுத்துக்களும் இசை நூற்கண் தமக்கோதிய மாத்திரையின் நீண்டொலிக்கும் என்பதைக் குறிக்கின்றது. "இசையொடு சிவணிய நரம்பின் மறை" என்பதனால் யாழினது இசைக்கெனத் தனியே நூலிருந்தமை உணரலாம். அந்நூலின் பொருளதிகாரத்தில்,

ராஜா சர். அண்ணுமலைச் செட்டியார் அவர்களைத் தமிழ் நாடு நன்கறியும். அண்மையில் தமிழிசைச் சங்கம் தொடங்கியுள்ளார். தமிழிசையின் மறுமலர்ச்சியைக் காண்போமானால் அப் பெருமையனைத்தும் நம் அரசர் பெருமானுக்கே உரியதாகும்.

"தெய்வம் உணவே மாமரம் புட்பறை
செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ"

என வரூஉம் கருப்பொருட் சூத்திரம், நிலந்தோறும் வேறு வேறு பண்முறையும் பறை முழக்கமும் உண்டென்பதைக் கூறுகின்றது.

"பாட்டிடைக் கலந்த பொருள வாகிப்
பாட்டி னியல பண்ணத் தியே"

என்பது செய்யுளியற் சூத்திரம். "இயற்றமிழ்ப் பாவினங்கள் பண்ணை (இராகம்) தோற்றுவித்தலான் பண்ணத்தி எனப் படும்" என்பது இதன் கருத்தாகும். பண்ணைத் தோற்று வித்தலாற் பண்ணத்தி யாயிற்றெனவும், பண்ணத்தி எனினும் பாவினங்கள் எனினும் ஒக்கும் எனவும் உரை யாசிரியர் கூறுகின்றார்.

"தீந்தொடை நரம்பின் பாலை வல்லோன்
பையு ளுறுப்பிற் பண்ணுப் பெயர்த்தாங்கு
சேறுசெய் மாரியி னளிக்குகின்
சாறுபடு திருவி னனைமகி ழானே"

என்ற பதிற்றுப்பத்தின் பாடல், பாலைப் பண்கள் பலவற்றையும் ஓரோவொன்றாக மாறிமாறி வாசித்தல் உண்டென்பதைத் தெரிவிக்கின்றது. 'வண்டிமிரும் ஓசையும் பாணர் யாழோசையும் ஒருபுறம் - ததும்புகின்ற அருவி நீரும் முழங்குகின்ற முழவமும் ஒருபுறம் - வாடைவீச ஆடுகின்ற பூங்கொடியும் பாடலுக் கேற்ப ஆடுகின்ற விறலியும் ஒருபுற மாகச் சீர்மிக உடைத்துத் திருப்பரங்குன்றம்' எனப் பரிபாடற் பாட்டொன்று கூறுகின்றது. இசைக் கருவிகளைத் தோற்றுவித்த இயற்கை நிகழ்ச்சிகள் எவை என்பதை இதனால் அறியலாம்.

மத்தளம், சிறுபறை, கஞ்சதாளம், கொம்பு, நெடு வங்கியம், குறுந்தூம்பு, குழல், கரடிகை, சல்லி, ஒருகண் மாக்கிணை முதலியவற்றைப் பற்றியும, யாழினமைப்பினைப் பற்றியும் மலைபடுகடாம் கூறுகின்றது.

"பாட லோர்த்தும் நாடக நயந்தும்
வெண்ணிலவின் பயன்துய்த்தும்
கண்ணடைஇய கடைக்கங்குல்"

என்பது பட்டினப்பாலை. புகார் நகரத்து மாந்தர் கடற்கரை எக்கரில் நிலவின் பயனை நுகர்ந்தும், இனிய இசையைக் கேட்டு மகிழ்ந்தும், நல்ல நாடகத்தைக் கண்டு களித்தும்

பின்னர்க் கண்ணுறங்கினர் என்பது இவ்வடிகளால் குறிக்கப்படுவதாகும்.

"பாடுவல் விறலியோர் வண்ணம் நீரும்
மண்முழா அமைமின் பண்யாழ் நிறுமின்
கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்
எல்லரி தொடுமின் ஆகுளி தொடுமின்
பதலை ஒருகண் பையென இயக்குமின்
மதலை மாக்கோல் கைவலந் தமினென்
றிறைவ னுகலிற் சொல்லுபு குறுகி
மூவேழ் துறையு முறையுளிக் கழிப்பிக்
கோவெனப் பெயரிய காலை"

என்னும் புறப்பாட்டு, மான்தசையும் தேனும், மணிக் குவையொடு பொன்னும் காட்டகத்தே பெற்ற புலவன் ஒருவனின் மகிழ்ச்சி எங்கெங்கே சென்று மோதுகின்றது என்பதைக் காட்டுகின்றது.

"ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளிக் குழலிசை யாகப்
பாடின் னருவிப் பனிநீ ரின்னிசை
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை யிருக்குங் கடுங்குரற் றூம்பொடு
மலைப்பூஞ் சாரல் வண்டியா ழாக
இன்பல் லிமிழிசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவள ரடுக்கத் தியலி யாடுமயில்"

என இயற்கை நாடகம் ஒன்றினை எழுதிக் காட்டுகின்றது அகப்பாட்டு.

"ஏழ்புண ரின்னிசை முரல்பவர்க் கல்லதை
யாழுளே பிறப்பினும் யாழ்க்கவைதாம் என்செய்யும்"

என்பது கலி.

இனி, முத்தமிழுக்கும் நிலைக்களனாக உள்ளது சிலம்பு நூலென முன்னரே கூறினேம். அரங்கினமைதியும், யாழ், குழல், தண்ணுமை முதலியவற்றின் ஆசிரிய இலக்கணமும், இசையாசிரிய னமைதியும், ஆடலிலக்கணமும் அரங்கேற்று காதையில் கூறப்படுகின்றன. மாதவியும் கோவலனும் யாழ் வாசித்துக் கடற்கரையில் பாடிய பாட்டுக்களைக் கானல்வரி யாகப் பாடிக்காட்டுகின்றார் இளங்கோவடிகள். வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, குரவைக்கூத்து முதலிய சிறு கூத்துகளும் வரிப்பாட்டுகளும் இசையை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

சங்க நூல்களில் வரும் இசைக் குறிப்புகட்கு எடுத்துக் காட்டாகச் சில கூறினேம். சங்க நூல்களில் இசைக் குறிப்பே வாராத நூலின்மையானும், புலவர்கள் பலரும் முத்தமிழ் வல்லுநராய் இருந்திருத்தலானும், பொதுமக்களாயினர் இசையை அறிந்தும் இசையின்பம் நுகர்ந்தும் போற்றி வந்திருத்தலானும் அக்காலத்தில் இசைத்தமிழோலி நாடெங்கும் ஒலித்திருத்தல் வேண்டுமென அறிகின்றேம். சங்ககாலம் என்பது ஏறக்குறைய கி. பி. மூன்றும் நூற்றாண்டிற்கு முந்திய காலம் என்பர் ஆராய்ச்சியாளர்.

இனி, சங்க காலத்திற்குப்பின் சோழ பாண்டியர் நாடுகளப்பிரர் கையிலும், காஞ்சி பல்லவர் கையிலும் வீழவே தமிழ் வேந்தர்கள் வீறழிந்தனர்; தமிழ்நாடு அமைதியின்றி நிலை குலைவதாயிற்று. களப்பிரர்கள் ஆட்சிப் போக்கும் பிறவும் காரணமாகக் கி. பி. ஆறும் நூற்றாண்டுவரை தமிழ் வளர்ச்சி தடைபடுவதாயிற்று. இக்காலத்தைப்பற்றித் தெளிவாக ஒன்றும் கூறுவதற்கில்லை.

கி. பி. ஏழாம் நூற்றாண்டு முதல் இயற்றமிழும் இசைத் தமிழும் மீண்டும் தலையெடுக்கத் தொடங்கிற்று. ஆனால் நாடகத் தமிழ்மட்டும் சிலம்பு நூலோடு நின்றுவிட்டது. திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் முதலிய சைவ சமயாசாரியர்கள் தோன்றித் தேவாரப் பாடல்களைப் பாடியருளினர். ஆழ்வார்கள் தோன்றித் திவ்யப்பிரபந்தம் பாடினர். இசைத்தமிழ், இவ்வாறு தெய்வச் செழுமணம் பெற்று இன்ப நறுந்தேன் பிலிற்றி நாடெங்கும் பரவிற்று. திருவருள் நீரால் இசைத்தமிழ்ப் பயிரை வளம்படுத்திப் பயன் பெருகச் செய்தனர் நாயன்மார்களும் ஆழ்வார்களும். யாழ் முதலிய பல இசைக் கருவிகளும், சிலம்பு நூல், பரிபாடல், தேவாரம் முதலியவற்றிற் காணப்படும் இசையிலக்கணம் பண்முறை முதலியவும் தமிழர்க்கே உரியனவாகும்.

நாயன்மார்களுள், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரையர், காரைக்காலம்மையார் மூவரும் இயற்றமிழும் இசைத் தமிழும் வல்லுநர் எனவும், திருநாகைப் போவார், ஆனையர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், பரமனையே பாடுவார் என்ற இவர்கள் இசைத்தமிழில்மட்டும் வல்லவர்கள் எனவும் திருத்தொண்டர் புராண வரலாறு கூறுகின்றது. தேவாரப் பண்களெல்லாம் தாளக்கட்டுடையன ஆதலால் சுரம் அமைத்துப் பாடுதற்கும் உரியனவாம். தமிழர் பெற்ற விழுச்செல்வம் தேவாரப் பாடல்களாகும். இயற்கையையும் இறைவனையும் இசை நாரிற் பிணித்துக் காட்டிய

காட்சிகளே தேவாரப் பாடல்கள். இயற்கையை ஆசானாக வும் வழிகாட்டியாகவும் கொண்டு, இயற்கையோடொன்றி வாழ்ந்தனர் பழந்தமிழர். அதனாற்றான் பழந்தமிழ் நூல்க ளெல்லாம் இயற்கையோவியங்களாகத் திகழ்கின்றன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் இன்னும் ஒருபடி மேற் சென்று இயற்கையையும் இறைவனையும் தொடர்பு படுத்தினர்.

உயர்ந்த பொருளமைதி யில்லாத அல்லது பொருளே உணர முடியாத இசைப் பாடல்களால் மனம் சிறிது நேரம் மடங்கி நிற்குமே தவிர வேறு பயன் ஒன்றும் விளையாது. இசையின் பயன் மனத்தைச் செந்நெறிப்படுத்துவதாக இருக்கவேண்டும்; அதுவே மிக உயர்ந்ததுமாகும். மக்கள் மனமாசகன்று, மனக்குறும்படங்கி வாழ வேண்டு மானால் - மக்கள் வாழ்வு இயற்கையிற் றோய்ந்து, காதலிற் கலந்து, அன்பாய் அரும்பி, அருளாக மலரவேண்டுமானால் - இறையன்பு உண்மையன்பாகி உணர்வோடு கலந்து பொங்க வேண்டுமானால் இவற்றையெல்லாம் செய்யவல்லன தேவார திருவாசகங்களே. மனதிற் படிந்து அறிவிற் கலந்து உணர்வில் ஒன்றி எழும் பாடல்கள் தமிழ்த் தேவாரங்க ளாதலால் அவை உண்மைப் பயனை விளைக்கின்றன. 'முகமலர அகம் நெகிழ, அன்பில் நினைந்தெனையல்லால் அறிவுரு மொழி நல்ல" என இறைவனே கூறுகின்றான். மறைகளும் மந்திரங்களும் மற்றை மொழிகளும் அவ்வாறு நினைக்கும்படி செய்ய வல்லன அல்ல. இசைத் தமிழின் வெற்றித் தூணமாக - கடவுட் கொள்கையின் கலங்கரை விளக்கமாக – அன்பு, அருள், அமைதி, இன்பம், வீரம் இவற்றின் கருவூலமாக விளங்குவன இசைத் தமிழாகிய தேவாரங்கள் எனச் சுருங்கக் கூறலாம்.

கோழைமிட றூகலி கோளுமில
வாகஇசை கூடும் வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவை சொன
சொன்மகிழும் ஈச னிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின்
வீழநிரை தாறு சிதறி
வாழையுதிர் வீழ்கனிகள் ஊறிவயல்
சேறுசெயும் வைகாவிலே.

—ஞானசம்பந்தர்.

கோவைவாய் மணிவரன்றிக் கொழித்தோடும் காவிரிப்பூம்
பாவைவாய் மூத்திலங்கப் பாய்ந்தாடும் பழனத்தான்
கோவைவாய் மலைமகள்கோன் கொல்லேற்றின் கொடியாடைப்
பூவைகாள் மழலைகாள் போகாத பொழுதுளதே.

—திருநாவுக்கரசர்.

மானும்மரை யினமும்மயி லினமும்கலந் தெங்கும்
தாமேமிக மேய்ந்துதடஞ் சுனைநீர்களைப் பருகிப்
பூமாமா முறிஞ்சிப்பொழி லூடேசென்று புக்குத்
தேமாம்பொழில் நீழல்துயில் சீபர்ப்பத மலையே.

—சுக்தார்.

இனி, காவியங்கள் பெருகத் தோன்றிய காலமும் இதுவேயாகும். சீவகசிந்தாமணி, பெரிய புராணம், கொங்குவேண் மாக்கதை முதலியன இசைக் குறிப்பு நிரம்பக் காணப்படும் காவியங்களாகும். வில்லிறுத்தும், திகிரி எய்தும், ஏறு தழுவியும் தாம் விரும்பிய பெண்ணை மணந்து கொள்ளும் முறைபோல இசைவல்லமையே பொருளாகச் சுயம் வரம் வைத்த வரலாற்றினைச் சிந்தாமணி கூறுகின்றது. காந்தருவதத்தை என்பவள் யாழ் வாசினையிற் பெருவன்மை சான்றவள். யாழ்வாசினையால் அவளை வெல்வோனே அவளுக்கு மணவாளனுவான் எனக் குறித்திருந்தனர் அவள் பெற்றோர். சீவகன் அவளை வென்று மணக்கின்றான். சமணர் காவியங்களில் வரும் தலைவன் தலைவியர் இசையில் மிகத் தேர்ச்சி பெற்றவர்களாகக் கூறப்படுகின்றனர். உதயணனும், சீவகனும் ஏறக்குறைய ஒத்த வல்லமை யுள்ளவராகக் கூறப்படுகின்றனர். எல்லா விச்சைகளிலும் வல்லவனுகச் சீவகனைப் படைக்கின்றார் தேவர். உதயணன் சில குறைந்தவனுகப் படைக்கப் படுகின்றான். ஆனய நாயனுர் புராணத்தில் குழல் வாசினையின் இலக்கணத்தோடு இசையிலக்கணத்தையும் புலப்படுத்துகின்றார் ஆசிரியர் சேக்கிழார். இவ்வாறு பதின் மூன்றும் நூற்றாண்டுவரை இசைத் தமிழ், மக்களால் வழங்கப்பட்டு வந்தது.

உரையாசிரியர்கள் காலமுதல் இசைத்தமிழிலக்கண நூல்களும், இசைத் தமிழுமே மறையத் தொடங்கிவிட்டன. இசைத் தமிழும் நாடகத் தமிழும் இருந்து மறைந்தமை பற்றிக் குறிப்பிடாத உரையாசிரியர்களில்லை. உரையாசிரியர் கள் காலத்திலிருந்த நூல்கள்கூட இப்போது நமக்குக் கிடைக்கவில்லை. அடியார்க்கு நல்லாருரையில் மேற்கோளாக எடுத்துக் காட்டப்படும் நூல்களில் ஒன்றேனும் இன்று நாம் காணுமாறில்லை. எனினும் இசைப் பாடல்கள் எங்கும் பாடப்பட்டு வந்தன. அக்காலத்துப் பழக்கத்தை யொட்டியே திருப்புகழ் பாடப்பட்டிருத்தல் வேண்டும். திருப்புகழ்போலத் தாளக்கட்டமைந்த இசைப் பாடலே வேறு இல்லையென இசைப் புலவர்கள் கூறுகின்றனர். குறவஞ்சி நாடகம், குறம், பள்ளு முதலியன இசைத் தமிழின் சிதர்களாகும்.

நாளடைவில் வேற்று மொழியாளரும் வேற்று நாட்டினரும் தமிழ்நாட்டை ஆளத் தொடங்கவே இசைத் தமிழிற்கு ஆக்கமும் மதிப்பும் அரிதாயிற்று. வேற்று மொழி மோகமும், ஆட்சி மாறுதலும் காரணமாக, கலை பெருகிய காலத்துப் பயிர், தானாக அழிந்து விடுவதுபோலத் தமிழிசை மெல்ல மறைந்ததுபோலும். இராமநாடகக் கீர்த்தனையும், பதங்களுமாக இன்றுவரை பல்லாயிரம் பாடல்கள் எழுந்துள்ளன. சங்க காலத்திற்கு முன்பிருந்து இன்றுவரை உள்ள இசைத் தமிழின் நிலையை மேற்போக்காகக் கண்டோம். இசைத் தமிழ் மறைந்துவிட்டதாகவோ அழிந்து விட்டதாகவோ கூறுதற்கிடமில்லை. சிலம்பு நூலிலும் மற்றைத் தமிழ் நூல்களிலும் காணப்படும் இசைத் தமிழ், இஞ்ஞான்று கூறப்படும் இசையோடு இன்னின்ன வகையில் ஒற்றுமை வேற்றுமை உடையன என்பதை நன்னார்க் கண்டு விபுலானந்த அடிகள் கூறியுள்ளார். நுண்மாண் நுழைபுல வன்மையால் ஓவாது முயன்று உண்மை கண்டு இசைத் தமிழுலகினை விளங்க வைத்த அவ்வடிகளார்க்குத் தமிழுலகம் என்றும் கடப்பாடுடைத்து. தமிழ்ச் செல்வர்களும், தமிழ்ச் சான்றோர்களும் ஒருமைப்பட்டு முயன்று இசைத் தமிழொலி மீண்டும் நாடெங்கும் ஒலிக்கச் செய்வார்களாக.

கொண்டவன் பெருமை

—திரு. வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார்.

எல்லாருக்கும் தெரிந்த விஷயந்தான்.

இரண்டு பெண்கள்.

ஒருத்தி மிக்க அழகுவாய்ந்தவள். நல்ல செம்மை நிறம். பெருஞ்செல்வத்தில் பிறந்து வளர்ந்தவளென்பதை அவளுடைய விலையுயர்ந்த ஒப்பனைகளே காட்டுகின்றன. அவள் உடம்பு முழுவதும் தங்கத்தாலும் வைரத்தாலும் இழைக்கப்பட்டிருக்கிறது. கட்டியிருப்பது பொன்னுடை. விசாலமான தோட்டமும் அதன் நடுவில் மாளிகையும், ஊர்திகள், இடம், பொருள், ஏவல், இவையெல்லாமிருந்தும் அவள் முகத்தில் ஒரு குதூகலத்தைக் காணேம். பௌர்ணமி கழிந்து நாலைந்து நாட்களுக்குப்பிறகு காலை நேரங்களில் மேற்கு வானத்தில் காணப்படும் நிலவைப்போல் அவள் தோற்றம் பொலிவிழந்து காணப்படுகிறது. இதற்குக் காரணம் என்ன? ஒரு பெண்ணுக்கு இருக்கவேண்டிய எந்த ஒன்று இருந்து விட்டால் மற்றவைகளெல்லாம் மிகையாகுமோ, எது இல்லாவிட்டால் மற்றவைகள் இருந்தும் இல்லாதனவாகக் கருதப்படுமோ, அந்த ஒன்றை அவள் இழந்து விட்டாள். அது எது? அவள் கணவன் அன்பு. அவன் வேறு எங்கேயோ நாட்டம் செலுத்தி விட்டான். அவளுக்குரிய அன்பை வேறொருத்தி கவர்ந்து கொண்டாள்.

இன்னொருத்தி இடம், பொருள், ஏவல், வனப்பு முதலியவைகளிலெல்லாம் முன்னவளுக்கு மாறுபட்டவள். எனினும் அவள் முகத்தில் எங்குமில்லாத ஒரு மந்தகாசம் காண்கிறோம். தன்னைப் பற்றித் தான் பெருமை கொண்டிருப்பதாக அவள் நடை காட்டுகிறது. இப்பரந்த உலகில் ஏதோ ஒரு சிறிய வீட்டில் அவள், இன்றியமையாது வேண்டப்படுகிறாளென்பதை அவளுடைய மோகனச் சிரிப்பும் கவலையற்ற பேச்சும் குறிப்பிடுகின்றன. இதற்குக் காரணம் என்ன? அதற்கு ஒரே சொல்லில் விடை கூறி விடலாம். அவள் கணவன் அவளைத் **தாங்குகிறான்.** இந்தத் "தாங்குகிறான்" என்பதில் என்னென்ன பொருளெல்லாமோ அடங்கியிருக்கிறது. நமது தாய் மொழி அத்துணைப் பொருட் செறிவு வாய்ந்தது!

ஆம், ஒரு மங்கைக்கு வாய்த்த கணவன் அவளை மனமார நேசிப்பானுகில், பெருமை கொள்வதற்குரிய காரணம் அதைவிட அவளுக்கு வேறொன்று மிருக்கமுடியாது. அதிலும் அவன்

ஆண்டகைமை, கல்வி, ஒழுக்கம், புகழ், வீரம் முதலிய நற்பண்புகள் வாய்ந்தவனை இருந்து விட்டாலோ, அவள் பெருமை நிலைகொள்ளாது பொங்கிவழியும். பிறர் தன்னை ஏசுவார்களே என்றும் நினையாமல், தன்னைக் கொண்டவன் பெருமையை ஓயாது பேசுவாள். பிறர் ஏச்சும் பேச்சும் அவளை என் செய்யும்? கொண்டவன் பலம் அவளுக்கு இருக்கிறது. இவ்வுண்மையை நமது நாட்டுப் பழமொழியொன்று சித்திரித்துக்காட்டுகிறது. "கொண்டவன் பலமிருந்தால் கூரையேறிச் சண்டைபோடுவாள்" என்பது அப்பழமொழி. கூரையேறிச் சண்டை போடுவதற்காக மட்டுமன்று; பெரிய காரியங்களைச் சாதிப்பதற்கும் ஒருத்திக்குக் கொண்டவன் பலம் வேண்டும். சியாங்-கை-ஷேக் சீமாட்டி, டாக்டர் முத்துலட்சுமி செட்டி, ஆண்டாள் வேங்கடசுப்பாவ், ருக்மணி அருண்டேல் முதலிய பெண்மணிகள் கொண்டவன் பலத்தாலேயே செயற்கரிய செய்வதை நம் கண்முன்னால் பார்க்கிறோம்.

கொண்டவன் ஆதரவை இழந்துவிட்ட ஒரு பெண்ணின் நிலை மிகப் பரிதாபகரமானது. எந்த நிமிஷம் அவள் தன் கணவனுடைய அன்பை இழந்து விட்டாளோ, அதேநிமிஷம் அவள் அருமையாய்ப் பிறந்து வளர்ந்த தாய் வீட்டிலும் அவளுக்கு மதிப்புப் போய்விடும். பிறந்தகத்தில் வெறுத்துத் துரத்தப்பட்ட ஒரு பெண் புக்ககத்தில் அரசு வீற்றிருக்கலாம்; ஆனால், புக்ககத்தில் வேண்டப்படாத ஒருத்தி பிறந்தகத்திலும் வேண்டப்படமாட்டாள். இவள் நிலையை ஒரு தாமரை மலருக்கு ஒப்பிடலாம். தாமரை மலர்வதற்கு இன்றியமையாதன, வெய்யிலும் நீருமல்லவா? தாமரையைக் கொய்து நீரில் போடுங்கள், மூன்பு வளர்த்த அத் தண்ணீரே இப்போது அதை அழுகச் செய்து கொல்லும். "மூன்பெல்லாம் பகலவன் இத் தாமரையை மலரச் செய்தவனையிற்றே; தண்ணீர்தான் தன் கடமையை மறந்து விட்டாலும், பகலவன் மறக்கமாட்டான்" என்று நினைத்து அம்மலரை யெடுத்துக் கரையில் போடுங்கள். அதே பகலவன் இப்போது அதை வதக்கிக் கசக்கி விடுவான்.

கொண்டவனால் கைவிடப்பட்ட ஒரு பெண்ணுக்கு இந்த இரண்டுங் கெட்ட நிலைதான் ஏற்படும். அவளுக்குப் பகையாயினர் அவளைக் கண்டு நகைக்கும்போது - ஒருவருக்கொருவர் குசுகுசு வென்று பேசும்போது - அவர்கள் முன் அவள் தலைநிமிர்ந்து நடக்க முடியாது.

இதை எழுதும்போது, ஓர் அருமைத் திருக்குறள் என் நினைவுக்கு வருகிறது.

> "புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை இகழ்வார்முன்
> ஏறுபோற் பீடு நடை"

என்பது அக்குறள். கற்பினால் வரும் புகழை விரும்பாத மனைவியையுடைய ஒருவனைச் சுட்டி இக்குறள் பாடப்பட்ட போதிலும்,

கற்பினால் வரும் புகழை விரும்பாத கணவனையுடைய (ஆம், ஆண்களுக்கும் கற்பு உண்டென்பதை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டும்) ஒருத்தியையும் இக்குறள் சுட்டுவதாகத் திருப்பிப் படிப்பது இழுக்காகாது.

ஒரு பெண் தன்னைக் கொண்டவனைப்பற்றிப் பெருமைகொள்ள வேண்டுமானால், அவன் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? உடற் கூறுபாட்டிலும், உள்வினையுடைமையிலும் பெண்ணைவிட ஆண் மகன் இயற்கையில் அதிக வன்மையும் உரிமையும் பெற்றிருக்கிறான். இவ்வண்ணம் உரிமைகளை அவன் நல்வழியில் பயன்படுத்த வேண்டும். இவைகளை நெறியல்லா நெறியிற் செலுத்தும் ஆண் மகன் முதலில் தான் கெட்டு, பிறகு பெண்ணையும் கெடுக்கிறான். சிற்சில விலக்குகள் இருக்கலாம்; அவைகளை நாம் கவனிக்கவேண்டா. சில விலக்குகள் விதிக்கு ஊறு செய்யமாட்டா.

கணவன்மார்கள் தங்கள் மனைவியர் பெருமை கொள்ளும் விதமாக நடந்து கொள்வதனால் எற்படும் விழுப்பயனையும், அப்படி நடந்து கொள்ளாததனால் உண்டாகும் சீர்கேட்டையும் தமிழ்ப் புலவர்கள் எப்படிச் சித்திரிக்கிறார்கள் என்று சிறிது காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தூண்டாவிளக் கனையாய்!

ஓர் இளைஞனும் இளம்பெண்ணும் தற்செயலாய் ஓரிடத்தில் சந்திக்கிறார்கள். இவர்களிடையே நட்பு உண்டாகிறது. சின்னஞ் சிறுகளில் நட்பு முற்றிக் காதலாகிறது. களவொழுக்கம் பலநாள் நடக்கிறது. இதையறிந்த பெண்ணின் பெற்றோர் மகளை வீட்டில் சிறையிடுகிறார்கள். "சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும்?" இனி ஒரு கணந்தானும் ஒருவரைவிட்டு ஒருவர் பிரிந்து வாழ முடியாதென்று காதலர்களுக்குத் தோன்றிவிட்டது. தோழியின் சூழ்ச்சியால் ஒருநாள் இரவு காதலன் தன் காதலியை உடன்கூட்டிக் கொண்டு வேற்றூருக்குப் போய்விட்டான.

மறுநாள் வீட்டிலே தன் பெண்ணைக் காணுத தாய் பெரிதும் துன்புற்று, அவளை ஊரூராய்த் தேடப் புறப்பட்டாள். ஒரு சாலையில் போய்க் கொண்டிருக்கையில், நெடுந்தூரத்தில் யாரோ இருவர் ஆணும் பெண்ணுமாகத் தானிருக்கும் திசைநோக்கி வருவதைக் கண்டாள். சேய்மையிலிருந்ததால், அவர்கள் இன்னாரென்று புலப்படவில்லை. ஆனால், அப்பெண்ணின் சாயல் தன் மகளுடைய சாயலை ஒத்திருக்கக் கண்டாள். ஒருவேளை தன் மகளும் அவளுடைய காதலனுந்தான் திரும்பி வருகிறார்களோ என ஐயுற்று அவர்களை வரவேற்க வேகமாக நடந்தாள். அவர்களை அண்மியதும் அவள் அடைந்த ஏமாற்றம் பெரிதாயிருந்தது. அவர்கள் வேறு

யாரோ! எனினும், அவர்கள் நல்லவர்கள்போல் காணப்பட்டார்கள். மிக அந்நியோந்நியமாயிருந்தார்கள். ஒருவேளை அவர்கள் தன் மகளையும் அவள் காதலனையும் வழியிற் கண்டிருப்பார்கள். அவர்களைக் கேட்டால் ஏதாகிலும் புலம் அகப்படும் என்று நினைத்து, "மக்களே உங்களைச் சேப்மையில் கண்டு, என் மகளும் அவள் காதலனுந்தான் திரும்பி வருகிறார்களென்று நினைத்து மகிழ்ந்தேன். நான் நினைத்தது சரியல்லவென்று இப்போது தெரிகிறது. உங்களைப்போலவே மேன்மையான ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து இணைபிரியாத காதலனுடன் ஒரு நம்பியும் நங்கையும் சற்றுமுன் இவ் வழியாகச் சென்றதைப் பார்த்ததுண்டா?" என்று கேட்டாள். பாட்டு ஆரம்பமாவதைப் பாருங்கள்:

"மீண்டார் என உவந்தேன் கண்டுதும்மை ; இம்மேதகவே
பூண்டார் இருவர்முன் போயினரே ?"

எதிர்ப்பட்ட அவ்விருவருள் ஆண்மகன் பதில் சொல்லுகிறான். "நமது தலைவன் பதில் சொல்லிக் கொள்கிறான். நமக்கேன் இந்தக் கவலை" என்று அம்பெண் ஒருபுறம் ஒதுங்கி நின்றாள்போலும் என்று அன்பர்கள் நினைக்கக்கூடும்! சரி, அப்படியே இருக்கட்டும். மேலே என்ன நடக்கிறதென்று பார்க்கலாம். "அம்மா, கண்டதுண்டு, மலைகளில் கம்பீரமாய்த் திரியும் சிங்கத்தைப் போன்ற ஒரு நம்பியை இவ்வழியில் கண்டேன்" என்று பதிலளிக்கிறான்.

".....புலியூரனை நின்று
ஆண்டான் அருவரை ஆளியன்னானைக் கண்டேன்..."

என்ன இது? உடன்போக்குக்குட்பட்ட பெண்ணின் தாய் இருவரைப்பற்றியன்றே கேட்டார்கள்? முக்கியமாய் அவளுக்கு வேண்டியது தன் மகளைப்பற்றிய தகவல்தான். ஆனால் இவனே தான் ஒரு ஆடவனைப் பார்த்ததாக மாத்திரம் சொல்லுகிறான். சரி, மேலே பார்க்கலாம். அவன் மறுபடியும் பேசுகிறான். ஆனால் இம் முறை அத்தாயைப் பார்த்து அல்ல, தன் மனைவியைப் பார்த்து. "என் வாழ்வின் இருளகற்ற வந்த விளக்குபோன்ற என்னருங் காதலீ, அவ்வாடவன் பக்கலில் ஏதோ ஒன்று இருந்ததாக இவ் வம்மை சொல்கிறாளே. அதைப்பற்றி அவளுக்குச் சொல்வாயாக"

".....அயலே,
தூண்டாவினைக்கனையாய்!என்னையோ அன்னை சொல்லியதே?"

விஷயம் புரிந்து விட்டதா உங்களுக்கு? எதிர்ப்பட்ட இருவரில், ஆடவன் தன் மனைவியல்லாத வேறொரு பெண்ணை ஏறெடுத்துப் பார்க்காத உயர்ந்த சிலமுடையவன்; அம் மனைவியும் தன் கணவனல்லாத வேறொரு ஆடவனை நோக்காத சிறந்த கற்பு வாய்ந்தவள். அவன் அவளை அழைக்கும் அழகைப் பாருங்கள்: "தூண்டா

விளக்கனையாய்!" அவன் அவளை அப்படி விளிப்பதற்குப் பொருத்தமானவன்; அவளும் அப்படி அழைக்கப்படுவதற்குத் தகுதி வாய்ந்தவள். இத்துணைச் சிலமுடைய ஒரு கணவனைப் பெற்றிருக்கும்போது, ஏன் அவள் தூண்டாவிளக்காயிருக்கமாட்டாள்? அதற்குமேலும் இருப்பாள். தன் கணவனைக் குறித்து அவள் எவ்வளவு பெருமை கொண்டிருக்க வேண்டும்!

மணிவாசகப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிய திருச்சிற்றம் பலக் கோவையாரிலுள்ள விலை மதிப்பற்ற இம் மாணிக்கத்தை இப்போது முழுமையாகப் பார்க்கலாம்:

"மீண்டார் எனவுவந்தேன் கண்டுமும்மை ; இம்மேதகவே
பூண்டார் இருவர் முன் போயினரே?" "புலியூரெனைநின்று
ஆண்டான் அருவரை ஆளியன்னானைக் கண்டேன் ; அயலே
தூண்டா விளக்கனையாய் ! என்னையோ அன்னை சொல்லியதே ?"

இப் பாட்டை எத்தனை தடவை வேண்டுமானாலும் படியுங்கள். தெவிட்டுகிறதா சொல்லுங்கள். என்வரையில், இப்பாட்டைப் படிக்குந்தோறும் என்னை மறக்கிறேன்; அதன் வயமாய் விடுகிறேன்; உடல் புளகாங்கித மடைகிறது; மயிர் சிலிக்கிறது; ஆன்மா குளிர்கிறது; உள்ளத்துக்குள் எங்கேயோ இனிக்கிறது; அவ்வினிப்பை அமிழ்தின் சுவை என்னமாட்டேன், அமிழ்தத்தை நான் சுவைத்ததில்லையாகலான்; தேனின் சுவையென்பேன், தேன் எனக்கு மிகப் பிடித்தமாகலான்.

சிறிய முறுவலும் புதிய முறுவலும்

மாணிக்கவாசகரிடம் விடைபெற்றுக் கம்பரிடம் வருவோம்.

இராம லட்சுமணர்களும் சீதையும் தங்கள் வனவாசத்தின் போது, சடாயுவைச் சந்தித்து அவனிடம் ஆசிபெற்று, பஞ்சவடி ஆசிரமத்துக்குப் போவதற்காகக் கோதாவரிக் கரையோரம் வருகிறார்கள். கோதாவரி பாய்வதன் அழகும் அதன் வளங்களும் அளப்பற்றனவாயிருக்கின்றன. இலட்சுமணர் காரியமே கண்ணாக முன்னே போனார். கோதாவரியின் வனப்பு இராமரையும் சீதையையும் வேகமாக நடக்கவிடவில்லை. அங்கங்கேயுள்ள புதுமைகளையும் காட்சிகளையும் கண்டு சீதை தயங்கி நிற்க, இராமரும் அவளோடு நிற்க வேண்டியதாயிற்று. அதோடு சான்றோர் கவியை யொத்த நதியின் கம்பீர நடையும், கரைகளில் இருமருங்கும் கண்ணுக்கெட்டிய தூரம் பச்சென்றிருக்கும் சோலைகளும், பற்பல நிறமுள்ள பறவைகளின் சஞ்சரிப்பும், இருவர் உள்ளங்களிலும் இதுகாறும் அடங்கியிருந்த இன்ப ஊற்றைத் திறந்து விட்டன.

கோதாவரிக் கரையில் நீர் குடிக்கும் ஒரு கட்டம். அதில் தாமரைகள் மலர்ந்திருக்கின்றன. அவைகளில் ஆணும் பெண்ணு

மாக இரட்டைப்பட்ட சக்கரவாகப் பறவைகள் கலந்திருக்கின்றன. ஓரிடத்தில் அழகிய அன்னப் பறவையொன்று தன் முழு எழிலையும் காட்டி நடந்து கொண்டிருந்தது. அதன் அழகைக் காண சீதை அருகு சென்றாள். அது அச்சத்தால் சற்று விலகிப்போயிற்று. இதை இராமர் பார்த்தார். அடுத்தபடி சீதை நடப்பதையும் பார்த்தார். அவர் வாயிதழ்களில் ஒரு புன்முறுவல் பூத்தது. இச்சிறிய முறுவலின் பொருளென்ன? "அன்னமே, சீதையைக் கண்டு ஏன் அஞ்சி ஓடுகின்றாய்?.....ஓ இப்போது தெரிந்து கொண்டேன் நீ விலகிச் சென்றதன் காரணத்தை. நடையில் சீதையை நீ வெல்ல முடியாதாயினும், அவளுக்குச் சமமாகவாகிலும் இருக்கலாமென்று கருதினாய். இப்போது அதுவும் முடியாமல் தோற்று ஓடுகிறாய்.....ஹாம்.....என் சீதைக்கு முன் நீ எம் மாத்திரம்" என்னும் பெருமிதத்தை உணர்த்திற்று அச்சிரிப்பு. இதனையே கம்பர் கூறும் அழகைப் பாருங்கள்:

"ஓதிமம் ஒதுங்கக்கண்ட உத்தமன் உழையளாகும்
சீதைதன் நடையை நோக்கிச் சிறியதோர் முறுவல் செய்தான்"

இச்சிரிப்பு தனியாக நிற்கவில்லை. இன்னொருவரிடமிருந்து மற்றொரு விதமான சிரிப்பு இதற்குத் துணையாக வந்தது. இராமர் சிரித்ததை சீதை கண்டிருக்க மாட்டாள். ஆனால், கம்பர் அதைக்கண்டு நமக்குக் காட்டுகிறார். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் ஓர் ஆண் யானைக் கன்று அந்நீர்த்துறைக்கு வந்து நீர்பருகித் திரும்பித் தன்வழியே சென்றது. இதை சீதை கண்டாள். உடனே தன் தலைவனின் நடையழகையும் கண்டாள். இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்தாள். அவள் முகம் என்றுமில்லாத ஒருவித மோகனச் சிரிப்பால் பொலிவுற்றது. "யானையே, நீ இங்கு நிற்கமாட்டாமல் திரும்பிப் போய் விட்டதன் காரணம் எனக்குத் தெரியுமே! நடையழகில் நீ என் தலைவனிடம் தோற்றுப் போனாய்.....ஹாம்.....என் காதலனுக்கு முன் நீ எம்மாத்திரம்?" என்னும் கொண்டவன் பெருமையை உணர்த்திற்று அப்புதிய முறுவல். இதைக் கவிச்சக்கரவர்த்தியே சொல்லட்டும்:

"மாது அவள்தானும் ஆண்டுவந்து நீருண்டு மீளும்
போதகம் நடப்பநோக்கிப் புதியதோர் முறுவல் பூத்தான்"

அன்பர்களே, இராமரும் சீதையும் இப்போதிருக்கும் நிலை, நடையழகைக் காட்டுவதற்கும் சிரிப்பதற்கும் தகுந்த நிலைதானா என்பதை உள்ளிப் பாருங்கள். பகை கொண்ட கைகேசியினால் அவர்கள் அயோத்தியிலிருந்து துரத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குமுன் பயங்கரமான ஒரு விபத்து இவர்களை விழுங்கிவிட வாயைப் பிளந்து காத்துக்கொண்டிருக்கிறது. இப்போது அவர்கள் இருப்பது தீயவர்கள் நிறைந்த கொடுங் கானகம். எப்படியிருந்தால் என்ன? சீதைக்குக் கொண்டவன் பலமிருக்கிறது; இராமருக்குச்

சீதையின் அன்பு இருக்கிறது. அவர்கள் ஏன் சிரிக்கக்கூடாது? ஏன் கம்பீரமாய் நடக்கக்கூடாது? நான் மேலெடுத்துக் காட்டிய எதிர்மறை வடிவிலுள்ள திருக்குறளைக் கொஞ்சம் மாற்றி,

"புகழ்புரிந் தில்லோர்க் குண்டு இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை"

என்று உடன்பாட்டு வடிவில் படித்தால், இச்சமயத்துக்கு எவ்வளவு பொருத்தமா யிருக்கிற தென்பதைக் காண்பீர்கள்.

உண்மையிலேயே, கொண்டவனுக்குப் பலம் உண்டு; அப்பலம் தனக்குதவும் (சுந்தர காண்டம், சூளாமணிப் படலம், 23) என்னும் நம்பிக்கையினால்தான், சீதை கொடிய அரக்கர்களிடையே சிறை வாசத்தைக் கழித்தாள். உலகெலாம் கலக்கி வென்றவனுகிய இராவணனை, கற்பின் திண்மை தவிர வேறேர் ஆயுதமுமின்றி எதிர்த்து நின்றாள். அவனைச் சிறிதும் மதியாமல் ஏசிப் பேசினாள்.

அக்காலத்தில் இராமருடைய பெருமை யெல்லாம் அவள் மனக் கண்முன் தோன்றின. அவற்றுள் முதன்மையாக அவள் மனத்தில் நின்றது, இராமர் மிதிலைக்குப் போந்து சீதையை மணம் செய்து கொண்ட சமயத்தில், 'இப்பிறவியில் இருமாதரைச் சிந்தையாலும் தொடேன்' என்று அவர் கொடுத்த செவ்வரம்தான். ஆம், உண்மை. தன் கணவன் தனக்கே யுரியவன் என்று ஒரு பெண் ணுக்குத் தெரிந்துவிட்டால், அதைவிடப் பெருமை கொள்ளுதற் குரிய விஷயம் அவளுக்கு உலகத்தில் வேறென்றுமில்லை யென்றே சொல்லலாம்.

சாவாரை யாரே தவிர்ப்பார்!

கோதாவரிக் கரையை விடுத்துக் காவிரிக் கரைக்கு வருவோம். காவிரி கடலோடு கலக்கும் சங்கமத்துறை. சோழ அரசர்களின் பிரசித்திபெற்ற துறைமுகப் பட்டினமாகிய காவிரிப்பூம் பட்டினத் துக்கு வந்துவிட்டோம்! அங்கே அப்போது இந்திர விழா நடந்து கொண்டிருக்கிறது. கடலாடுதற்காக ஆண்களும் பெண்களும் திரளாகக் கரையில் நிறைந்திருக்கிறார்கள்.

கரையில் ஜனக்கூட்டம் அவ்வளவு இல்லாத ஓரிடத்தில் புன்னைமரமொன்று இருக்கிறது. அதன்கீழ் புதுமணல் பரப்பப் பட்டிருக்கிறது. புன்னை நிழல் செய்த இடத்தை சித்திரத் திரையால் சுற்றிவளைத்து மேலேயும் விதானம் அமைக்கப்பட்டிருக் கிறது. அதில் யானைத் தந்தத்தால் செய்யப்பட்ட கால்களையுடைய ஒரு கட்டிலில் மாதவியும் கோவலனும் அமர்ந்திருப்பதைப் பார்க்கிறோம். ஆஹா! எவ்வளவு நல்ல ஆரம்பம்! ஆனால்.....

தோழி வசந்தமாலை, கலியாணப் பெண்போல் அலங்கரிக்கப் பட்ட யாழினை மாதவியிடம் தருகிறாள். மாதவி அதனைத் தொழுது வாங்கி இசை யெழுப்புதற்குரிய வகையில் அதைப் பண்படுத்தி, கோவலன் கையில் நீட்டுகிறாள்.

கோவலன் அதைக் கையில் வாங்குகிறான். அதே நிமிஷத்தில் அவன் நெஞ்சத்தில் ஏதோ ஒரு வஞ்சம் புகுந்தது. மனம் கறைப் பட்டிருக்கும்போது வாய் திறக்கலாமா? யாழை மிழற்றி ஆற்றவரி பாடத் தொடங்குகிறான். நெஞ்சில் வஞ்சம் வைத்துள்ளான் என்பதை அவன் முகக்குறி காட்டுகிறதே. ஐயோ! மாதவி, நீயாகிலும் அவன் வாயை மூடக்கூடாதா? அவன் உண்மையில் பாடுகிறானா? அல்லது இனி எப்போதோ தன் வாழ்வுக்கு நேரிடப் போகும் அவலமான முடிவை இப்போதே தேடுகிறானா? பாடத் தான் வேண்டுமென்கிறான். பாடித் தொலையட்டும்! கேட்டு வைப்போம்:

"திங்கள்மாலை வெண்குடையான் சென்னி செங்கோலது வோச்சிக்
கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!"

"மாலைக் காலத்தில் தோன்றும் முழு நிலாவைப்போன்ற வெண் கொற்றக் குடையையுடைய சோழன் செங்கோலைச் செலுத்திக் கங்கையைக் கூடினாலும் காவேரி, நீ கோபித்துக்கொள்ள மாட்டாய். அப்படிக் கோபித்துக் கொள்ளாததனால் நீ வாழ்வாயாக" என்பது இரண்டடிகளின் பொருள். இங்கே கங்கை காவிரி ஆறுகளும், பின்வரும் பாட்டில் கன்னி (குமரி) ஆறும் பெண்களாக உருவகப்படுத்தப்பட்டுள்ளன.

காவேரியின் மீது ஒழுக்கத்தினால் பொதுவாகப் பெண்களைப் பற்றிக் கோவலன் என்ன தெரிந்து கொள்கிறானும்! அவனே சொல்லட்டும்:

"கங்கை தன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்!
மங்கைமாதர் பெருங்கற்பென்று அறிந்தேன் வாழி, காவேரி!"

காவேரியின் கணவனான சோழன், வேறொரு பெண்ணாகிய கங்கை யைக் கூடினாலும், காவேரி கோபித்துக் கொள்ளாதிருப்பதுதான் அவள் கற்புக்கு அழகாம். இதுபோலவே உலகத்திலுள்ள மற்றப் பெண்களும் பெரும் கற்பரசிகள் என்னும் புகழ்பெற வேண்டு மாயின், காவேரியைப்போலவே தங்கள் கணவன்மார்களுடன் நடந்து கொள்ள வேண்டுமாம்! எப்படி யிருக்கிறது நியாயம்? மாதவியையும் குறிப்பாக எச்சரித்தவாறு ஆயிற்று.

அதுமட்டுமல்ல. மேலும் ஒரு படி! ஒருவனுக்குத் தான் மணந்த மனைவி யிருக்க, வேறு ஒரு காதலியல்ல, இரண்டு காதலி களையும் வைத்துக்கொள்ளலாமாம்!

"மன்னுமாலை வெண்குடையான் வளையாச் செங்கோலது ஓச்சிக்
கன்னிதன்னைப் புணர்ந்தாலும் புலவாய் வாழி காவேரி!
கன்னிதன்னைப் புணர்ந்தாலும் புலவாதொழிதல் கயற்கண்ணாய்!
மன்னுமாதர் பெருங் கற்பென்று அறிந்தேன் வாழி காவேரி!

கோவலன் பெண்களைத் துச்சமாக நினைக்கும் அவமதிப்பு எண்ணம் விஷம்போல் ஏறுகிறது. ஒருவன் தன் மனைவியைத்

தவிர வேறு இரு பெண்களைக் கூடலாம். இப்படிப்பட்ட தன் கொண்டவன் பெருமையைக் கண்டு அம்மனைவி பூரித்துப் போக வேண்டும். அப்பூரிப்பிலை, தன் வருத்தத்தை யெல்லாம் மென்று விழுங்கிவிட்டு, முகத்தில் மகிழ்ச்சியை வருவித்துக்கொண்டு அழகாய் நடந்து காட்டவேண்டும். அப்போதுதான் அவள் கற்புடையவள்; அவள் வாழவேண்டும். இன்றேல், அவள் கற்பில்லாதவள்; அவள் சாகவேண்டும்! இக்கருத்தல்லாமல் வேறு எக்கருத்தைக் கோவலன் பாடிய 3-வது ஆற்றுவரிப் பாட்டில் புகுத்த முடியும்?

> உழவரோதை மதகோதை உடைநீரோதை தண்பதங்கொள்
> விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி, காவேரி!
> விழவரோதை சிறந்தார்ப்ப நடந்தவெல்லாம் வாய் காவா
> மழவரோதை வளவன்றன் வளனே வாழி, காவேரி!

மாணிக்கவாசகரும் கம்பரும் காட்டிய உயர்ந்த லட்சியத்திலிருந்து எவ்வளவு பயங்கரமான ஆழங் காணமுடியாத படுவீழ்ச்சி!

கோவலனின் தீயமொழிகள் புண்ணில் பாய்ந்த வேலென மாதவியின் இதயத்தைச் சுறுக்கெனத் தைத்தன. கோவலனிட மிருந்து இத்தகைய கருத்தை அவள் விளையாட்டாகக்கூட இது காறும் கேட்டதில்லை. அவள் மனம் வெதும்பியது. உள்ளம் குழறியது. அவள் இதுகாறும் கோவலனைத் தனக்கே யுரியவன் என்று நினைத்திருந்தாள். அவள், அவனை அவன் பணத்துக்காகக் காதலித்தவள் அல்ல; அவனுக்காகவே காதலித்தாள். அவனைப்பற்றி இதுவரையில் எவ்வளவோ பெருமை கொண்டிருந்தாள். தன் உடல், பொருள், ஆவியெல்லாம் அவனுக்கு உவந்தளித்தாள். அவனுக் காகத் தன் குல (அ)தருமத்தையும் கைவிட்டாள்.

கோவலன், பெண்களின் கற்பைப்பற்றிய தன் கருத்தை விளையாட்டாக வெளியிட்டிருக்கலாம்; அல்லது உண்மையாக வெளி யிட்டிருக்கலாம். எப்படியாயினும், அவன் தவற்றை அவனுக்கு நாகரிகமாக உணர்த்த வேண்டுமென்று மாதவி கருதினாள். நாகரிக மான முறைகளைக் கையாளுவதில் அவள் மிக்க சதுரப்பாடுடையவள். இவ்விஷயத்தில்தான், கண்ணகியைவிட அதிகமாக அவள் நம் உள்ளங்களைக் கவர்கிறாள். அவள் விரும்பி யிருந்தால், கோவலன் சொன்னது தவறென்று உடனே சொல்லிவிட்டிருக்கலாம். ஆனால், நுண்ணிய கலைப் புலமை வாய்ந்த அவள் உள்ள அமைப்புக்கு அச் செய்கை மாறானது.

கோவலனிடமிருந்து யாழை வாங்கினாள்; பண் படுத்தினாள். குரலிசையும் யாழிசையும் ஒன்றாய் இழையும்படி, விண்ணவரும் மண்ணவரும் வியப்பெய்த ஆற்றுவரி பாடத் தொடங்கினாள்:

> "மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூவாடை யதுபோர்த்துக்
> கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி, காவேரி!"

"காவேரி! இரு பக்கத்திலும் வண்டுகள் மிக்கொலிக்க, அழகிய பூவாடையைப் போர்த்து, கரிய கயற்கண் விழித்து அசைத்து நீ நடக்கும் அழகுதான் என்னே! நீ வாழ்வாயாக!" என்பது மேலிரண்டடிகளின் பொருள். காவேரியின் நடையலங்காரத்தால் மாதவி என்ன தெரிந்து கொள்கிறாளாம்? அவள் கணவனுகிய சோழனுடைய செம்மைநெறி திறம்பாத சிலத்தைத் தெரிந்து கொண்டாளாம். மாதவியே பாட்டை முடிக்கட்டும்:

"கருங்கயற்கண் விழித்தொல்கி நடந்தவெல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன், வாழி காவேரி!"

"காவேரித் தாயே, நீ பாக்கியவதி. உன் கணவன் அறநெறி கோடாத ஒழுக்கமுள்ளவன். உன்னைத் தவிர வேறொருத்தியைத் தன் மனத்திலும் தீண்டான். நீ தலைமிமிர்ந்து அசைந்தாடி நடப்பதற்கென்ன? அம்மா, நான் பாவி! என் கணவனுக்குக் கசந்து விட்டேன். என்னைக் கைவிட்டு அவன் வேறு மாதர்கள்மேல் நாட்டம் செலுத்தி யிருக்கிறான். எனக்கு உன் நடையழகு வருமா, தாயே!" என்று மாதவி அலமறுதலை நீங்கள் மேடை பாட்டில் கேட்க வில்லையா?

தேனூறும் தன் பவளவாய் திறந்து மாதவி மறுபடியும் பாடுவதைக் கேளுங்கள். ஊடே ஓர் அவலக்குரலும் கேட்கிறதா?

"பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகசைய நடந்தவெல்லாம் நின் கணவன்
நாமவேலின் திறங் கண்டே அறிந்தேன் வாழி காவேரி!"

இப்பாட்டில் மாதவி என்ன சொல்கிறாள்? "காவேரிப் பெண்ணே, நீ புண்ணியவதி; உனக்குக் கொண்டவன் பலமுண்டு; உன் கணவன் வீரன்; அவன் கையில் பளபளப்பான வேலேந்தி யிருக்கிறான். அதை அவன் பாய்ச்ச வேண்டியதில்லை. பகைவர்கள் அதைக் கண்டாலே நடுங்குவார்கள். உனக்கு ஒரு தீங்கும் வராதபடி அவன் காப்பான். நீ ஒய்யாரமாய் நடப்பதற்கு வேறு காரணமும் வேண்டுமோ? என் கதியைப் பார்த்தாயா? எனக்குக் கொண்டவன் பலமில்லை. அப்பலத்தை வேறு பெண்கள் கவர்ந்துகொண்டார்கள். எனக்கு ஒரு நடுக்கம் கண்டால், அந்நடுக்கத்தை அவன் தீர்ப்பானே என்பது சந்தேகந்தான். என்னிலைகண்டு இகழ்பவர்கள்முன் நான் எப்படியம்மா கம்பீரமாய் நடப்பேன்?'

சிறிதுநேரத்துக்கெல்லாம் மாதவி ஒரே உணர்ச்சிவசமாய் விட்டாள்; தன்னை மறந்தாள்; எதிரேயுள்ள கோவலனையும் மறந்தாள். கோவலன் கூற்றுக்குப் பதில் சொல்லத் தான் கற்பனையில் சிருஷ்டித்த சோழனும் அவனைக் கணவனுகப் பெறக் கொடுத்து வைத்த காவேரியுமே அவள் மனக்கண்முன் நின்றார்கள். "தற்கொண்டான் பேணி" என்னும் திருக்குறள் சொற்றொடர்

அவள் நினைவுக்கு வந்துவிட்டது. சோழன், உயிர்களைக் காக்கும் சக்கரவர்த்தி யென்கிறாள்; அவன் நடுவு நிலைமை யுடையவன் என்கிறாள். இப்படிப்பட்ட நல்ல கணவனைக் காவேரி ஒரு தாயைப் போல் ஊழூழிதோறும் காக்கவேண்டுமென்கிறாள். உடனே அவளுக்குத் தன்னிலை நினைவுக்கு வருகிறது. தன்னையும் தன்னுடையனவற்றையும் அவள் கோவலனுக்கு அர்ப்பணம் செய்து விட்டாள். அப்படியிருந்தும், அவன் நடுவுநிலைமை கோடினால். பிறமாதர்மேல் மனம் வைத்தான். அவள் மனம் அனலிடைப்பட்ட புழுப்போல் துடித்தது. இத்தகைய உணர்ச்சிகளெல்லாம் கீழ்க்கண்ட 3-வது ஆற்றுவரிப்பாட்டாக வெளிப்படுகின்றன :

> " வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
> ஊழி யுய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி, காவேரி!
> ஊழியுய்க்கும் பேருதவி ஒழியாதொழுகல் உயிரோம்பும்
> ஆழி யாள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி, காவேரி! "

இதைவிட நாகரிகமாக வேறு எப்படிக் கோவலனுக்குப் பதில் கூற முடியும்?

இறுதியில் கோவலனது முடிவு, பெண்களை அற்பமாக நினைக்கும் - குழந்தை விளையாட்டுப் பொம்மைகளென்று கருதும் - ஆடவர்களுக்கு ஒரு பயங்கரமான எச்சரிக்கையாகும்.

முடிவுரை

சகோதரர்களுக்கு ஒரு சொல். இந்திரசித்தன் விடுத்த பிரமாஸ்திரத்தால் இராமலட்சுமணர்களும் வானர வீரர்களும் உயிரொடுங்கி இறந்தவர்கள்போல் போர்க்களத்தில் கிடக்கிறார் கள். இராமர் இறந்ததுபோல் கிடப்பதைக் கண்ட சீதை அவர் இறந்தாரென்றே கருதித் தன் உயிரை விட எத்தனிக்கிறாள். இவையெல்லாம் அரக்கர் மாயமென்று சொல்லித் திரிசடை தடுக்கிறாள். சீதை ஒருவாறு தேறினாள். அப்போது வருகிறது அடியிற்கண்ட பாட்டு:

> " நானெலாம் துறந்தேன்; இல்லின் நன்மையி னல்லார்க் கேய்ந்த
> பூணெலாம் துறந்தேன்; என்றன் பொருவிலை மேகம் தன்னைக்
> காணலா மென்னுமாசை தடுக்க என்னுயி ரார்த்தேன்;
> எணிலா வுடலம் நீக்க லெளிதெனக்" கெனவும் சொன்னாள்."

சீதை ஒரு மங்கைக்குரிய நலன்களையெல்லாம் இழந்து விட்டாளாம். உடலை மாய்த்துக் கொள்வதும் அவளுக்குச் சுலபமாம். பின் ஏன் உயிரோடிருக்கிறாள் ? " போர் புரிகின்ற வில்லைப் படைத்த மேகம் போன்ற எனது இராமரை மீண்டும் அடைதல் கூடும் என்னும் ஆசைதான் தடுக்கிறது " என்றாள். கொண்டவன் பலத்தை அவள் அவ்வளவு நம்பியிருக்கிறாள். அவனது அழகான பெரிய உருவம்

அவள் கண்முன் தோன்றுகிறது. "என்றன் பொருசிலை மேகம்" என்று உரிமையுடன் வாய்நிறைய தன் தலைவனைக் குறிப்பிடும் அழகைப் பாருங்கள். ஒவ்வொரு ஆண் மகனும் தன் மனைவியால் இப்படி நினைக்கப்படுவதையே தன் இல்லற வாழ்க்கையின் லட்சிய மாகக் கொள்ளவேண்டும்.

சகோதரிகளுக்கு ஒரு சொல் அனுமன் தான் இலங்கையில் சிதையைக் கண்ட செய்தியை இராமரிடம் விரிவாகக் சொல்கிறான். அழகான செய்யுள்:

"மாண்பிறந் தமைந்த கற்பின் வாணுதல் நின்பால் வைத்த
சேண்பிறந் தமைந்த காதல் கண்களில் தெவிட்டித் தீராக்
காண்பிறந் தமையால் நீயே கண்ணகன் ஞாலந்தன்னுள்
ஆண்பிறந் தமைந்த செல்வம் உண்டனை ஆதியன்றே."

அனுமன் சொல்கிறான்: "தலைவ, சிதை நின்பால் வைத்த நிறைந்த காதலைக் கண்களினால் தெவிட்டிவிடாமல் பார்ப்பதற்கு நீ கொடுத்து வைத்ததனால், நீ ஒருவனே இவ்வகன்ற உலகத்தில் ஆண் மகனாய்ப் பிறந்ததன் பாக்கியத்தை அடைந்தவனாகின்றாய்." சிதையின் கற்பொழுக்கம் காரணமாக இராமர் 'புருஷோத்தமன்' என்னும் பட்டத்தை அனுமனிடமிருந்து பெற்றுவிட்டார். இவ்விதமே, ஒவ்வொரு பெண்மணியும், தனது தணியாக் காதலாலும் உயர்ந்த சீலத்தினாலும் தன் கணவனுக்குப் 'புருஷோத்தமன்' என்னும் பட்டத்தை வாங்கித் தரவேண்டும். இதுதான் அவள் இல்லறவாழ்வின் குறிக்கோளா யிருத்தற்குரியது.

மேற் காட்டியவாறு இருபாலாரும் செங்நெறி வழாது சீலத்தைக் கடைப்பிடிப்பார்களானால், மணிவிழாத் தலைவராகிய திரு. வி. கலியாணசுந்தரனார் தமது புனிதமான உள்ளத்தில் கொண்டுள்ள ஒரேவொரு பேராசையாகிய பெண்ணின் பெருமை பொலிவுற்றுத் திகழுமென்பதற்குத் தடையென்ன?

சொற்பொழிவு

—இராவ்பகதூர். C. M. இராமச்சந்திரன் செட்டியார் B.A. B.L.

பேச்சு என்பது விரிவுரை, உரையாடல், சொற்பெருக்கு, சொற்பொழிவு முதலிய பல சொற்களால் பேசப்படுகின்றது. அவைகளில் சொற்பெருக்கும் சொற்பொழிவும் தற்கால வழக்குகள். இதுவே வடமொழியில் உபந்நியாசம், பிரசங்கம், உபாக்யானம், வியாக்யானம், உபதேசம், காலக்ஷேபம், கதாப்ரசங்கம் முதலிய சொற்களால் வழங்கப்படுகின்றது. அவ்வடமொழிச் சொற்களும் தென்னாட்டிலும் வழங்கத் தொடங்கிவிட்டன. தகுந்த தென் மொழி யிருக்க வடமொழியைத் தேடி வழங்க வேண்டியதில்லை யல்லவா?

வடநாட்டில் பேச்சு வளர்ந்த வரலாற்று ஒருசிறிது ஆராய்வாம். பண்டைக் காலத்தில் காடுகளில், ஆற்றோரங்களில் தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்கள் தங்கள் மாணாக்கர்களுக்கு நல்லுரையைக் கதைகளின் மூலமாக விரித்துரைத்தார்கள். இதற்கு உபாக்யானம், புராணப் பிரசங்கம் என்ற பெயர்கள் வழங்கலாயின. அரசவைகளில் அமைச்சர்களும், அந்தணர்களும் அரசனுக்கு நீதிகளை விரித்துரைத் தார்கள். இதற்கு உபதேசம் முதலிய பெயர்கள் வழங்கலாயின. பௌத்தம் முதலிய சமயகுரவர்கள் மக்களுக்குச் சமயபோதனை செய்தார்கள். இதற்கும் உபதேசம் என்பதே பெயராயிற்று. இந்த வகையில் பேச்சு வளர்ந்தது.

தென்னாட்டிலோ பண்டைக்காலத்தில் சமயச் சார்பான விரிவுரைகள் நிகழவில்லை. புலவர்கள் அரசனைக் குறித்துச் சொல்லிய புகழுரைகளும், பொதுவாக உலக மக்களை விளித்துக் கோப்பெரும்பெண்டு போன்றார் கூறிய வீர மொழிகளும், வீரத் தாய்மார்களின் அஞ்சா நெஞ்சில் எழும்பிய ஒப்பற்ற மொழிகளுமே சங்ககாலத்துச் சிறந்த பேச்சுகள். இப்பேச்சுகள் அழகிய செய்யுள் நடையில் இருப்பதால் அக்காலத்து மக்களின் கல்வித்திறன் தெளிவாகத் திகழ்கின்றது. பின்னர்ச் சமண பௌத்த சமயங்கள் தென்னாட்டிற்கு வந்தபோது சமயம் விரிந்து பரவத் தொடங்கியது. "சமயக் கணக்கர் தந்திறம் கேட்ட காதை" யிற் காணும் சொற்போர்கள் நிகழ்ந்தன. இவ்வகையில் தக்க முறையான பேச்சுக்கள் நாட்டில் புகுந்தன. சைவ வைணவ மேம்பாடு நாட்டில் பரவிய காலத்தில் தேவாராதி புகழ்ப் பாடல் களினால் சமயம் பரப்பப்பட்டது. அந்நாள் கடவுளைத் துதிக்கும்

முகத்தால் மக்கள் விளிக்கப்பட்டார்கள். அரசவைகளில் நடந்த சொற்பெருக்குகளின் பகுதிகள் நமக்கு எட்டவில்லை. பின்னுள்ளகளிலோ நாட்டுப்புறங்களிலும் பட்டினங்களிலும், கோடைக்காலங்களில் தெருத் திண்ணைகளில் இருந்து புராணம் வாசிக்கத் தொடங்கினர். இத்தன்மையானவைகளே முற்காலத்தில் ஏற்பட்டனவாக நமக்குக் கிட்டக்கூடிய சான்றுகள்.

தற்காலத்திலோ மிகுந்த மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. பல சங்கங்கள் ஏற்பட்டு அவைகளின் சார்பில் பல பேச்சுக்கள் மேடைகளின் மீது பேசப்படுகின்றன. அரசியல் துறை மேம்பாடடைவதற்காகப் பொதுமக்கள் அத்துறையில் ஈடுபட்டுத் தங்கள் எண்ணங்களை வெளியிட முன் வருகின்றனர். மேல்நாட்டுப் பழக்கம் நம்மிடம் புகுந்ததன் காரணமாக நம் நாட்டு மொழிகளிலும் திறமையாகப் பேசும் பழக்கம் அதிகரித்து வருகிறது. பழைய, புராணப் பிரசங்கம் மாறுதலடைந்து பகுத்தறிவினால் மக்களை இழுக்கும் முறை தழுவப்படுகிறது. நாடு முழுவதிலும் சொற்பொழிவிற்குத் தனி மேம்பாடு கொடுக்கப்பட்டு வருகிறது.

இருந்தாலும் பேச்சு முறை எவ்வளவு வளர்ச்சியடைய வேண்டுமோ அவ்வளவு வளர்ச்சியைத் தமிழ் இன்னும் பெறவில்லையென்பது ஆன்றோர் கருத்து. ஆங்கிலத்தில் ஒருவர் பேசும் முறைக்கும் தமிழில் பேசும் முறைக்கும் வேறுபாடு இருக்கிறது. சிலர் பேசினால் அதில் மிகுந்த குறைபாடு உண்டென்றே கருதிப் பொது மக்கள் அதனைப் புறக்கணிப்பதோடு ஏளனமும் செய்கின்றார்கள். இதற்குக் காரணம் என்ன என்று ஆராய்ந்து அக்குறைகளை நீக்குவது நன்றல்லவா ?

நாட்டில் எங்கும் சொற்பொழிவுகள் - மகாநாடுகள் - பெருங் கூட்டங்கள் முதலியவை மிகும்போது நமது தமிழ் உரையாளர்கள் தங்களை மேன்மைப்படுத்திக் கொள்வது அவர்கள் கடமையேயாகும். அதனை ஆராய்ந்து சில அனுபவ மொழிகளைக் குறிப்பிடுதல் நலம். கீழே குறிப்பவைகள் சரியெனத் தோன்றின் அறிஞர்கள் எடுத்தாளலாம்.

1. கூட்டத்தின் பகுப்புகள் :

ஒவ்வொரு அவையிலும் பேசுபவர், தலைவர், கேட்போர் என மூன்று பகுப்பினர் உண்டு.

பேசுபவர் :

ஒரு பொருளை எடுத்துப் பேசுபவர் அதனை நன்கு அறிந்தவராக இருக்கவேண்டும். பேசுவதற்கு முன்பே நன்கு ஆராய்ந்து அதனைப் பலவிதங்களாகப் பாகுபாடு செய்து ஒழுங்குபடுத்திக்

கொண்டு அவைக்குச் செல்லவேண்டும். பலகாலும் பழகினவர் களுக்கு ஒவ்வொரு பேச்சுக்கு முந்தியும் அவ்வாறு ஆராய்ச்சி செய்யவேண்டி யிராது. ஞானியார் போன்ற பேரறிஞர்கள்கூட தாங்கள் பேசப்போவதைப்பற்றிக் குறிப்பு வைத்துக்கொண்டிருந் தார்கள் என்றால் நாம் ஏன் அதனை அனுசரிக்கக் கூடாது. மனித னுடைய நினைவுஎல்லை அளவுபட்டதுதான். ஆகவே குறித்துக் கொண்டு பேசுதல் சிறந்த பண்பாகும்.

தலைவர்

தலைவர் அவையை ஒழுங்குபடுத்தும் திறமை உள்ளவராக இருக்கவேண்டும். பேசுபவரைவிடச் சிறிது அறிவில் முதிர்ந்தவ ராக இருத்தல் வேண்டும். கேட்போர் மதிப்பிற்குரியராகவும் இருத்தல் நலம்.

கேட்போர்

கேட்போர்களில் பல திறப்பட்டவர்கள் இருப்பார்கள். சிறுவர் - மாணாக்கர் - முதியோர் - பெண்பாலார் - அறிவாளிகள் முதலிய பலவகைப்பட்டவர்கள் இருக்கலாம். அவ்வவ் விடத்திற்கு ஏற்றபடி அவை அமைந்திருப்பது இயல்பு. கேட்போர் அமைதி யாக இருந்து கேட்கும்படிச் செய்வதே அவை நடத்துவோரின் சிறந்த கடமையாகும். அமைதியில்லாத கூட்டம் அவை அல்ல; சந்தை ஆகும்.

பேச்சு

பேச்சு ஒரு குறித்த தலைப்பினையும், அத்தலைப்பினுக்குரிய பாகுபாடுகளையும் கொண்டிருக்க வேண்டும். தலைப்பின் எல்லையை விட்டு வேறு பேச்சுக்களுக்கு எந்தக் காரணத்தை முன்னிட்டும் செல்லலாகாது. பாகுபாடுகளில் ஒரு தொடக்கம் நடு முடிபு இருத்தல் வேண்டும். தொடங்கியதிலிருந்து முடிபு கூறும்வரை கூறும் பொருள்கள் பின்னற் சங்கிலிபோலத் தொடர்ந்து வரவேண்டும். ஒரு பிரிவிற்கும் மற்றொரு பிரிவிற்கும் பிணைப்பு இல்லாத பேச்சு பேச்சல்ல. ஒரு சொற்பொழிவுக்குள்ளே பேச்சுத் தலைப்பின் முழுக் கருத்தும் அடங்கியிருக்க வேண்டும். ஒவ்வொரு பேச்சிற்கும் குறிக்கோள் (இலக்கு) இருக்கவேண்டும். குறிக்கோள் இல்லாமல் பேசுகிற பேச்சினால் மக்களுக்கு யாதொரு பயனும் விளையாது. பேச்சின் பாகுபாடுகளும் ஒத்த அளவினதாக இருத்தல் வேண்டும். பாகுபடுத்தும்போதே ஆராய்ந்து பாகுபடுத்த வேண்டும். சில பகுதிகளை விளக்கமாகவும் சில பகுதிகளைச் சுருக்கமாகவும் சொல்லக்கூடாது. காலங் கடந்துவிட்டதென்றால் பின்பாகங்களைச் சுருக்கிவிடுதல் தவறு. நைடத ஆசிரியர் தொடக் கத்தில் சிற்றின்பப் பகுதிகளைப் பெருக்கிவிட்டு, சுவையுள்ள பகுதி

வந்தபோது சுருக்கிக் கூறினமையின் அதனைக் குறையுற்ற காவிய மாகக் கூறுகின்றனர். அவ்வாறு ஒரு பேச்சு இருக்கலாகாது. அதனை வேட்டைநாய்ப் பேச்செனலாம்.

காலம்

காலத்தின் அருமை உணர்ந்தவர்களே சிறந்த பேச்சாளர்கள். இதனை அறியாது பெருந் தவறு இழைப்பதே தற்காலத்தில் நம் மக்கள் இயற்றுவதாகும். சில சமயங்களில் கேட்போர் தடுத்தாலும், தலைவர் ஆணையிட்டாலும் கீழ்ப்படியாத பேச்சாளர்கள் இருக் கிறார்கள். இவர்கள் அத்தொழிலுக்கு உரிமை உள்ளவர்களாகார். நிகழ்ச்சிக் குறிப்பில் ஒரு மணி என்று குறித்திருக்க ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரம் பேசிய பின்னும், நேரம் போதா தென்னும் மடத்தன்மை கொண்ட பேச்சாளர்களும் உண்டு. குறித்த நேரத்தில் தன் பேச்சை முடிக்க முடியாத விரிந்த பொரு ளுடையவர்கள் அதற்கு உடன்பட்டிருக்கக்கூடாது. நேரமாகி விட்டால் கடிகாரத்தை வைவதும் தலைவரைத் திட்டுவதும் தன் விதியை நொந்துகொண்டு பரிதவிப்பதும் அடாத செயல்கள். மிக நகைச் சுவை ததும்பிய பேச்சுக்களென எண்ணிக்கொண்டு கடிகாரத் தையும் தலைவரையும் குறைகூறும் பேச்சாளர்கள் கீழ்மக்களே யொழிய அவைக்குத் தகுதியுடையவரல்லர். பேச்சாளர் எப்படிப் பட்ட பொருளையும் குறித்த நேரத்தில் உருக்கமாகச் சொல்லி விடலாம். தன் நாவை அடக்கத் தெரியாத மக்கள்தான் பிறரைக் குறைகூறுவார்கள்.

தலைவர் - கேட்போர் - என்ற இவர்களுடைய காலமும் பொறுமையும், அளவிடத்தக்கவை - அருமையானவை - மதிக்கத் தக்கவை என அறிந்து அவைகளுக் கேற்றவாறு தம்மைத் தாம் ஆட்சி புரிந்து அடக்கிக் கொள்ளலே சிறப்பானது. பொதுவாக ஒரு பேச்சின் கால அளவை 45-நிமிஷம் முதல் 60-நிமிஷம் வரை தான் இருக்க வேண்டும். அளவிற்கு மீறிப் பேசுவது தப்பு. எப்படிப்பட்ட பெரிய பொருளாக இருப்பினும் இந்த அளவிற்குள் முடித்து விடுவதே உத்தமம். உலகத்திலேயே சிறந்த பேச்சாளர் என்று பெயர் பெற்ற அன்னை வசந்தம்மாள் அவர்கள் ஒவ்வொரு பேச்சும் 60-நிமிஷமே பேசுகிறார்கள் என்பதை அறிய வேண்டும். பாடசாலையில் ஒவ்வொரு பாடமும் 45-நிமிஷமென்று ஏன் ஏற்படுத்தி யிருக்கிறார்கள்? மக்களுடைய கால அருமையை உணராதார் தான் பேச்சை அதிகமாக நீட்டுவார்கள். அவ்விதம் நீட்டித்து இறுதியில் மன்னிப்புக் கேட்பது மடமைத்தனம்.

தொடக்கம்

சில பேச்சாளர்கள் பாயிரத்திற்கும் அவையடக்கத்திற்குமே பாதி நேரம் தருவதுண்டு. இதனை ஒரு சிறந்த பண்பு என

அவர்கள் கருதுகிறார்கள். 'அவையறியாமை' என்ற குற்றத்தின் மேல் நிற்பதாகும் இது. ஒரு மாதத்திற்கு முந்தித் தெரியப் படுத்தித் தாமே எடுத்துக் கொண்ட பொருளாக இருந்தபோதிலும், 'முன்பின் அறிவிக்காமல் திடீரென்று பேசச் சொன்னார்கள்' என்று அசட்டுப் பொய்கூறுதலும் நல்லதல்ல; கேட்போர் முன்னே அவை கூட்டியவர்களைச் சிறுமைப்படுத்தியது மாகும். யாதொரு காரணமும் இல்லாமல் தான் முந்திப் போக வேண்டும் என்று தலையிலே அடித்தை போட்டுக்கொண்டு ஒருவர் மேடை ஏறுவார். உடனே பாயிரமாக, 'திடீரென்று அழைத்து விட்டார்கள். என்ன பேசுவதென்று தெரியவில்லை. முந்தியே சொல்லி யிருந்தால் பொருளை ஆராய்ந்து வந்திருப்பேன்' என்று கூறிவிட்டு 2-மணி நேரம் பேசி, 'இன்னும் பல பொருள் இருக்கிறது' என்று பேசும் கவிகளும் உண்டு. தன்னைப்போல் படித்தவரும் பேசுபவரும் இல்லை என்று மனதுக்குள் உறுதியாக எண்ணிக் கொண்டு அவையாரை வஞ்சிப்பதாக எண்ணி, 'எனக்கு ஒன்றும் தெரியாது; அமைச்சர் என்னைச் சந்திக்கு இழுத்து விட்டுவிட்டார்' என்று கூறும் வன்னெஞ்சு படைத்தவர்களும் பலருண்டு. இத் தன்மையோர், தாம் செய்வது குற்றம் என்பதறிந்து தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும். பாயிரமும் அரை நிமிஷத்திற்கு மேல் இருக்கவேண்டாம்.

அவையடக்கமே இக்காலத்தில் வேண்டியதில்லை. அவை யோரின் மன்னிப்பு யாருக்கு வேண்டும்? வேண்டாமென்று எண்ணுபவர் அதனை ஏன் கேட்க வேண்டுமோ?

நடை

பேசும் நடை தெளிவாக இருக்க வேண்டும். கேட்போருக்கும் புரியும்படியாகவே இருக்க வேண்டும். சில பேச்சாளர் தம் பெருமையை வெளிப்படுத்தும் எண்ணத்துடன் பேசுவார்கள். கேட்போர் அறிந்தால் என்ன? அறியாவிட்டால் என்ன? தமது பேச்சு திறமையானது; அறிவு மேன்மையானது என்று புகழப்பட வேண்டும் என்று எண்ணிப் பேசுவோரும் உண்டு. இத்தகைய பேச்சினால் யாதொரு பயனும் இல்லை. பலனில்லாப் பேச்சு ஏன் வேண்டுமோ? கேட்போர் அறியாத பொருளை அறியாத நடையில் பேசினால் அதைவிட வீண் செயல் ஒன்றும் இல்லை. பேச்சு என்பது கேட்போருக்குப் பயன்பட வேண்டும் என்பதை அக்கர்விகள் அறிவதில்லை. ஆகவே பேச்சு தெளிவாகத்தான் இருக்க வேண்டும். விழலுக்கிறைத்த நீராகக்கூடாது.

மேலும் கேட்போர் முகத்தை நோக்கியே பேசவேண்டும். அவர்கள் அறியும்படியான நடையில் பேசவேண்டும். வித்துவான்கள் சபையில் சொல்லக்கூடிய நடை, சிறுவர்கள் மத்தியில் பேசும்போது வரக் கூடாது. பட்டினங்களில் வாழும் கற்றோர் சபையில் பேசக்

கூடிய நடை, நாட்டுப்புறத்துக் கல்லாதார் சபையில் வருதல் கூடாது. பேசும் நடை கூடிய மட்டில் பிழைகள் இல்லாமல் இருத்தல் வேண்டும். சிலர் வேண்டுமென்று பிழைபடப் பேசுவதுண்டு. காரணம், அது சாதாரண மக்களுக்குச் சொல்லக்கூடிய தென்பதாம். இவ்விதமான தப்பு எண்ணத்தினால்தான் நமது நாட்டில் பேசும் பேச்சின் நடை தாழ்ந்து விட்டது. ஆங்கிலத்தில் 20 ரூ. சம்பளக் காரன் ஒரு இலக்கணப் பிழை செய்துவிட்டால் அவன் வேலைக்குத் தகுதியற்றவனாகிறான். ஆனால் தமிழிலே ஆயிரம் பிழைகள் செய்தாலும் ஒப்புக்கொள்ள வேண்டியதாம். என்ன முரண்பாடு!

ஒரு மொழியில் பேசும்போது பிறமொழிகளைக் கலப்பது சரியல்ல. ஆங்கிலத் தமிழ் மணிப்பிரவாள நடை நமது நாட்டுப் பேச்சாளர்தம் பெருவழக்காகி விட்டது. இது ஒரு பெருங் குற்றம்; இதனை நீக்கித் தூய தமிழில் பேசுவதே கடமையாகும். இல்லாவிடில் தமிழ் மொழிக்குப் பெருங்கேடு விளைப்போர் ஆவார். தூய தமிழ் என்றால் உயர்ந்த செந்தமிழ் நடை அல்ல. எளிய நடையிலும் தப்பு இல்லாமல் எழுத முடியும். இதனைப் பேசிப் பழகுவார்களாக!

மேற்கோள்கள்

சில பேச்சாளர்கள் ஒவ்வொரு வாக்கியத்திற்கும் ஒவ்வொரு மேற்கோளை எடுத்தாள்வார்கள். அவைகளும் பெரும்பாலும் செய்யுள்களாக இருக்கும். சிலர் அச்செய்யுள்களுக்குப் பொருள் உரைக்காமலே பேசி முடிப்பர். இதனால் என்ன பயன் விளையுமோ? தெரியவில்லை. வெறும் செய்யுள்களைக் கூறும் பேச்சாளர்கள் கிரிப் பிள்ளைக்குச் சமானமானவர்களே. அறிவுடையவர்களல்ல. ஒரு முழுப்பேச்சிலே ஆறு செய்யுள்கட்குமேல் மேற்கோள்களைக் கொள்ளுதல் சரியன்று. அச் செய்யுள்களுக்குத் தெளிவாகப் பொழிப்புரை தருதல் வேண்டும். மேலும் அவையோரைத் தம் பேச்சில் வசப்படுத்த முயலுவோர் முதலில் செய்யுளைச் சொல்லிப் பின் பொருளை எடுத்துரைக்க மாட்டார்கள். செய்யுளிற் கண்ட கருத்தைத் தெளிவாகக் கூறிவிட்டுப் பின்பு செய்யுளைக் கூறுதல் சிறந்த முறையாகும். நேரம் இருப்பின் மறுமுறை அச்செய்யுளை விளக்கலாம். இவ்வாறன்றிக் கணக்கில்லாமல் செய்யுள்களை ஒப்பிப்பதும் பாடுவதும் கூடாது.

மேலும் மேற்கோள்களாகச் சிறு கதைகளையும் பண்டைய வரலாறுகளையும் கூறுவதும் உண்டு. இது ஒரு சிறந்த முறை. ஏற்ற கதைகளைத் தகுந்த இடத்தில் சொல்லுவது மிகச் சிறந்தது. இதனைச் சிறுவர்கள், நாட்டுப்புறத்தார் இவர்கள் சபையில் கையாள வேண்டும். கதைகளை அதிகமாக நீட்டிக்காமல் இடத்திற்கேற்றபடி சுருக்கிக் கொள்ளவேண்டும். கதையினால் உணர்த்த விரும்பிய படிப்பினையைத் தெளிவாகச் சொல்ல வேண்டும் கதைக்காகக் கதை

கூறலாகாது. பொருளை விளக்குவதற்காகத்தான் கதை வரவேண்டும். பழமொழிகளையும் நாட்டு வழக்கங்களையும் இம் முறையில்தான் கையாளவேண்டும்.

சிலர் பேசும்போது சபையோரும் பேசத் தொடங்குவதுண்டு. அதற்காகச் சபையாரைத் திட்டக்கூடாது. பேசுபவரின் பேச்சு நன்றாக இல்லாத காரணத்தினால்தான் சபையில் இரைச்சல் ஏற்படும். அதனை அறிந்து ஒரு அருமையான கதையையோ ஒரு அழகான பாடலையோ பாடிச் சபையாரை வசப்படுத்த வேண்டும். அவ்வாறு செய்யாது மீண்டும் பேசினால் இரைச்சல்தான் அதிகம் ஆகும். இரைச்சல் ஏற்படுவது தம்முடைய குற்றத்தினால் என்று பேசுபவர் உணரவேண்டும். அப்போது கூடிய விரைவில் பேச்சை முடித்துக் கொள்வதுதான் நல்லது. "நீங்கள் இரைந்தாலும் நான் பேசித்தான் தீர்வேன்" என்னும் விடாமுண்டர்களால் யாதும் பயனில்லை. அதிகாரிகள் அன்னாரை மறுமுறை பேச இடந்தரலாகாது.

முடிப்புரை

கால அளவுக்குள் சுருக்கமாக முடிப்புரை சொல்லி முடிப்பது நலம். அதன் பிறகு தலைவர் 15-நிமிஷங்களுக்கு மேல் பேச லாகாது. பேசினாலும் சொன்னவற்றையே திருப்பிச் சொல்லுவது தப்பு. பேசுபவருக்கு மேல் காலம் எடுத்துக் கொள்ளுதலும் தப்பு. ஒன்றிரண்டு புதிய பகுதிகளை, எடுத்துக் கொண்ட பொருளுக்கு இணங்கக் கூறுவது நன்று. பேச்சாளர்கள் பேச்சின் பலனை மக்கள் மறந்து போகும்படியாகத் தலைவர் பேசுவதும் மடமைத் தனம். சபையோர் சலித்துப் போகும்படி தலைவர் நீட்டுவதும் மடமைத்தனமே. சபையோர், பேச்சாளர் பேச்சைக் கேட்க வந்தார்களே யன்றித் தலைவர் பேச்சைக் கேட்க வரவில்லை என்பதைத் தலைவர் அறிய வேண்டும். நிரம்பப் பேச விரும்பினால் தலைவர், தானும் ஒரு பேச்சாளராக இருக்கலாமே தவிரத் தலைவராக வரக் கூடாது. பேச்சாளரை அலுவகியமாகக் கண்டித்துப் பேசக் கூடாது. ஒரு பேச்சு முடிந்த பிறகு அவையினுள்ளோர் சிலர் எழுந்து பேச முன்வருதல் உண்டு. இதனைத் தலைவர் அங்கீகரிக்கக் கூடாது. பேசியதில் என்ன மாறுபாடு இருந்தாலும் அதற்காக மற்றொரு நாளில் விவாதம் செய்யலாமே தவிர அன்று எதிர்ப்பதும் மறுப்பதும் முதலியன நிகழ இடந்தரலாகாது. மற்றவர்கள் பேசலாம் என நிகழ்ச்சிக் குறிப்பில் குறித்திருந்தால் அப்போது விரும்புவோரெல்லாம் பேசலாம். ஆனால் அவ்விதக் கூட்டடங்களில் பேசுவோருக்கு 30 நிமிஷமும் ஏனையோருக்கு 5 நிமிஷமும்தான் இடந்தரவேண்டும். ஒவ்வொருவரும் ஒரு கருத்தை எடுத்துப் பேசினால் போதும். ஒவ்வொருவரும் பேச்சாளர்போல் பேசத் தொடங்குவது சரியல்ல. மகாநாடுகளிலும் இதனையே பின்பற்ற வேண்டும். 5 நிமிஷங்களுக்குமேல் பேசுபவர்களைத் தடைசெய்வது

நன்று. எல்லாக் கருத்துக்களையும் ஒருவரே பேசிவிட்டால் பின்னர் வாக்குவாதம் ஏன் வரவேண்டும்? ஏனையோர்க்கும் இடங் கொடுத்தலே நியாயமானது. விவாதச் சபைகளிலும் இம்முறையினையே கொள்ளுதல் நல்லது.

இனி, சபையின் அமைச்சர் நன்றி கூறத் தொடங்கினால் அவர் திறத்தையெல்லாம் காட்டத் தொடங்குவது மிகவும் அசம்பாவிதம். நன்றி கூறுபவர் சாதாரணப் பேச்சில் ஒரு நிமிஷமும் ஆண்டு நிறைவு மகாநாடு இவைகளில் ஐந்து நிமிஷமும் பேசினால் போதும். சில அறிவாளிகள் தலைவருரை முடிந்த பிறகு மற்றொரு பேக்சுப்போல நன்றியுரையை வளர்த்து விடுகிறார்கள். பேச்சாளரும் தலைவரும் சொன்ன பொருள்களைப் பின்பற்றிப் பேசியும் கண்டித்துப் பேசியும் சபையினுடைய நோக்கத்தையும் பொறுமையையும் கெடுத்து விடுகின்றனர். இப்படிப்பட்ட பெருமக்கள் அமைச்சர்களாக இருக்கத் தகுதி உள்ளவர்கள் எல்லை. இவர்கள் தங்கள் பெருமைகளை வேறு வழிகளில் வெளியிடுவது நன்று.

மற்றொரு பெருங்குற்றம் தமிழ்நாட்டில் பேசப்படுகின்றது. குறித்த காலத்தில் சபையைத் தொடங்குவதே இல்லை. ஒரு காலங் குறித்து விட்டால் என்ன நேரிட்டாலும் அக்காலத்தில் தொடங்கியே தீரவேண்டும். மக்களுக்கு வேறு வேலையும் உண்டு என்பதை உணரவேண்டும். அதனை எல்லாம் அறிந்து வசதியான காலத்தைக் குறித்துத் தொடங்கி குறித்தபடி முடித்துவிடவேண்டும். இவ்வாறு செய்யாத அமைச்சர்களின் குறையினால்தான் மேற்கூறிய பழிச் சொல் தமிழ்நாட்டுச் சொத்தாயிற்று. பொதுமக்களின் ஆர்வக் குறைவினாலல்ல. இதனை அறிந்து நிகழ்ச்சிகளை ஏற்படுத்தினால் எச்சபையும் சரியானபடி ஒழுங்குடன் நடைபெறும்.

மிருகசீரடம் (ஓரியன்)

—திரு. P. S. ஆனந்தம்.

அகன்ற நீல வான் – அதன் பரப்பில் காட்சிக்குரியன பல வுள்ளன. எண்ணில்லாத ஒளிக்கூட்டங்கள் பல பல வடிவுகளில் - அதிசய வண்ணங்களில் அங்கு இடம் பெறு கின்றன. அவற்றைக் கண்டு களிப்பவர் எக்காலத்திலும் உண்டு. அவை வெறுங் காட்சி இன்பமாக மட்டு மிருக்க வில்லை; சிருஷ்டியின் சித்திரங்களில் அவை பெரிய இரகஸ் யங்களைப் பார்ப்பவர்களுக்கு வைத்திருக்கின்றன வென்று நம் முன்னோர்கள் கருதினார்கள். அந்த உணர்ச்சியில் சென்ற அவர்களுடைய கவனம் அபூர்வங்கள் பலவற்றைக் கண்டது. அவையெல்லாம் மக்களுடைய வாழ்க்கைப் பாதையில் இம்மை-மறுமைகளுக்கு உதவும் செம்மை நலன்களாக விருப்பன வென்னும் பெரிய உண்மை அவர்களுக்குப் புலனுயிற்று. மக்களுடைய வாழ்க்கை மர்மங்களை அவை விளக்கி வருவனவாக விருத்தலின், வானத்தைப்பற்றிய அறிவுக்கலை அறிவு எல்லையில் முதல் இடம் பெற்றது. அதாவது 'ஜ்யோதிஷ ஸாஸ்திரம் வேதாங்கங்களில் முக்கிய மான நேத்திரமாக' இருக்கின்ற தென்பதே. அவ்வாறு உயரே வானத்திலிருக்கும் ஒளிக்கோளங்களுக்கும் - மக்கள் வாழ்க்கைக்கும் காணப் பெறும் தொடர்பு வெறுங் கற்பனை யல்ல வென்பதற்கு இன்றைய விஞ்ஞானமும் தக்க விளக்கங் களைக் கண்டு வருகிறது.

வானத்தில் காட்சிக்குரியனவற்றிற் பலவும் இயல் ஒளி கொண்டிருக்கின்றன. சில மட்டும் அயல் ஒளிபெற்றுப் பிரதிபலித்து வருவன. இயல் ஒளி வீசுவன நக்ஷத் திரங்கள் - உடுக்கள் - தாராகணங்கள் எனப் பெறுபவை யாகும். இவை வானத்தில் ஒவ்வொரு குறிப்பிட்ட எல்லையில் நிலையாக இடங் கொண்டிருக்கின்றன. அயல் ஒளி பெற்றுப் பிரதிபலித்து வருவன யாவும் வானவிதியில் சூரியனை நடுவாக்கி அதைச் சுற்றி வருகின்றன. இவற்றுள் பலன் மிக்கதென்று கண்டு கொள்ளப்பெற்ற முக்கியம் வாய்ந்த நாளும் - கோளும் (நக்ஷத்திரங்களும்-கிரகங்களும்) இன்ன இன்னவை யென்று முன்பே பதிவு செய்திருக்கிறார்கள். அனுபவத்திலும் வாழ்வின் செம்மை நலன்களுக்கு ஏற்ற சாதனமாகப் பயன் செய்து கொள்ளத்தக்கன மட்டுமே

அந்தப் பதிவில் உள்ளன. இதன் உண்மைகளை யெல்லாம் மேற்கில் இப்பொழுதுதான் விரிவாக ஆராய்ந்து வருகின் றார்கள். அவர்களுடைய ஆராய்ச்சிக்கு அந்தந்த நாட்டுப் பண்டைக் கால மக்கள் இவை சம்பந்தமாகக் கைக்கொண் டிருந்த சில பல அனுஷ்டானங்கள் யாவும் பெரிதும் தூண்டு கோல்களாக விருந்தன. பரம்பரையாக வந்த அவ் அனுஷ் டானங்களுக்குக் காரணமாக வழங்கிவரும் அமானுஷ்யமான கதைகள் பலவும் ஆராய்ச்சிக்காரர்களுக்கு மிகவும் வியப்புக் குரியனவாய் உண்மைகளை அறிய மேலும் ஆவலைப் பெருக் கின. பின்னர், கிழக்கில் முக்கியமாக இந்தியதேசத்தின் பதிவு களிற் சில பல அதிகம் அவர்களுக்குத் துணை செய்வதாயின. இந்த நிலையில் கி. பி. மூன்றும் - ஐந்தாம் நூற்றாண்டு முதல் இன்றளவு முள்ள ஆராய்ச்சி நூட்பங்களைப் பற்றியும் - மேனாட்டு வான நூற் புலவர்களைப்பற்றியும் இது காலம் எவரும் அறியக்கூடுமானதாக விருக்கிறது. இந்த விவரங் களின் மூலம் வான நூற் சரிதையை ஒருவர் நன்கு அறிய லாம். இற்றைக்குப் பல ஆயிரம் ஆண்டுகள் முன்பே நம்முடைய தேசத்தில் வான நூலறிவு மிகவும் உச்ச மடைந் திருந்தது. சாதாரண மக்களுக்குங் கூட அவர்களுடைய தினசரி வாழ்க்கையோடு அந்த அறிவு ஊறிப்போயிருந்த தென்று இலக்கியச் சின்னங்கள் அறுவுறுத்துகின்றன.

வானவீதி பன்னிரு பாகங்களாக வகுக்கப்பட்டிருக் கிறது. அவைதாம் மேடம் முதல் மீனம் மட்டும் சொல்லப் பெறுகின்ற இராசிகள் ஆகும். இவற்றுள் இடபம்-மிதுனம் என்னும் இராசிகளில் இடம் பெறும் 'மிருகசீரடம்' என்னும் நக்ஷத்திரத்தைப் பற்றி இங்கு சில காணுவோம். வான வீதியில் இடம் பெறும் நக்ஷத்திரங்கள் பலவற்றுள் பலனுக் குரியன இருபத்து ஏழு. அவற்றுள் இதுவும் ஒன்று. "மகசிரம் - மும்மீன் - மான்றலை - மதிநாண் - மார்கழி - மாழ்கு பேராளன்" என்பன மிருகசீரடத்தைக் குறிக்குஞ் சொற்கள் - இதை மேலைநாட்டவர் பொதுவாக 'ஓரியன்' (Orianis) என்பர். பர்கீஸ் (Burgees) கோல்ப்ரூக் (Colebrooke) இவர்கள் இதனை 'லாம்டா ஓரியன்' (Lamda Orianis) பென்ட்லி என்றும், (Bently) என்பார். டாரி (Tauri) என்னும் நக்ஷத்திரத் தொகுப்பிற் சில பகுதிகளாகவும் கருதுகின்றனர்.

மிருகசீரடம் இடபராசியின் இறுதியில் ஒரு பாதியும் - மிதுன ராசியின் தொடக்கத்தில் மற்றொரு பாதியுமாக இடங் கொண்டுள்ளதாகும். மேனாட்டு வானநூலார் பெரும் பாலர் ஓரியனின் ஒரு பகுதியெனவே மிருகசீரடத்தை உறுதி செய்திருப்பதால், அதைப்பற்றிய விவரங்களை இங்குத் தருவது சரியாக விருக்கும்.

மேலை நாட்டுப் புலவர்களுடைய கவனத்திற்கு வந்த பல நக்ஷத்திரத் தொகுப்புகளுள் 'ஓரிய'னும் ஒன்றாகும். இது இடபம் மிதுனம் என்னும் இவ் இராசிகளுக்கு நடுவாக வடக்கில் நெடுந்தூரம் வரை இடம் பெறும் பெரிய தொரு நக்ஷத்திரத் தொகுப்பாகும். இதனை மிகவும் முக்கிய மான வொரு தொகுப்பாக அவர்கள் கருதுகிறார்கள். இதை ஒரு வேடன் என்கின்றனர். இதன் தலையிலுள்ள கொம்புகள் (கிளைகள்) இரண்டுள் ஒன்றிற் காணப் பெறும் மூன்று நக்ஷத்திரங்களின் ஒரு குழுவே மிருகசீரடம் என்று உறுதி செய்யப்படுகிறது. நம் நாட்டு நூற்களிலும் 'மும்மீன்' 'மான்றலை' என்பன மிருகசீரடத்தைக் குறிக்குஞ் சொற்க ளாகக் காணப் பெறுவது இதற்குப் பொருந்தும்.

ஓரியனது வலது தோளில் தோன்றும் சிவந்த நக்ஷத்திரம் 'சோபனம்' (Belegeuse) என்னும் யோக தாரையாகும். அதனைச் சிலர் 'அத்கண்டம்' என்னும் யோக தாரையாகவும் கூறுவர். இதன் ஒளியினும் பன்மடங்கு அதிகமான பிரகா சங் கொண்ட 'ரீகல்' (Regal) என்னும் நக்ஷத்திரமொன்று ஓரியனின் இடது காலடியில் காணப்படும். இதையே 'அத்கண்டம்' என்னும் யோக தாரையாகக் கொள்ள வேண்டும். இவை இரண்டும் முறையே மிருகசீரடம் - திருவாதிரை என்னும் நக்ஷத்திரங்களின் யோக தாரைக ளாகும். 'ரீகல்' என்னும் யோக தாரை பூமிக்கு நெடுந் தூரத்தில் - அதாவது ஐந்நூறு ஆண்டு ஒளி தூரத்தில் (ஒளி வேகம் விநாடிக்கு 1,86000 மைல்கள் என்னும் கணக்கில்) இருப்பதால், இதன் ஒளிச் சிறப்பு நமக்குப் புலனாவதில்லை. ஓரியனின் இடது தோளில் காணப் பெறும் மீனமே 'திருவா திரை' என்று சொல்லப்படுகிறது. இதனை 'பெலாட்ரிக்ஸ்' (Bellatrix) என வழங்குகின்றனர். 'திருவாதிரை' என் னும் நட்சத்திரம் இந்திய தேசத்தில் - அதிலும் தெய்வத் தமிழ் நாட்டில் விசேஷமாக மதிக்கப்படுகிறது. அது ஆண்டவனின் திரு நடனத்தை நினைவூட்டும் உருவில் நம் முன்னோர்கள் அதனைக் கண்டார்கள். அதனால் நம் தமிழ் நாட்டிலும் அதை ஈசனுர் நட்சத்திரமாகக் கூறப்பட்டிருக்கிறது. இந்த திவ்ய நட்சத்திரம் ஓரியனின் ஒரு பகுதியென்று சொல்லி யிருந்தாலும், பர்கீஸ் - கோல்ப்ரூக் என்னும் புலவர்கள் அதை 'அல்பா க்ரேய்ன்' (Alpha Grainis) என்றும், பென்ட்லி என்பார் டாரி (Tauri) என்னும் மீனத்தில் ஒரு பகுதி என்றும் கூறுகின்றனர்.

ஓரியனின் முற்பகுதிக்கு இடமாக விருக்கும் இடபம் இராசிகளின் தற்கால வழக்கிலுள்ள வரிசையில் இரண் டாவது வீடாக இருக்கிறது. இது ஒரு காலம் ராசிகளின்

வரிசையில் முதல் வீடாகக் கொள்ளப்பட்டிருந்தது. யூதர்களுடைய ஆதாரங்களில் அவ்விதம் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அதே பொழுது மேற்கில் கிரீஸ் தேசத்துப் பண்டைக்கால மக்களும் - கிழக்கில் பார்சியர்களும் - சீனர்களும் அவ்விதம் இடபத்தை ஒருகாலம், முதல் வீடாகக் கொண்டிருந்தனர் என்று தெரிகிறது. நம்முடைய தேசத்திலும் சமய முதல்வருள் ஒருவரான திருஞானசம்பந்தர் அருளிய 'கோளறு பதிக'த்தில் தீய நாட்களை 'என்பொடு' என்று தொடங்கும் பாவில் "ஒன்பதோ டொன்றே டேழு பதினெட்டோடாறு முடனுய நாட்கள்....." என்று குறிப்பிடுகிறார். இதில் ஒன்று எனப் பெறும் நாள் **'கார்த்திகை'** ஆகும். இதன் பெரும் பகுதி இடம் பெறுவது இடபராசியில்தான். எனவே, ஸ்ரீ சம்பந்தருடைய காலத்தில் இடபம் முதல் வீடாகக் கொள்ளப்பட்டிருந்ததாக இதன்மூலம் தெரிகிறது. இடப ராசியில் இருபத்து ஆறு மீனங்கள் இருக்கின்றன. இவற்றுள் ஒன்றுதான் ஒளி நிலையில் முதலாவதாக விருப்பதாகும். அது 'சௌபாக்கியம்' என்னும் யோகதாரையாகும். இதில் காணப்படும் நக்ஷத்திரத் தொகுப்புகள் இரண்டில் ஒன்று 'கார்த்திகை'; மற்றொன்று 'உரோகணி'. கார்த்திகை ஆறு நக்ஷத்திரங்கள் சேர்ந்த ஒரு குழுவாகும். கார்த்திகைப் பெண்கள் அறுவரும் ஆறுமுகருக்குப் பாலூட்டி வளர்த்தனர் என்பது கந்த புராணத்திற் காணத்தக்க சித்திரம். கிரேக்கர்கள் இதை ஏழு நக்ஷத்திரங்கள் சேர்ந்த வொரு கூட்டமாகக் காணுகின்றார்கள். அதற்கு அவர்களிடை வழங்கும் கதை மிகவும் ரஸமானது. 'ஓரியன்' என்னும் ஒரு வேடன் கார்த்திகை மாதர் எழுவரையும் கண்டு, மயங்கிப்போய் அவர்களைப் பின் தொடர, அவர்கள் அனைவரும் ராணி ஓடினர் எனவும், அப்பொழுது சந்திரனுடைய தெய்வமாகிய டியானு (Diana)வின் உதவியால் அவர்கள் ஏழு வெண் புறுக்களாக உருப்பெற்று, பறந்து சென்று வானத்திலேயே தங்கினர்கள் என்றும் சொல்லப்படுகிறது. அதில் எழுவர் என்று இருந்தாலும் கார்த்திகை என்னும் குழுவில் ஆறு மீனங்கள் தாம் உள்ளன.

ஓரியன் குழுவில் குறுக்காய் ஒரே வரியில் ஒளிநிறைந்த நக்ஷத்திரங்கள் மூன்று சேர்க்கை கொண்டிருக்கின்றன. இவற்றை ஓரியனுடைய இடுப்புக் கச்சு (Belt) என்று கூறுவர். இதற்குப் புறத்தே வெகுதூரத்திற் கப்பால் இடபத்திற்கும் - மிதுனத்திற்கும் நடுவே வடக்காக விருக்கும் பால்வீதி மண்டலத்தின் அருகில் மூகிற் படலங்கள் காணப் பெறும். இதில் பதினெரு நக்ஷத்திரங்கள் சேர்ந்த குழு வொன்று இருக்கிறது. இதற்கு வடக்கிலுள்ள சப்தரிஷி

(ஏழு முனிவர்) மண்டலத்தில் எட்டு நக்ஷத்திரங்களாலாய ஐங்கோண வடிவில் துலங்கும் நக்ஷத்திரத் தொகுப்பும் - இன்னும் சிலவற்றின் சேர்க்கையாலாகிய முக்கோண வடிவில் மற்றொரு நக்ஷத்திரத் தொகுப்பும் இருக்கின்றன. ஐங்கோணத் தொகுப்பின் அருகில் நடுவாக மஞ்சள் நிறத்தில் சிறந்து ஒளிரும் ஒரு நட்சத்திரம் இருக்கிறது. அது 'பிரம இருதயம்' (Capella) எனப் பெறும். வான் சமன் ரேகைக்கு வடக்கில் நாற்பது பாகைகளுக்கு அப்பால் சிறந்து விளங்கும் முதன்மையான நக்ஷத்திரங்களில் பிரம இருதயமும் ஒன்று. இது ஓரியனுக்கும் – துருவனுக்கும் நடுவாய்ப் பால்வீதி மண்டலத்தில் இருக்கிறது. பிரமா சிவ பெருமானுக்குத் தேரோட்டியதாகப் புராணங் கூறும். இதற்கு எகிப்து தேசத்து மக்கள் கோயில்கள் கட்டி வழி பட்டு வந்தார்கள். ஆங்கிலேயக் கவிகள் பலரும் அதனை 'கோகுல தாரை' என்னும் பொருள்படும்படி வர்ணித்திருக் கிறார்கள். துருவனைச்சுற்றி வரும் ஏழு முனிவர் குழுவிற்கு ஆர்க்டாஸ் (Arctos) - கரடி என்று பெயர். இதற்கு நேராக வுள்ள பூமியின் பகுதியே Arctic zone - வடகுளிர்ப் பிரதேசம் - கரடி நிலம் என்று சொல்லப்படுகிறது. அதன் எதிர்ப் பக்கம் தென் துருவப்பகுதி Antarctic zone - தென் குளிர்ப் பிரதேசம் - கரடி எதிர்ப்பு நிலம் ஆகும்.

இவ்விதம் விரிந்த 'ஓரியன்' பெரிய வொரு தொகுப்பு என்பதுடன் பல முக்கியங்களையும் கொண்டிருக்கிறது என மேலைப் புலவர்கள் கருதுகின்றார்கள். இதன் மேற்பகுதி இடபத்தின் பின் பகுதியிலும் - கீழ்பகுதி மிதுனத்தின் முற்பகுதியிலும் இடம் பெறுவனவாம். இதன் தலைப்புறத் திற் காணும் கிளைகள் இரண்டில் ஒன்றிலிருக்கும் மூன்று நக்ஷத்திரங்களின் தொகுதியே மிருகசீரடம். ஓரியனின் வலது தோளிற் காணும் சிவந்த ஒன்று, 'சோபனம்' என்னும் மிருக சீரடத்தின் யோக தாரையென்றும் முன்பே கூறியிருக்கிறது.

மிருகசீரடத்தில் சந்திரன் ஊர்ந்து கொண்டிருக்கும் பொழுது பிறந்தவர்களுக்கு அதுவே ஜென்ம நக்ஷத்திர மாகும். இது முற்பாதி இடபத்திலும் பிற்பாதி மிதுனத்திலு மாக இடங்கொண்டிருத்தலின், இதன் முற்பாதியில் சந்திரன் ஊர்ந்து கொண்டிருக்கையில் பிறந்தவர்களுக்கு ஜென்ம ராசி இடபமாகவும் - பிற்பாதியில் சந்திரன் ஊர்ந்து கொண் டிருக்கும்பொழுது பிறந்தவர்களுக்கு ஜென்மராசி மிதுன மாகவும் இருக்கும். இடபராசியில் பாகை 23 கலை 20 முதல், மிதுன ராசியில் பாகை 6 கலை 40 வரை மிருகசீரடம் இடங் கொண்டிருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இவ்வழி இடபம் பா 23-20 முதல் பா 30 வரை அதன்

முற்பாதியாகவும், மிதுனம் பா 6-40 வரை அதன் பிற்பாதி யாகவும் வரும். ஆனல், ஓரியன் என்னும் தொகுப்பு இடப - மிதுனங்களிற் பெரும் பகுதியிலும், அவ் விரண்டின் நடுவாக வடக்கிலும் தெற்கிலும் நெடுந்தொலைவு விரிந்து பரந்திருக்கிறது. இதில் சம்பந்தம் பெரும் நக்ஷத்திரங்கள், கார்த்திகைமுதல் திருவாதிரை மட்டும் வருவனவாகும். ஓரியனின் சம்பந்தமானவற்றில் இறுதியாகவுள்ள திருவா திரை, மிதுன ராசியில் நடுவாக பெரும்பகுதி இடத்தை அடக்கிவிடுகிறது. இதை ஈசனுர் பிறந்த நாளாகக் கூறுவர். ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு இது உகந்த நாள். இதிற் சந்திரன் பூரண கலைகளுடன் ஊருங்கால் - அதாவது மார்கழி மாதம் திருவாதிரை நாளை ஒரு நன்னளாக நம் நாட்டில் கொண்டாடுவது வழக்கம். ஓரியனின் நடுவில் இடம் பெரும் 'மிருக சீரட'மே இங்கு எடுத்துக்கொண்ட பொருள். ஆதலின், அதுபற்றிய விவரங்களைக் காணலாம்.

மிருகசீரடத்தின் வடிவை தேங்காயின் கண்களைப் போல மூன்று புள்ளிகளின் குழுவாகக் காணுகின்றனர். இதன் அதிதேவதை 'ஸோம'னுகும். பிருதிவியின் (மண்ணின்) கூறுள்ளது. மிருது சுபாவம் வாய்ந்தது. சமதிருஷ்டி கொண்டது.

இதிற் பிறந்தவர்கள் பொதுவில் உள்முக விருத்தியும் - தீர்க்க சிந்தனையும் கொண்டவர்கள் என்னலாம். புத்தி பாகத்தின் திறமை அபூர்வங்களைக் காணக்கூடியதாக விருக்கும். எப்பொழுதும் உற்சாகிகளாக விருப்பார்கள். உள்ளூர பயங்கொண்டவர்களாயினும், அவர்களுடைய பேச்சுக்கள் எவரையும் ஊக்கத்துடன் விழிப்புற அல்லது புத்துயிருடன் எழச் செய்யும். புதுமைகளுக்கு அடிகோலும் இவர்களுடைய லட்சியங்கள் நெடுகிலும் ஈடேறுவதற் குரியனவாகவே யிருக்கும். காரியாம்சத்திற்கு உதவும் கற்பனைகளில் இவர்கள் உயர்ந்தவர்கள். நினைத்ததைச் சாதிக்கும் தீரர்கள். அதற்காக எவ்வித தியாகத்திற்கும் பின்வாங்காதவர்கள். ஆனல், எதையும் எளிதில் நம்பி ஆவேசங் கொண்டுவிடமாட்டார்கள். இவர்களிடமுள்ள கலை உள்ளம், உலகிற்குப் புதினங்கள் பலவற்றை வழங்கி நிற்கும். வாழ்வின் போக்கில் உண்மையான திடஞானமும் - தெளிவும் இவர்களுக்கு உண்டாகும். ஏழைகளின் சார்பில் உழைப்பின் உயர்வைக் கோரி இவர்களுடைய உள்ளம் மிகவும் விழைந்துகொண்டிருக்கும். இவர்களுடைய கவர்ச் சிக்குரிய நடையுடை பாவனைகளும் - இன்னும் இதர அம்சங்களும் எல்லாத் தரத்தினருக்கும் இணக்கமாக விருக்கும். பகைவருங்கூட இவர்களுடைய அங்கத்தை நாடி யிருப்பார்கள்.

இவை பொதுவான பலன்கள். இனி, அந்த நக்ஷத்திரம் இடங் கொண்டிருக்கும் இராசிகளின் இயல்புகளில் அதன் விசேஷ பலன்களைக் காணவேண்டும். அதன் முற்பகுதியில் பிறந்தவர்களுக்கு ராசி இடபமாதலால், அதன் பலனை முதற்கண் கூறுவோம். இடபம் சுக்ரனின் ஆட்சிவீடுகளில் ஒன்று. இதில் சந்திரனுக்கு உச்ச - மூலத்ரிகோண பலம் உண்டாகிறது. எனவே, இடபத்தில் இடம் பெறும் மிருக சீரடத்தின் முற்பகுதியின் பலம் விசேஷங் கொண்டதாக விருக்கும். இதிற் பிறந்தவர் எவரும் வசீகரமுள்ள தோற்ற மும் - இன் மொழியும் - கருணை நிறைந்த நோக்கும் கொண்டவர்களாக விருப்பார்கள். எல்லாத் தரத்தார்க ளிடையும் இவர்களுக்கு நல்ல செல்வாக்கு இருந்து வரும். சொல்லும் - எழுத்தும் ஒன்றுபோல வன்மையுடன் இருக் கும். பிறருக்கு விளக்கி வைக்கும் ஆற்றல் கொண்டவர் களாய் முனைகின்ற எந்தத் துறையிலும் பிரகாசித்து வருவார் கள். இவ்வழி, கல்லூரி ஆசிரியர்களாய் - நல்ல பிரசாரகர் களாய் - உரையாளர்களாய் - முதல் நூற்புலவர்களாய் இனிது சிறப்பார்கள். பொதுஜன வாழ்வின் மேன்மைகளைக் கோரிய ஆவேசங்கொண்ட இவர்கள், புரட்சிகரமுள்ள மனப்பான்மை யுடையவர்களாயினும் மிகவும் தன்னடக்கத் துடனும் - நேர்மையாகவும் - பலனுக்குரிய வழிகளிற் சென்று வெற்றிகளையே அடைவோர்களாகப் பெரும்பாலும் இருப்பார்கள்.

மிருகசீரிடத்தின் பிற்பகுதிக்கு இடமான மிதுனம், புதனுடைய ஆட்சிவீடுகளில் ஒன்று. இதில் சந்திரனுக்கு நட்பு. இந்த பிற்பகுதியிற் பிறந்தவர்கள் உழைப்பை உயர் வாக எண்ணுவோர்களாய் இருப்பார்கள். உழைப்புத்தான் ஊதியமடைய உரிமைகொண்டது என்பது அவர்களுடைய சித்தாந்தமாக விருக்கும். இதற்காக எத்தகைய அபாய கரமான புரட்சிகளையும் பின்னிடாது செய்வதில் முனைந் திருப்பார்கள். ஆனல், அதேசமயம் எஜமான்னத்துவ உணர்ச்சியில் இறுமாப்பும் - ஆசைகளும் நிறைந்திருக்கும். இப்படி நேர் எதிரான இரண்டு கொள்கைகளுடன் போராடிக் கொண்டிருப்பவர்களாக விருப்பார்கள். இத் தகையோர்களால் உழைப்பாளி மக்கள் அதிகம் கஷ்டத்திற் குள்ளாவார்கள். இவர்கள் பெரும்பாலும் நடிப்புத் துறை யிலும் - புலன் அறியும் வேலையிலும் நல்ல பயன் அடைவோர்களாக விருப்பார்கள். தூது - நிர்வாகம் ஆகிய அங்கங்களில் இவர்களுடைய சேவை மிகவும் விபரீதங் களுக்கு இடமாக நேரும். சுதந்தர விருத்தியும் - யதேச்சை யான போக்குங் கொண்ட இவர்களுடைய வாழ்வில் நெடுகிலும் துரதிருஷ்டமான விதிகளில் கடுமையான

சோதனைகள் பல நிறைந்திருக்கும். இந்த நிலையில் நேர் எதிரான கொள்கைகளுக்கு திடீரெனத் தங்களை மாற்றிக் கொண்டு விடுவார்கள். இவர்களுக்கு நாணய சுழற்சியில் விசேஷ திருஷ்டி இருக்கும். 'நாணயமே உலகை ஆளும்' என்று அதனிடம் அதிகமான பிரேமை கொண்டிருப்பார்கள். பணத்தின் வலிமையைப்பற்றி வெகுவாக மதித்துக் கொண்டு, அதற்காகவே தங்களுடைய சக்திகளை யெல்லாம் பயன்படுத்துவோர்களாக விருப்பார்கள். தங்களுடைய நோக்கத்தில் பெறவேண்டிய வெற்றிகளைக் கருதியே முக்கியமாகச் சீர்திருத்தங்களை வேண்டி நிற்பார்கள்.

இவை யெல்லாம் சுக்ஷேத்திரத்தைப்பற்றிய பலன்கள். இப்பலன்கள் எவருக்கும் பொதுவில் மிகவும் சரியாகவே யிருக்கும். ஆனால், பிறந்த பொழுதுள்ள இதர கிரகங்களை யும் - அவற்றின் சேர்க்கை முதலிய பலங்களையுங் கொண்டு, வரும் பலன்களைக் காணவேண்டும்.

வீரர் வழிபாடு

—திரு. A. S. ஞானசம்பந்தம், B.A. (Hons.)

தமக்கென வாழாப் பிறர்க்குரியாள செல்லாம் வீரரே! தம் வாழ்நாள் முழுமையும் அவ்வாறே வாழ்ந்து, நாட்டுப் பணியும் மக்கட் பணியுமே தமது கடன் எனப் பணியாற்றிய ஒரு வீரரது மணி விழா மலருக்கு, இத்தகைய கட்டுரை வரைவது மிகவும் பொருத்த முடையதே.

முதலாவது வீரர் யார்? வீரம் என்பது யாது? எனப் பார்ப் போம். மக்கள் யாவரும் இறைவனால் படைக்கப்பட்டவரேயாவர். ஆனால், உயிர் வளர்ச்சி முறையில் (Evolution) வரும் ஒவ்வோ ருயிரும் அதன் பழைய பிறவிகளுக்கு ஏற்ப இப்பிறவியில் மனே நிலை பெற்றிருக்கும். யாவர்க்கும் பொதுவான உயிர்க் குணங்கள் இருப்பது தவிர, ஒவ்வோர் உயிர்க்கும் சிறப்பாகச் சில குணங்கள் இருக்கும். சிறப்பியல்கள் காரணமாக அவரவர் பெருமை சிறுமை வெளிப்படும். இதனால் பிறருக்கு நன்மை விளைவிக்கக் கூடிய சிறப்பியல்பு பெற்றோரே, பெரியார் எனப்படுவார் என அறிகிறோம். இவர்களது துணைகொண்டே இவ்வுலகம் நடைபெறுகிறது. இவ் வுலகின் சரிதம் அறிய வேண்டின், இவர் சரிதம் காணவே போது மானது. இவர்களே மக்கள் இனத்தின் தலைவர்கள். உலகைச் சீர்படுத்தி அதற்கு வரம்பிட்டு மனித சமூகம் அதன்வழி நடை பெறுமாறு செய்வோர் இவ்வீரரே. உலகின்கண் இன்று காணப் படும் செயற்கருஞ் செயல்கள், முடிந்தனவும் நடக்கின்றனவும் நடைபெறப் போகின்றனவும் ஆன அனைத்தும் இவ்வீரரது கனவிற் றோன்றி நனவில் வெளிப்பட்டனவேயாம். இவ்வீரர்களைப்பற்றிக் காணும் காலம் வீண் காலமாகாது; படிப்பார்க்கு உறுதுணையாய் நிற்கும்.

இவ்வகை வீரர்கள் கருவில் திருவுடையராய்த் தோன்றுகின் றனரேயன்றிப் பிறரால் ஆக்கப்படுவதில்லை. அவர்கள் யாண்டுத் தோன்றினும், எப்பொழுது தோன்றினும் உலகம் அவர்களை நன்கு அறிந்து கொள்கிறது; அவர்களை வெளிக்குக் கொணர்ந்து அவர்கள் சொற்படி நடக்க முற்படுகிறது; அவர்களைப் போற்றி அவர்கள் பின் செல்கிறது. எத்துணை முன்னேற்றம் ஏற்படினும் இத்தகைய வீரர்களைப் புறக்கணித்தல் இயலாத காரியம். நாகரிகம் என்ற அழுக்கு மிகுதியும் ஏறுத மிகப் பழங் காலத்தில், மனித சமூகம் திறந்த மனத்தோடு இயற்கையின் உண்மைத் தன்மையை,

அவள் காட்டிய வண்ணம் அறிந்து கொள்ளும் சக்தியுடையதாக இருந்தது. ஆழ்ந்ததும், தூய்மையானதும், ஏற்றுக்கொள்ளும் சக்தியும் உடைய அப்பழங்கால மனிதனுடைய மனம், இயற்கையின் சக்திகளைக் கேவலம் ஒரு பெயரிட்டு அழைத்துவிட்டு அதனோடு திருப்தி அடையவில்லை. அதற்கு மாறாக இயற்கையின் பெருமையிலும் சக்தியிலும் ஈடுபட்டு நின்றது; அதற்கொரு பெயரிட்டழைக்கும் சக்தியற்றிருந்தது. மனிதனுக்கு இயற்கையன்னை, மாயோன் மேய காடுறை உலகாகவும், சேயோன் மேய மைவரை உலகாகவும், தீம்புனல் உலகாகவும், பெருமணல் உலகாகவும் அவனது மனம் எவ்வளவு விரிந்து செல்லினும் அவ்வளவுக்கும் இடந்தரும் சக்தி வடிவாகவும், என்றும் அவனுக்குப் புத்துணர்ச்சிகளை ஊட்டும் சித்துப் பொருளாகவும் இருந்தாள். இன்றும்தான் என்ன? எத்துணைப் பெயர்கள் வைத்தும் இயற்கையின் வடிவங் கண்டார் யார்? இன்னும் அவள் கற்பனை கடந்த சோதியாகத் தானே உள்ளாள்! ஆயின் இன்றைய மனிதன் பழக்க வழக்கங்களால், போலி நாகரிகம் என்று கூறப்படும் இருப்புக் கூட்டில் அடைபட்டு, அதற்கு அப்பாற் காணும் தன்மையை இழந்து நிற்கின்றான். என்றைக்காவது அறிவியல் நூல், (Science) இயற்கையின் தன்மையும் வன்மையும் இத்துணைதான் என்று கூறியது உண்டோ? அவ்வாறு கூறுமாயின் அது அறிவியல் நூல் ஆமோ? அறிவியல் துறையின் உண்மை காண மாட்டாதார் அன்றே, இயற்கையின் முடிவை விஞ்ஞானம் கூறிற்று என்று கூறுவர்? இத்தகைய இயற்கை யன்னை காலம் என்ற பெருவெளி வழியே செல்கின்றாள். காலம்! சற்று நின்று ஆராய்வோமாயின் எல்லையற்றதாய், ஓய்வற்றதாய் சென்று கொண்டிருக்கும் அக்காலம், எல்லையற்ற வேகத்தில் புரண்டு செல்கையில் இவ்வண்டம் அதன்மீதன்றே மிதந்து செல்கின்றது. இவ்வாறு செல்கின்ற அண்டத்தின்கண் உள்ள உலகம் எங்கே? அதன் ஒரு சிறு வடிவாம் தேசம் எங்கே? அதன் அங்கை எனை உள்ள நாடு எங்கே? ஊர் எங்கே? அவ்வூரிலுள்ள சிறு மனிதன் எங்கே? இவனை எல்லையற்ற இயற்கையின் வன்மையை ஆராய்பவன்? இதன் தன்மையை சக்தியற்ற மனிதனை ஆராய்ந்து முடிவு காட்டுபவன்? சக்தி; சக்தி; யாண்டும் சக்தி வடிவே துலங்குகின்றது.

இத்தகைய சக்தி வடிவான இவ்வுலகை, மக்களின் சிறு மனத்துக்கு உள்ளவாறு விளக்குவான் வேண்டி இயற்கை அன்னையே அவ்வப்போதுள்ள இன்றியமையாமைக் கேற்றபடி வீரர்களை உலகிற்கு அனுப்புகின்றாள். அவர்கள் வந்த பிறகே உலகம் இயற்கையையும் அதன் படைப்பையும் உள்ளவாறு கண்டு மகிழ்கின்றது. இவ்வீரர்களால் மனிதனது அகக்கண் திறக்கப்பட்ட பொழுது மனிதன் இயற்கையின் சக்தியைக் காண்கின்றான். ஒரு புல்லின் வழியாகக்கூட, எல்லையற்ற பரம்பொருளின் வடிவைப் பல கணியின்வழியாகக் காணுவதுபோலக் காணமுடிகிறது. யாரொருவன் தானை இப்பொருள்களின் இயற்கை அழகைக் காணவும், அவ்

வழிகின்மூலம் அதனை இயற்றிய பரம்பொருளின் தன்மையை உணரவும் செய்கின்றனை, அவனைக் கவிஞன் என்றும், கலைஞன் என்றும், சுருங்கக் கூறுமிடத்துக் கருவில் திருவுடையவனென்றும் உலகம் கூறுகின்றது. எனவே, இறைவனுடைய படைப்பைக் கண்டு, இறைவனுடைய தன்மையை உணரக் கூடுமாயின் அப் படைப்புக்கள் பெருமை யுடையன அன்றே? அவ்வுயர்ந்த படைப்புக்களுள் இம்மானுட சரீரமும், இப்பொறி புலன்களும், இவ்வுயிரும் சிறப்புடையன அன்றே? அதனாலேதான் போலும் 'நோவாலிஸ்' (Novalis) என்ற பெரியார் "உலகிலேயே ஒரு கோவில் தான் உள்ளது; அது மனித சரீரம்தான்; அதனைவிடத் தூய்மை யுடையது வேறொன்றுமில்லை; மனிதர்களுக்கு வணக்கம் செலுத்துவது உடலோடமைந்த இறைவனுக்கு வணக்கம் செலுத்துவதாகும்; மனித உடலைத் தொடும்பொழுது இறைவனையே தொடுகின்றோம்" என்று கூறினர். எனவே இறைவன் படைப்பினுள் எல்லாம் மிக மேன்மை பொருந்தியதாக உள்ள மனிதனை வணங்குவது மிகவும் ஏற்றது. அதிலும் மனித இனத்துள் உயர்ந்தவராகிய வீரரை வழிபடுவது யாவரும் செய்யத்தக்கது.

போலி நாகரிகம் தோன்றுத பழங் காலத்தில் இத்தகைய உண்மை வீரர்களைப் பெரிதும் மக்கள் வழிபட்டனர். சங்ககாலத்தில் பெரும் புலவர்களை அரசர்கள் வழிபட்டமைக்கும், பிற்காலத்தில் ஞானசம்பந்தர் போன்ற சமயகுரவர்களை மக்கள் போற்றியதற்கும் இதுவே காரணம். இப்பேருண்மையை அறிய இயலாதார் இத்தகைய வீரர்களைக் காலச் சுழலிற் றோன்றிய சாதாரண மக்களென்றும், காலக் கூறுபாட்டால் அவர்கள் சில செயல்களைச் செய்துங் கூறியுஞ் சென்றனரென்றும், அதனால் அவர்களைப் போற்றலும் வழிபடலும் அவசியமின்று என்றுங் கூறுவர். ஆனால் காலம் என்றைக்கும் உளதென்றும், காலம் எத்துணை விரும்பி அழைக்கினும் இறைவ னருளின்றி இவ்வீரர் வெளிப்படார் என்றும், இன்றைய நிலையில் இத்தகைய வீரர் ஒருவர் வேண்டுமென்று நாம் எத்துணை விரும்பினும் அவனருளின்மையால் அவ் வீரர்கள் தோன்றவில்லையென்றும் கூறி அவர்கள் போலி வாதத்தைத் தள்ளி விடுக.

இனிப் பொதுவாக உலகினும் சிறப்பாகத் தமிழ் நாட்டினும் வீரர் தோன்றினமைக்குச் சில சான்றுகள் காண்போம். வீரர் என்றவுடன் கேவலம் மிருக பலமுடையாரைக் குறிப்பதாக மட்டும் நினைத்தல் கூடாது என்று முன்னமேயே கூறினேம். சாதாரண மக்கள் நிலைக்கு மேற்பட்டு நிற்பவரெல்லாம் வீரரே; பிறமக்களுக்கு இயற்கையின் உண்மையையும் அவன் படைப்பின் தன்மையையும் எடுத்துக் கூறி மக்கள் நன்கு வாழ வழி வகுப்போரெல்லாம் வீரரே. எனவே, உண்மைக் கவிஞனும், புலவனும், தீர்க்கதரிசிகளாகிய சித்தர்களும், உடல் மனவலிமையுடையாரும் வீரர்களாவர் என

அறிகிறோம். இவ் வீரர்கள் வாயால் மக்கட்கு உபதேசித்தோ, அன்றி தங்கள் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியோ பிறருக்கு அறிவுச் சுடர் கொளுத்துகின்றனர்.

